செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–11

பொருள்வயிற்பிரிவு - 4

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

பொருள்வயிற்பிரிவு - 4

தொகுதி - 11

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com
கிளைகள்
திருச்சி - 620 002 சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001 மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-778-8 (Vol-11)

தனிப்பிரதி விலை ரூ. 470/-
(தொகுதி–11)

மொத்த விலை ரூ. 7200/-
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை – 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் x

மதிப்புரை xv

பதிப்புரை xvi

அகத்திணை xviii

பொருள்வயிற்பிரிவு - 4

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 11	வானம்	ஔவையார்	1277
அகநானூறு 14	அரக்கத்து	ஒக்கூர் மாசாத்தியார்	1236
அகநானூறு 71	நிறைந்தோர்த்	அந்தியிளங்கீரனார்	1185
அகநானூறு 87	தீம்தயிர்	மதுரைப் பேராலவாயர்	1435
அகநானூறு 93	கேள்கேடு	கணக்காயனார் மகனார் நக்கீரனார்	1427
அகநானூறு 115	அழியா	மாமூலனார்	1243
அகநானூறு 133	குன்றி	உறையூர் மருத்துவன் தாமோதரனார்	1289
அகநானூறு 141	அம்ம	நக்கீரர்	1265
அகநானூறு 155	அறன்கடைப்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1252
அகநானூறு 205	உயிர்கலந்து	நக்கீரர்	1246
அகநானூறு 301	வறன்உறு	அதியன் விண்ணத்தனார்	1189
அகநானூறு 347	தோளும்	மாமூலனார்	1249
அகநானூறு 367	இலங்குசுடர்	பரணர்	1182
அகநானூறு 375	சென்று	இடையன் சேந்தங்கொற்றனார்	1255
அகநானூறு 389	அறியாய்	நக்கீரனார்	1399
ஐங்குறுநூறு 311	வேங்கை	ஓதலாந்தையார்	1228
ஐங்குறுநூறு 314	அவிர்தொடி	ஓதலாந்தையார்	1402
ஐங்குறுநூறு 317	சூழ்கம்	ஓதலாந்தையார்	1232
ஐங்குறுநூறு 331	அம்ம	ஓதலாந்தையார்	1227
ஐங்குறுநூறு 332	அம்ம	ஓதலாந்தையார்	1231
ஐங்குறுநூறு 333	அம்ம	ஓதலாந்தையார்	1230
ஐங்குறுநூறு 339	அம்ம	ஓதலாந்தையார்	1142
ஐங்குறுநூறு 420	பொன்னென	பேயனார்	1440
ஐங்குறுநூறு 471	எல்வளை	பேயனார்	1240
ஐங்குறுநூறு 472	கைவல்	பேயனார்	1241

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 473	பலர்புகழ்	பேயனார்	1235
ஐங்குறுநூறு 475	தொழுநிலை	பேயனார்	1233
ஐங்குறுநூறு 476	கருவி	பேயனார்	1137
ஐந்திணை எழுபது 17	தண்நறும்	மூவாதியார்	1165
ஐந்திணை எழுபது 21	காரிகை	மூவாதியார்	1166
ஐந்திணை எழுபது 22	கொன்றைக்	மூவாதியார்	1167
ஐந்திணை எழுபது 27	கார்ப்புடைப்	மூவாதியார்	1171
ஐந்திணை எழுபது 28	குருந்தலை	மூவாதியார்	1172
ஐந்திணை எழுபது 36	முள்ளுடை	மூவாதியார்	1286
ஐந்திணை ஐம்பது 6	முல்லை	மாறன் பொறையனார்	1212
ஐந்திணை ஐம்பது 7	தேரோன்	மாறன் பொறையனார்	1170
ஐந்திணை ஐம்பது 8	பிரிந்தவர்	மாறன் பொறையனார்	1213
ஐந்திணை ஐம்பது 35	கொடுவில்	மாறன் பொறையனார்	1285
கலித்தொகை 118	வெல்புகழ்	நல்லந்துவனார்	1175
கலித்தொகை 119	அகன்ஞாலம்	நல்லந்துவனார்	1179
கார் நாற்பது 28	இமிழ்இசை	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1438
கார் நாற்பது 29	பொங்கரும்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1439
கார் நாற்பது 30	வரைமல்க	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1415
குறுந்தொகை 21	வண்டுபடத்	ஓதலாந்தையார்	1270
குறுந்தொகை 27	கன்றும்	வெள்ளிவீதியார்	1375
குறுந்தொகை 46	ஆம்பற்	மாமலாடனார்	1274
குறுந்தொகை 64	பல்ஆ	கருவூர்க் கதப்பிள்ளை	1387
குறுந்தொகை 86	சிறைபனி	வெண்கொற்றன்	1205
குறுந்தொகை 92	ஞாயிறு	தாமோதரனார்	1143
குறுந்தொகை 94	பெருந்தண்	கதக்கண்ணனார்	1262
குறுந்தொகை 102	உள்ளின்	ஔவையார்	1389
குறுந்தொகை 108	மழைவிளை	வாயிலான் தேவனார்	1145
குறுந்தொகை 122	பைங்காற்	ஓரம்போகியார்	1195
குறுந்தொகை 131	ஆடுஅமை	ஓரேருழவனார்	1413
குறுந்தொகை 140	வேதின	அள்ளூர் நன்முல்லையார்	1390

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 155	முதைப்புனம்	ஓரோடகத்துக் கந்தரத்தனார்	1146
குறுந்தொகை 162	கார்புறந்	கருவூர்ப் பவுத்திரனார்	1420
குறுந்தொகை 163	யார்அணங்	அம்மூவனார்	1210
குறுந்தொகை 175	பருவத்	உலோச்சனார்	1409
குறுந்தொகை 188	முகைமுற்	மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்	1148
குறுந்தொகை 191	உதுக்காண்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	1296
குறுந்தொகை 195	சுடர்சினம்	தேரதரனார்	1149
குறுந்தொகை 211	அம்சில்	காவன் முல்லைப்பூதனார்	1220
குறுந்தொகை 213	நசைநன்கு	கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார்	1223
குறுந்தொகை 218	விடர்முகை	கொற்றனார்	1392
குறுந்தொகை 220	பழமழைக்	ஒக்கூர் மாசாத்தியார்	1151
குறுந்தொகை 224	கவலை	கூவன் மைந்தன்	1411
குறுந்தொகை 232	உள்ளார்	ஊண்பித்தை	1217
குறுந்தொகை 234	சுடர்செல்	மிளைப்பெருங்கந்தனார்	1153
குறுந்தொகை 241	யாம்எம்	கபிலர்	1394
குறுந்தொகை 255	பொத்துஇல்	கடுகு பெருந்தேவனார்	1225
குறுந்தொகை 278	உறுவளி	பேரிசாத்தனார்	1397
குறுந்தொகை 279	திரிமருப்பு	மதுரை மருதனிளநாகனார்	1207
குறுந்தொகை 288	கறிவளர்	கபிலர்	1258
குறுந்தொகை 289	வளர்பிறை	பெருங்கண்ணனார்	1395
குறுந்தொகை 290	காமம்	கல்பொரு சிறுநுரையார்	1404
குறுந்தொகை 307	வளைஉடைத்	கடம்பனூர்ச் சாண்டிலியனார்	1199
குறுந்தொகை 314	சேய்உயர்	பேரிசாத்தனார்	1154
குறுந்தொகை 319	மான்ஏறு	தாயங்கண்ணனார்	1156
குறுந்தொகை 323	எல்லாம்	பதடிவைகலார்	1443

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 329	கான	ஓதலாந்தையார்	1275
குறுந்தொகை 330	நலத்தகைப்	கழார்க் கீரன்எயிற்றியனார்	1141
குறுந்தொகை 341	பல்வீ	மிளைகிழான் நல்வேட்டனார்	1264
குறுந்தொகை 344	நோற்றோர்	குறுங்குடி மருதனார்	1158
குறுந்தொகை 352	நெடுநீர்	கடியலூர் உருத்திரங்கண்ணனார்	1160
குறுந்தொகை 386	வெண்மணல்	வெள்ளி வீதியார்	1161
குறுந்தொகை 387	எல்லை	கங்குல் வெள்ளத்தார்	1194
குறுந்தொகை 391	உவரி	பொன்மணியார்	1163
கைந்நிலை 20	... வீழ்க்கும்	புல்லங்காடனார்	1218
கைந்நிலை 22	கள்வர்	புல்லங்காடனார்	1219
கைந்நிலை 24	வெஞ்சுரம்	புல்லங்காடனார்	1292
கைந்நிலை 30	...கொன்றைக்	புல்லங்காடனார்	1214
கைந்நிலை 33	தளைஅவிழ்	புல்லங்காடனார்	1216
கைந்நிலை 35	...... ரடைப்	புல்லங்காடனார்	1215
கைந்நிலை 58	சுறாஎறி	புல்லங்காடனார்	1408
திணைமாலை நூற்றைம்பது 77	வந்தால்தான்	கணிமேதாவியார்	1422
திணைமாலை நூற்றைம்பது 78	ஒருகை	கணிமேதாவியார்	1287
திணைமாலை நூற்றைம்பது 94	பகல்பருகிப்	கணிமேதாவியார்	1174
திணைமாலை நூற்றைம்பது 96	இருள்பரந்(து)	கணிமேதாவியார்	1203
திணைமாலை நூற்றைம்பது 97	பாழிபோல்	கணிமேதாவியார்	1204
திணைமாலை நூற்றைம்பது 101	வண்டினம்	கணிமேதாவியார்	1168
திணைமாலை நூற்றைம்பது 113	பறியோலை	கணிமேதாவியார்	1209
திணைமொழி	சிறுபுன்	கண்ணஞ்சேந்தனார்	1282

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐம்பது 15			
திணைமொழி	கல்அதர்	கண்ணஞ்சேந்தனார்	1283
ஐம்பது 17			
திணைமொழி	கலையொடு	கண்ணஞ்சேந்தனார்	1284
ஐம்பது 19			
திருக்குறள் 1181	நயந்தவர்க்கு	திருவள்ளுவர்	1376
திருக்குறள் 1182	அவர்தந்தார்	திருவள்ளுவர்	1377
திருக்குறள் 1183	சாயலும்	திருவள்ளுவர்	1378
திருக்குறள் 1184	உள்ளுவன்	திருவள்ளுவர்	1379
திருக்குறள் 1185	உவக்காண்.எம்	திருவள்ளுவர்	1381
திருக்குறள் 1186	விளக்(கு)அற்றம்	திருவள்ளுவர்	1382
திருக்குறள் 1187	புல்லிக்	திருவள்ளுவர்	1383
திருக்குறள் 1188	பசந்தாள்	திருவள்ளுவர்	1384
திருக்குறள் 1189	பசக்கமன்	திருவள்ளுவர்	1385
திருக்குறள் 1190	பசப்(பு)எனப்	திருவள்ளுவர்	1386
திருக்குறள் 1191	தாம்வீழ்வார்	திருவள்ளுவர்	1300
திருக்குறள் 1192	வாழ்வார்க்கு	திருவள்ளுவர்	1301
திருக்குறள் 1193	வீழுநர்	திருவள்ளுவர்	1303
திருக்குறள் 1194	வீழப்	திருவள்ளுவர்	1304
திருக்குறள் 1195	நாம்காதல்	திருவள்ளுவர்	1306
திருக்குறள் 1196	ஒருதலையான்	திருவள்ளுவர்	1307
திருக்குறள் 1197	பருவரலும்	திருவள்ளுவர்	1309
திருக்குறள் 1198	வீழ்வாரின்	திருவள்ளுவர்	1310
திருக்குறள் 1199	நசைஇயார்	திருவள்ளுவர்	1312
திருக்குறள் 1200	உறாஅர்க்கு	திருவள்ளுவர்	1313
திருக்குறள் 1201	உள்ளினும்	திருவள்ளுவர்	1314
திருக்குறள் 1202	எனைத்தொன்(று)	திருவள்ளுவர்	1316
திருக்குறள் 1203	நினைப்பவர்	திருவள்ளுவர்	1317
திருக்குறள் 1204	யாமும்	திருவள்ளுவர்	1319
திருக்குறள் 1205	தம்நெஞ்சத்(து)	திருவள்ளுவர்	1320

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திருக்குறள் 1206	மற்(று)யான்	திருவள்ளுவர்	1322
திருக்குறள் 1207	மறப்பின்	திருவள்ளுவர்	1323
திருக்குறள் 1208	எனைத்து	திருவள்ளுவர்	1325
திருக்குறள் 1209	விளியும்என்	திருவள்ளுவர்	1326
திருக்குறள் 1210	விடாஅது	திருவள்ளுவர்	1328
திருக்குறள் 1211	காதலர்	திருவள்ளுவர்	1329
திருக்குறள் 1212	கயல்உண்கண்	திருவள்ளுவர்	1331
திருக்குறள் 1213	நனவினால்	திருவள்ளுவர்	1332
திருக்குறள் 1214	கனவினால்	திருவள்ளுவர்	1333
திருக்குறள் 1215	நனவினால்	திருவள்ளுவர்	1335
திருக்குறள் 1216	நன(வு)என	திருவள்ளுவர்	1336
திருக்குறள் 1217	நனவினால்	திருவள்ளுவர்	1337
திருக்குறள் 1218	துஞ்சுங்கால்	திருவள்ளுவர்	1339
திருக்குறள் 1219	நனவினால்	திருவள்ளுவர்	1340
திருக்குறள் 1220	நனவினால்	திருவள்ளுவர்	1342
திருக்குறள் 1280	பெண்ணினால்	திருவள்ளுவர்	1344
திருக்குறள் 1238	முயங்கிய	திருவள்ளுவர்	1431
திருக்குறள் 1239	முயக்கிடைத்	திருவள்ளுவர்	1432
திருக்குறள் 1240	கண்ணின்	திருவள்ளுவர்	1433
திருக்குறள் 1241	நினைத்(து)ஒன்று	திருவள்ளுவர்	1345
திருக்குறள் 1242	காதல்	திருவள்ளுவர்	1347
திருக்குறள் 1243	இருந்(து)உள்ளி	திருவள்ளுவர்	1348
திருக்குறள் 1244	கண்ணும்	திருவள்ளுவர்	1349
திருக்குறள் 1245	செற்றார்	திருவள்ளுவர்	1350
திருக்குறள் 1246	கலந்(து)உணர்த்தும்	திருவள்ளுவர்	1352
திருக்குறள் 1247	காமம்	திருவள்ளுவர்	1353
திருக்குறள் 1248	பரிந்(து)அவர்	திருவள்ளுவர்	1354
திருக்குறள் 1249	உள்ளத்தார்	திருவள்ளுவர்	1355
திருக்குறள் 1250	துன்னாத்	திருவள்ளுவர்	1356
திருக்குறள் 1251	காமக்	திருவள்ளுவர்	1358

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திருக்குறள் 1252	காமம்என	திருவள்ளுவர்	1359
திருக்குறள் 1253	மறைப்பேன்மன்	திருவள்ளுவர்	1360
திருக்குறள் 1254	நிறைஉடையேன்	திருவள்ளுவர்	1362
திருக்குறள் 1255	செற்றார்பின்	திருவள்ளுவர்	1363
திருக்குறள் 1256	செற்றவர்	திருவள்ளுவர்	1364
நற்றிணை 14	தொல்கவின்	மாமூலனார்	1259
நற்றிணை 64	என்னர்	உலோச்சனார்	1365
நற்றிணை 69	பல்கதிர்	சேகம் பூதனார்	1135
நற்றிணை 84	கண்ணும்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	1368
நற்றிணை 107	உள்ளுதொறும்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	1370
நற்றிணை 109	ஒன்றுதும்	மீளிப் பெரும்பதுமனார்	1196
நற்றிணை 130	வடுவின்று	நெய்தல் தத்தனார்	1405
நற்றிணை 157	இருங்கண்	இளவேட்டனார்	1416
நற்றிணை 169	முன்னியது	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	1418
நற்றிணை 186	கல்ஊற்று	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	1280
நற்றிணை 196	பளிங்குசெறிந்	வெள்ளைக்குடி நாகனார்	1201
நற்றிணை 224	அன்பினர்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1372
நற்றிணை 226	மரம்சா	கணியன் பூங்குன்றனார்	1293
நற்றிணை 237	நனிமிகப்	காரிக் கண்ணனார்	1297
நற்றிணை 343	முல்லை	கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்	1138
நற்றிணை 374	முரம்புதலை	வன்பரணர்	1423
நற்றிணை 394	மரந்தலை	ஔவையார்	1425
நற்றிணை 397	தோளும்	அம்மூவனார்	1272
நாலடியார் 394	செல்சுடர்	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	1441

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்



மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, "பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று" மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத்துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லுவதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்துகளையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஒவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது 'குறையிரத்தல்' எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

.தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலியிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்” என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, ‘வரைவின் மகளிர்’, ‘பொருள்விலைப் பெண்டிர்’ என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் ‘வாயில்கள்’ எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் ‘வாயில்’ மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

பொருள்வயிற்பிரிவு – 4

தொகுதி II

பக்கம் 1135 முதல் 1444 வரை

தலைவி கூற்று

நற்றிணை 69 **சேகம் பூதனார்**

திணை : முல்லை

கூற்று

வினைவயிற்பிரிதல் ஆற்றாளாய தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டப் பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலத்தில் திரும்ப வில்லை. மாலைப்பொழுது தலைவியைப் பெரிதும் வருத்தியதால் நொந்து தனக்குத்தானே அவள் புலம்பிக் கூறியது.

பல்கதிர் மண்டிலம் பகல்செய்து ஆற்றிச்
சேய்உயர் பெருவரைச் சென்றுஅவண் மறையப்
பறவை பார்ப்புவயின் அடைய, புறவின்
மாஎருத்து இரலை மடப்பிணை தழுவ,
முல்லை முகைவாய் திறப்பப் பல்வயின்
தோன்றி தோன்றுபு புதல்விளக் குறுப்ப
மதர்வை நல்ஆன் மாசுஇல் தெண்மணி,
கொடுங்கோல் கோவலர் குழலோடு ஒன்றி,
ஐதுவந்து இசைக்கும் அருள்இல் மாலை,
ஆள்வினைக்கு அகன்றோர் சென்ற நாட்டும்
இனைய வாகித் தோன்றின்,
வினைவலித்து அமைதல் ஆற்றலர் மன்னே!

தெளிவுரை

செங்கதிர்கள் பலவற்றைக் கொண்ட சூரியன் பகற்பொழுது முழுதும் வெயிலைப் பரப்பி, உயர்ந்து நிற்கும் மேற்கு மலையை அடைந்து மறைந்தது. தங்கள் குஞ்சுகள் இருக்கும் கூட்டினைப் பறவைகள் அடைந்தன. காட்டில் நீண்ட கழுத்தைக் கொண்ட கலைமான் இளமை மிக்க தன் பெண்மானைத் தழுவி மகிழ்ந்தது. முல்லை அரும்புகள் மலர்ந்தன. தழைத்துள்ள புதர்கள் பல வற்றிலும் தோன்றிப்பூக்கள் விளக்கு ஏற்றினாற் போன்று மலர்ந்தன. மதர்த்த நடையைக் கொண்ட பசுக்களின் கழுத்தில் கட்டிய மணிகளின் குற்றமற்ற தெளிந்த மணியோசை, வளைந்த

கோலை ஏந்தியிருக்கும் ஆயர்களின் குழலோசையோடு ஒன்றுசேர்ந்து மென்மையாய் வந்து ஒலிக்கின்றது. இரக்கமற்ற மாலைப்பொழுதும் இப்போது வந்து சேர்ந்தது. பொருளீட்டத் தலைவன் சென்றிருக்கும் நாட்டில் இவ்வாறு மாலைப்பொழுது தோன்றுமாயின், அவர் தாம் மேற்கொண்ட காரியத்தில் உறுதி கொண்டு தங்கியிருக்க மாட்டார்; திரும்பியிருப்பார். (அதனால் அவர் சென்ற நாட்டில் இத்தகைய மாலைப்பொழுது தோன்ற வில்லைபோலும்!)

கருத்து

பொருள் தேடச் சென்ற தலைவன் திரும்பி வாராமையால் தலைவி வருந்தியிருந்தாள். மாலைப்பொழுது அவள் உயிரையே வாங்குவதாயிற்று. இம்மாலைப்பொழுது அவர் சென்ற நாட்டில் தோன்றவில்லையோ? தோன்றியிருந்தால் வருந்தி அவர் இப்போது இங்கு வந்து சேர்ந்திருப்பாரே என்று தலைவி தனக்குத் தானே சொல்லி வருந்தினாள்.

குறிப்பு

முல்லை மலர்ந்தது என்பதால் இது கார் கால மாலைப்பொழுதைக் குறிப்பதாயிற்று. இப்பருவம் பிரிந்திருந்தார் கூடும் பருவம் என்பதைக் கூறி இப்பருவத்திலும் அவர் வந்து சேரவில்லையே என வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. கதிர் மண்டிலம் - சூரியன்; ஆற்றி - தன் கடமையைச் செய்து.
2. சேய் - தொலைவு; உயர்பெருவரை - உயர்ந்த பெரிய மலை (மேற்கு மலை); அவண் - அங்கே.
3. பார்ப்பு - குஞ்சு; புறவு - காடு.
4. மா - நீண்ட; எருத்து - கழுத்து; இரலை - ஆண்மான்; மடப்பிணை - இளமையான பெண்மான்.
5. முகை - அரும்பு; வாய் திறப்ப - மலர; பல்வயின் - பல இடங்களில்.
6. தோன்றி - தோன்றிப்பூ; விளக்குறுப்ப - விளக்கு ஏற்றினாற்போல; தோன்றுபு - தோன்றின.
7. மதர்வு - செம்மாப்பு; ஆன் - பசு; தெண்மணி - தெளிந்த மணி ஓசை.
8. கொடுங்கோல் - வளைந்த கோல்; கோவலர் - இடையர்; குழல் - புல்லாங் குழல்; ஒன்றி - ஒன்றுபட்டு இணைந்து.
9. ஐது - மென்மை; இசைக்கும் - ஒலிக்கும்.

10. ஆள் வினை - பொருளீட்டச் சென்ற செயல்.
11. இனையவாகி - இவ்வாறாய்; தோன்றின் - மாலைக்காலம் தோன்றினால்.
12. வலித்து - உறுதி கொண்டு; ஆற்றலர் - தங்கியிருக்க மாட்டார்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 476 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'பிரிவாற்றாமை அவற்கும் உளதன்றே, நீ வேறுபடுகின்றது என்னை?' என்ற பாணற்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியை நோக்கி, 'பிரிவுத்துயரம் தலைவனுக்கும் ஏற்படுமன்றோ? அதனால் அவனும் விரைந்து வருவான்; துன்பம் தவிர்' என்று கூறிய பாணனிடம் தலைவி உரைத்தது.

கருவி வானம் கார்சிறந்து ஆர்ப்பப்
பருவஞ் செய்தன பைங்கொடி முல்லை;
பல்ஆன் கோவலர் படலைக் கூட்டும்
அன்பில் மாலையும் உடைத்தோ?
அன்பில் பாண! அவர்சென்ற நாடே!

தெளிவுரை

"என்மீது அன்பில்லாதவனாகிய பாணனே! இடி, மின்னல் முதலிய தொகுதிகளைக் கொண்ட வானம், இடி முழக்கத்தோடு மழை பெய்கிறது; கார்ப்பருவத்தை அறிந்து பசுமையான கொடி முல்லையும் பூவரும்புகளைத் தோற்றுவித்துள்ளது. பல பசுக் களையுடைய இடையர்களும் அப்பூக்களால் மாலை தொடுத்து அணிந்துகொள்கின்றனர். பிரிந்தார்பால் அன்பு சிறிதுமில்லாத இம்மாலைப்பொழுது தலைவன் சென்றிருக்கும் காட்டிலும் ஏற்பட்டிருக்குமா? (ஏற்பட்டிருக்குமாயின் இந்நேரம் இங்கு வந்திருப்பாரே.)"

கருத்து

அந்திப்பொழுது அவர் சென்ற நாட்டில் ஏற்படவில்லையோ?

விளக்கம்

"அந்திப்பொழுது தலைவன் சென்ற இடத்தில் ஏற்படவில் லையோ? ஏற்பட்டிருந்தால் காதல் நினைவு தோன்றி வாட்டு தலாலே அவரும் தம் செயலை முடித்துத் திரும்பியிருப்பாரே! ஒருவேளை மாலைப்பொழுது ஏற்பட்டிருந்தும் அஃது அவர்பால் எத்தகைய நெகிழ்வையும் ஏற்படுத்தவில்லையோ?" என்று தலைவி வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. கருவி வானம் - மின் முதலிய தொகுதிகளோடு கூடிய வானம்; கார் சிறந்து - கருமை மிகுந்து, கார் காலத்தைத் தோற்றுவித்து.
2. பருவம் - கார்ப்பருவம்.
3. பல்ஆன் - பல பசுக்கள்; கோவலர் - இடையர்; படலை - தழை விரவித் தொடுத்த மாலை; கூட்டும் - தொடுக்கும்.
4. அன்பில் மாலை - (பிரிந்தார்க்கு) அன்பில்லாத மாலை; உடைத்தோ - உடையதோ?.
5. அன்பில் - அன்பில்லாத.

தலைவி கூற்று

நற்றிணை 343 **கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் பிரிவிடை ஆற்றாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து வாடும் தலைவி வருந்தி, தலைவனை எண்ணி ஆற்றாது தோழியை நோக்கிக் கூறியது.

முல்லை தாய கல்அதர்ச் சிறுநெறி
அடையாது இருந்த அம்குடிச் சீறூர்த்
தாதுஎரு மறுகின் ஆ,புறம் தீண்டும்
நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து,
உகுபலி அருந்திய தொகுவிரல் காக்கை
புன்கண் அந்திக் கிளைவயின் செறியப்
படையொடு வந்த பையுள் மாலை
இல்லைகொல் வாழி தோழி! நத்துறந்து
அரும்பொருள் கூட்டம் வேண்டிப்
பிரிந்துஉறை காதலர் சென்ற நாட்டே!

தெளிவுரை

தோழி! முல்லைக்கொடிகள் தாவிப் படர்ந்திருக்கின்ற மலையிடைப்பட்ட சிறிய வழியை விட்டு விலகியுள்ள அழகிய சிற்றூரில் பூந்தாதுகள் விழுந்து மக்கிக் கிடக்கும். அவ்வூரின் தெருக்களின் வழியே செல்லும் பசுக்கூட்டத்தின் முதுகைத் தொடுமளவில் கடவுள் உறையும் நீண்ட ஆலமரத்தின் விழுதுகள் தொங்கும். அம்மரத்தடியில் கடவுளுக்குப் படைத்து வைக்கப் பட்ட பலிச்சோற்றினைத் தொகுதியான கால்விரல்களைக் கொண்ட காக்கைகள் உண்ணும்; துன்பம் செய்யும் மாலைப் பொழுதில் அவை தம் இனம் இருக்கும் இடத்தைச் சென்றடையும். பிரிந்திருப்போரை வருத்தும் இம்மாலைக் காலம், பொருள் தேடச் சென்றுள்ள நம் காதலர் சென்ற நாட்டில் ஏற்படவில்லையோ?

கருத்து

தலைவர் சென்றுள்ள நாட்டில் பிரிந்திருப்போரை வருத்தும் மாலைப் பொழுது ஏற்படவில்லையோ?

விளக்கம்

பொருள் தேடச் சென்ற தலைவனைப் பிரிந்ததால் தலைவி அவன் நினைவாய் வாடியிருந்தாள். மாலை நேரத்தில் இத் துன்பம் பொறுக்க இயலாததாயிற்று. தலைவன் சென்றுள்ள இடத்தில் பிரிந்தோரை வருத்தும் இம்மாலைப்பொழுது

ஏற்படவில்லையோ? ஏற்பட்டிருந்திருந்தால் அவர் நம்மை நினைந்து, ஆற்றாதவராய், இப்போதே இங்கு வந்து சேர்ந் திருப்பார் அன்றோ? எனத் தன் ஆற்றாமையைத் தலைவி வெளிப்படுத்துகிறாள்.

இறைச்சி

ஆலமரத்திற்குக் கீழே இடப்பட்ட பலிச்சோற்றினைத் தின்ற காக்கை மாலை நேரத்தில் தன் இனத்தோடு சென்று தங்கும் என்றது, தலைவியின் நலனுண்ட பசலை நோய் மாலை நேரத்தில் அவள் நெற்றியில் பரவி நிற்கிறது என்னும் கருத்தைப் புலப் படுத்துகிறது.

ஆலமரத்தின் விழுது பசுவின் முதுகை வருடும் என்றது, தோழி அருகிருந்து தலைவியைத் தேற்றிவிடுகிறாள் என்பதைக் குறிப்பிடுகிறது.

சொற்பொருள்

1. தாய - படர்ந்துள்ள.
2. அடையாது - விலகியுள்ள.
3. தாது எரு - பூந்துகள்; மறுகு - தெரு; ஆபுறம் - பசுவின் முதுகுப்புறம்; தீண்டும் - தொடும்.
4. நெடுவீழ் - நீண்ட விழுது; ஆலம் - ஆலமரம் (சிவபெருமான் இம்மரத்தின்கீழ் வீற்றிருப்பதால் கடவுள் ஆலம் எனப்பட்டது).
5. உகுத்தல் - இடுதல்; பலி - கடவுளுக்கு இடும் சோறும் பூவும்; தொகுவிரல் - தொகுதியான விரல்.
6. புன்கண் - துன்பம்; கிளை - சுற்றம், இனம்.
7. படை - படைக்கலம், (இது வாடைக்காற்று, முல்லை மணம் போன்றவற்றைக் குறிக்கும்); பையுள் - துன்பம்.
8. பொருட் கூட்டம் - பொருளை ஈட்டுதல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 330 **கழார்க் கீரன்எயிற்றியனார்**

திணை : மருதம்

கூற்று

பிரிவிடை வேறுபட்ட கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்த காலத்தே வருந்திய தலைவி, 'என்னை மிகவும் வருத்தும் மாலைக்காலமும் பிரிவுத்துன்பமும் தலைவர் சென்ற நாட்டில் இல்லையோ?' என்று தோழியிடம் கூறி வருந்தியது.

நலத்தகைப் புலைத்தி பசைதோய்த்து எடுத்துத்
தலைப்புடைப் போக்கித் தண்கயத்து இட்ட
நீரின் பிரியாப் பருஉத்திரி கடுக்கும்
பேர்இலைப் பகன்றைப் பொதிஅவிழ் வான்பூ
இன்கடுங் கள்ளின் மணம்இல கமழும்
புன்கண் மாலையும், புலம்பும்,
இன்றுகொல் தோழிஅவர் சென்ற நாட்டே?

தெளிவுரை

நல் இயல்பினைக் கொண்ட வண்ணாத்தி கஞ்சிப்பசையிலே தோய்த்தெடுத்து, முதல் துவைப்பைத் துவைத்துவிட்டு, அதன்பின் குளிர்ச்சி பொருந்திய நீர்நிலையிலே இட்டு அலசும் பருத்திஆடை பிரியாது முறுக்கித் தோன்றுவதுபோல, பெரிய இலைகளைக் கொண்ட பகன்றையின் இதழவிழ்ந்த வெண்மை யான மலர்கள் காணப்படுகின்றன. அம்மலர்கள் இனிமையும் கடுப்பும் கொண்ட கள்ளினைப்போல நறுமணமின்றி வீசு கின்றன. இத்தகைய துன்பத்தை மிகுவிக்கும் மாலைக்காலமும் தனிமைத் துயரமும் நம் தலைவர் சென்ற நாட்டில் தோன்றா திருக்குமோ?

கருத்து

மாலைக்காலமும் தனிமைத் துன்பமும் என்னை வருத்துகின்றன. அவர் சென்றுள்ள நாட்டில் இம்மாலைக்காலம் தோன்றவில்லையோ?

குறிப்பு

சுழற்றிச்சுழற்றி அடித்து நீரில் போடப்பட்ட பருத்தி ஆடை பிரியாமல் முறுக்கியிருக்கும் தோற்றம் பகன்றை மலருக்கு உவமை. பகன்றை மலர் வெண்மையானது; சிறு சிறு முறுக்குகளைக் கொண்டது; கள் நாற்றம் பொருந்தியது.

சொற்பொருள்

1. தகை - இயல்பு; புலைத்தி - வண்ணாத்தி; பசை - கஞ்சிப்பசை.
2. தலைப்புடை - முதல் துவைப்பு; கயம் - நீர்நிலை.
3. பரூஉ - பருத்த; கடுக்கும் - ஒக்கும்.
4. பகன்றை - பகன்றைப்பூ; பொதிஅவிழ் - இதழ் அவிழ்ந்த; வான் பூ - வெண்மையான பூ.
6. புன்கண் - துன்பம்; புலம்பு - தனிமை.
7. இன்று கொல் - இல்லையோ?

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 339 — **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் குறித்த பருவ வரவின்கண் மாலைப்பொழுது கண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவமும் தோன்றியது; மாலைப்பொழுதும் வருத்துகின்றது. அவனோ வரவில்லை' என்று தன் ஆற்ற முடியாமையைத் தலைவி தோழியிடம் கூறியது.

அம்ம வாழி தோழி சிறியிலைக்
குறும்சினை வேம்பின் நறும்பழம் உணீய
வாவல் உகக்கும் மாலையும்
இன்றுகொல் காதலர் சென்ற நாட்டே.

தெளிவுரை

"தோழி! வாழி! சிறிய இலைகளையும் குறுகிய கிளைகளையும் கொண்ட வேம்பின் இனிய பழத்தை உண்ணுதற்கு விரும்பி மாலைப்பொழுதில் வௌவால் உயரப் பறக்கும். இத்தகைய மாலை நேரம் நம் தலைவன் சென்றுள்ள நாட்டில் தோன்றவில்லையோ! (தோன்றியிருப்பின் நம்மைத் தேடி வந்திருப்பாரே!)"

கருத்து

தலைவன் சென்ற நாட்டில் மாலைப்பொழுது தோன்றவில்லையா?

சொற்பொருள்

1. சிறியிலை - சிறிய இலை.
2. குறுஞ்சினை - குறுகிய கிளை; வேம்பின் - வேப்ப மரத்தின்; உணீய - உண்ணும்பொருட்டு.
3. வாவல் - வௌவால்; உகக்கும் - உயரப் பறக்கும்.
4. இன்றுகொல் - இல்லையோ?

தலைவி கூற்று

குறுந்தொகை 92 **தாமோதரனார்**

திணை : நெய்தல்

கூற்று

காமம் மிக்க கழிபடர் கிளவியால் பொழுது கண்டு சொல்லியது

கூற்று விளக்கம்

பகற்போதெல்லாம் பிரிவுத் துயரை ஒருவாறு பொறுத்திருந்த தலைவி, காம நோயை மிகுவிக்கும் இயல்பினைக் கொண்ட மாலைப்பொழுதின் தோற்றம் கண்டு கூறியது.

ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை,
இறைஉற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமால் செலவே.

தெளிவுரை

ஞாயிறு மறைந்த அகன்ற இடம் பொருந்திய வானத்தில், தாம் தங்கியிருக்கப் பொருத்தமாய், வழியின் அருகே ஓங்கி வளர்ந் திருக்கும் கடம்ப மரத்தில் தம் கூட்டிலிருக்கும் குஞ்சுகளின் வாயினுள்ளே செருகி ஊட்டுவதற்காக, இரையைத் தம் வாயின் அலகிலே எடுத்துக்கொண்டு பறவைகள் விரைவாய்ப் பறந்து செல்லுகின்றன. அவை மிகவும் இரங்கத்தக்கவை.

கருத்து

பறவைகளும் கூடடையும் மாலைக்காலத்திலேயும் தலைவர் வந்தார் இலர்!

விளக்கம்

குஞ்சுகளுக்குரிய இரையை அலகிலே எடுத்துக் கொண்டு வானத்தே விரைவாய்ப் பறந்து செல்லும் பறவைகளைக் காணும் தலைவி, தலைவன் இவ்வாறு குடும்பப் பாசத்துடன் இன்னும் திரும்பி வந்திலனே என ஏங்குகிறாள்.

சொற்பொருள்

1. பட்ட - மறைந்த; அகல்வாய் - அகன்ற இடத்தைக் கொண்ட.
2. அளிய - இரங்கத்தக்கன; கொடுஞ்சிறை - வளைந்த இறகு.
3. இறை - தங்க; மராஅம் - கடப்ப மரம்.
4. பிள்ளை - குஞ்சு; செரீஇய - செருக.

தலைவி கூற்று

குறுந்தொகை 108 **வாயிலான் தேவனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்தேடப் பிரிந்த பொழுது, 'நான் கார்ப்பருவத்தே மீள்வேன்; ஆற்றியிரு' என்று தேற்றிச் சென்றான். அப்பருவம் தொடங்கிய பின்னரும் அவன் வாராமையால் ஆற்றாமை மிக்க தலைவி, தோழியிடம் சொல்லியது.

மழைவிளை யாடும் குன்றுசேர் சிறுகுடிக்
கறவை கன்றுவயின் படர, புறவில்
பாசிலை முல்லை ஆசுஇல் வான்பூச்
செவ்வான் செவ்வி கொண்டன்று;
உய்யேன் போல்வல் தோழி! யானே.

தெளிவுரை

"தோழி! மேகங்கள் தவழ்ந்து விளையாடிக்கொண்டிருக்கும் குன்றத்தைச் சேர்ந்தது, நம் சிற்றூர். இங்கிருந்து மேய்வதற்கு வெளியே சென்ற பாற்பசுக்கள் கன்றுகளை நினைந்து வீடுகளுக்குத் திரும்புகின்றன. முல்லை நிலத்தில் பசிய இலைகளைக் கொண்ட முல்லைக்கொடிகளில் உள்ள தூய்மையான வெண்ணிறப்பூக்கள், செவ்வானத்திலுள்ள நட்சத்திரங்களின் அழகைக் கொண்டிருக்கின்றன. இவற்றைக் காணும் நான் இனியும் உயிர் வாழேன்."

கருத்து

கன்றுகளை நினைந்து பாற்பசுக்கள் வீடடையும் மாலைப்பொழுது என்னை வதைக்கிறது.

விளக்கம்

முல்லை நிலத்தில் மாலைக்காலத்தில் கறவைகள் கன்றுகளை நினைத்து மறவாது வீடு திரும்பும். தலைவர் அம்முல்லை நிலத்த

வராயிருந்தும் நம்மை நினைந்து அவர் வந்திலரே! கறவைக்குள்ள அன்புகூடக் காதலர்க்கு இல்லையே!

சொற்பொருள்

1. மழை - மேகம்; விளையாடும் - தவழும்.
2. வயின் - இடம்; படர - செல்ல; புறவு - முல்லை நிலம்.
3. பாசிலை - பசிய இலை; ஆசு இல் - குற்றம் இல்லாத, தூய; வான்பூ - வெண்மையான பூ.
4. செவ்வான் - சிவந்த வானம்; செவ்வி - அழகு; கொண்டன்று - கொண்டது.
5. உய்யேன் - உயிர் வாழேன்; போல்வல் - போலத் தோன்றுகிறது.

தலைவி கூற்று

குறுந்தொகை 155 — **ஓரோடகத்துக் கந்தரத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகள் பருவங்கண்டு அழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவத் தொடக்கத்தே திரும்பி வருவதாய்க் கூறிப் பிரிந்து சென்ற தலைவன், அப்பருவம் தொடங்கியும் வாராமையால் தலைவி வருந்திக் கூறியது.

முதைப்புனம் கொன்ற ஆர்கலி உழவர்
விதைக்குறு வட்டி போதொடு பொதுளப்
பொழுதோ தான்வந் தன்றே; ‘மெழுகுஆன்று
ஊதுஉலைப் பெய்த பகுவாய்த் தெள்மணி
மரம்பயில் இறும்பின் ஆர்ப்ப, சுரன்இழிபு,
மாலைநனி விருந்து அயர்மார்
தேர்வரும்’ என்னும் உரைவா ராதே.

தெளிவுரை

“பழமையான புன்செய் நிலத்தை உழவர்கள் ஆரவாரத்துடன் உழுதனர். காலையில் விதைப்பெட்டிகளில் கொண்டுசென்ற

தானியங்களை நிலத்தில் விதைத்துவிட்டு, மாலையில் அப் பெட்டிகளை முல்லை மலர்களால் நிறைத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினர். இத்தகைய மாலைப்பொழுதும் இப்போது வந்துவிட்டது. அரக்கால் செய்யப்பட்ட அச்சில் கொல்லன், உலைக்களத்தில் உலோகத்தை ஊற்றி மணிகளைச் செய்வான். பிளவுபட்ட வாயையும் தெளிந்த ஓசையையும் கொண்ட இம்மணிகள், மரங்கள் நெருங்கிய காட்டிடையே ஒலிக்கும்படியாக, வழியினைக் கடந்து, மாலைக்காலத்தில், அரிய விருந்தை நுகரும்பொருட்டுத் தலைவருடைய தேர் வரவிருக்கின்றது என்னும் சொல் இன்னும் வரவில்லையே."

கருத்து

இடையர்கள் வீடு திரும்பும் மாலைக்காலம் தொடங்கியது; தலைவர் தேர் இன்னும் வந்து சேரவில்லை.

விளக்கம்

முல்லைக்கொடிகள் மலர்ந்துவிட்டன; கார் காலம் வந்து விட்டது. ஆனால், அரக்கால் செய்த அச்சில் வார்த்துச் செய்யப் பட்டவையும் குதிரைகளின் கழுத்தில் கட்டப்பட்டவையுமான மணிகள் அசைந்து எழுப்பும் ஒலியும் கேட்கவில்லை. மாலைக் காலத்தில் சிறந்த விருந்து உண்பதற்காகத் தலைவன் தேர் வந்து கொண்டிருக்கிறது என்னும் சொல்லையும் கேட்க இயல வில்லை.

குறிப்பு

அரக்கில் செய்யப் பெற்ற அச்சில் உருக்கிய உலோகக் கலவையை ஊற்றிக் கொல்லன் உலைக்களத்தில் மணிகள் செய்யப்பெறும். அவை தேரிலும், குதிரைகளின் கழுத்திலும் கட்டப்பெற்றிருக்கும்.

சொற்பொருள்

1. முதைப்புனம் - பழைய புன்செய் நிலம்; கொன்ற - உழுத; ஆர்கலி - ஆரவாரம்.
2. விதைக் குறுவட்டி - விதைத் தானியங்களைக் கொண்டுள்ள சிறிய பெட்டி; போது - (முல்லை) மலர்கள்; பொதுள - நிறைய.
3. பொழுது - (மாலைப்) பொழுது; மெழுகு - அரக்கு; ஆன்று - (செய்த அச்சில்) அமைத்து.

4. ஊதுஉலை - கொல்லனின் ஊதும்உலை; பகுவாய் - பிளவுபட்ட வாய்; தெள்மணி - தெளிந்த ஓசையைக் கொண்ட மணி.
5. பயில் - நெருங்கிய; இறும்பு - குறுங்காடு; ஆர்ப்ப - ஒலிக்க; சுரன்இழிபு - வழியைக் கடந்து.
6. அயர்தல் - நுகர்தல்.
7. வாராதே - வரவில்லை.

தலைவி கூற்று

குறுந்தொகை 188 **மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு அழிந்த கிழத்தி தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்ற தலைவன் கார் காலத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்றான்; கார்ப்பருவம் தொடங்கியது; ஆனால், அவன் வரவில்லை. அதனால் துன்புற்ற தலைவி தோழியிடம் சொல்லியது.

முகைமுற் றினவே முல்லை; முல்லையொடு
தகைமுற் றினவே தண்கார் வியன்புனம்;
வால்இழை நெகிழ்த்தோர் வாரார்
மாலை வந்ததன்று,என் மாண்நலம் குறித்தே.

தெளிவுரை

முல்லைக்கொடிகளில் அரும்புகள் முதிர்ந்தன; குளிர்ச்சி பொருந்திய கார் காலத்தை ஏற்ற முல்லைநிலங்கள் முல்லை மலர்களுடன் கூடி அழகு பெற்றுள்ளன. என் சிறந்த அழகைச் சிதைக்க மாலைக் காலமும் தொடங்கிவிட்டது; ஆனால், ஒளி பொருந்திய என் அணிகலன்கள் கழன்றுவிழுமாறு செய்த தலைவரோ இன்னும் வந்திலர்.

கருத்து

அவர் வரவில்லை; ஆனால், கார் கால மாலைப்பொழுதோ எனக்குப் பெருந் துன்பத்தைத் தரத் தொடங்கிவிட்டது. நான் என் செய்வேன்?

விளக்கம்

அன்பர் துணை செய்யாவிட்டால் பகைவர் துன்புறுத்துவர்; அன்பர் நெருங்கினாலோ பகைவர் எட்டி நிற்பர். தலைவன் அருகிலில்லாததால் மாலைப்பொழுது தலைவியை வருத்து கிறது. தலைவன் வந்துவிட்டாலோ மாலை நேரம் துன்புறுத் தாது விலகிச் செல்லும்.

சொற்பொருள்

1. முகை - மொட்டு.
2. தகை - அழகு; வியன் - பரந்த; புனம் - நிலம்.
3. வால் இழை - ஒளி பொருந்திய அணிகலன்; நெகிழ்த்தோர் - கழன்றுவிழச்செய்தவர்.
4. மாண்நலம் - சிறந்த அழகு; குறித்தே - நினைத்து, எண்ணி.

தலைவி கூற்று

குறுந்தொகை 195 **தேரதரனார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடைப் பருவ வரவின்கண் கிழத்தி மெலிந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கூறிச் சென்ற பருவத்தில் வந்து சேராததால் அவன் எங்குள்ளானோ எனத் தலைவி வருந்திக் கூறியது.

சுடர்சினம் தணிந்து குன்றம் சேரப்
படர்சுமந்து எழுதரு பையுள் மாலை,
யாண்டுஉளர் கொல்லோ, வேண்டுவினை முடிநர்?

'இன்னாது இரங்கும்' என்னார் அன்னோ!
தைவரல் அசைவளி மெய்பாய்ந்து ஊர்தரச்
செய்வுறு பாவை அன்னஎன்
மெய்பிறி தாகுதல் அறியா தோரே!

தெளிவுரை

"தடவுவதுபோல அசைந்துவரும் வாடைக்காற்று என் மேனியில் படர்ந்து துன்பம் செய்கின்றது. அதனால் பொன்னால் செய்த பாவை போன்ற என் மேனி மெலிந்து வேறுபாடடைந்ததைத் தலைவர் அறிந்திலர். கதிரவன் தன் வெம்மை தணிந்து மேற்கு மலையைச் சென்றடைந்தது; துன்பத்தை மேற்கொண்டு தோன்றிய துயர்மிகும் மாலைப் பொழுதில், தாம் விரும்பிய பொருள்தேடும் செயலை முடிப் பதற்காக என்னை மறந்துவிட்டவர், எவ்விடத்தில் உள்ளாரோ? இம்மாலைக்காலம் இன்னாததாயிற்று; நான் வருந்துவன் என்று அவர் நினைத்தாரில்லையே!"

கருத்து

மாலைக்காலத்தால் மெலிகிறேன்; இதனைத் தலைவர் அறிந்தாரிலர்!

விளக்கம்

வாடை வீசுகிறது; ஞாயிறு மேற்றிசையில் மறைகிறது; பொல்லாத மாலையும் புகுந்தது. 'இன்று' வருவேன் என்று கூறிச் சென்ற தலைவர் வந்திலர். அவர் இருக்குமிடமும் அறியேன். நான் துன்புறுவேன் என்பதை அவரும் நினைக்க வில்லை.

சொற்பொருள்

1. சுடர் - கதிரவன்; சினம் - வெம்மை; குன்றம் - (மேற்கு) மலை.
2. படர் - துன்பம்; எழுதரு - தோன்றிய; பையுள் - துன்பம்.
3. வேண்டுவினை - தாம் விரும்பிய பொருள் தேடும் செயல்; முடிநர் - முடிப்பதற்காக.
4. இரங்கும் - வருந்தும்; என்னார் அன்னோ - என்று நினைத்தாரிலர்.
5. தைவரல் - தடவுதல்; அசைவளி - அசைகின்ற (வாடைக்) காற்று; மெய் - உடம்பு, மேனி; ஊர்தர - படர்ந்து.

6. செய்வுறு பாவை - பொன்னால் செய்த பாவை.
7. பிறிதாகுதல் - வேறுபாடு அடைதல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 220 **ஒக்கூர் மாசாத்தியார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் கிழத்தி தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

'கார்ப்பருவம் தொடங்கும் காலத்தில் திரும்ப வருவேன்' எனக் கூறிச் சென்ற தலைவன், அப்பருவம் தொடங்கிய பின்னரும் வாராமையினால் மிகவும் வருந்திய தலைவி, தோழியை நோக்கிக் கூறியது.

பழமழைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை
இருவிசேர் மருங்கில் பூத்த முல்லை,
வெருகுசிரித் தன்ன, பசுவீ மென்பிணிக்
குறுமுகை அவிழ்ந்த நறுமலர்ப் புறவின்
வண்டுசூழ் மாலையும், வாரார்;
கண்டிசின் தோழி! பொருட்பிரிந் தோரே.

தெளிவுரை

"தோழியே! முன்பு பெய்த மழையால் செழித்து வளர்ந்த புதிய வரகினை ஆண்மான் மேய்ந்தது. அதனால் தலைப்பாகம் குறைந்து நிற்கும் தட்டைகளுக்கு அருகே முல்லைப்பூக்கள் காட்டுப்பூனை சிரித்தால் போன்று பூத்துள்ளன. பசுமையான புதுப்பூக்கள் தம் மெல்லிய முறுக்குள்ள சிறிய மொட்டுகளை மலர்வித்ததால் முல்லை நிலத்தில், வண்டுகள் அம்மலர்களைச் சுற்றிப் பறந்து கொண்டிருக்கின்றன. நம்மைவிட்டுப் பொருள் தேடப் பிரிந்து சென்ற தலைவர் இந்த மாலைப்பொழுதிலும் வந்து சேரவில்லை. இதனை நீ அறிக!"

கருத்து

மலர்களைச் சூழ்ந்து வண்டுகள் பறக்கும் மாலைப்பொழுது தோன்றியது; ஆனால், அவர் இன்னும் வரவில்லையே.

விளக்கம்

வரகின் கதிர்கள் கொய்யப்பட்டுவிட்டன; வரகின் தாளை மான்கள் மேய்ந்து குறைத்துவிட்டன. குட்டையான அத்தட்டைகளுக்கு அருகே முல்லைக்கொடிகளின் மலர்கள் பூத்துள்ளன. மணம் வீசும் அம்மலர்களில் வண்டுகள் மொய்க்கின்றன. இவை கார் கால மாலைக்காட்சி.

சொற்பொருள்

1. பழமழை - முன்பு பெய்த மழை; கலித்த - செழித்து வளர்ந்த.
2. இரலை - மான்; குறைத்தலைப் பாவை - குறைந்த நுனியைக் கொண்ட.
3. இருவி - கதிரொழிந்த தட்டை; மருங்கு - அருகே.
4. வெருகு - காட்டுப்பூனை; பசுவீ - பசிய பூ; மென்பிணி - மென்மையாய் மூடிக்கொண்டுள்ள, மலரும் பருவத்தில் உள்ள.
5. குறுமுகை - சிறிய மொட்டு; புறவு - முல்லை நிலம்.
6. வண்டுசூழ் - சுற்றி வண்டுகள் பறந்து கொண்டிருக்கும்.
7. கண்டிசின் - எண்ணிப் பார்.

தலைவி கூற்று

குறுந்தொகை 234 **மிளைப்பெருங்கந்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

பொருள் தேடப் பிரிந்து சென்ற தலைவன் தான் குறித்துச் சென்ற கார்ப் பருவத்தில் திரும்பவில்லை. மாலை நேரம் தலைவியை வருத்துமே என்று தோழி அவளுக்கு ஆறுதல் கூறினாள். அத்தோழியிடம், 'துணையைப் பிரிந்திருப்போர்க்கு எல்லாக் காலமும் ஒன்றுதான்' என்று தலைவி கூறியது.

சுடர்செல் வானம் சேப்ப, படர்கூர்ந்து,
எல்அறு பொழுதின் முல்லை மலரும்
மாலை என்மனார், மயங்கி யோரே;
குடுமிக் கோழி நெடுநகர் இயம்பும்
பெரும்புலர் விடியலும் மாலை;
பகலும் மாலை துணைஇ லோர்க்கே.

தெளிவுரை

"சூரியன் மறையும்போது சிவப்பாய்த் தோன்றும், துன்பம் மிகுந்து ஒளி மங்கிய அந்நேரத்தில் முல்லைப்பூக்கள் மலரும். அறிவு மயங்கியவர் இந்த நேரத்தை மாலைப்பொழுது என்று கூறுவர். என்னைப் போலத் துணையைப் பிரிந்திருப்போர்க்கு, உச்சிக் கொண்டை கொண்ட கோழிச்சேவல், பெரிய வீட்டில் உள்ளோர் துயிலெழுமாறு கூவுகின்ற பொழுதாகிய புலர் காலைப்பொழுதும் மாலைக்காலந்தான்."

கருத்து

துணையைப் பிரிந்திருப்போர்க்கு எல்லாப் பொழுதுகளும் துன்பம் தரும் ஒரே தன்மை கொண்ட பொழுதுகளே.

விளக்கம்

"காமநோய் உற்றோர்க்கு மாலைக்காலம் துன்பத்தை மிகுவிக்கும் என்பர். கணவனைப் பிரிந்து தனித்திருப்போர்க்கோ

மாலையைப் போன்று எல்லாப் பொழுதுமே துன்பந் தருவனவே. ஆதலின், அவர்கட்குக் காலையும் மாலையும் ஒன்றே ஆம்" என்று தலைவி தோழியிடம் கூறித் தான் கொண்டுள்ள வருத்தம் தலைவன் வந்த பின்பே தீரும் என்கிறாள்.

சொற்பொருள்

1. சுடர் - சூரியன்; செல் - மறையும்; சேப்ப - சிவப்புற; படர் கூர்ந்து - துன்பம் மிகுந்து.
2. எல் - ஒளி.
3. என்மனார் - என்று சொல்பவர்; மயங்கியோரே - அறிவு மயங்கியவர்.
4. குடுமி - உச்சிக்கொண்டை; நெடுநகர் - பெரிய வீடு; இயம்பும் - கூவும்.
5. பெரும்புலர் - இரவுப்பொழுது புலர்கின்ற.
6. துணையோர் - துணையைப் பிரிந்திருப்பவர்க்கு.

தலைவி கூற்று

குறுந்தொகை 314 **பேரிசாத்தனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட கிழத்தி வற்புறுக்கும் தோழிக்குப் பருவம் காட்டி அழிந்து வருந்திக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் தொடங்கியதும் வேறுபட்ட தலைவியிடம், 'நீ ஆற்றியிருத்தல் வேண்டும்' என்று வற்புறுத்திய தோழியிடம், 'அவர் கூறிய பருவம் தொடங்கியது; அவர் வரவில்லை' எனத் தலைவி வருந்திக் கூறியது.

சேய்உயர் விசும்பின் நீர்உறு கமஞ்சூல்
தண்குரல் எழிலி ஒண்சுடர் இமைப்பப்
பெயல்தாழ்பு இருளிய புலம்புகொள் மாலையும்,
வாரார் வாழி தோழி! வரூஉம்
இன்உறல் இளமுலை ஞெமுங்க,
இன்னா வைப்பின் சுரன்இறந் தோரே.

தெளிவுரை

"நம் தலைவர் துன்பம் மிகுந்த இடங்களைக் கொண்ட பாலை வழியைக் கடந்து சென்றுள்ளார். அங்கு மிக உயர்ந்த வானத்தில் நீர் நிறைந்த கருக்கொண்ட மேகங்கள் குழுமும்; குளிர்ச்சி பெற்று முழங்கும்; ஒளி பொருந்திய மின்னல்களை விட்டுவிட்டு இமைக்கும்; மழை தாழப்பெய்து எங்கும் இருண்டுவிடும், தனிமை மிக்க இந்த மாலைக்காலத்தைக் கண்டும், வளர்ந்து வரும் என் இளமுலைகள் அழுந்தும்படி இனிது தழுவிக் கொள்வதற்குத் தலைவர் வரவில்லையே! எனக்கு ஆறுதல் கூறும் தோழியே, நீ வாழ்க!"

கருத்து

தனித்திருக்கும் கார் கால மாலையில் தலைவர் என்னைத் தழுவிக் கொள்ள வரவில்லையே!

சொற்பொருள்

1. சேய் உயர் - மிக உயர்ந்த; விசும்பு - வானம், ஆகாயம்; நீர்உறு - நீர் நிறைந்த; கமம்சூல் - நிறைந்த கருப்பம்.
2. எழிலி - மேகம், முகில்; ஒண்சுடர் - ஒளி பொருந்திய சுடர்; இமைப்ப - விட்டுவிட்டு மின்னி.
3. பெயல் - மழை; தாழ்பு - தாழ்ந்து; இருளிய - இருண்டுவிட்ட; புலம்பு கொள் - தனிமை கொண்ட.
4. வரூஉம் - வளர்ந்து கொண்டிருக்கும்.
5. இன்உறல் - தழுவுதற்கினிய; ஞெமுங்க - அழுந்தும்படியாக.
6. இன்னா - துன்பம்; வைப்பு - இடம்; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 319 **தாயங்கண்ணனார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் வேறுபட்ட கிழத்தி, வன்புறை எதிர் அழிந்து சொல்லியது.

(வன்புறை - வற்புறுத்தி ஆற்றுவிப்பது; எதிர் அழிதல் - ஆற்றுவிக்கவும் ஆற்றாது வருந்துதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் தான் வருவதாய்க் குறித்துச் சென்ற கார்ப்பருவத்தில் வரவில்லை. அதுவரை பொறுத்திருந்த தலைவியிடம் ஆற்றாமை மிகுதியாகின்றது. அவள் மேனியும் அதனால் வேறுபட்டது. 'நீ மேலும் பொறுத்திருத்தல் வேண்டும்' என்று தோழி வலியுறுத்துகின்றாள். அவளிடம் தலைவி கூறியது.

மான்ஏறு மடப்பிணை தழீஇ, மருள்கூர்ந்து
கானம் நண்ணிய புதல்மறைந்து ஒடுங்கவும்,
கையுடை நல்மாப் பிடியொடு பொருந்தி,
மைஅணி மருங்கின் மலையகம் சேரவும்,
மாலைவந் தன்று, மாரி மாமழை;
பொன்ஏர் மேனி நல்நலம் சிதைத்தோர்
இன்னும் வாரார் ஆயின்,
என்ஆம், தோழிநம் இன்உயிர் நிலையே?

தெளிவுரை

தோழி! ஆண்மான்கள் இளமை வாய்ந்த தம் பெண்மான் களைத் தழுவினவாய், மயக்கம் மிகுந்து காட்டிலே உள்ள புதர்களுக்கு இடையே மறைந்து அடங்கியிருக்கவும் -

துதிக்கையினைக் கொண்ட நல்ல களிறுகள் தத்தம் பிடிகளோடு சேர்ந்து கார்மேகங்களால் அழகுற்று விளங்கும் மலைப்பக்கங்களைச் சென்றடையவும் மாரிக்காலத்துப் பெரு மழை, மாலைக்காலத்திலே பெய்தது.

பொன்னையொத்த என் மேனியின் நல்ல அழகெலாம் சிதையுமாறு செய்த தலைவன், இன்னமும் வாராதிருப்பான் ஆயின், என் இனிய உயிரின் நிலை என்ன ஆகுமோ?

கருத்து

விலங்குகள் தம் துணையோடு தம் இருப்பிடம் சென்றடையும் கார் கால மாலைப்பொழுதிலும் காதலன் வாரானாயினானே.

விளக்கம்

மழைக்கஞ்சிய மான்களும் யானைகளும் தத்தம் துணையோடு சென்றொடுங்கும் கார் காலத்து மாலைப்பொழுதிலும், தலைவன் நம்மைத் தழுவ வாரானாயின், நம் உயிர் நிலைபெறுதல் அரிது. விலங்கினங்கட்கு வாய்த்த நல்லுறவுகூட நமக்கு வாய்க்க வில்லையே என்று தலைவி ஆற்றாமை மிக்கவளாயினள்.

சொற்பொருள்

1. மான்ஏறு - ஆண்மான்; மடப்பிணை - இளமையான பெண்மான்; மருள் - மயக்கம்.
2. கானம் நண்ணிய - காட்டைப் பொருந்தியுள்ள; புதல் - புதர்; ஒடுங்குதல் - அடங்குதல்.
3. கை - துதிக்கை; நல்மா - நல்ல ஆண்யானை; பிடி - பெண்யானை.
4. மை அணி - கார் மேகங்களால் அழகு பெற்ற; மருங்கு - பக்கம்.
5. மாரி - மாரிக்காலத்து.
6. பொன்ஏர் - பொன்னை ஒத்த அழகு; சிதைத்தல் - அழித்தல்.
7. வாரார் ஆயின் - வாராது இருப்பாரெனில்.
8. என்ஆம் - என்ன ஆகும்?

தலைவி கூற்று

குறுந்தொகை 344 **குறுங்குடி மருதனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடை வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்ததனால் வாடி நலனழிந்த தலைவியை ஆற்றி யிருக்குமாறு தோழி கூற, அதற்குத் தலைவி கூறியது.

நோற்றோர் மன்ற தோழி! தண்ணெனத்
தூற்றும் துவலைப் பனிக்கடும் திங்கள்
புலம்பயிர் அருந்த அண்ணல் ஏற்றொடு
நிலம்தூங்கு அணல வீங்குமுலைச் செருத்தல்
பால்வார்பு, குழவி உள்ளி, நிரைஇறந்து,
ஊர்வயின் பெயரும் புன்கண் மாலை,
அரும்பெறல் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துஉறை காதலர் வரக்காண் போரே.

தெளிவுரை

“தோழி! குளிர்ச்சி பொருந்திய நீர்த்துளிகளைத் தூற்றும் பனிக் கொடுமையுள்ள திங்கள் இது. மேய்ச்சல் நிலத்தில் புல் மேயத் தலைமை வாய்ந்த காளையுடன், நிலத்தளவு தொங்கும் முன் தாடியைக் கொண்ட பசுக்கள் சென்றன. அவை தம் கன்றுகளை நினைத்ததால் பெரிய முலைக்காம்புகளிலிருந்து பாலை ஒழுக விட்டபடியே, தம்முடன் வரும் ஆநிரையை விட்டுப் பிரிந்து, விரைந்து ஊர் திரும்பும் மாலைக்காலம் இது. அரிய பொருளைத் தேடி ஆர்வப்பிணிப்புடன் சென்று, பிரிந்து தங்கியிருந்த காதலர், துன்பத்தைத் தரும் இம்மாலைக் காலத்திலே திரும்ப வரக் காணும் மகளிர் உறுதியாய்த் தவம் செய்தவர்கள் ஆவர்.”

கருத்து

பிரிந்த கணவன் வரவை மாலைக்காலத்திலே கண்டு மகிழும் மங்கையர் தவம் புரிந்தவராவர்; அத்தவத்தை நான் புரிந்தேனிலையே!

விளக்கம்

பொருள் தேடச் சென்ற காதலர் உரிய பருவத்தில் மாலை நேரத்தில் திரும்பி வருவதைக் காணும் பெண்கள் தவம் புரிந்தவர்கள். நான் இன்னும் என் காதலனைக் காணேன். ஆதலால் தவம் புரிந்தவள் அல்லேன் என்று தலைவி தன்னை நொந்து கொள்கிறாள்.

சொற்பொருள்

1. நோற்றோர் - தவம் செய்தோர்; மன்ற - உறுதியாய்.
2. துவலை - துளிகள்; தூற்றும் - சிந்துகின்ற; கடும் - கடுமையான.
3. புலம் - நிலம்; அண்ணல் - தலைமை; ஏறு - காளை.
4. தூங்கு - தொடுமளவுக்கு; அணல - பசுவின் கழுத்திலுள்ள முன் தாடி; வீங்கு முலை - பால் சுரத்தலால் பருத்துள்ள முலை; செருத்தல் - பசுவின் மடி.
5. பால் வார்பு - பாலைச் சொரிந்துகொண்டு; குழவி - கன்று; நிரை இறந்து - பசுக்கூட்டத்தைக் கடந்து.
6. புன்கண் - துன்பம், நோய்.
7. பிணிப்பு - கட்டு.

தலைவி கூற்று

குறுந்தொகை 352 **கடியலூர் உருத்திரங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடைத் தோழிக்குக் கிழத்தி மெலிந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருந்தபோது ஆற்றாளாகிய தலைவி தோழியை நோக்கி, 'தலைவர் பிரிவினால் மாலைக்காலம் எனக்குத் துன்பத்தைத் தருகிறது' என்று தன் ஆற்றாமைக்கான காரணத்தைத் தெரிவித்தது.

நெடுநீர் ஆம்பல் அடைப்புறத் தன்ன
கொடுமென் சிறைய கூர்உகிர்ப் பறவை
அகல்இலைப் பலவின் சாரல் முன்னி,
பகல்உறை முதுமரம் புலம்பப் போகும்
சிறுபுன் மாலை உண்மை
அறிவேன் தோழி!அவர்க் காணா ஊங்கே.

தெளிவுரை

தோழி! ஆழமான நீரில் நிற்கும் ஆம்பல் இலையின் பின் புறத்தைப் போன்ற வளைந்த மெல்லிய சிறகுகளுடன் கூரிய நகங்களையும் கொண்ட வௌவால்கள், மாலைக்காலத்தில், பகலில் தாம் தங்கியிருந்த பழைய மரங்கள் தனிமையடையும்படி இனிய மலைச்சாரலில் உள்ள பலா மரத்தினை நோக்கிச் செல்லும். சிறிது நேரமே இருக்கக்கூடிய இத்தகைய புன்மை யான மாலைக்காலம் ஒன்று உள்ளது என்பதை அவரைக் காணாது இருக்கும் இக்காலத்தில்தான் நான் அறிகிறேன்.

கருத்து

வௌவால் பறக்கும் மாலை நேர வரவு என் வருத்தத்தை மிகுவிக்கிறது.

குறிப்பு

தலைவன் உடனிருந்தபோது எந்நேரமும் இன்பமாகவே கழிந்ததால் துன்பம் தரக்கூடிய மாலை நேரம் என ஒன்று இருப்பதைத் தான் அறியா திருந்ததாய்த் தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நெடுநீர் - ஆழமான நீர்; அடை - இலை; புறம் - பின்புறம்.
2. கொடுமென் - வளைந்த மெல்லிய; கூர்உகிர் - கூர்மையான நகம்; பறவை - வௌவால்.
3. பலவின் - பலா மரத்தை; முன்னி - நினைத்து.
4. முதுமரம் - பழைய மரம்; புலம்ப - தனிமையடையும்படி.
5. புன்மாலை - சிறிது நேர மாலைப்பொழுது; உண்மை - உண்டு என்னும் உண்மையை.
6. ஊங்கு - பொழுது.

தலைவி கூற்று

குறுந்தொகை 386 **வெள்ளி வீதியார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடை வற்புறுக்கும் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிர் அழிந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து போயிருந்த காலத்து, அவன் வரும்வரை பொறுத்திருத்தல் வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினாள், தோழி. அவள் மொழிக்கு எதிராய்த் தலைவி கூறியது.

வெண்மணல் விரிந்த வீததை கானல்
தண்ணந் துறைவன் தணவா ஊங்கே
வால்இழை மகளிர் விழவுஅணி கூட்டும்
மாலையோ அறிவேன் மன்னே; மாலை
நிலம்பரந் தன்ன புன்கணொடு
புலம்புஉடைத்து ஆகுதல் அறியேன் யானே.

தெளிவுரை

தோழி! வெண்மணல் பரவிக் கிடக்கின்ற மலர்கள் செறிந்துள்ள கானற்சோலைகள் விளங்கும், தண்ணிய கடல்துறையைக் கொண்டவன், தலைவன். அவன் என்னைப் பிரிவதற்கு முன்பு

தூய அணிகளை அணிந்த மகளிர் விழாவுக்குரிய வகையில் தம்மை அழகுபடுத்திக் கொள்ளும் மாலைக்காலத்தையே நான் அறிவேன். இப்போது அது கழிந்து போனது. மாலைக்கால மென்பது நில உலகமெல்லாம் பரந்தது போன்று பரந்த துயரத்தோடு, தனிமைத் துயரத்தையும் கொண்டிருத்தலை, நான் அப்பொழுது அறிந்திலேன்.

கருத்து

தலைவன் பிரிந்திருப்பதால் மாலைநேரத் துயர் மிகுதியாகி வருத்து கின்றது.

விளக்கம்

தலைவன் இல்லாத இப்பொழுதுதான் மாலைப்பொழுது துன்பமானது என்பதை உணர்கிறேன். முன்பு அவனோடு இருந்தபோது மாலைக்காலம் மகிழ்ச்சி மிகுந்ததாய்த் துன்பம் சிறிதுமின்றி இருந்தது.

சொற்பொருள்

1. விரிந்த - பரவிய; வீ - மலர்; ததை - நெருங்கிய.
2. தண்அம் - குளிர்ந்த அழகிய; தணவா ஊங்கு - பிரியாத பொழுது; தணத்தல் - பிரிதல்.
3. வால் இழை - நல்ல அணிகலன்கள்; அணி கூட்டும் - அழகைச் சேர்க்கும்.
5. நிலம் - நில உலகம்; புன்கண் - துன்பம்.
6. புலம்பு - தனிமை.

தலைவி கூற்று

குறுந்தொகை 391 **பொன்மணியார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடைப் பருவவரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி அழிந்து கூறியது. (அழிந்து - வருந்தி.)

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்ற தலைவன், தான் திரும்ப வருவதாய்ச் சொல்லிச் சென்ற பருவம் தொடங்கியது; ஆயினும், அவன் வந்து சேராமையால் தலைவி மிகவும் வருந்தியிருப்பாள் என்று கருதியிருந்த தோழியிடம் தலைவி கூறியது.

உவரி ஒருத்தல் உழாஅது மடியப்
புகரி புழுங்கிய புயல்நீங்கு புறவில்,
கடிதுஇடி உருமின் பாம்புபை அவிய,
இடியொடு மயங்கி இனிதுவீழ்ந் தன்றே;
வீழ்ந்த மாமழை தழீஇப் பிரிந்தோர்
கையற வந்த பையுள் மாலை,
பூஞ்சினை இருந்த போழ்கண் மஞ்ஞை
தாஅம்நீர் நனந்தலை புலம்பக்
கூஉம் தோழி! பெரும்பே தையவே!

தெளிவுரை

"தோழி! முல்லை நிலத்தில் முன்பு மழையில்லாதிருந்ததால் எருதுகள் உழவின்றிச் சோம்பிக் கிடந்தன. மான்கள் வெப்பத்தைத் தாங்க இயலாமல் வருந்தியிருந்தன. இப்போதோ (கார் காலம் தொடங்கிவிட்டதால்) விரைவாய் இடிக்கின்ற இடியோசையினால் பாம்பின் படம் அழியுமாறு மழை இடியோடு சேர்ந்து இனிதாய்ப் பெய்கிறது. இவ்வாறு பெய்யும் மழையைத் தொடர்ந்து காதலரைப் பிரிந்தோர் செயலற்று விடும்படி துன்பத்தைத் தரும் மாலைக்காலமும் தோன்றியுள்ளது. இந்த மாலைக்காலத்திலே, பூக்களைக் கொண்ட கிளையிலே அமர்ந்திருந்த, பிளவுபட்ட கண்களைக் கொண்ட

மயில்கள், நீர் பாய்கின்ற பெரிய இடங்களிலிருந்து தனிமைத் துன்பம் தோன்றும்படி கூவுகின்றன. இம்மயில்கள் அறியாமை உடையன. (அதனால்தான் காதலரைப் பிரிந்திருப்போர் வருத்தமடைவரே என்பதை அறியாதனவாய் இவ்வாறு கூவுகின்றன.)"

கருத்து

கார் கால இனிய மாலைப்பொழுது தோன்றிவிட்டது; அவர் வரவில்லையென்றால் நான் வருந்தாமல் என்ன செய்ய இயலும்?

விளக்கம்

முன்பு மழையற்ற கோடையால் எருதுகள் உழாமல் சோம்பிக் கிடந்தன; மான்கள் வெப்பத்தால் புழுங்கின. அத்தகைய முல்லை நிலத்தில் இப்போது பாம்புகள் நடுங்குமாறு இடியிடித்து மழை பெய்துள்ளது. மரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. துன்பந் தரும் மாலையும் தோன்றியுள்ளது. மயில்கள் நீர் பாய்ந் தோடும் இடங்களிலிருந்து கூவுகின்றன. காதலரைப் பிரிந்து தனித்துள்ள மகளிர் இவற்றைக் கண்டு வருந்தாமல் வேறு என்ன செய்ய இயலும்?

சொற்பொருள்

1. உவரி - வெறுப்பு; ஒருத்தல் - எருது, எருமைக்கடா; மடிய - சோம்பிக் கிடக்க.
2. புகரி - புள்ளிகளைக் கொண்ட மான்; புழுங்கிய - வருந்தியிருந்தன; புயல் நீங்கு - மழை இல்லாமலிருந்த; புறவு - முல்லை நிலம்.
3. கடிதுஇடி - விரைவாய் இடிக்கின்ற; உரும் - இடி; பாம்பு பை - பாம்பின் படம்; அவிய - அழியும்படி.
4. மயங்கி - கலந்து.
5. தழீஇ - அதனைத் தொடர்ந்து.
6. கையற - செயலற்றுவிடும்படி; பையுள் - துன்பம்.
7. பூஞ்சினை - பூக்களைக் கொண்ட கிளை; போழ்கண் - பிளந்துள்ளது போன்ற கண்; மஞ்ஞை - மயில்.
8. நனந்தலை - அகன்ற இடம்; புலம்பு - தனிமை.
9. கூஉம் - கூவும்; பேதைய - அறியாமை உடையவை.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 17 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறிப் பிரிந்து சென்றான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

தண்நறும் கோடல் துடுப்பெடுப்பக் கார்எதிரி
விண்ணுயர் வானத்(து) உரும்உரற்றத் – திண்ணிதின்
புல்லுநர் இல்லார் நடுங்கச் சிறுமாலை
கொல்லுநர் போல வரும்.

தெளிவுரை

"சிறுபொழுதாகிய அந்திமாலைப்பொழுதில் குளிர்ச்சி பொருந்திய மணம் கொண்ட வெண்காந்தள் செடிகள் துடுப்புப் போன்ற அரும்புக் குலைகளை ஏந்தி நிற்கின்றன. வானத்தில் உயர்ந்து விளங்கும் மேகங்கள் இடி முழக்கம் எழுப்புகின்றன. இந்நிலையில் அன்புடன் தழுவிக் கொள்பவரான காதலர் அருகிலில்லாமல் காதலியர் துன்பமிக்கு நடுங்கக் கொலை யாளியைப் போன்று இம்மாலைப்பொழுது வந்துள்ளது" எனத் தோழியை நோக்கித் தலைவி கூறினாள்.

கருத்து

காதலரைப் பிரிந்திருக்கும் காதலியரைக் கொல்வதுபோலக் கார் கால மாலைக்காலம் வந்துள்ளது.

சொற்பொருள்

1. தண் நறும் - குளிர்ந்த மணமுள்ள; கோடல் - வெண்காந்தள் செடி; துடுப்பு எடுப்ப - துடுப்பினைப் போன்ற அரும்புகளை ஏந்தி நிற்க; கார் - கார் காலத்தை; எதிரி - எதிர்கொண்டு.

2. உரும் - இடி; உரற்ற - இடித்தொலிக்க; திண்ணிதின் - நன்றாக.
3. புல்லுநர் - தழுவிக்கொள்பவராகிய காதலர்; நடுங்க - (துன்பத்தால்) நடுங்கும்படியாக; சிறுமாலை - சிறுபொழுதாகிய மாலை.
4. கொல்லுநர் - கொலையாளி.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 21 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறிப் பிரிந்து சென்றான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

காரிகை வாடத் துறந்தாரும் வாராமுன்
கார்கொடி முல்லை எயி(று)ஈனக் – காரோ(டு)
உடன்பட்டு வந்தலைக்கும் மாலைக்கோ எம்மில்
மடம்பட்டு வாழ்கிற்பார் இல்.

தெளிவுரை

“நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் வருவதற்கு முன்னரே கார் கால மழையினால் செழித்த முல்லைக்கொடிகள் நம் பற்களைப் போன்ற அரும்புகளைத் தோற்றுவித்துள்ளன. நம் அழகு குலையுமாறு கார் காலத்துடன் ஒன்றுசேர்ந்து மாலைப் பொழுதும் நம்மை வருத்துகின்றது. இம்மாலைப்பொழுதுடன் நம்மைப்போல் இணைக்கப்பட்டு உயிருடன் வாழ்ந்திருக்கும் வன்மை கொண்டவர் எவரும் இலர்” என்று தோழிக்குத் தலைவி சொன்னாள்.

கருத்து

மாலைப்பொழுது வருத்த, காதலரைப் பிரிந்து இன்னும் வாழ்கிறேனே.

சொற்பொருள்

1. காரிகை - அழகு; துறந்தார் - (நம்மைப்) பிரிந்து சென்றவர்.
2. கார் கொடி - மழையினால் செழித்த கொடி; எயிறு ஈன - நம் பற்கள் போன்ற அரும்புகளைத் தோற்றுவிக்க; காரோடு - கார் காலத்துடன்.
3. அலைக்கும் - வருத்தும்; எம்மில் - நம்மைப்போல.
4. மடம் - இணக்கம்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 22 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறிப் பிரிந்து சென்றான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

கொன்றைக் குழலூதிக் கோவலர் பின்நிரைத்துக்
கன்றமர் ஆயம் புகுதர – இன்று
வழங்கிய வந்தன்று மாலை,யாம் காண
முழங்கி,வில் கோலிற்று வான்.

தெளிவுரை

ஆயர் கொன்றைக்குழலை ஊதி வர, தம் கன்றுகளை விரும்பிய பசுக்கூட்டங்கள் வரிசையாய் ஊருக்குள்ளே புகுகின்றன. மாலைப்பொழுதும் இப்போது தன் ஆட்சியைச் செலுத்த வந்துள்ளது. மேகமும் நாம் வருந்துமாறு ஆரவாரம் செய்து, வானவில்லை வளைத்து மழையைப் பெய்விக்கிறது.

கருத்து

ஆயன் ஊதும் குழலும், வானவில்லோடு பெய்யும் மழையும் மாலை நேரத்தில் நம்மை வருத்துகின்றன.

சொற்பொருள்

1. கொன்றைக்குழல் - கொன்றைப்பழத்தினைத் துருவிச் செய்த குழல்; கோவலர் - இடையர்; பின் - பின்னாக; நிரைத்து - வரிசையாய்ச் (செல்ல).
2. அமர் - விரும்பிய; ஆயம் - பசுக்கூட்டங்கள்; இன்று - இப்பொழுது.
3. வழங்கிய - (தன் ஆட்சியைச்) செலுத்தும்பொருட்டு.
4. வில் - வானவில்; வான்கோலிற்று - வானத்தை வளைத்தது.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 101 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் தான் திரும்புவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன், கார் காலம் தொடங்கியும் வரவில்லை. சொன்னவாறு அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி தோழியிடம் உரைத்தது.

வண்டினம் வெளவாத ஆம்பலும், வார்இதழான்
வண்டினம் வாய்வீழா மாலையும் – வண்டினம்
ஆராத பூந்தார் அணிதேரான் தான்போத
வாராத நாளே, வரும்.

தெளிவுரை

"வண்டுக்கூட்டங்கள் மொய்க்காத 'ஆம்பல்' எனும் பெயரைக்கொண்ட புல்லாங்குழல், வண்டுக் கூட்டம் வாய் வைத்துத் தேனைப் பருக இயலாதவாறு இதழ்களை மூடச்

செய்யும் சாயுங்காலமாகிய மாலைப்பொழுது ஆகிய இவ்விரண்டும், வண்டுக்கூட்டம் பொருந்த விரும்பாத நெட்டிப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட தேரையுடைய தலைவன் என்னிடம் வந்து சேராத நாள்களிலேதாம் என்னைத் துன்புறுத்தும்" என்று தோழியிடம் கூறினாள்.

கருத்து

புல்லாங்குழலோசையும், மாலைப்பொழுதும் தலைவன் இல்லாதபோது என்னை மிகவும் வருத்துகின்றன.

விளக்கம்

வண்டுகள் ஆம்பல்மலரில் மொய்த்துத் தேனுண்ணும்; புல்லாங்குழலில் மொய்க்கா. எனவே, புல்லாங்குழல் 'வண்டுகள் வௌவாத' ஆம்பல் எனப்பட்டது. புல்லாங்குழல் ஆம்பல் ஓசையை எழுப்புவதால் அஃது 'ஆம்பல்' என்று கூறப் பட்டுள்ளது.

சொற்பொருள்

1. வௌவாத - பருகாத; ஆம்பல் - புல்லாங்குழல் (புல்லாங்குழல் ஓசையை எழுப்புவதால் அஃது ஆம்பல் என்று அழைக்கப்படும்); வார் - ஒழுங்காய் அமைந்த; இதழ்ஆன் - இதழ்களில்.
2. வாய்வீழா - வாய் வைக்க விரும்பாத.
3. ஆராத - பொருந்த விரும்பாத; பூந்தார் - நெட்டிப்பூக்களால் செய்யப்பட்ட மாலைகளால்; அணி தேர் - அலங்கரிக்கப்பட்ட தேர்; போத - தான் என்னிடம் வந்து சேரும்படி.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 7 **மாறன் பொறையனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் தான் வருவதாய்க் கூறிச் சென்றான் தலைவன். கார் காலம் தொடங்கியது. ஆயினும், அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி தோழிக்கு உரைத்தது.

தேரோன் மலைமறைந்த செக்கர்கொள் புன்மாலை
ஆர்ஆன்பின் ஆயன்உவந்(து) ஊதும் – சீர்சால்
சிறுகுழல் ஓசை செறிதொடி! வேல்கொண்(டு)
எறிவது போலும் எனக்கு.

தெளிவுரை

தலைவி தோழியை நோக்கி, "நிறைய வளையல்களை அணிந்த தோழியே! ஒற்றைத்தேரைக் கொண்ட கதிரவன் மேற்கு மலைத் தொடரில் மறையும்போது வானம் செந்நிறம் பெற்று மாலைக் காலத்தைத் தோற்றுவிக்கிறது. அம்மாலைக்காலத்தில் அரிய பசுக் கூட்டங்களுக்குப் பின்னால் வரும் இடையன் புல்லாங் குழலை மகிழ்ந்து ஊதுகின்றான். அப்புல்லாங்குழலோசை வேல் கொண்டு தாக்குவதுபோன்ற துன்பத்தை எனக்குத் தருகின்றது" என்று கூறினாள்.

கருத்து

ஆயன் ஊதும் மாலை நேரக் குழலோசை வேல் கொண்டு என்னைத் தாக்குவதாயுள்ளது.

சொற்பொருள்

1. தேரோன் - ஒற்றைச் சக்கரம் கொண்ட தேரில் வரும் சூரியன்; செக்கர் - செவ்வானம்; புன்மாலை - சிறுபொழுதாகிய மாலைக் காலம்.

2. ஆர் - அருமையான; ஆன் - பசுக்கூட்டம்; ஆயன் - இடையன்; சீர்சால் - சிறப்புமிக்க.
3. சிறு குழல் - புல்லாங்குழல்; செறிதொடி - கை நிறைய வளையல்களை அணிந்தவள்.
4. எறிவது - தாக்குவது.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 27 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறிப் பிரிந்து சென்றான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

கார்ப்புடைப் பாண்டில் கமழப் புறவெல்லாம்
ஆர்ப்போ(டு) இனவண்(டு) இமிர்ந்தாட – நீர்த்தின்றி
ஒன்றா(து) அலைக்கும் சிறுமாலை மால்உழந்து
நின்றாக நின்றது நீர்.

தெளிவுரை

தலைவி தோழியை நோக்கி, "கார்மழை பெய்ததால் வாகை மரப் பூக்கள் மலர்ந்து மணம் வீசுகின்றன. முல்லை நிலத்தின் எல்லாப் பக்கங்களிலும் வண்டுக் கூட்டங்கள் ஆரவாரிப்புடன் திரிகின்றன. நற்குணமின்றிப் பகைமை கொண்டு என்னை வருத்தும் சிறுபொழுதான மாலைக்காலம் என்னுடன் மாறு பட்டு நிற்கிறது. அதனால், என் கண்களில் கண்ணீர் நிலையாய்த் தங்கிவிட்டது. என் செய்வேன்?" என்று உரைத்தாள்.

கருத்து

மரங்களிலுள்ள பூக்கள் மலரப் பறவைகள் மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் மாலை வேளையில் நான் அழுதுகொண்டிருக்க வேண்டியவளாயுள்ளேன்.

குறிப்பு

தலைவர் இருக்கும்போது இன்பம் தரும் மாலைப்பொழுது, அவர் இல்லாதபோது துன்பத்தைத் தருகிறது.

சொற்பொருள்

1. கார்ப்பு - மழை; பாண்டில் - வாகை மரம்; கமழ - பூப்பூத்து மணக்க; புறவு - முல்லை நிலம்.
2. ஆர்ப்பு - ஆரவாரிப்பு; இனவண்டு - வண்டுக்கூட்டம்; இமிர்ந்து - ஒலித்துக்கொண்டு; ஆட - திரிய; நீர்த்து இன்றி - நற்குணங்கள் இல்லாமல்.
3. ஒன்றாது - பகைத்து; அலைக்கும் - வருத்தும்; சிறுமாலை - சிறு பொழுதாகிய மாலைக்காலம்; மால் - (எனக்கு) மாறாய்; உழந்து - முயன்று.
4. நின்று ஆக - நிற்க; நின்றதுநீர் - (கண்களில்) நிலையாய் நீர் தங்கலாயிற்று.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 28 — **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறிப் பிரிந்து சென்றான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

குருந்தலை வான்படலை சூடிச் சுரும்பார்ப்ப
ஆயன் புகுதரும் போழ்தினான் ஆயிழாய்!
பின்னொடு நின்று பெயரும் படுமழைகொல்
என்னொடு பட்ட வகை.

தெளிவுரை

தலைவி தோழியை நோக்கி, "ஆய்ந்தெடுக்கப்பட்ட அணிகளை அணிந்த என் தோழியே! குருந்த மலரால் தொடுக்கப்பட்ட அசையும் பெரிய மாலையை அணிந்து, வண்டினங்கள் சூழ்ந்து ஆரவாரம் செய்ய, பசு மந்தையுடன் வீட்டில் சேர்கின்ற நேரமான மாலை வேளையில் என்னிடம் தோன்றிய வருத்தம் மிக்க இப்போக்கானது, இந்த இடையன் பின் ஊர்ந்து வரும் கார்ப்பருவ மழையினால் தோன்றியதோ?" என்று கூறினாள்.

கருத்து

குருந்து மலர, வண்டுகள் ஒலிக்க, பசுக்கூட்டம் வீடு திரும்பும் மாலைக் காலம் வந்தது; வருத்தமிகுதியால் என் கண்கள் நீரைப் பொழிகின்றன.

சொற்பொருள்

1. குருந்தலை - மிகச்சிறந்த; வான் - பெரிய; படலை - பூ மாலையினை; சூடி - அணிந்து; சுரும்பு - வண்டு; ஆர்ப்ப - ஒலிப்ப.
2. ஆயன் - இடையன்; புகுதரும் - (பசுக்கூட்டங்களோடு வீட்டினுள்) நுழையும்.
3. பின்னொடு - (ஆயன்) பின்னாக; நின்று - (தோன்றி) நிலை பெற்று; பெயரும் - ஊர்ந்து வரும்படியான; படுமழை - பெய்யும் மழை.
4. என்னொடு - என்னிடம்; பட்ட வகை - தோன்றிய போக்கு.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 94 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குரைத்தது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் திரும்புவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன், கார் காலம் தொடங்கியும் வரவில்லை. தான் சொன்னவாறு அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி தோழியிடம் உரைத்தது.

பகல்பருகிப் பல்கதிர் ஞாயிறு, கல்சேர
இகல்கருதித் திங்கள் இருளைப் – பகல்வர
வெண்ணிலாக் காலும் மருள்மாலை வேய்த்தோளாய்!
உள்நிலாது என்ஆவி ஊர்ந்து.

தெளிவுரை

"*மூங்கில் போன்ற தோள்களைக் கொண்ட தோழியே! கதிர்கள் பல கொண்ட கதிரவன், பகற்பொழுதினைத் தன்னுள்ளே வாங்கிக் கொண்டு மேற்குமலைத்தொடரில் போய் மறைய, அதனால் இருள் எங்கும் பரவிவிட்டது. நிலவு, இருளைப் பகையெனக் கருதி, பகல் வந்தது என்று சொல்லும் படியாய் வெண்மையான ஒளியை வீசும். இத்தகைய மயக்கத்தைக் கொண்ட மாலைப்பொழுதில் என் உயிர் என்னுள் நில்லாது வெளிப்படுகிறது. (என் உயிர் என்னிடத்துத் தங்கி யிருப்பதில்லை.)*"

கருத்து

காதலரைப் பிரிந்திருப்போர் உயிரை வாட்டுவதாய் மாலை நேரம் அமைந்துள்ளது.

சொற்பொருள்

1. பகல் பருகி - பகலைத் தன்னுள் கொண்டு; பல்கதிர் ஞாயிறு - கதிர்கள் பல கொண்ட கதிரவன்; கல்சேர - மேற்கு மலையைச் சென்றடைய.

2. இகல் - மாறுபாடு, பகை; பகல் வர - பகல் வந்தது என்று சொல்லும்படி.
3. காலும் - ஒளி வீசும்; மருள் - மயக்கம்; வேய் - மூங்கில்.
4. உள்நிலாது - உடலினுள்ளே நிலைத்து நிற்காது; ஊர்ந்து - வெளிப் பட்டு.

தலைவி கூற்று

கலித்தொகை 118 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடையாற்றாத தலைமகள், மாலைப்பொழுது கண்டு, அதனோடு புலம்பித் தோழி கேட்ப அதனொடு புலந்தது.

கூற்று விளக்கம்

பிரிவுத் துயரத்தைப் பொறுக்க இயலாத மாலை நேரத்தில், தலைவி தன் மனத்தில் விளைந்த துயரத்தை, அதனை விளித்துக் கூறுகிறாள். பின்னர்த் தோழி வர, அவளிடம், மாலை நேரத்தின்மீது தான் கொண்ட கோபத்தைத் தலைவி வெளியிடுவது.

தரவு

வெல்புகழ் மன்னவன், விளங்கிய ஒழுக்கத்தால்
நல்லாற்றின் உயிர்காத்து, நடுக்கறத் தான்செய்த
தொல்வினைப் பயன்துய்ப்ப, துறக்கம்வேட்டு எழுந்தாற்போல்—
பல்கதிர் ஞாயிறு பகல்ஆற்றி மலைசேர,
ஆனாது கலுழ்கொண்ட உலகத்து, மற்றுஅவன்
ஏனையான் அளிப்பான்போல், இகல்இருள் மதிசீப்பக்
குடைநிழல் ஆண்டாற்கும் ஆளிய வருவாற்கும்
இடைநின்ற காலம்போல், இறுத்தந்த மருள்மாலை!

தாழிசை

மாலைநீ — தூஅறத் துறந்தாரை நினைத்தலின், கயம்பூத்த
போதுபோல் குவிந்தஎன் எழில்நலம் எள்ளுவாய்;
ஆய்சிறை வண்டுஆர்ப்ப, சினைப்பூப்போல் தளைவிட்ட
காதலர்ப் புணர்ந்தவர் காரிகை கடிகல்லாய்.

மாலைநீ – 'தை'எனக் கோவலர் தனிக்குழல் இசைகேட்டுப்
பையென்ற நெஞ்சத்தேம் பக்கம்பா ராட்டுவாய்,
செவ்வழியாழ் நரம்புஅன்ன கிளவியார் பாராட்டும்,
பொய்தீர்ந்த புணர்ச்சியுள் புதுநலம் கடிகல்லாய்.

மாலைநீ– தகைமிக்க தாழ்சினைப் பதிசேர்ந்து புள்ஆர்ப்பப்
பகைமிக்க நெஞ்சத்தேம் புன்மைபா ராட்டுவாய்,
தகைமிக்க புணர்ச்சியார், தாழ்கொடி நறுமுல்லை
முகைமுகம் திறந்தன்ன, முறுவலும் கடிகல்லாய்.

எனஆங்கு–

சுரிதகம்

மாலையும் அலரும் நோனாது, எம்வயின்
நெஞ்சமும் எஞ்சும்மன் தில்ல – எஞ்சி,
உள்ளாது அமைந்தோர், உள்ளும்,
உள்இல் உள்ளம், உள்உள் உவந்தே.

தெளிவுரை

(தலைவனைப் பிரிந்திருக்கும்போது மாலை வந்து துன்புறுத்தத் தலைவி தன்னுள் இவ்வாறு கூறிக்கொள்கிறாள்:) "வெற்றியால் அமைந்த புகழையும் அறச்செயல்களையும் கொண்ட மன்னவன், குடிமக்களை அறநெறியில் பாதுகாத்து முதுமையில் துறக்கத்தை விரும்பித் துறவு கொண்டதுபோல, பகலெல்லாம் ஒளி வீசிய சூரியன் மாலையில் மறைந்தான். மன்னனின் துறவால் வருந்திய நாட்டில் அவனை அடுத்து மற்றொருவன் ஆட்சி புரிந்ததுபோல, வானத்தில் சந்திரன் தோன்றி இருளை நீக்கினான். மன்னர் இருவரின் ஆட்சிக்காலத்திற்கும் இடையில், மயக்கம் தருகின்ற இந்த மாலைநேரம் வந்து என்னை மிகவும் வருத்துகின்றதே!" (என்று சொன்னவள், பிறகு மாலைநேரத்தை நோக்கிப் பேசுவதுபோலப் பேசுகிறாள்.)

"மாலையே! நான் தலைவர் பிரிவினால் வலிமையற்று இருக்கும் போது, நீர்நிலையில் விளங்கும் பூவைப் போல மனம் குவிந்திருக்கும் என் அழகைச் சிதைக்கின்றாய். ஆனால், வண்டுகள் ஒலிக்க மலரும் கோட்டுப்பூவைப்போல மனம்

நெகிழ்ந்து காதலரோடு கூடியிருக்கும் பெண்டிரின் அழகை நீ போக்குவது இல்லையே. இஃது என்ன நியாயம்?

"மாலையே! கோவலர் ஊதும் குழலிசை கேட்கிறது. காதல ரோடு கூடி இருக்க இயலாமையால், மனம் குவிந்து இருக்கும் என் உயிரை வாங்காமல் வேடிக்கை பார்க்கிறாய். ஆனால், கணவர் பிரிந்திருந்தபோது யாழில் செவ்வழிப்பண்ணைப் போல் துயர உணர்வை வெளிப்படுத்திப் பேசி, உறங்கும்போது அவரைப் புணர்ந்ததுபோலக் கனவு கண்டு அழகிழந்த மகளிர், கணவர் வந்தவுடன் உண்மையாகவே அவரைப் புணர்ந்து மகிழும் மாலைக்காலத்தில் நீ அவர் அழகைப் போக்குவது இல்லையே. இஃது என்ன நியாயம்?

"மாலையே! மரக்கிளையில் வாழும் பறவையினங்கள் மாலை யில் தம் இனங்களோடு இணைந்து இன்புற்றிருக்க, நான் மட்டும் வருந்தித் துன்பப்படுவதை வேடிக்கை பார்த்து மகிழ்கிறாய். ஆனால் காதலரோடு அன்பு பெருக, அழகுற அமர்ந்திருக்கும் மகளிரது வாயிதழை முல்லை மொட்டினை வண்டு மலர்த்து வதுபோல் காதலர் மலர்த்த, அவர்கள் பூக்கும் புன்முறுவலை நீ போக்குவது இல்லையே. இஃது என்ன நியாயம்?" என்று மாலையை நோக்கிக் கேட்ட தலைவி,

அப்போது அங்கே வந்த தோழியை நோக்கி, "தோழி! நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் நம்மை நினையாமல் நாம் அவரை நினைத்து வாழும் நிலையில், என்றாவது ஒருநாள் வருவார் என்னும் நம்பிக்கையில் நெஞ்சம் ஆறுதல் பெற்றி ருந்தது. ஆனால் இப்போது இம்மாலை நேரத்தின் கொடுமை யையும் ஊரார் பேசும் பழியையும் பொறுக்க மாட்டாமல் துன்புறுகின்றதே. என்ன செய்வது?" என்று கேட்டாள்.

கருத்து

தலைவனைப் பிரிந்திருக்கும் என்னை மாலைப்பொழுது மிகவும் வருத்துகிறது.

விளக்கம்

தன்னைப் பிரிந்து சென்ற தலைவன் மாலைக்காலத்தில் திரும்பி விடுவான் என்று எண்ணிய தலைவி, அவன் வாராத நிலையில் வருந்தித் துன்புற்று ஏக்கம் கொண்டாள். அப்பொழுது அவளின் உயிர்த்தோழி அங்கு வர, அவளைக் கண்டும் காணாதவள்போலத் தலைவி, தன் துயரத்தைப் பற்றி அத்தோழியின் காதில் விழுமாறு கூறுகிறாள். அவ்வாறு கூறும்போது, 'மாலைக்காலம் ஓரவஞ்சனை புரிகிறது' என்று கூறி அதனுடன் கோபம் கொள்ளுகிறாள், தலைவி.

குறிப்பு

1. மாலை நேரம் தான் கூறுவதைக் கேட்பதாய் எண்ணி, தலைவி அதை விளித்துக் கூறுகிறாள். இஃது அகப்பொருள் மரபு.

2. காதலரைப் பிரிந்து வருந்தியிருப்பவர்களை மாலைப்பொழுது மேலும் வருத்துகின்றது; காதலரோடு கூடி மகிழ்ந்திருப்பவர்க்கு மேலும் மகிழ்வையூட்டுகிறது. இதனை மாலைக்காலத்தின் ஓரவஞ்சனை எனக் குற்றஞ்சாட்டுகிறாள், தலைவி.

சொற்பொருள்

1. விளங்கிய ஒழுக்கம் - அறநெறி தவறாத ஒழுக்கம்.
2. நல்லாற்றின் - நல்ல வழியில்.
3. தொல்வினை - பழவினை; துறக்கம் - சுவர்க்கம்; எழுதல் - துறவு மேற்கொள்ளச் செல்லல்; வேட்டு - விரும்பி.
4. பகல் ஆற்றி - பகல் நேரத்தை உலகுக்குத் தந்து.
5. ஆனாது - அமையாது; கலுழ் - துன்பம்.
6. ஏனையான் - அடுத்த அரசன்; அளிப்பான் - அரசு புரிந்து காப்பவன்; இகல் - மாறுபாடு; மதி - நிலவு; சீப்ப - நீக்க.
7. ஆளிய - ஆள்வதற்கு.
8. இறுத்தந்த - வந்து சேர்ந்த.
9. தூஅற - வலிமை நீங்க; துறந்தார் - பிரிந்த தலைவர்; கயம் - குளம்.
10. போது - மலர்.
11. சினை - கிளை; தளைவிட்ட - முறுக்கவிழ்ந்த.
12. காரிகை - அழகு; கடிகல்லாய் - போக்க மாட்டாய்.
13. தை என - தை எனும் இசைபட; கோவலர் - இடையர்.

14. பை - வருத்தம்.
15. செவ்வழி - ஒரு வகைப் பண்; கிளவியார் - சொற்களைக் கொண்டவர்.
16. புதுநலம் - புதிய இன்பம்.
17. தகை - அழகு; சினை - கிளை; பதி - இடம்; புள் - பறவை.
18. புன்மை - துன்பம்.
22. நோனாது - பொறுக்க மாட்டாது; எம்வயின் - எம்மிடம்.
23. எஞ்சுதல் - நீங்குதல்.
24. உள்ளாது - நினையாமல்.
25. உள் இல் உள்ளம் - உண்மையற்ற உள்ளம்.

தலைவி கூற்று

கலித்தொகை 119 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடை மாலைப்பொழுது கண்டு ஆற்றாத தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்ததால், தலைவி மாலைக்காலத்தில் பிரிவுத்துன்பம் மிக்கு, அதனைப் பொறுக்க இயலாத தனது நிலைமையைத் தன் தோழியிடம் கூறியது.

அகன்ஞாலம் விளக்கும்தன் பல்கதிர் வாயாகப்
பகல்நுங்கி யதுபோலப் படுசுடர் கல்சேர,
இகல்மிகு நேமியான் நிறம்போல இருள்இவர,
நிலவுக்காண் பதுபோல அணிமதி ஏர்தரக்
கண்பாயல் பெற்றபோல் கணைக்கால மலர்கூம்பத்
தம்புகழ் கேட்டார்போல் தலைசாய்த்து மரம்துஞ்ச,
முறுவல்கொள் பவைபோல முகைஅவிழ்பு புதல்நந்தச்
சிறுவெதிர்ங் குழல்போலச் சுரும்புஇமிர்ந்து இம்மெனப்
பறவைதம் பார்ப்புஉள்ளக், கறவைதம் பதிவயின்
கன்றுஅமர் விருப்பொடு மன்றுநிறை புகுதர,

மாவதி சேர, மாலை வாள்கொள,
அந்தி அந்தணர் எதிர்கொள, அயர்ந்து
செந்தீச் செவ்வழல் தொடங்க வந்ததை
வால்இழை மகளிர் உயிர்பொதி அவிழ்க்கும்
காலை ஆவது அறியார்,
மாலை என்மனார், மயங்கி யோரே.

தெளிவுரை

கதிரவன் தன் கதிர்களால் உலகத்தைத் தெளிவாய்க் காட்டிப் பகலை உருவாக்கிய பின், அவனே அப்பகலை விழுங்குவது போல, அக்கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மேற்குப்பக்கமுள்ள மலைச்சாரலில் மறைகிறான். கதிரவன் மறைந்ததும் உலகை இருள் சூழ்ந்து கொள்கிறது. அந்த இருட்டு, சக்கரப்படையை உடைய திருமாலின் நிறம்போல உள்ளது. அவ்விரவைத் தன் ஒளியால் புறங்காண்பதுபோல அழகிய நிலவு வானில் தோன்றிற்று.

கணவரொடு இணைந்து துயில் பெற்ற மகளிர்தம் கண்கள் போலத் தாமரைப்பூக்கள் குவிந்தன. தமது புகழைப் பிறர் சொல்லக் கேட்ட சான்றோர் தலைசாய்த்து இருப்பதுபோல் மரங்கள் கிளை தாழ்த்தி அசைவின்றி உறங்கின. தலைவனைப் பிரிந்துள்ள மகளிரை எள்ளி நகையாடுவனபோலப் புதர்களில் உள்ள மொட்டுகள் விரிந்து மலர்ந்தன. அம்மகளிரைத் துன்புறுத்துவது வண்டுகள் புல்லாங்குழலில் எழுப்பும் இசை போல் ஒலித்தது. பறவைகள் தம் குஞ்சுகளை நினைத்துக் கூட்டுக்குத் திரும்பின. பசுக்கள் தம் கன்றுகளை நினைத்து மன்றில் புகுந்தன. விலங்குகள் காடுகளில் தம் மறைவிடத்தில் ஒடுங்கின. அந்தணர், மந்திரம் ஓதிச் சடங்கு செய்து மாலைக் காலத்தை வரவேற்றனர். தூய அணிகலன் அணிந்த மகளிர் விளக்கில் செஞ்சுடரை ஏற்றி ஒளி பரவச் செய்தனர். இவ்வாறு இருளோடு கூடிய மாலை பல வகையாக ஒளி பெற்று விளங்கியது.

கணவரைப் பிரிந்த மகளிர் உயிரை வாங்கும் கொடுமையான காலம் என்று இதனை அறியாமல், அறிவு மயங்கியவர்கள்தாம்

மாலைக்காலமும் காலங்களுள் ஒன்று என்று கூறி மகிழ்கின்றனர்.

கருத்து

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியை மாலைக்காலம் மிகவும் கொடுமைப்படுத்துகிறது.

சொற்பொருள்

1. ஞாலம் - உலகம்.
2 நுங்குதல் - விழுங்குதல்; படுசுடர் - மறையும் கதிரவன்; கல் - மலை.
3. இகல்மிகு - போரில் வல்ல; நேமியான் - சக்கரப்படையையுடைய திருமால் (நேமி - சக்கரம்).
4. ஏர் - அழகு.
5. பாயல் - உறக்கம், துயில்; கணைக்கால - திரண்ட தண்டினைக் கொண்ட.
6. துஞ்ச - துயில, உறங்க.
7. முகை - மொட்டு; நந்த - விளங்க.
8. வெதிர் - மூங்கில்; வெதிர்ங்குழல் - புல்லாங்குழல்; சுரும்பு - வண்டு; இம் - ஒலிக்குறிப்பு.
9. பார்ப்பு - குஞ்சு; கறவை - கன்று ஈன்ற பசு.
10. அமர் - விருப்பம்; மன்று - தொழுவம்.
11. மா - விலங்கு; வதி - வாழும் இடம் (இருப்பிடம்); வாள் - ஒலி.
12. அந்தி அந்தணர் - அந்தி நேரச் சடங்குகளைச் செய்யும் அந்தணர்; அயர்ந்து - தம் கடன் ஆற்றி.
14. வால்இழை - தூய அணிகலன்; உயிர்பொதி அவிழ்க்கும் - உயிரை வாங்கும்.
15. காலை - ஒரு சிறு பொழுது.
16. என்மனார் - என்று சொல்வார்.

தலைவி கூற்று

அகநானூறு 367 **பரணர்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகள், வற்புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவனை எண்ணித் தலைவி மிகவும் வருந்தினாள். அது கண்ட தோழி தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறினாள். அது கேட்ட தலைவி, தன் ஆற்றாமையைத் தோழியிடம் உரைத்தது.

இலங்குசுடர் மண்டிலம் புலம்தலைப் பெயர்ந்து,
பல்கதிர் மழுகிய கல்சேர் அமையத்து,
அலந்தலை மூதுஏறு ஆண்குரல் விளிப்ப,
மனைவளர் நொச்சி மாசேர்பு வதிய,
முனைஉழை இருந்த அம்குடிச் சீறூர்,
கருங்கால் வேங்கைச் செஞ்சுவல் வரகின்
மிகுபதம் நிறைந்த தொகுகூட்டு ஒருசிறை,
குவிஅடி வெருகின் பைங்கண் ஏற்றை
ஊன்நசைப் பிணவின் உயங்குபசி களைஇயர்,
தளிர்புரை கொடிற்றின், செறிமயிர் எருத்தின்,
கதிர்த்த சென்னிக் கவிர்ப்பூ அன்ன,
நெற்றிச் சேவல் அற்றம் பார்க்கும்
புல்லென் மாலையும் இனிதுமன்று அம்ம–
நல்அக வனமுலை அடையப் புல்லுதொறும்
உயிர்குழைப்பு அன்ன சாயல்,
செயிர்தீர் இன்துணைப் புணர்ந்திசி னோர்க்கே.

தெளிவுரை

ஒளி விளங்கும் ஞாயிறு வானிலிருந்து நீங்கி, தன் பல் கதிர்களும் மழுங்குமாறு, மேற்கு மலையில் மறையும் காலத்தில், கலக்கமுற்ற முதிய ஆண்மான், தன் ஆண்குரல் தோன்ற ஏனைய

மான்களை அழைத்து, அவற்றோடு கூடி மனையைச் சுற்றி வளரும் நொச்சிக் காட்டில் தங்கியிருக்கும். அத்தகைய காட்டரண்களுக்கு அருகேயுள்ளது, அழகிய சிற்றூர். அங்கே கரிய அடியினைக் கொண்ட வேங்கை மரங்கள் சூழ்ந்த செந்நிற மேட்டு நிலத்தில் விளைந்த வரகு தானியம் நிறைந்த குதிர் ஒன்று இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் குவிந்த அடியையும் பசிய கண்ணையும் கொண்ட ஆண் காட்டுப் பூனை, ஊனை விரும்பிய தன் பெண் பூனையின் பசியைப் போக்க விரும்பியது. அதற்காக அது தளிர் போன்ற கன்னமும், மயிர் செறிந்த கழுத்தும், நிமிர்ந்த தலையில் முருக்கம்பூ ஒத்த கொண்டையும் கொண்ட சேவற்கோழியைப் பிடிக்கத் தக்க நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும்.

பொலிவற்ற இத்தகைய மாலைப்பொழுதும், மார்பிலே உள்ள அழகிய முலைகள் பொருந்தத் தழுவும்போதெல்லாம் உயிர் தளிர்ப்பதுபோலும் மென்மை வாய்ந்த குற்றமற்ற துணையுடன் கூடி இருப்பவர்க்கு உறுதியாய் இனிதாகும்.

கருத்து

காதலரைப் பிரிந்திருக்கும் நான் மாலை வேளையில் எப்படி மகிழ்ந்திருக்க இயலும்?

விளக்கம்

தோழி! கீழ்க்கடலில் தோன்றிய வெம்மை கொண்ட சூரியன் மேற்கு மலையில் சாய்ந்து வெம்மை நீங்கியது. முதுமையுற்ற ஆண் மான்கள் குரல் கொடுத்து அழைத்தலைக் கேட்ட பெண் மான்கள் நொச்சிக் காட்டின் நிழலிடத்தே வந்து குழுமின. காட்டரணுக்கு அருகில் அமைந்திருந்த சிற்றூரில், வேங்கை மரங்கள் சூழ்ந்த மேட்டு நிலத்தில் விளைந்த வரகுத்தானியக் குதிருக்கு அருகே, ஆண் காட்டுப்பூனை தன் பெண்பூனையின் பசியைப் போக்கக் கொண்டையினைக் கொண்ட கோழிச் சேவலைப் பிடிப்பதற்குத் தக்க நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும். தோழி! தழுவுந்தோறும் உயிர் குழைவது போலும் மென்மை வாய்ந்த குற்றமற்ற இனிய துணையைக்

கூடியிருப்பவர்க்குப் பொலிவற்ற மாலைக்காலமும் மிகவும் இனிதாகும். (எனக்கு அவ்வாறன்று; என் செய்வேன்?)

சொற்பொருள்

1. இலங்குதல் - விளங்குதல்; சுடர் மண்டிலம் - ஒளி வாய்ந்த ஞாயிறு; புலம்தலை - வானிடத்தினின்றும்; பெயர்ந்து - நீங்கி.
2. மழுகிய - மழுங்கிய, வெம்மை குறைய; கல்சேர் - மலையை அடைந்த; அமையம் - மாலைப்பொழுது.
3. அலந்தலை - கலக்கமுற்ற; மூதுஏறு - முதிய ஆண்மான்; விளிப்ப - அழைக்க.
4. மாசேர்பு - மான்கள் சேர்ந்து; வதிய - தங்கியிருக்க.
5. முனை - காட்டரண்; உழை - பக்கம்; அம் - அழகிய; சீறூர் - சிற்றூர்.
6. கால் - அடிமரம்; செஞ்சுவல் - செந்நிற மேட்டு நிலம்.
7. மிகுபதம் - மிக்க தானியம், மிகுதியான வரகு; தொகுகூடு - குதிர்; ஒருசிறை - ஒரு பக்கத்தில்.
8. குவிஅடி - குவிந்த காலடி; வெருகு - காட்டுப்பூனை; ஏற்றை - ஆண்.
9. நசை - விருப்பம்; பிணவு - பெண்பூனை; உயங்குபசி - வருத்தும் பசி; களைஇயர் - போக்குவதற்கு.
10. கொடிறு - கன்னம்; எருத்து - கழுத்து.
11. கதிர்த்த - நிமிர்ந்த; சென்னி - தலை; கவிர்ப்பூ - முருக்கம் பூ.
12. அற்றம் - சமயம்.
13. புல்லென் - பொலிவற்று.
14. அகம் - மார்பு; வனப்பு - அழகு; அடைய - பொருந்த; புல்லுதல் - தழுவுதல்.
15. உயிர்குழைப்பு அன்ன - உயிர் குழைவதுபோலும்; சாயல் - மென்மை வாய்ந்த.
16. செயிர் - குற்றம்; புணர்ந்திசினோர் - கூடியிருப்போர்.

தோழி கூற்று

அகநானூறு 71 **அந்தியிளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற் பிரிந்த இடத்து ஆற்றாளாய தலைமகட்குத் தோழி சொல்லியது. (தலைமகளைத் தானேயாய்க் கொண்டு தோழி கூறியது இப் பாட்டு.)

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடுவதற்காகப் பிரிந்து சென்றுள்ளான். அதனால் தலைவிக்கு ஆற்றாமைத் துன்பம் உண்டாவதைக் கண்ட தோழி ஆற்றுவிக்கக் கூறியது.

நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு, குறைந்தோர்
பயன்இன் மையின் பற்றுவிட்டு, ஒரூஉம்
நயன்இல் மாக்கள் போல, வண்டினம்
சுனைப்பூ நீத்து, சினைப்பூப் படர,
மைஇல் மான்இனம் மருள, பையென
வெந்துஆறு பொன்னின் அந்தி பூப்ப,
ஐயறிவு அகற்றும் கையறு படரோடு,
அகல்இரு வானம் அம்மஞ்சு ஈன,
பகல்ஆற்றுப் படுத்த பழங்கண் மாலை,
காதலர்ப் பிரிந்த புலம்பின் நோதக,
ஆர்அஞர் உறுநர் அருநிறம் சுட்டிக்
கூர்எஃகு எறிஞரின் அலைத்தல் ஆனாது,
எள்அற இயற்றிய நிழல்காண் மண்டிலத்து
உள்ஊது ஆவியின் பைப்பைய நுணுகி,
மதுகை மாய்தல் வேண்டும்– பெரிதுஅழிந்து,
இதுகொல்– வாழி, தோழி! என்உயிர்
விலங்குவெங் கடுவளி எடுப்பத்
துளங்குமரப் புள்ளில் துறக்கும் பொழுதே?

தெளிவுரை

"*தலைவியே! 'செல்வம் இல்லாதவர் இனித் தமக்கும் பயன்படார் எனக் கருதி, அவரிடம் கொண்டிருந்த பற்றினை*

விட்டொழித்து, அவரைக் கைவிட்டுச் செல்வம் மிக்கவரை நாடும் உலக மாந்தரைப் போல, வண்டுகள் தேன் குறைந்த சுனைநீர்ப்பூக்களை நீக்கி மரக்கிளையில் பூத்துள்ள பூக்களை நாடிச் சென்றன. மாசற்ற மான் கூட்டங்கள் மருட்சியுற்றிருந்தன. உலையின் வெம்மை ஆற ஆறத் தோன்றும் பொன் நிறம் போலச் செக்கர் வானம் காட்சியளித்தது. வியக்கத்தக்க நல்லறிவைப் போக்கும் செயலற்ற துன்பத்துடன் அகன்ற பெரிய வானம் அழகிய பல நிறங்களைக் கொண்ட மேகங்களைத் தோற்று வித்தது; இத்தகைய மாலைக்காலம் ஞாயிற்றைப் போக்கித் துன்பத்தைத் தந்தது.

"இம்மாலைக்காலம், காதலரைப் பிரிந்து தனிமையில் வருந்தி இருப்பவரின் அரிய மார்பை நோக்கிக் கூரிய வேல் எறிவது போல், வருத்தம் செய்கிறது.

"மேலும், குற்றம் எதுவும் இல்லாமல் செய்யப்பட்ட உருவம் பார்க்கும் கண்ணாடிமீது ஊதப்பட்ட ஆவியானது கண்ணாடி யில் படிந்து, பின்னர்ப் படிப்படியாய்ச் சுருங்குவதுபோல என் மன வலிமையை மாய்க்கிறது.

" 'மேலும், கடுமையான சூறாவளிக் காற்றில் அசையும் மரத்தில் உள்ள பறவை எங்ஙனம் வருந்தி மரத்தில் தங்க முடியாமல் பறந்து போகுமோ, அதுபோல என் உயிர் தலைவனது பிரிவால் உடலை விட்டுப் போகும் காலமாகவும் இஃது உள்ளதே' எனக் கூறி வருந்தும் என் தலைவியே, 'நீ ஆறுதல் கொள்" எனத் தோழி மொழிந்தாள்.

கருத்து

பொருள் தேடத் தலைவன் பிரிந்து சென்றதால் வருந்தியிருக்கும் தலைவி, 'இம்மாலைக்காலம் எனது உயிரைப் போக்குவதாய் உள்ளதே' என ஆற்றாமையுடன் கூறுகிறாள். 'நீ ஆறுதல் கொள்' எனத் தோழி தேற்று கிறாள்.

விளக்கம்

"செல்வம் குறைந்துவிட்டவர்களிடம் இனிப் பயன் பெற இயலாது என்பதால் அவர்களை விட்டு நீங்கிச் செல்லும் அன்பில்லாத மக்களைப் போல, வண்டுகள் நீர்ப்பூக்களை

விட்டுக் கொம்புப் பூக்களை நாடிச் செல்கின்றன. மான்கூட்டம் மயங்கும்படியாக, மெல்ல மெல்ல வெந்து அடங்கும் பொன்னைப் போன்று செக்கர் வானமும் தோன்றியது. பெரிய வானில் பல நிற மேகம் தோன்றும் மாலைப்பொழுது பிரிந்திருப்போரை மிகவும் வருத்துகிறது; மேலும், புண்பட்டவர் மார்பில் கூரிய வேலை வீசுவதுபோலப் பிரிந்திருப்போரின் துன்பத்தை மிகுவிக்கிறது. கண்ணாடிமீது ஊதப்பட்ட ஆவி, காணக் காணச் சுருங்கிப் படிப்படியாய் இல்லை என ஆனது போல என் வலிமையும் மாய்ந்து குன்றிக் கொண்டே இருக்கிறது. தோழி! சூறாவளிக்காற்று வீசும் போது ஆடுகின்ற மரத்திலுள்ள பறவை அகன்று செல்வதுபோல, என் உயிர் உடலைவிட்டுப் போகும் நேரமும் இதுதானோ?" எனக் கூறி வருந்தும் தலைவியிடம், 'வருந்தாதே, தலைவர் வந்துவிடுவார்' எனத் தோழி கூறித் தலைவியை ஆற்றுவித்தாள்.

குறிப்பு

பாடல், தலைவி கூற்றினைப் போலிருந்தாலும் தோழி இவ்வாறு கூறித் தலைவியை ஆற்றுவித்தாள் எனக் கொள்ள வேண்டும். மேலும், 'சூறாவளிக் காற்றால் அசையும் மரத்தில் உள்ள பறவை எங்ஙனம் வருந்தி மரத்தில் தங்க இயலாமல் பறந்து சென்று விடுமோ, அதுபோல, எனது உயிர் தலைவனது பிரிவால் உடலை விட்டு நீங்கி விடுமோ என உள்ளது" எனக் கூறி வருந்தும் என் தலைவியே! வருந்தாதே, தலைவர் வந்துவிடுவார் எனத் தோழி கூறியதாய்க் கொள்ளலாம்.

உவமை

1. முன்பு வளமுடன் தேன் வழங்கிய சுனைப்பூக்கள் இப்பொழுது வாடிப் விட்டமையால் அவற்றிற்குச் செல்வம் குறைந்தோரை உவமை கூறினார்.
2. சூறாவளியால் பறவை அலைப்புண்டு மரத்தைவிட்டு நீங்குதல்போல, என் உயிரும் பிரிவால் வருந்தி உடலை விட்டு நீங்கும் காலம் இதுவோ என்றாள்.
3. கண்ணாடிமீது ஊதப்பட்ட ஆவி, காணக்காணச் சுருங்கிப் படிப்படியாய் மறைவதுபோல என் வலிமையும் குன்றிக் கொண்டே இருக்கிறது எனக் கூறப்பட்டது நயமான உவமை.

சொற்பொருள்

1. நிறைந்தோர் - செல்வம் மிகுதியாய்ப் பெற்றவர்; தேரும் - ஆராயும்; நெஞ்சத்தோடு - எண்ணத்தோடு; குறைந்தோர் - செல்வம் குறையப் பெற்றோர்.
2. பயன் இன்மையின் - பயனில்லாதபடியால்; பற்றுவிட்டு - தொடர்பினைக் கைவிட்டு; ஒரூஉம் - நீங்கிச் செல்லும்.
3. நயன் இல் - அன்பில்லாத.
4. சுனைப்பூ - நீர்ப்பூ; நீத்து - நீங்கி; சினைப்பூ - மரக்கிளைகளிலுள்ள பூ, கொம்புப்பூ; படர - அடைய.
5. மைஇல் - குற்றமில்லாத; மருள - மயங்க; பையென - மெல்ல.
6. வெந்துஆறு பொன் - உலையில் வெந்து (படிப்படியாய்) ஆறிவரும் பொன்னின் நிறம் (போல); அந்தி - மாலை நேரம், செக்கர் வானம்; பூப்ப - தோன்ற.
7. ஐ அறிவு - வியக்கத்தக்க அறிவினை; அகற்றும் - போக்கும்; கையறுதல் - செயலறுதல்; படர் - துன்பம்.
8. இரு - பெரிய; அம்மஞ்சு - அழகிய மேகம்; ஈன - தர. (வானம் மஞ்சு ஈன என்பது பல நிறங்களைக் கொண்ட மேகத்தைத் தரும் வானம் என்பதாம்.)
9. பகல் - ஞாயிறு; ஆற்றுப்படுத்த - போக்கிய; பழங்கண் - துன்பம்.
10. புலம்பு - தனிமை; நோதக - வருந்தியிருக்க.
11. ஆர் அஞர் - மிக்க துன்பம்; உறுநர் - அடைந்திருப்பவர்; அருநிறம் - அரிய மார்பு; சுட்டி - குறித்து, கருதி.
12. கூர் எஃகு - கூரிய வேல்; எறிஞரின் - எறிவார் போல; அலைத்தல் ஆனாது - வருந்துதல் ஒழியாது.
13. எள்அற - இகழ்ச்சி இல்லாமல் (எள் - இகழ்ச்சி); இயற்றிய - செய்த; நிழல்காண் - உருவம் காணும்; மண்டிலம் - கண்ணாடி.
14. உள்ஊது ஆவியின் - உள்ளே ஊதப்பட்ட ஆவியைப் போல; பைப்பைய நுணுகி - முன்பு பரந்து பின்பு சிறிது சிறிதாய்ச் சுருங்கி (குறைந்து).
15. மதுகை - (என்) வலிமை; மாய்தல் வேண்டும் - அழிய வேண்டியிருக் கிறது; பெரிது அழிந்து - (இவ்வாறு) மிகவும் அழிவுற்று.
16. இதுகொல் - இதுவே போலும்.
17. விலங்கு வெங் கடுவளி - வெம்மை மிக்க கடிய சூறாவளி; எடுப்ப - அலைப்ப.

18. துளங்கு மரப் புள்ளில் - அசையும் மரத்திலுள்ள பறவையைப் போல; துறக்கும் பொழுது - என் உயிர் இவ்வுடலைத் துறந்து செல்லும் காலம் (இதுவே போலும்).

தலைவி கூற்று

அகநானூறு 301 **அதியன் விண்ணத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகள், வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவனை எண்ணிப் பிரிவாற்றாது தலைவி வருந்தினாள். அவளைத் தோழி தேற்றினாள். அவளை நோக்கித் தன் ஆற்றாமையை எடுத்துக் கூறித் தலைவி புலம்பியது.

'வறன்உறு செய்யின் வாடுபு வருந்தி,
படர்மிகப் பிரிந்தோர் உள்ளுபு நினைதல்
சிறுநனி ஆன்றிகம்' என்றி– தோழி–
நல்குநர் ஒழித்த கூலிச் சில்பதம்
ஒடிவை இன்றி ஓம்பாது உண்டு,
நீர்வாழ் முதலை ஆவித் தன்ன,
ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து,
ஊர்இஃது என்னாஅர் தீதுஇல் வாழ்க்கை,
சுரமுதல் வருத்தம் மரமுதல் வீட்டி,
பாடுஇன் தெண்கிணை கறங்க, காண்வர,
குவிஇணர் எருக்கின் ததர்பூங் கண்ணி
ஆடூஉச் சென்னித் தகைப்ப, மகடூஉ,
முளரித் தீயின் முழங்குஅழல் விளக்கத்துக்
களரி ஆவிரைக் கிளர்பூங் கோதை,
வண்ண மார்பின், வனமுலைத் துயல்வர,
செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந் தென்னக்

குறுநெடுந் தூம்பொடு முழவுப்புணர்ந்து இசைப்ப,
கார்வான் முழக்கின் நீர்மிசைத் தெவுட்டும்
தேரை ஒலியின் மாண, சீர்அமைத்து,
சில்அரி கறங்கும் சிறுபல் இயத்தொடு
பல்ஊர் பெயர்வனர் ஆடி, ஒல்லென
தலைப்புணர்ந்து அசைத்த பல்தொகைக் கலப்பையர்
இரும்பேர் ஒக்கல் கோடியர் இறந்த
புன்தலை மன்றம் காணின், வழிநாள்,
அழுங்கல் மூதூர்க்கு இன்னா தாகும்,
அதுவே மருவினம் மாலை, அதனால்,
காதலர் செய்த காதல்
நீடுஇன்று மறத்தல் கூடுமோ, மற்றே?

தெளிவுரை

" 'தோழி! வறண்ட விளைநிலம் போல மனத்தில் துன்பம் கொண்டு, பிரிந்து சென்ற தலைவரை எண்ணிப் பலமுறையும் வருந்திக்கொண்டு இருக்கிறாயே! சிறிது நேரமாவது அத் துன்பத்திலிருந்து விடுபட்டு அமைதியாய் இருக்கக்கூடாதா?' என்று கூறுகின்றாய்.

கொடையாளர் கொடுத்த பரிசில் உணவினைப் பிறகு தமக்கு வேண்டுமென்று பாதுகாத்து வைத்திடாது இடையறவு இன்றிக் கூத்தர்கள் உண்டு தீர்ப்பர். பாயினால் வேயப்பட்டதும், நீரில் வாழும் முதலை வாயை அகலத் திறந்தாற்போன்ற ஒலி செய்வதும், திறந்த பகுதியைக் கொண்டதுமான வண்டியில் பயணம் செய்வர்; இஃது எமது ஊர் என்று சொல்லுதற்கு இயலாதவராய் இவர்கள் ஊர் ஊராய்ச் செல்லும் இடையூறு இல்லாத வாழ்க்கை கொண்டவர்; பாலை நிலத்தில் நடந்து வந்த பயணக் களைப்பை மரத்தடியில் தங்கித் தீர்த்துக்கொள்வர். இனிய ஒலியினைக் கொண்ட தெளிவான கிணைப்பறையை ஒலித்துக்கொண்டே செல்வர். குவிந்த கொத்துகளைக் கொண்ட எருக்கம்பூக்களினால் நெருக்கமாய்த் தொடுத்துக் கட்டிய கண்ணிகள் ஆடவர்களின் தலையை அழகுபடுத்திக் கொண்டிருக்கும்; ஒலியுடன் எழுகின்ற காட்டுத்தீயின் சுடர் போலத் தோன்றும் ஆவரையின் பூக்களால் தொடுக்கப்பெற்ற

மாலைகள் மகளிரது அழகிய மார்பில் உள்ள பருத்த முலைகளின் மேலே கிடந்து அசைந்துகொண்டிருக்கும்.

“செறிந்த நடை கொண்ட பெண்யானையின் மூச்சொலியுடன், ஆண்யானையின் மூச்சொலி கூடினாற்போலச் சிறுவங்கியம், பெருவங்கியம் ஆகிய இரண்டின் ஒலியோடு முழவின் ஓசையும் சேர்ந்து ஒலிக்க, அவை கரிய மேகத்தின் இடிபோலக் கேட்கும். நீரில் ஒலிக்கும் தேரையின் ஒலிபோலத் தாளம் அமைத்துச் சில்லரிகள் ஒலித்துக்கொண்டிருக்கும். இப்படிச் சிறிய பல வாச்சியங்களுடனே வழி நடந்து, பற்பல ஊர்களையும் நாடிச் சென்றுகொண்டிருப்பர், இக்கூத்தர்கள்.

“அவர்கள் ஒரூரில் கூத்தாடிவிட்டு, மறு நாள் காலையில், பலவகை வாச்சியங்களையும் சேர்த்துக் கட்டிய பைகளைத் தலையிலே சுமந்துகொண்டு வேற்றூரை நாடிப் புறப்பட்டு விடுவர்.

“ஓர் ஊரில் அவர்கள் இரவில் ஆடிச் சென்றுவிட்ட பின், அவ்வூரார் அடுத்த நாள் அம்மன்றத்தினைக் காணின், முன் நாள் ஆரவாரம் கொண்டதாய் விளங்கிய அந்த இடம் அப்போது பொலிவிழந்து இருப்பதைக் கண்டு துன்பம் எய்துவர்.

“தோழி, அத்தகைய துன்பத்தையே இம்மாலைநேரத்தில் நாம் அடைந்துள்ளோம். அதனால் நம் காதலர் செய்த அன்புக் காதலை நீள நினையாமல் நம்மால் இருக்க இயலுமா?”

கருத்து

மாலைநேரத் தனிமை என்னைப் பொலிவிழக்கச் செய்திருக்கிறது.

விளக்கம்

“தோழி! நம்மைப் பிரிந்த தலைவரை நினைத்து வருந்துதலைச் சிறிது பொறுத்துக்கொள் என்கிறாய். கூத்தர் ஓரிடத்திலிருந்து பிரிந்து சென்ற பொலிவிழந்த மன்றத்தைக் கண்டால் ஊரார்க்கு எத்தகைய துன்பம் உண்டாகுமோ, அத்தகைய துன்பத்தையே இந்த மாலைப்பொழுதில் நானும் அடைந்துள்ளேன். ஆயினும், காதலர் செய்த அன்பினை மறத்தல் இயலுமோ? இயலாது.

அதனால் என்னால் வருந்தாமல் இருக்க இயலாது" என்கிறாள், தலைவி.

குறிப்பு

தலைவனைப் பிரிந்து வாடியிருக்கும் தலைவியின் நிலைமைக்கு, முன்னர் வளமுடனிருந்து, கோடையால் வறட்சியுற்றுப் பொலிவிழந்து கிடக்கும் விளைவயலின் நிலை காட்டப்பட்டுள்ளது. பயன் பெறுதற்கு உரிய வயற்பரப்பு, வறட்சியால் பயனற்றிருப்பதுபோல, பொலிவுடன் இன்புறுதற்கான தலைவி, தலைவனது பிரிவினால் அதனை இழந்து இருக்கின்றனள் என்பது குறிப்பு.

கூத்தர் என்பவர் ஆடிப் பாடவல்ல இசைக்கலைஞர்கள். இவர்கள் ஊர் ஊராய்ச் சென்று கூத்தாடி, மக்கள் கொடுத்த உணவை உண்டு வாழ்பவர். இவர்கள் பல்வகை இசைக்கருவிகளை மூட்டையாய்க் கட்டி எடுத்துக் கொண்டு பாய்க்கூரை வேய்ந்த வண்டியில் செல்வர். பாலைவனத்திலே நடந்து செல்வர். ஆண்கள் எருக்கம் பூவினாலாகிய தலைமாலையையும், பெண்கள் ஆவிரம் பூவிலான மார்பு மாலையையும் அணிந்திருப்பர். கிணைப்பறை, நெடுவங்கியம், சிறுவங்கியம், முழவு, சில்லரி முதலாய இசைக்கருவிகளை இவர்கள் பயன்படுத்தினர்.

சொற்பொருள்

1. வறன் - வறட்சி; செய் - வயல்.
2. படர் - துன்பம்; உள்ளுபு நினைதல் - பலகாலும் நினைந்து வருந்துதல்.
3. சிறுநனி - மிகக் குறைந்த (நேரம்); ஆன்றிகம் - அமைதி பெறுதல்.
4. நல்குநர் - வள்ளல், கொடுப்போர்; ஒழித்த - கொடுத்த; சில்பதம் - உணவு.
5. ஒடிவை இன்றி - இடையறவு இல்லாது; ஓம்பாது - பாதுகாவாது.
6. ஆவித்தல் - வாயைத் திறத்தல்.
7. ஆரை வேய்ந்த - பாயால் மூடிய; அறைவாய் - ஒலியினைச் செய்யும் திறந்த பகுதி; சகடம் - வண்டி.
8. ஊர்இஃது என்னாஅர் - இவ்வூர் எமது என்று சொல்ல இயலாதவர்.
9. சுரமுதல் - பாலை நில வழி; மரமுதல் - மரத்தடியில்; வீட்டி - போக்கி.
10. தெண்கிணை - தெளிந்த கிணைப்பறை; கறங்க - ஒலிக்க; காண்வர - அழகு பொருந்த.

11. இணர் - கொத்து; எருக்கு - எருக்கம் பூ; ததர் - நெருக்கமான; கண்ணி - தலைமாலை.
12. ஆடூஉ - ஆடவர்; சென்னி - தலை; தகைப்ப - அழகு செய்ய; மகடூஉ - பெண்டிர்.
13. முளரித் தீ - தாமரை போலும் சிவப்பு; முழங்குஅழல் - ஒலிக்கும் தீ; விளக்கத்து - ஒளியில்.
14. களரி - காடு; ஆவிரை - ஆவிரைச்செடி; கிளர் - விளங்கும்.
15. துயல்வர - அசைய.
16. புணர்ந்தென்ன - கூடினாற்போல.
17. குறுநெடுந்தூம்பு - குறுந்தூம்பு, நெடுந்தூம்பு, (தூம்பு - துளையினைக் கொண்ட கொம்பு); புணர்ந்து - சேர்ந்து; இசைப்ப - ஒலிக்க.
18. கார்வான் - கரிய மேகம்; முழக்கம் - இடி; நீர்மிசை - நீரில்; தெவுட்டும் - ஒலிக்கும்.
19. தேரை - தவளை; மாண - ஒப்ப; சீர் அமைத்து - தாளம் அமைத்து.
20. பல்லியம் - பல்+இயம் - பல வகையான வாச்சியம்.
21. பெயர்வனர் - சென்று, அடுத்த ஊர் சென்று; ஆடி - கூத்து இயற்றி; ஒல்லென - விரைந்து.
22. தலைப்புணர்ந்து - தலையில் சேர்த்துக் கட்டிய; கலப்பை - வாச்சியங்களைக் கொண்ட பை.
23. இரும்பேர் ஒக்கல் - மிகப்பெரிய சுற்றம்; கோடியர் - கூத்தர்.
24. புன்தலை - பொலிவற்று; வழிநாள் - அடுத்த நாள்.
25. அழுங்கல் - ஆரவாரம்; மூதூர் - பழைய ஊர்; இன்னாது - வருத்தம் தருவது.
26. அதையே - அத்தகைய துன்பத்தையே; மருவினம் - அடைந்துளேம்.
28. நீடுஇன்று - தாழாது.

தலைவி கூற்று

குறுந்தொகை 387 **கங்குல் வெள்ளத்தார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடை வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி வன்புறை எதிர் அழிந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றிருந்த காலத்திலே, 'நீ ஆற்றியிருத்தல் வேண்டும்' என வற்புறுத்திய தோழியிடம் தலைவி தன் துன்ப மிகுதியைக் கூறியது.

எல்லை கழிய, முல்லை மலரக்
கதிர்சினம் தணிந்த கையறு மாலை
இரவுவரம்பு ஆக நீந்தினம் ஆயின்
எவன்கொல் வாழி - தோழி!-
கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே!

தெளிவுரை

பகற்பொழுது நீங்க, முல்லையரும்புகள் மலர, ஞாயிற்றின் வெப்பம் தணிய, நான் செயலற்றுப்போகும்படியான மாலைக் காலம் வந்தது. இனி வரும் இரவு நேர எல்லைவரையிலான மாலைப்பொழுதை ஒருவாறு நீந்திக் கடந்துவிடுவேன். அதன் பிறகு வரும் இரவாகிய வெள்ளமோ கடலைக்காட்டிலும் பெரிதாயிற்றே? அதை எவ்வாறு கடக்கப்போகிறேன்? (மாலையை நீந்தியதால் என்ன பயன்? இரவில் என் செய்வது?)

கருத்து

தனித்திருக்கும் காதலர்க்கு மாலையும் இரவும் துன்பம் தருவன.

குறிப்பு

மாலை சிறுவெள்ளமாகவும், இரவு கடலினும் பெரிய வெள்ளமாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளன.

இச்செய்யுளில் 'கங்குல் வெள்ளம்' என்னும் தொடர் இடம் பெற்றிருப்பதால், அதுவே இப்புலவருக்குப் பெயராயிற்று; இவர் இயற்பெயர் அறியோம்.

சொற்பொருள்

1. எல்லை - பகற்பொழுது; கழிய - நீங்க; முல்லை - முல்லை மலர்.
2. கதிர் - சூரியன்; சினம் தணிந்த - சினமான வெப்பம் குறைய; கையறுதல் - செயலற்றுப்போதல்.
3. வரம்பு - எல்லை, கரை; நீந்தினம் - நீந்திக் கடந்தேன்; ஆயின் - ஆனால்.
4. எவன் கொல் - என்ன பயன்?
5. கங்குல் வெள்ளம் - மாலையை அடுத்துள்ள இரவு வெள்ளம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 122 **ஓரம்போகியார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் பொழுது கண்டு அழிந்தது

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்துறையும் நாளில் தலைவி அந்திமாலைப்பொழுதின் வரவு கண்டு ஆற்றாமையால் கூறியது.

பைங்கால் கொக்கின் புன்புறத் தன்ன,
குண்டுநீர் ஆம்பலும் கூம்பின; இனியே
வந்தன்று வாழியோ மாலை!
ஒருதான் அன்றே; கங்குலும் உடைத்தே!

தெளிவுரை

பசுமையான கால்களைக் கொண்ட கொக்கின் புல்லிய முதுகினைப் போன்ற ஆம்பல் மலர் ஆழமான குளத்தில்

கூம்பியது. இப்பொழுது மாலைப்பொழுதும் வந்துவிட்டது. இஃது ஒன்று மட்டுமா? இனி நள்ளிரவும் வருமே! எவ்வாறு தாங்குவேன்?

கருத்து

மாலைப்பொழுதினையும் அதனைத் தொடர்ந்து வரும் இராப்பொழுதை யும் எவ்வாறு தாங்குவேன்?

விளக்கம்

பிரிந்தோரைக் கொல்லும் மாலைப்பொழுது வந்துவிட்டது. இது மட்டுமா என்னைத் துன்புறுத்துகிறது? இதற்குப் பின்னர் ஆற்ற முடியாத துயரத்தைச் செய்ய வர இருக்கிறதே இரவுக் காலம், என் செய்வேன்?

சொற்பொருள்

1. பைங்கால் - பசிய கால்; புன்புறம் - புல்லிய முதுகு.
2. குண்டு - ஆழம்; கூம்பின - குவிந்தன.
3. வந்தன்று - வந்தது.
4. கங்குல் - நள்ளிரவு.

தலைவி கூற்று

நற்றிணை 109 **மீளிப் பெரும்பதுமனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாய தலைமகளது நிலை கண்ட தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து வருந்திய தன் நிலை கண்டு ஆற்றாது கவலை கொண்ட தோழியை நோக்கித் தலைவி கூறியது.

'ஒன்றுதும்' என்ற தொன்றுபடு நட்பின்
காதலர் அகன்றெனக் கலங்கிப் பேதுற்று,
அன்ன வோஇந் நன்னுதல் நிலைஎன,
வினவல் ஆனாப் புனையிழை! கேள்இனி

உரைக்கல் ஆகா எவ்வம்; இம்மென
இரைக்கும் வாடை இருள்கூர் பொழுதில்,
தொளியுடைத் தொழுவில் துணிதல் அற்றத்து,
உச்சிக் கட்டிய கூழை ஆவின்
நிலைஎன ஒருவேன் ஆகி
உலமரல், கழியும்இப் பகல்மடி பொழுதே!

தெளிவுரை

" 'உன்னைப் பிரியேன், ஒன்றுபட்டிருப்பேன் என்று கூறிய பழமையான நட்பினைக் கொண்ட காதலர் பிரிந்து சென்றதால் கலங்கி மயக்கமுற்றிருக்கும் ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட தலைவியே! உனக்கு இந்நிலை உண்டாகியதேன்' என்று என்னைக் கேட்கின்றாய். அழகிய அணிகலன்களை அணிந்துள்ள தோழியே! நான் சொல்வதைக் கேள். வாய் விட்டுச் சொல்ல முடியாததாயிற்று, என் துன்பம். இம்மென்று ஒலிக்கும் வாடைக்காற்று வீசுகின்ற இருள் நிறைந்த இரவுப் பொழுது; மழைத்துளிகளால் சேறு படிந்துள்ள தொழுவத்தில் தூண் இல்லாத குறையால் ஒரு கூழைப்பசுவின் தலைக்கயிறு மேலே தூக்கிக் கூரை மரத்தில் கட்டப்பட்டுள்ளது. அது படுக்கவும் இயலாது, நிற்கவும் இயலாது, இருக்கும் நிலை யிலேயே உள்ளம் சுழன்று வருந்தும். அப்பசுவைப் போல என் நிலை உள்ளது. இந்நிலையில் நான் தனித்திருந்து வருந்துமாறு மாலைக் காலம் மெல்ல மெல்ல நீங்குகின்றது. இனி இரவில் ஆற்றொணாத் துயரம் வந்தடையும். அதனை நான் எவ்வாறு ஆற்றியிருப்பேன்?" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

இரவின் வருகையோடு, பிரிவுத்துயரும் வந்து சேர்ந்தால் எப்படி ஆற்றி யிருப்பேன்?

விளக்கம்

'தலைவன் பிரிவால் இத்தகைய கலக்கமுற்றுள்ளனையே, ஏன்?' என்று கேட்ட தோழியிடம் தலைவி கூறுகிறாள் : "தோழி! என்னைப் பலமுறை இவ்வாறு கேட்பதில் என்ன பயன்? என்

வருத்தம் வாய் விட்டு உரைக்கும் நிலையைக் கடந்துவிட்டது. இருள் நிறைந்த மாலைப்போதில் சேறு நிறைந்த தொழுவத்தில் நிற்கும் பசுவை வேறிடத்தில் கொண்டு விடாதும், அங்கேயே கீழே படுக்க இயலாதவாறும், குனிய இயலாதவாறும் தலைக் கயிறு கூரை மரத்தோடு இழுத்துக் கட்டப்பட்டிருந்தால் அப்பசு எவ்வாறு வருந்துமோ, அத்துயரினை நான் தனியளாய்ப் பெற்றுப் புலம்புகின்றேன். இம்மனக்கலக்கத்தோடு எனக்கு இரவும் பகலும் கழிகின்றன. நான் எப்படி மன அமைதியுடன் ஆற்றியிருக்க இயலும்?"

சொற்பொருள்

1. ஒன்றுதும் - ஒன்றுபட்டிருப்பேன்; தொன்றுபடு நட்பு - பழமையான நட்பு.
2. அகன்றென - அகன்று போனதால்; பேதுற்று - நிலை மயங்கி.
3. அன்னவோ - என்ன ஆகுமோ?; நன்னுதல் - ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட தலைவி.
4. வினவல் ஆனா - கேட்கின்ற; புனைஇழை - அணிகலன்களை அணிந்த தோழியே.
5. உரைக்கல் ஆகா - சொல்ல இயலாத; எவ்வம் - துன்பம்.
6. இரைக்கும் - வீசும்; கூர் - நிறைந்த.
7. தொளி - சேறு; தொழுவம் - மாட்டுக்கொட்டில்; துணிதல் அற்றம் - கட்டவிழ்த்துப் பெயர்த்துக் கட்டுதற்குரிய நேரத்தில்.
8. உச்சிக் கட்டிய - கூரையின் உச்சியில் இழுத்துக் கட்டப்பட்ட; கூழைஆ - குட்டைப்பசு; ஒருவேன் ஆகி - ஒருத்தியாய் இருந்து.
10. உலமரல் - வருத்தம்; பகல் மடி பொழுது - பகல் மறையும் இரவுப் பொழுது.

தலைவி கூற்று

குறுந்தொகை 307 **கடம்பனூர்ச் சாண்டிலியனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லிய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருந்த காலத்தில், "நீ இவ்வாறு வருந்தியிருக்கக்கூடாது; பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று கண்டித்துரைத்த தோழியிடம் தலைவி சொல்லியது.

வளைஉடைத் தனையது ஆகி, பலர்தொழச்
செவ்வாய் வானத்து ஐயெனத் தோன்றி,
இன்னம் பிறந்தன்று, பிறையே; அன்னோ,
மறந்தனர் கொல்லோ தாமே, களிறுதன்
உயங்குநடை மடப்பிடி வருத்தம் நோனாது,
நிலைஉயர் யாம்அும் தொலையக் குத்தி,
வெண்நார் கொண்டு, கைவைத்து, அண்ணாந்து,
அழுங்கல் நெஞ்சமொடு முழங்கும்
அத்த நீள்இடை அழப்பிரிந் தோரே?

தெளிவுரை

"ஆண்யானை சோர்ந்த நடையினைக் கொண்ட தனது இளம் பெண்யானையின் பசித் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாது, உயர்ந்து நிற்கும் யா மரத்தை வலுவாய்க் குத்திச் சாய்த்து, அதன் பட்டையை உரித்து அதிலுள்ள வெண்மை யான நாரைப் பிய்த்து, அதைச் சுவைத்து, அதில் நீர்ப்பசை இல்லாதது கண்டு அண்ணாந்து பார்த்து, வருந்திய நெஞ்சத் தோடு பிளிறும். இத்தகைய பாலைநிலப் பெருவழியில் நாம் அழுமாறு பிரிந்து போன தலைவர் நம்மை முற்றிலும் மறந்து விட்டார் போலும். சங்குவளை உடைந்ததுபோன்ற வடிவு கொண்ட பிறைநிலவு பலரும் தொழுது போற்றும்படியாய்ச் செந்நிற மாலை நேர வானத்தில் திடீரெனத் தோன்றி எனக்குத்

துன்பம் தருகிறது. இந்நிலையில் நான் எப்படி வருத்தப்படாமல் இருக்க இயலும்?"

கருத்து

நாம் வருந்தி அழுமாறு அவர் நம்மை விட்டுப் பிரிந்து போயினர். இன்னும் வந்திலர்; நம்மை மறந்துவிட்டாரோ என்று தோன்றுகிறது. இச்சமயத்தில் வானத்தில் பிறைச்சந்திரனும் தோன்றி நம்மைத் துன்புறுத்துகிறது. நான் எப்படி வருத்தப்படாமல் இருக்க இயலும்?

விளக்கம்

நீரற்ற பாலைநில வழி; நீர் வேட்கையால் வருந்தும் தன் பெண் யானையின் துன்பத்தைப் போக்க, ஆண்யானை, யா மரத்தின் பட்டையை உரித்து, அதன் உள்நாரில் இருக்கும் நீர்ப்பசையை அளித்து அதன் வேட்கையைத் தணிக்கக் கருதியது. ஆனால், அப்பட்டையிலும் நீர்ப்பசை இல்லாதது கண்டு, வருந்தி, தன் துதிக்கையை உயர்த்திப் பிளிறியது. இத்தகைய பாலைவழியே தான் தலைவர் சென்றுள்ளார்.

குறிப்பு

ஆண்யானை தன் பிடியின் வருத்தத்தைப் போக்க இயலாமல் முழங்குவதைக் கண்டும் தலைவர், நம்மை நினைந்து திரும்பாது பிரிந்து இருக்கிறாரே!

சொற்பொருள்

1. வளை - (சங்கு) வளையல்.
2. செவ்வாய் - செந்நிறம் கொண்ட; ஐ என - விரைவாய்.
3. அன்னோ - அந்தோ.
4. களிறு - ஆண்யானை.
5. உயங்குதல் - வாடுதல்; மடப்பிடி - இளமையான பெண்யானை; நோனாது - பொறாமல்.
6. யா - ஒருவகை மரம்; தொலைய - அழியும்படி.
7. அண்ணாந்து - மேல் நோக்கி.
8. அழுங்கல் - வருந்துதல்; முழங்கும் - பிளிறும்.
9. அத்தம் - பாலை நிலம்; நீள் இடை - நீண்ட வழி.

தலைவி கூற்று

நற்றிணை 196 **வெள்ளைக்குடி நாகனார்**

திணை : நெய்தல்

கூற்று

நெட்டிடை கழிந்து பொருள்வயிற்பிரிந்த காலத்து, ஆற்றாளாகிய தலைமகள் திங்கள்மேலிட்டுத் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்த தலைவன் நெடுந்தொலைவு சென்றனன். அவன் பிரிவை ஆற்றாத தலைவி நிலவைக் கண்டு புலம்பிக் கூறியது.

பளிங்குசெறிந் தன்ன பல்கதிர் இடைஇடைப்
பால்முகந் தன்ன பசுவெண் நிலவின்,
மால்பிடர் அறியா, நிறையுறு மதியம்!
சால்பும் செம்மையும் உடையை ஆதலின்,
நின்கரந்து உறையும் உலகம் இன்மையின்,
என்கரந்து உறைவோர் உள்வழி காட்டாய்!
நல்கவின் இழந்தஎன் தோள்போல் சாஅய்,
சிறுகுபு சிறுகுபு செரீஇ,
அறிகரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே?

தெளிவுரை

பளிங்கைப் பரப்பி வைத்திருப்பது போன்று கதிர்களுக்கு இடையிடையே பாலை முகந்து செல்லும் குடம்போல நகர்ந்து செல்லும் முழு நிலவே! வேடுவர்கள் தேனடையைப் பெறுவதற்காகச் சார்த்தியிருக்கும் ஏணியும் தொட இயலாத உயரத்தில் இருக்கிறாய்; நீ சான்றாண்மையும் நேர்மையும் தவறாத பண்பினைக் கொண்டுள்ளாய். உன்னால் அறியப்படாது மறைந்திருக்கும் பகுதி உலகத்தில் எதுவுமில்லை. (உலகில் எல்லா இடங்களையும் நீ அறிவாய்.) ஆதலால், என்னை விட்டுப் பிரிந்து சென்றுள்ள என் தலைவன் எங்குள்ளான் என்று காட்டு; நீ காட்டாவிட்டால், நல்லழகை இழந்து வாடியிருக்கும் என் தோள்போல நீயும் நாளும் சிறிது சிறிதாய்க் குறைந்து அழிவாய்!

அறிந்த ஒன்றைக் கூறாது மறைத்துச் சொல்பவர்க்கு இந்நிலை தான் ஏற்படும் என்பதையும் அறிக.

கருத்து

நிலவே! நீ என் தலைவனைக் காட்டாவிடில், நீ சிறுகச் சிறுக நலனழிந்து கெடுவாய்.

விளக்கம்

'நிறை நிலவே! நீ சான்றாண்மையினையும் நடுவுநிலைமை யினையும் கொண்டுள்ளாய். ஆதலின், உன்னை ஒன்று இரந்து கேட்கிறேன். என் காதலர் சென்று தங்கியுள்ள இடத்தை அறியாது என் நெஞ்சம் மிகவும் வருந்துகின்றது. உன் ஒளி பரவாத இடம் உலகில் எங்கும் இல்லை. ஆதலால், என் தலைவன் தங்கியிருக்கும் இடத்தை நீ நன்கு அறிந்திருப்பாய்; அவ்விடத்தை எனக்குக் காட்டு' என்று கூறிய தலைவிக்கு நிலவு மறுமொழி ஏதும் கூறவில்லை. நிலவுமீது வெறுப்புக் கொண்டாள். 'என் தலைவனைப் பிரிந்தமையால் என் தோள் நலனழிந்து குறைவதுபோல, நீயும் நாளுக்குநாள் சிறிது சிறிதாய்க் குறைந்தழிவாய்! அறிந்த ஒன்றை உரையாது பொய்ப் பவர்க்கு இந்நிலைதான் ஏற்படும் என்பதை அறிக' என்றும் தன் மனக்கொதிப்பைக் குளிர் நிலவிடம் கொட்டினாள்.

சொற்பொருள்

1. செறிதல் - நெருங்குதல்; கதிர் - நிலவொளி.
2. பால்முகந்தன்ன - பாலை முகந்து வைத்ததுபோல.
3. மால்பு - நூலேணி; இடர் - (எட்ட இயலாத) இடர்ப்பாடு; மதியம் - நிலவு.
4. சால்பு - சான்றாண்மை, தகுதிப்பாடு; செம்மை - செவ்விய நேர்மை.
5. கரந்து - மறைந்து; உறைதல் - தங்குதல்.
6. என்கரந்து உறைவோர் - என்னைப் பிரிந்த தலைவன்; உள்வழி - இருக்குமிடம்.
7. கவின் - அழகு; சாஅய் - அழகழிந்து.
8. சிறுகுபு சிறுகுபு - சிறுகச்சிறுக; செரீஇ - குறைந்து.

9. அறிகரி - அறிந்த ஒன்று; அறிகரி பொய்த்தல் - தான் அறிந்த உண்மையை மறைத்துப் பொய்ச்சான்று கூறுதல்; பொய்த்தல் - பொய்ச் சாட்சி கூறுதல்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 96 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

மாலைப்பொழுது கண்டு ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் கால மாலைப்பொழுதைக் கண்ட தலைவி, பொருள் தேடச் சென்ற தலைவன் வாராததால் வருந்தித் தோழியிடம் சொல்லியது.

இருள்பரந்(து) ஆழியான் தன்நிறம்போல் தம்முன்
அருள்பரந்த ஆய்நிறம் போன்று – மருள்பரந்த
பால்போலும் வெண்ணிலவும் பையர(வு) அல்குலாய்!
வேல்போலும் வீழ்துணைஇ லார்க்கு.

தெளிவுரை

பாம்பின் படம் போன்ற அல்குலைக் கொண்ட தோழியே! சக்கரத்தையுடைய கண்ணனின் கரிய நிறம் போன்ற இருள் எங்கும் சூழ்ந்தது. கண்ணனின் தமையன் பலராமனின் நிறம் போன்றும், கண்டார் மயங்கி வியக்கும்படியான தன்மை கொண்ட பாலின் நிறம் போன்றும் விளங்கும் வெண்மையான நிலா, ஒளி வீசுகிறது. இவை காதலரைப் பக்கத்தில் கொள்ளாத மங்கையர்க்குப் பாய்ந்து வரும் வேலைப் போன்று துன்பத்தைப் பாய்ச்சும்.

கருத்து

காதலரைப் பிரிந்திருக்கும் மங்கையர்க்கு மாலைப்பொழுதும், வெண் ணிலவும் துன்பத்தைத் தருவன.

சொற்பொருள்

1. பரந்து - பரவி; ஆழியான் - சக்கரத்தையுடைய மாயவன் (கண்ணன்); தன் நிறம் - அவன் கறுப்பு நிறம்; தம் முன் - அவன் அண்ணன் (பலராமன்).
2. பரந்த - மிகுந்த; ஆய் - கண்டார் நினைத்துப் பார்க்கும்படியான; நிறம் - வெண்ணிறம்; மருள் - கண்டார் மயங்கி வியக்கும்படியான.
3. பை அரவு - படத்தினைக் கொண்ட பாம்பு (போன்ற); அல்குலாய் - அல்குலைக் கொண்டவளே!
4. வீழ் - விருப்பப்படுகின்ற; துணை - காதலர்; இலார்க்கு - இல்லாதவர்க்கு.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 97 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

மாலைப்பொழுது கண்டு ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் கால மாலைப்பொழுதைக் கண்ட தலைவி, பொருள் தேடச் சென்ற தலைவன் வாராததால் வருந்தித் தோழியிடம் சொல்லியது.

பாழிபோல் மாயவன்தன் பற்றார் களிறெறிந்த
ஆழிபோல் ஞாயிறு கல்சேரத் – தோழியோ!
மால்மாலை தம்முன் நிறம்போல் மதிமுளைப்ப
யான்மாலை ஆற்றேன் இனைந்து.

தெளிவுரை

“தோழியே! தனக்கு வலிமையை உண்டாக்கிக் கொள்பவன் போல, தன் பகைவரின் ஆண்யானைகளின் மத்தகத்தின்மீது மாயவன் (கண்ணன்) செலுத்திய சக்கரத்தைப் போன்று பகலோன் மேற்கு மலைத்தொடரில் சென்று மறைந்தான்; அதனாலுண்டாய மயக்கம் தரும் அம்மாலைக் காலத்தில் கண்ணனின் தமையனான பலராமனின் வெண்மையான நிறம்

போன்ற கதிர்களை வீசி நிலவு எழுந்தது. அதுகண்டு ஆற்ற இயலாதவளாய் நான் தவிக்கிறேன்.”

கருத்து

மாலை இருளும் நிலவும் தலைவனைப் பிரிந்துள்ள என்னை வேல் போல வருத்துகின்றன.

சொற்பொருள்

1. பாழி போல் - தனக்கு வலிமையை உண்டாக்கிக்கொள்பவன்போல; மாயவன் - கண்ணன்; பற்றார் - பகைவர்; களிறு - ஆண்யானை; எறிந்த - செலுத்திய.
2. ஆழி - சக்கரம்; கல் சேர - மேற்கு மலையில் சென்று (மறைய).
3. மால் மாலை - மயக்கத்தினைத் தரும் மாலைக்காலம்; தம் முன் - தனக்கு முன்னவன் - தமையன் (பலராமன்); நிறம் - பலராமனின் நிறம் - வெண்மை; மதி - நிலவு; முளைப்ப - தோன்ற.
4. ஆற்றேன் - பொறுக்க இயலாதவளாயிருக்கிறேன்; நினைந்து - (தலைவன் வரவை) நினைத்து.

தலைவி கூற்று

குறுந்தொகை 86 **வெண்கொற்றன்**

திணை : குறிஞ்சி

கூற்று

‘ஆற்றாள்’ எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனது பிரிவை ஆற்றாளெனக் கவலையுற்ற தோழியிடம் தலைவி, தான் தலைவனைப் பிரிந்துள்ளதால் படும் துயரத்தைச் சொல்லியது.

சிறைபனி உடைந்த சேயரி மழைக்கண்
பொறைஅரு நோயொடு புலம்புஅலைக் கலங்கிப்
பிறரும் கேட்குநர் உளர்கொல்? உறைசிறந்து,
ஊதை தூற்றும் கூதிர் யாமத்து,
ஆன்நுளம்பு உலம்புதொறு உளம்பும்
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.

தெளிவுரை

“பெரிய மழைத்துளிகளை ஊதைக்காற்று வீசித் தூவும் நள்ளிரவு; கொட்டிலிலே கட்டப்பட்டிருக்கும் எருது ஒன்று, தன் முகத்தருகே பெரிய மாட்டு ஈ ஒலிக்கும் போதெல்லாம் அதை விரட்டத் தன் தலையை அசைக்கும். அப்போது அதன் கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணியின் நா அசைந்து எழுப்பும் கடுமையான ஒலி என் காதில் விழும். அதைக் கேட்கும் போதெல்லாம் செவ்வரி படர்ந்த குளிர்ச்சி பொருந்திய என் கண்களில் அதுவரை கட்டுப்படுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணீர் கரை யுடைந்ததுபோல வெளிப்படுகின்றது. இந்நிலையில் பொறுத்தற் கரிய காமநோயுடன் தனிமைத்துன்பமும் கொண்டு வருந்துபவர் என்னைப்போல் வேறு எவரும் உளரோ?”

கருத்து

தலைவனோடு கூடியிருந்து மகிழ வேண்டிய இந்நள்ளிரவில் நான் மட்டும் தனித்திருந்து வருந்துகின்றேன்.

விளக்கம்

“தலைவனோடு இணைந்திருந்து இன்பம் பெற வேண்டிய இக் கூதிர்க்கால நள்ளிரவில், நான் தனித்துறைகின்றேன். மாட்டுக் கொட்டிலில் எழுகின்ற எருதின் மணியொலியைக் கேட்டவாறு உறங்காது வருந்துகின்றவர் என்னைப்போல் வேறு எவரும் உளரோ? (இலர்)” என்கிறாள் தலைவி.

சொற்பொருள்

1. சிறைபனி - கட்டுப்படுத்தப்பட்டிருந்த கண்ணீர்; உடைந்த - உடைந்து சிந்துகின்ற; சேயரி - செவ்வரி படர்ந்த; மழைக்கண் - குளிர்ந்த கண்.
2. பொறைஅரு - பொறுத்தற்கரிய; நோய் - காம நோய்; புலம்பு - தனிமைத் துன்பம்; அலைக்கலங்கி - சேர்ந்து அலைத்தலால் வருத்தமடைந்து.
3. பிறர் - வேறு ஒருவர்; உள்கொல்? - உண்டா?; உறை - மழைத் துளி; சிறந்து - பெருகி.

4. ஊதை - வாடைக்காற்று; தூற்றும் - வீசும்; கூதிர் - கூதிர்க் காலம்; யாமம் - நள்ளிரவு.
5. ஆன் - எருது; நுளம்பு - மாட்டு ஈ; உலம்புதல் - ஒலித்தல்; உளம்பும் - தலையை ஆட்டும், அசைக்கும்.
6. நா - மணியின் நடு நாக்கு; நவில் - ஒலிக்கும்; கொடுமணி - கொடிய மணி ஒலி; நல்கூர் - மெல்லிய; குரல் - ஒலி.

தலைவி கூற்று

குறுந்தொகை 279 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : முல்லை

கூற்று

வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் வாராததால் ஆற்றாது வருந்தியிருந்த தலைவியிடம் தோழி, 'நீ பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்' என்று வற்புறுத்தினாள். அப்பொழுது, தலைவி தான் பொறுத்துக் கொள்ள முடியாமைக்கான காரணத்தைக் கூறியது.

திரிமருப்பு எருமை இருள்நிற மைஆன்,
வருமிடறு யாத்த பகுவாய்த் தெள்மணி,
புலம்புகொள் யாமத்து, இயங்குதொறு இசைக்கும்
இதுபொழுது ஆகவும் வாரார் கொல்லோ?
மழைகழூஉ மறந்த மாஇருந் துறுகல்
துகள்சூழ் யானையின் பொலியத் தோன்றும்
இரும்பல் குன்றம் போகி,
திருந்துஇறைப் பணைத்தோள் உள்ளா தோரே?

தெளிவுரை

"தோழி! பெய்த மழையால் கழுவப்படாத கரிய பெரிய குண்டுக் கற்கள் புழுதி படிந்த யானைகள்போல விளங்கித்

தோன்றும் பெரிய மலைகள் பலவற்றையும் கடந்து சென்றுள்ளார், நம் தலைவர். அவர், அழகிய மணிக்கட்டோடு கூடிய மூங்கில் போன்றுள்ள என் தோள்களை மறந்தே போய்விட்டார். முறுக்கிய கொம்புகளையும் கரிய நிறத்தையும் கொண்ட எருமையின் வளர்ந்துவரும் கழுத்திலே மணிகள் கட்டப்பட்டிருக்கின்றன; அம்மணிகள் பிளந்த வாயையும், தெளிவாய்க் கேட்கும் ஓசையையும் கொண்டன. தனிமை மிகுந்த நள்ளிரவிலே, அவ்வெருமைகள் அசையும் போதெல்லாம் அம் மணிகள் ஒலிக்கின்றன. அவ்வோசை என் தூக்கத்தை ஓட்டித் துன்பத்தைக் கூட்டுகிறது. இந்த நேரத்தில் அவர் வாராமலிருந்தால் நான் எப்படிப் பொறுத்துக்கொள்ள இயலும்?"

கருத்து

நள்ளிரவுத் தனிமையில் நான் எப்படி வருந்தாதிருக்க இயலும்?

குறிப்பு

நள்ளிரவில் எருமையின் மணியோசையைத் தலைவி கேட்டாள் என்பது, அவள் அப்போதும் துயிலாது துன்புற்றிருந்தாள் என்பதைக் காட்டுகிறது.

சொற்பொருள்

1. திரி மருப்பு - முறுக்கிய கொம்பு; மைஆன் - கரிய பெண் எருமை.
2. மிடறு - கழுத்து; பகுவாய் - பிளந்த வாய்; தெள்மணி - தெளிந்த ஓசையினைக் கொண்ட மணி.
3. புலம்புகொள் - தனிமை கொண்ட; இயங்குதொறு - (எருமை) அசையும் போதெல்லாம்.
4. இதுபொழுது ஆகவும் - இந்நேரம் ஆகியுங்கூட.
5. கழூஉ - கழுவுதல்; மாஇரு - பெரிய கரிய; துறுகல் - குண்டுக்கல்.
6. துகள் - புழுதி.
7. இரும்பல் - பெரிய பல.
8. திருந்து இறை - திருத்தமான மணிக்கட்டு, தோளின் சந்து.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 113 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியும் அக்காலத்தில் வருவதாய்க் கூறிச் சென்ற தலைவர் வரவில்லையே என்று வருந்திய தலைவி தன் தோழியை நோக்கிச் சொல்லியது.

பறியோலை மேலொடு கீழா, இடையர்
பிறியோலை போர்த்து, விளியா, கதிப்ப
நரிஉளையும் யாமத்தும் தோன்றாரால், அன்னாய்
விரிஉளைமான் தேர்மேல் கொண்டார்.

தெளிவுரை

"தாய் போன்ற தோழியே! ஆட்டுமந்தையைக் காக்கும் ஆயர்கள் மழை, தம் மேலே படாவண்ணம் ஓலைப்படலை வைத்து அதற்குக் கீழே பறி எனப்படும் படுக்கையில் படுத்திருக் கின்றனர். அவர்கள் ஆடுகளைக் கவரக் காத்திருக்கும் நரிகளைப் பிறியோலையை அசைத்து அதட்டி விரட்டுவர்; அஞ்சிய நரிகள் ஊளையிட்டு அகலும். இத்தகைய யாமப் பொழுதிலும், பரந்த பிடரி மயிரினைக் கொண்ட குதிரைகள் பூட்டப்பட்ட தேர்மீது சென்ற தலைவர் திரும்பி வந்தார் இலரே!" என்று தலைவி தோழியை நோக்கி வருந்திக் கூறினாள்.

கருத்து

ஆயர்கள் தம் ஆடுகளைக் காத்திருக்கும் நள்ளிரவுப்போதிலும் தலைவர் வரவில்லையே!

குறிப்பு

ஆடுகளைக் கவர வரும் நரியை ஆயர்கள் ஆடுகளின் அருகிலிருந்து விரட்டி ஓட்டுகின்றனர். எனக்கு நேர்ந்துள்ள பிரிவுத்துயரை ஓட்டி

என்னைக் காக்க வேண்டிய தலைவர் என் அருகில் இல்லையே! என் செய்வேன்? என்கிறாள் தலைவி.

சொற்பொருள்

1. ஓலை - மழையைத் தடுப்பதற்குரிய ஓலைப்படல்; மேலா - மேலாக அமைந்திருப்பதுடன் ; பறி - பறி என்னும் படுத்துறங்கும் படுக்கை; கீழா - கீழாகக் கொண்டு.
2. பிறி ஓலை - ஆடுகளைப் பிரித்தற்குரிய கருவியாகிய ஓலை; பேர்த்து - அசைத்துக் காட்டி; விளியா - அழைத்து; கதிப்ப - அதட்ட.
3. நரி - (ஆடுகளைக் கவரக் காத்திருக்கும்) நரிகள்; உளையும் - அஞ்சி ஊளையிடும்; தோன்றார் - திரும்பி வந்து சேரவில்லை; அன்னாய் - அன்னை போன்ற தோழியே!
4. விரி உளை - பரந்த பிடரி மயிரினைக் கொண்ட; மான் - குதிரைகள்; தேர் மேல் - தேரில் ஏறி; கொண்டார் - பொருள் தேடிக்கொண்டு வரச் சென்ற தலைவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 163 — **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தன்னுள் கையாறு எய்திடு கிளவி. (கையாறு - செயலற்று வருந்துதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவாலே வருந்தி ஆற்றாமை கொண்ட தலைவி காம மிகுதியால் கடலை நோக்கிக் கூறியது.

யார்அணங் குற்றனை கடலே! பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீன்ஆர் குருகின் கானல்அம் பெருந்துறை,
வெள்வீத் தாழை திரைஅலை
நள்ளென் கங்குலும் கேட்கும்,நின் குரலே?

தெளிவுரை

சிறிய தலையினைக் கொண்ட பூழி நாட்டாரது வெள்ளாட்டுக் கூட்டம் எங்கும் பரவி நின்றதுபோல, மீனை உண்ணும் வெண்ணிறக் கொக்குகள் கடற்கரைச்சோலை யெங்கும் பகற்போதெல்லாம் பரவி நிற்கும். அச்சோலை சூழ்ந்த பெரிய நீர்த்துறையில் வெண்ணிறப் பூக்களைக் கொண்ட தாழையை அலைகளால் மோதி வருத்துகின்ற கடலே! உன் ஆரவாரக்குரல் நள்ளிரவிலும் கேட்கிறது. என்னைப் போல் நீயும் யாராலாவது துன்பம் அடைந்துள்ளாயா?

கருத்து

நள்ளிரவிலும் உறங்காதிருக்கும் கடலே! என்னைப்போல் நீயும் யாராலாவது துன்பம் அடைந்துள்ளாயோ?

விளக்கம்

தலைவனைப் பிரிந்த தலைவி, பஞ்சணையிற்கிடந்து உறக்கம் கொள்ளாமல், மெல்லணையை அணைத்தபடியே வருந்திக் கூறியது இது. கடல்ஒலியைத் தலைவி கேட்கிறாள் என்பதால் அவள் உறக்கமின்றியிருக்கிறாள் என்பது தெளிவாகிறது.

நள்ளிரவில் முழங்கும் கடல்ஒலியைக் கேட்டுத் தலைவி, "கடலே! நீயும் என்னைப் போல் நள்ளிரவிலும் உறக்கமின்றிக் கதறுகின்றனையே! நான்தான் தலைவனால் வருத்தமடைந் துள்ளேன். நீ யாராலே வருத்தமடைந்துள்ளாய்?" என இரங்கிக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. அணங்குற்றனை - துன்புறுத்தப்பட்டாய்; பூழியர் - பூழி நாட்டார்.
2. வெள்ளைத் தோடு - வெள்ளாட்டுக் கூட்டம்; பரந்தன்ன - பரவி நிற்பது போல.
3. ஆர் - உண்ணும்; குருகு - கொக்கு; கானல் - கடற்கரைச்சோலை; அம் - அழகிய.
4. வெள்வீ - வெண்மையான பூ; திரை - (கடல்) அலை; அலை - மோதி வருத்துதல்.
5. நள்ளென் கங்குல் - நடு இரவு; குரல் - ஒலி.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 6 **மாறன் பொறையனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் கார் காலத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்றான் தலைவன். கார் காலம் தொடங்கியது. ஆயினும், அவன் வரவில்லையே என்று தோழி வருந்தினாள்.

முல்லை நறுமலர் ஊதி இருந்தும்பி
செல்சார் வுடையார்க்(கு) இனியவாய் – நல்லாய்மற்(று)
யாரும்இல் நெஞ்சினேம் ஆகி உறைவேமை
ஈரும் இருள்மாலை வந்து.

தெளிவுரை

"தலைவியே! இருளோடு கூடிய மாலைப்பொழுதில் பெரிய வண்டுகள் முல்லைக்கொடிகளில் மலர்ந்து தோன்றும் நல்ல மலர்களில் ஊதி ஒலியெழுப்புகின்றன. பற்றுக்கோடாய் உள்ள தலைவர் உடனிருக்கும் பெண்டிர்க்கு அவை இன்பத்தை அளிக் கட்டும். ஆனால், தலைவரைப் பிரிந்து கவலை மிக்க மனத்துடன் இருக்கும் நம்மை வருத்துகின்றனவே. (ஏன்?)"

கருத்து

கூடியிருப்போர்க்கு மாலை வண்டொலி இன்பத்தைப் பெருக்குகிறது; பிரிந்திருப்போர்க்குத் துன்பத்தை நிறைக்கிறது.

சொற்பொருள்

1. ஊதி - தேனுண்டு ஒலி எழுப்பி; இரும்தும்பி - கரிய வண்டு.
2. செல் சார்வு உடையார்க்கு - பற்றுக்கோடாய் உள்ள தலைவரோடு இருக்கும் பெண்டிர்க்கு.
3. யாரும் இல் - யாரும் துணை இல்லாமல்; உறைவேமை -(தனித்துத்) தங்கியிருப்பவரை.
4. ஈரும் - வருத்தும்; வந்து - தோன்றி.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 8 **மாறன் பொறையனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் கார் காலத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்றான் தலைவன். கார் காலம் தொடங்கியது. ஆயினும், அவன் வரவில்லையே என்று தோழி வருந்தினாள்.

பிரிந்தவர் மேனிபோல் புல்லென்ற வள்ளி
பொருந்தினர் மேனிபோல் பொற்பத் – திருந்திழாய்!
வானம் பொழியவும் வாரார்கொல், இன்னாத
கானம் கடந்துசென் றார்.

தெளிவுரை

"செம்மையான அணிகலன்களை அணிந்த தலைவியே! தலைவரைப் பிரிந்திருக்கும் தலைவியின் மேனியைப் போல் வள்ளிக் கொடிகள் பொலிவில்லாமல் காணப்பட்டன; மழை பெய்ததும் அவை தலைவருடன் கூடி வாழும் தலைவியின் வடிவம்போல் பொலிவு பெற்றன. கொடிய காடுகளைக் கடந்து பிரிந்து சென்றுள்ள தலைவர், மழைபெற்ற கொடிபோல நாம் பொலிவு பெறும்படி வந்து சேர மாட்டாரா?"

கருத்து

மழை பெய்ததும் வாடிய கொடி வனப்பெய்வதுபோல, பிரிவால் வாடியிருக்கும் தலைவி தலைவன் வரப்பெற்றதும் பொலிவு பெறுவாள்.

சொற்பொருள்

1. பிரிந்தவர் - காதலரைப் பிரிந்திருப்பவர்; புல் என்ற - பொலிவு இல்லாமல்; வள்ளி - வள்ளிக்கொடி.
2. பொருந்தினர் - காதலரோடு கூடி வாழும் காதலியர்; பொற்ப - பொலிவு பெறும்படி; திருந்து இழாய் - திருத்தமான அணிகலன் களை அணிந்த தலைவியே!

3. வாரார் கொல் - வரமாட்டாரா? இன்னாத - கொடிய.
4. கானம் - காடு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 30 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

கார் கால வரவைக் காட்டித் தோழி தலைமகளிடம் சொன்னது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து வருந்தியிருக்கும் தலைவியிடம் கார் காலம் தொடங்கிவிட்டது எனத் தோழி கூறியது.

....
கொன்றைக் கொடுங்குழல் ஊதிய கோவலர்
மன்றம் புகுதரும் போழ்து.

தெளிவுரை

கொன்றை மரத்தின் காய்களால் செய்யப்பெற்ற வளைந்த குழலை ஊதி, இடையர் (மேய்க்கக் கொண்டுசென்ற பசுக்களைத் திரும்ப ஓட்டி வந்து) தொழுவத்தில் செலுத்தும் மாலைப் பொழுது.

கருத்து

கார் கால மாலைப்பொழுது (தொடங்கிவிட்டது; தலைவன் திரும்புவான்; வருந்தாதே) எனத் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

சொற்பொருள்

2. கொன்றை - கொன்றை மரத்தின் (காய்களால் செய்யப்பெற்ற); கொடுங் குழல் - வளைவான குழல்; கோவலர் - இடையர்.
3 மன்றம் - மாட்டுத்தொழுவம்; போழ்து - மாலைப்பொழுது.

தோழி கூற்று

கைந்நிலை 35 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி, தலைமகளிடம் சொல்லி ஆற்றுவிப்பது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் வருந்தும் தலைவிக்கு ஆறுதல் கூறித் தோழி தேற்றியது.

....
.... ரடைப் பால்வாய் இடையர்
தெரிவிலர் தீம்குழல் ஊதும் பொழுதால்,
அரித..............................

தெளிவுரை

பால் மணம் கமழும் வாயைக் கொண்ட ஆயர் சிறுவர், பண்ணும் அதன் வகைகளும் அறியாமல் தீங்குழலை எடுத்து ஊதுவர். அதன் வழி மாலைக்காலம் வந்துற்றது என அறிய இயலும்.

கருத்து

(கார் கால) மாலை நேரம் தொடங்கிவிட்டது. தலைவரும் வந்து சேர்வார் எனத் தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. பால் வாய் இடையர் - பால் மணம் கமழும் வாயைக் கொண்ட ஆயர் சிறுவர்.
2. தெரிவிலர் - பண்ணும் அதன் வகைகளும் அறியாதவர்.
3. குழல் - புல்லாங்குழல்; பொழுது - மாலைப்பொழுது.

தோழி தேற்றியது.

தோழி கூற்று

கைந்நிலை 33 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

தலைவனைப் பிரிந்த கவலையில் இருக்கும் தலைமகளைத் தோழி தேற்றியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டப் பிரிந்து சென்றுள்ளதால் கவலையுற்றிருந்த தலைவியைத் தோழி தேற்றியது.

தளைஅவிழ் தே..............................
....
உளையார் கலிநன்மாப் பூட்டி வருவார்
களையாரோ, நீஉற்ற நோய்?

தெளிவுரை

கட்டவிழ்ந்த அழகிய பிடரி மயிர் பொருந்திய குதிரைகளைப் பூட்டித் தேரேறி வருவார், தலைவர். அவர் உன்னை அடைந்து உன் பிரிவு நோயை நீக்குவார்; கவலைப்படாதே!

கருத்து

தலைவர் தேரில் விரைவில் வந்து உன் துன்பத்தை நீக்குவார்; வருந்தாதே.

சொற்பொருள்

1. தளை - கட்டு; அவிழ் - அவிழ்ந்த.
2. உளை - பிடரி மயிர்; ஆர் - பொருந்திய; கலி மா - குதிரை.
4. களைதல் - நீக்குதல்; நோய் - பிரிவுத்துன்பம்.

தோழி கூற்று

குறுந்தொகை 232 **ஊண்பித்தை**

திணை : பாலை

கூற்று

பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பொருள்தேடச் சென்ற தலைவன் திரும்பி வரக் காலம் தாழ்த்தது கண்டு வருந்தியிருந்த தலைவியிடம் தோழி, "தான் திரும்பி வரும் காலத்தைத் தலைவன் சரியாக அறியாத காரணத்தால் வாராதிருக்கலாம்; ஆயினும், உடனே திரும்புவார்; பொறுத்திரு" எனக் கூறி ஆற்றுவித்தது.

உள்ளார் கொல்லோ? தோழி! உள்ளியும்,
வாய்ப்புணர்வு இன்மையின் வாரார் கொல்லோ?
மரற்புகா அருந்திய மாஎருத்து இரலை,
உரற்கால் யானை ஒடித்துஉண்டு எஞ்சிய
யாஅ வரிநிழல் துஞ்சும்
மாஇருஞ் சோலை மலைஇறந் தோரே.

தெளிவுரை

"*தலைவி! பெரிய பிடரியைக் கொண்ட ஆண்மான் மரலின் பட்டையை உண்ணும். பின்னர், உரலைப் போன்ற பருத்த காலைக் கொண்ட யானை ஒடித்து உண்டு எஞ்சிய யாமரத்தின் வரிவரியான நிழலில் கிடந்து தூங்கும். இத்தன்மையினைக் கொண்ட மிகப் பெரிய சோலைகளைக் கொண்டுள்ள மலைகளைக் கடந்து நம் தலைவர் பிரிந்து சென்றுள்ளார். அவர் நம்மை நினைக்காமல் இருந்துவிட்டாரோ? நினைத்திருந்தாலும் செயல் முடிந்து திரும்பும் காலத்தை அறியாத காரணத்தால் வரவில்லையோ? என்று கலங்குகிறாய். அவர் விரைவில் திரும்புவார்; வருந்தாதே" எனக் கூறித் தோழி தலைவியைப் பொறுத்திருக்குமாறு சொல்கிறாள்.*

கருத்து

சென்ற பணி முடியாமையால் தலைவர் இன்னும் வந்திலர்; ஆயினும், வினை முடித்து விரைவில் மீள்வார்; ஆற்றியிரு.

குறிப்பு

ஆண்மான் தனக்குரிய உணவை முடித்து, யா மரத்து நிழலில் கிடந்து உறங்குவதைக் கண்டதும், தானும் தன் வினை முடிந்ததும் உடனே வீடு சென்று, காதலியுடன் இனிதாய்த் துயில வேண்டும் என்னும் உணர்வு தலைவருக்கு எழும்.

சொற்பொருள்

1. உள்ளுதல் - நினைத்தல்.
2. வாய்ப்புணர்வு - செயலை உரிய காலத்தே முடித்துத் திரும்பும் நினைவு.
3. மரல் - மரப்பட்டை; புகா - உணவு; மா - பெரிய; எருத்து - பிடரி; இரலை - ஆண்மான்.
4. எஞ்சிய - மீதியிருந்த.
5. யாஅ - ஒரு வகை மரம்; வரிநிழல் - கோடு கோடான நிழல்; துஞ்சும் - உறங்கும்.
6. மாஇரு - மிகவும் பெரிய; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தோழி கூற்று

கைந்நிலை 20 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தித் தேற்றியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்தமையால் வாடிய தலைவியைத் தோழி ஆறுதல் கூறித் தேற்றியது.

....
.... வீழ்க்கும்
ஓவாத வெங்கானம் சென்றார் ....
.... வார் வருவார் நமர்.

தெளிவுரை

நீங்காத வெப்பத்தைக் கொண்ட பாலைநிலக் காட்டுவழியில் பிரிந்து போன நம் தலைவர் வருவார். (நீ வருந்த வேண்டா.)

கருத்து

நீங்காத வெப்பத்தைக் கொண்ட காட்டுவழியில் பிரிந்து சென்ற தலைவர் திரும்பி வருவார்; வருந்தாதே; ஆற்றியிரு.

சொற்பொருள்

2. வீழ்க்கும் - ஒளிமிக்க.
3. ஓவாத - (வெப்பம்) நீங்காத; வெங்கானம் - வெப்பமிக்க காட்டுவழி.
4. நமர் - நம் தலைவர் (நமர் - உறவினர்).

தோழி கூற்று

கைந்நிலை 22 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் வாடியிருக்கும் தன் தலைவியை நோக்கித் தோழி ஆற்றியிருக்குமாறு வற்புறுத்தி உரைத்தது.

கள்வர் திரிதரூஉம் கானம் கடந்தவர்
உள்ளம் பிரிந்தமை நீ,அறிதி – ஒள்ளிழாய்!
தொல்லை விடரகம் நீந்திப் பெயர்ந்தவர்
வல்லைநாம் காணும் வரவு.

தெளிவுரை

“ஒளிமிக்க அணிகலன்களை அணிந்துள்ள தலைவியே! நம்மைப் பிரிந்து ஆறலை கள்வர்கள் திரியும் காட்டுவழி சென்ற நம் தலைவரின் உள்ளம் பிரிந்ததற்குரிய காரணத்தை நீ

அறிந்திருப்பாய். தொன்மையான மலைக்குகைகளையெல்லாம் கடந்து சென்ற நம் தலைவர் விரைந்து திரும்பி வருவதை நாம் காண்போம். நீ வருந்தாதே" என்று தோழி தலைவியிடம் தலைவன் வருகையை வற்புறுத்திக் கூறினாள்.

கருத்து

தலைவன் விரைவில் திரும்பி வருவான்; வருந்தாதே; பொறுத்திரு.

விளக்கம்

தலைவர் இல்லறம் நடத்தப் பொருள் தேடச் சென்றுள்ளார் என்பதை நீ அறிவாய். அவர் விரைவில் வருவார்; வருந்தாதே.

சொற்பொருள்

1. கள்வர் - வழிப்பறி கள்வர் (ஆறலை கள்வர்); திரிதரூஉம் - திரியும்.
2. அறிதி - அறிவாய்.
3. தொல்லை - தொன்மையான; விடர்அகம் - மலைக்குகை; நீந்தி - கடந்து; பெயர்ந்தவர் - சென்றவர்.
4. வல்லை - விரைவில்; காணும் - காண்போம்.

தலைவர் கடமை முடித்தே மீள்வார்.

தோழி கூற்று

குறுந்தொகை 211 **காவன் முல்லைப்பூதனார்**

திணை : பாலை

கூற்று

இடைச்சுரத்துக் கவலுவன கண்டு, 'நம்மை ஆற்றார்' என நினைந்து, 'மீள்வர் கொல்' எனக் கவன்ற கிழத்திக்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவன், அவன் செல்லுகின்ற வழியிலே துணை பிரிந்து வருந்தும் பறவை, விலங்கு முதலியன கண்டு, 'நாமும் அங்ஙனம் வருந்துவோம்' என்று கருதி, சென்ற பணியினை முடித்திடாமல் 'மீள்வனோ?' என்று வருந்திய தலைவியிடம், 'அவன் அங்ஙனம் மீள மாட்டான்' என்று தோழி கூறியது.

அம்சில் ஓதி ஆய்வளை நெகிழ,
நொந்தும்நம் அருளார் நீத்தோர்க்கு அஞ்சல்
எஞ்சினம் வாழி தோழி! எஞ்சாது
தீய்ந்த மராஅத்து ஓங்கல் வெஞ்சினை
வேனில் ஓர்இணர் தேனோடு ஊதி,
ஆராது பெயரும் தும்பி
நீர்இல் வைப்பின் சுரன்இறந் தோரே.

தெளிவுரை

"தலைவி! சிறிதும் எஞ்சாது வெப்பத்தால் தீய்ந்து வாடிப்போன மராமரத்தின் உயர்ந்த வெப்பமான கிளையில், வேனிற்காலத்திலே மலர்ந்த ஒற்றைப் பூங்கொத்தில் தும்பி என்னும் வண்டு, தேன் என்னும் வண்டுடனே ஊதி, பூக்களின் உள்ளே நுழைந்து, அப்பூக்களில் தேன் இல்லாமையால் வயிறு நிரம்பாது வீணே வெளிவருகின்ற நீரற்ற இடங்களுள்ள பாலை வழியை நம் தலைவர் கடந்து சென்றுள்ளார். (நீரில்லாத நாட்டின் கொடுமையையும், வண்டுகள் தேனுண்ண இயலாது வருந்துகின்ற காட்சியையும் கண்டு தலைவரும் தலைவியின் பிரிவுத் துன்பத்தை நினைந்து, சென்ற பணி முடிந்திடாமல் திரும்பி விடுவாரோ என்று தலைவி அஞ்சுகிறாள்.) பாலை நிலத்தைக் கடந்து சென்றவரும், அழகிய நுண்ணிய கூந்தலைக் கொண்ட உன்னுடைய வளைகள் நெகிழும்படி நமக்கு அருள் செய்யாது பிரிந்து சென்றோருமாகிய தலைவர் பொருட்டு அஞ்சுதலைத் தவிர். (தலைவர் தம் பணியினை முடித்திடாமல் திரும்ப மாட்டார்.)"

கருத்து

தலைவர் தாம் விரும்பிச் சென்ற பணியை முடித்திடாமல் இடையே திரும்பமாட்டார். அவர் வரும்வரை பொறுத்திரு.

விளக்கம்

"தலைவியே! பொருளீட்டச் சென்றவர் இடைவழியில் எதை நினைத்தும் மீளுதல் அறமன்று. பசியாரத் தேன் கிடைக்காத தால் வண்டுகள் வாடித் துயருறும் காட்டில் செல்லுகின்ற

தலைவர், அவற்றின் துன்பம் கண்டு நீயும் அவர் அருகில் இல்லாததால் உடல் வருந்தி மெலிவாய் என்று கருதிப் பொருளீட்டும் தம் பணியை முடித்திடாமல் திரும்பிவிடுவாரோ என அஞ்சுகின்றாய். அவ்வாறு அஞ்சாதே. அழகிய உன் வளையல்கள் நெகிழ்ந்து நீ வருந்துவதைக் கண்டும் அதனைப் பொருட்படுத்தாது பிரிந்து சென்ற அவர், 'இப்போது இடைவழியில் மீள்வரோ' என்று கவலை கொள்ள வேண்டா" எனத் தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. அம்சில் ஓதி - அழகிய நுண்ணிய கூந்தல்; ஆய்வளை - ஆராய்ந் தெடுத்து அணியப்பட்டுள்ள அழகிய வளையல்கள்.
2. நொந்து - வருந்தி; நீத்தோர்க்கு - பிரிந்து சென்றோர்க்கு; அஞ்சல் - அஞ்சாதே.
3. எஞ்சினம் - தவிர்த்தோம்; எஞ்சாது - மிச்சப்படாமல்.
4. தீய்ந்த - வெப்பத்தால் தீய்ந்துவிட்ட; மராஅம் - மரா மரம்; ஓங்கல் - உயர்ந்து வளர்ந்துள்ள; வெஞ்சினை - வெப்பமான கிளையில்.
5. வேனில் - வேனிற்காலத்தில் (மலர்ந்த); தேன் - ஒரு வகை வண்டு.
6. ஆராது பெயரும் - தேன் கிட்டாமையால் திரும்பும்; தும்பி - ஒரு வகை வண்டு.
7. நீர் இல் - நீர் இல்லாத; வைப்பின் - இடங்களைக் கொண்ட; சுரன் - பாலை நில வழியில்; இறந்தோர் - கடந்து சென்றோர்.

தோழி கூற்று

குறுந்தொகை 213 **கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார்**

திணை : பாலை

கூற்று

'நம் பெருமான் நம்பொருட்டு இடைநின்று மீள்வான்' எனக் கவன்ற தலைமகட்குத் தோழி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்த காலத்து, "நம்பாலுள்ள விருப்பத்தினால் தலைவர் தாம் சென்ற வினையை நிறைவேற்றாமல் வந்துவிடுவாரோ?" என்று ஐயுற்ற தலைவியை நோக்கி, 'விலங்கினமும் தத்தமது கடமையை ஆற்றும் காட்சி கண்டு அவர் தாமும் தம் கடனாற்றத் துணிவராதலின் மீளார்' என்று தோழி கூறியது.

நசைநன்கு உடையர் தோழி! ஞெரேர்எனக்
கவைத்தலை முதுகலை காலின் ஒற்றிப்
பசிப்பிணிக்கு இறைஞ்சிய பரூஉப்பெருந் ததரல்
ஒழியின் உண்டு, வழுவில் நெஞ்சின்
தெறித்துநடை மரபின்தன் மறிக்குநிழல் ஆகி,
நின்றுவெயில் கழிக்கும் என்பநம்
இன்துயில் முனிநர் சென்ற ஆறே.

தெளிவுரை

"தலைவி! தலைவர் உன்னிடம் மிகுந்த விருப்பம் கொண்டவர். ஆயினும், உன்னோடு சேர்ந்து துயிலுவதை நீக்கிப் பொருளை மதித்து அதைத் தேடி வரப் பிரிந்து சென்றுள்ளார். அவர் சென்ற வழி அன்பை நினைவூட்டும் காட்சிகளைக் கொண்டது. அவ்வழியில், கவைத்த கொம்புகளைக் கொண்ட முதிய ஆண்மான் பசித்துன்பத்தைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு விரைவாய்த் தன் காலால் உதைத்து, பருத்த பெரிய மரப் பட்டையை உரிக்கும். அப்பட்டையைத் தன் பெண்மானுக்கும் குட்டிக்கும் உணவாய்க் கொடுத்து, அவை உண்ட பின் மீதியிருந்தால் அதைத் தான் உண்ணும். குற்றமற்ற நெஞ்சுடன் துள்ளி நடக்கும் இயல்பினைக் கொண்ட தன் குட்டியின்மீது

வெயில் படாது தடுக்கத் தானே நின்று தன் நிழலை அதற்குக் கொடுக்கும். நம் தலைவர் சென்ற காடு அத்தகையது என்று கூறுவர்."

கருத்து

தலைவர் தம் கடமையை உணர்ந்தவர். எனவே, முற்றிலும் பொருளை ஈட்டிய பின்பே திரும்புவார். இடைவழியில் மீள மாட்டார்; வரும்வரை ஆற்றியிரு.

விளக்கம்

ஆண்மான் முதலில் தன் பசியைத் தீர்த்துக்கொள்ள முயலாது தன் பெண்மான், குட்டி ஆகியவற்றின் பசியையே போக்க முற்படுகிறது. மேலும், தன் மேல் படும் வெயிலின் வெம்மையைப் பொருட்படுத்தாமல் வெயிலை மறைத்துத் தான் நின்று, தன் நிழலில் குட்டி நிற்கும்படி செய்கிறது. இதனைக் காணும் தலைவன் தன் இல்லறக் கடமையை நினைந்து பொருளை முழுதுமாய் ஈட்டியே திரும்புவான்.

தலைவன் பொருளீட்டச் செல்வது இல்லறத்தைச் சிறப்புறப் பேணவும், விருந்தோம்பவும், இரப்போர்க்கு இல்லையென்னாது கொடுப்பதற்குமேயாம். ஆகவே, இதற்காகும் பொருள் முழுவதையும் தேடி முடிக்குமுன் இடைவழியில் திரும்ப மாட்டான் எனத் தோழி தலைவியிடம் சொல்லுகிறாள்.

சொற்பொருள்

1. நசை - விருப்பம்; ஞெரேர் என - விரைவாய், வலுவாய்.
2. கவைத்தலை - இரு பிரிவாய்ப் பிரிந்த கொம்புகளைக் கொண்ட; முதுகலை - முதிய ஆண் மான்; ஒற்றி - உதைத்து.
3. இறைஞ்சிய - தாழ்ந்த, காய்ந்த; பரூஉப் பெரும் - பருத்த பெரிய; ததரல் - மரப்பட்டை.
4. ஒழியின் - மீதி இருக்குமாயின்; வழுவில் - குற்றமில்லாத.
5. தெறித்து நடை - துள்ளிக் குதிக்கும் நடை; மறி - மான்குட்டி.
6. நின்று - ஆண்மான் தான் வெயிலை மறைத்து நின்று; வெயில் கழிக்கும் - அதனால் ஏற்படும் தன் நிழலில் குட்டியை நிற்கும்படி செய்து அதன் வெம்மையைத் தணிக்கும்; என்ப - என்று சொல்லுவர்.
7. முனிதல் - வெறுத்தல் (நீங்குதல்); ஆறு - வழி.

தோழி கூற்று

குறுந்தொகை 255 **கடுகு பெருந்தேவனார்**

திணை : பாலை

கூற்று

'இடைநின்று மீள்வர்' எனக் கவன்ற கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

'தன்மேல் பேரன்பு கொண்டவனாகிய தலைவன் பொருளார்வத்தால் உந்தப்பட்டுத் தன்னைப் பிரிந்து சென்றனனாயினும், இடைவழியில் தன் நினைவு எழுந்தால், தன் பயணத்தை மேலும் தொடராது திரும்பிவிடுவான்' என்று எண்ணிக் கவலை கொள்ளுகின்றாள், தலைவி. அவளிடம் தோழி, 'தலைவன் தன் கடமையை மறக்கும் இயல்பினன் அல்லன்' என்று கூறியது.

பொத்துஇல் காழ அத்த யாஅத்துப்
பொரிஅரை முழுமுதல் உருவக் குத்தி,
மறம்கெழு தடக்கையின் வாங்கி, உயங்குநடைச்
சிறுகண் பெருநிரை உறுபசி தீர்க்கும்
தடமருப்பு யானை கண்டனர்; தோழி!
தம்கடன் இறீஇயர் எண்ணி, இடம்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற ஆறே.

தெளிவுரை

"தலைவி! தம் கடமைகளை நிறைவேற்ற விரும்பி, ஈட்டுதற்குரிய இடந்தோறும், தாம் விரும்பும் பொருளைத் தேடும் ஆர்வத்தால் கட்டுண்டு நம் தலைவர் சென்றுள்ளார். அவர் சென்ற வழியில் வளைந்த கொம்புகளைக் கொண்ட தலைமை யானை, அங்கு நின்ற புரையில்லாத வயிரம் பாய்ந்த யாமரத்தின் பொரிந்த அடி மரத்தை முழுமையாய் உருவிச் செல்லும் படியாகத் தன் கொம்புகளால் குத்தி வீழ்த்தும். பின், வலிமை மிகுந்த தன் துதிக்கையால் அம்மரத்தை வளைத்துப் பிடித்துச் சோர்ந்த நடையுடன் எடுத்துச் சென்று, சிறுத்த கண்களைக்

கொண்ட பெருங்கூட்டமாயுள்ள தனது குடும்பமாகிய யானைகளின் பசியைப் போக்கும். இந்தக் காட்சியைக் காணுவதால் நம் தலைவர் தம் பணி முடிவதற்கு முன்பே திரும்பிவிட மாட்டார். அந்த யானையைப் போலத் தம் சுற்றத்தைக் காக்க வேண்டும் என்றே உறுதிகொள்வார்."

கருத்து

தலைவர் தாம் கருதிச் சென்ற செயலை முற்றுப் பெறச் செய்திடாமல் திரும்ப மாட்டார்.

விளக்கம்

"பொருள் தேடச் சென்ற தலைவன் தன்மீதுள்ள காதல் மிகுதி யால் பொருளைத் தேடும் பணி முற்றுப் பெறும் முன் இடை யினில் திரும்பி விடுவானோ என்று தலைவி வருந்தினாள். இல்லறக் கடமைகளைச் செம்மையாய்ச் செய்வதற்காகவே தலைவன் பொருளீட்டச் சென்றுள்ளான்; வழியில் யானை தன் சுற்றத்தைப் பாதுகாக்கும் காட்சியைக் காண்பான். நாமும் நம் இல்லறத்தை நன்றாய் நடத்துவதற்குப் பொருளை ஈட்டிச் செல்ல வேண்டுவது இன்றியமையாதது எனக் கருதுவான். ஆதலால், தன் பணியை முற்றுப் பெறச் செய்யாமல் திரும்ப மாட்டான்" என்று தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. பொத்து - பொந்து, புரை; காழ - வயிரம் பாய்ந்த.
2. பொரிஅரை - பொரிந்த அடிமரம்; உருவ - உருவிச் செல்லும்படியாய்.
3. மறம்கெழு - வலிமை மிக்க; தடக்கை - வலிமை வாய்ந்த துதிக்கை; வாங்கி - வளைத்து; உயங்குதல் - சோர்தல்.
5. தடமருப்பு - வலிமையினைக் கொண்ட கொம்பு, தந்தம்.
6. தம் கடன் - தம் கடமை; இறீஇயர் - முற்றுப் பெற.
7. காமர் - விருப்பம்; பிணிப்பு - கட்டு.
8. வெம் - விரும்பும்; ஆறு - வழி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 331 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழி, 'செல்லும் வழியிடத்து மலையின் உளதாகிய நாற்றத்தால் நம்மை நினைத்து முடியச் செல்லார், மீள்வரோ?' என்று கேட்ட தலைமகளுக்கு, 'அவர் முடியச் சென்றார்' என்பதறிந்து தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டப் பிரிந்து சென்றதால் தலைவி தனித்திருந்தாள். வழியில் மலையில் கமழும் நறும்பூ மணத்தினால் தலைவியின் நினைப் புண்டாகித் தன் நோக்கத்தை முற்றுப் பெறச் செய்யாமல் திரும்பி விடுவானோ எனத் தலைவி வினவினாள். அதற்கு, 'அவன் தான் செல்ல வேண்டிய இடத்தினை முன்பே அடைந்து விட்டான்' என்று தோழி இரங்கிக் கூறியது.

அம்ம வாழி தோழி அவிழ்இணர்க்
கருங்கால் மராஅத்து வைகுசினை வான்பூ
அருஞ்சுரம் செல்லுநர் ஒழிந்தோர் உள்ள
இனிய கமழும் வெற்பின்
இன்னாது என்ப அவர்சென்ற ஆறே!

தெளிவுரை

"தலைவி! வாழ்க! தலைவன் செல்லும் வழியில் கருமையான வலிய அடிப்பகுதியைக் கொண்ட கடம்ப மரத்தின் கிளை யிலுள்ள கொத்துகளிலிருந்து வெண்ணிறப்பூக்கள் மலர்ந் திருக்கும். அப்பூக்களிலிருந்து தாம் விட்டுப் பிரிந்த காதலியரை நினைந்து வருந்துமாறு மணம் கமழும். அத்தகைய இனிய மணம் வீசும் மலைவழி இன்னாமை பலவும் கொண்டது என்று அறிந்தவர் கூறுவர். தலைவன் தான் செல்ல வேண்டிய இடத்தினை முன்பே அடைந்துவிட்டான். இனி பணி முற்றுப் பெறாமல் திரும்ப மாட்டான்.

கருத்து

அவன் காட்டினைக் கடந்து சென்றுவிட்டான். இனி, பணி முற்றுப் பெறாது திரும்ப மாட்டான்.

குறிப்பு

தலைவன் சென்ற காடு, தன் துணைவியை நினைக்கச் செய்யும் மணம் கமழும் மலர்களைக் கொண்டது. ஆதலால், அஃது இனியதாயிற்று. அதனைக் கடந்து செல்வது கடினமாதலால், அஃது இன்னாததாயும் ஆயிற்று.

சொற்பொருள்

1. அவிழ் இணர் - மலர்ந்த பூங்கொத்து.
2. கருங்கால் - கரிய அடிமரம்; மரா - ஒரு வகை மரம், வெண் கடம்ப மரம்; வைகு சினை - பொருந்திய கிளை; வான் பூ - வெண்ணிறமான பூ.
3. ஒழிந்தோர் - தாம் பிரிந்த துணைவியரை; உள்ள - நினைத்து.
4. கமழும் - நறுமணம் வீசும்.
5. ஆறு - வழி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 311 — **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

'ஆற்றது அருமை நினைந்து நீ ஆற்றாயாதல் வேண்டா; அவர் அவ்வழி முடியச் சென்றார்' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

"தலைவன் செல்லும் வழியின் கடுமையை நினைந்து நீ பொறுமை யிழக்க வேண்டா; தலைவன் காட்டுவழியை முற்றும் கடந்துவிட்டான்" என்று தலைவியிடம் தோழி கூறினாள். அதற்கு மறுமொழியாகத் தலைவி சொல்லியது.

வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும்
ஆரிடைச் செல்வோர் ஆறுநனி வெரூஉம்
காடுஇறந் தனரே காதலர்
நீடுவர் கொல்என நினையும்என் நெஞ்சே!

தெளிவுரை

“வேங்கைப்பூவைப் பறிப்பவர்கள் ‘பஞ்சுரம்’ என்னும் இனிய பண்ணைப் பாடியபடியே கொய்தாலும், அக்காட்டுவழியே செல்பவர்கள் அவ்வழியே செல்வதற்கு மிகவும் அச்சம் கொள்ளுவர். அத்தகு காட்டினைக் காதலரும் கடந்து சென்று விட்டார் என்கிறாய். ஆனால், அவர் சென்ற காரியம் முடியாமை யினால் திரும்பிவரக் காலம் நீட்டிப்பாரோ என்று என் நெஞ்சு நினைந்து வருந்துகிறது.”

கருத்து

தலைவர் காட்டினைக் கடந்து சென்றுவிட்டார்; இனிச் சென்ற செயல் முற்றுப் பெறாமல் திரும்ப மாட்டார்.

விளக்கம்

வேங்கைப்பூவைக் கொய்வோர் ‘பஞ்சுரம்’ என்னும் பண்ணினைப் பாடினர். பஞ்சுரம் இனிமையான பண்; ஆறலை கள்வர் இப்பண்ணைக் கேட்டபின் தம் கொலைத்தொழிலை மறந்து, கைகளிலுள்ள கொடிய கருவிகளையும் கைவிட்டு அருளுள்ளம் கொள்வர் என்பர். குறமகளிர் வேங்கைப்பூவைக் கொய்யும்போது குறிஞ்சிப்பண்ணைப் பாடாமல், பாலைக்குரிய பஞ்சுரப்பண் பாடக் கேட்ட வழிபோக்கர், இனி வருவது பாலை நில வழி என்று அஞ்சுவர்.

சொற்பொருள்

1. வேங்கை கொய்யுநர் - வேங்கைப்பூவைப் பறிப்பவர்; பஞ்சுரம் - பாலைப்பண்; விளிப்பினும் - பாடினாலும்.
2. ஆரிடை - அரிய வழியிடையே; நனி - மிகவும்; வெரூஉம் - அஞ்சுவர்.
3. இறந்தனர் - கடந்து சென்றனர்
4. நீடுவர் - நீட்டிப்பர், காலம் தாழ்ப்பர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 333 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்த தலைமகன் சுரத்திடைச் சென்றான் என்பது கேட்ட தலைமகள் புட்களை நொந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்த தலைவன் காட்டுவழியே சென்றான் என்று கேள்விப்பட்ட தலைவி, அங்குள்ள பறவைகளின்மேல் சினங்கொண்டு தோழியிடம் சொல்லியது,

அம்ம வாழி தோழி! யாவதும்
வல்லா கொல்லோ தாமே, அவண
கல்லுடை நன்னாட்டுப் புள்ளினப் பெருந்தோடு
யாஅம் துணைபுணர்ந்து உறைதும்
யாங்குப் பிரிந்து,உறைதி என்னா தவ்வே.

தெளிவுரை

“தோழி! நீ வாழி! நான் சொல்வதைக் கேள். மலைகள் பொருந்திய நல்ல நாட்டின் வழியே தலைவன் சென்றுள்ளான். அங்கு வாழ்கின்ற பெருந்தொகுதியான பறவையினத்திற்கு நம் தலைவனை நோக்கி, ‘நாங்கள் எப்பொழுதும் எம் துணையைப் பிரியாமல் சேர்ந்தே வாழ்கிறோம். அவ்வாறாக நீ மட்டும் எவ்வாறு காதல் துணையைப் பிரிந்து தங்க இயல்கிறது’ என்று கேட்டுத் தடுக்கச் சிறிதுகூட வல்லமை இல்லையோ?”

கருத்து

காட்டிலுள்ள பறவையினங்கூடத் தலைவனிடம் எனக்காகப் பரிந்து பேசவில்லை.

சொற்பொருள்

1. யாவதும் - சிறிதும்.
2. வல்லா கொல்லோ? - வல்லமையில்லாதனவோ?; அவண - தலைவன் சென்ற இடத்திலுள்ள.

3. கல் - மலை; புள் - பறவை; பெருந்தோடு - பெரிய தொகுதி.
4. துணை புணர்ந்து உறைதும் - துணையோடு கூடித் தங்குகின்றோம்.
5. யாங்கு - எப்படி?; உறைதி - தங்குகின்றாய்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 332 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்த தலைமகன் 'சுரத்திடைக் கழியச் சென்றான்' என்பது கேட்ட தலைமகள் அங்குள்ள மாக்களை நொந்து தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்த தலைவன் காட்டுவழியைக் கடந்துவிட்டான். அதனைக் கேள்விப்பட்ட தலைவி, அங்குள்ள விலங்குகளை நொந்து தோழியிடம் சொல்லியது.

அம்ம வாழி தோழி என்னதூஉம்
அறனில மன்ற தாமே விறல்மிசைக்
குன்றுகெழு கானத்த பண்பில் மாக்கணம்
கொடிதே, காதலிப் பிரிதல்
செல்லல் ஐய என்னா தவ்வே.

தெளிவுரை

"தோழியே கேள்! உயர்ந்த உச்சிகளைக் கொண்ட குன்றுகள் பல பொருந்திய கானத்தில் வாழும் விலங்குக்கூட்டம் அனைத்தும் மிகவும் அன்பு இல்லாதன. ஏனெனில், அவை நம் தலைவனிடம், 'காதலியைப் பிரிந்து செல்லுவது கொடிது; எனவே, பயணம் செல்லாதே' என்று சொல்லாதனவாயின."

கருத்து

பிரிந்து காட்டில் செல்லும் தலைவன் பயணத்தைத் தடுக்காத விலங்குக் கூட்டம் மிகவும் அறமற்றது.

குறிப்பு

விலங்குகளும் பறவைகளும் உயிரற்ற ஆறு, மலை போன்றனவும் பேசுவன போலவும் கேட்பன போலவும் பாடுவது ஓர் இலக்கிய உத்தி.

சொற்பொருள்

1. என்னதூஉம் - சிறிதும்.
2. அறன்இல - அறம் இல்லாதன; விறல் - உயரம்; மிசை - உச்சி.
3. கெழு - பொருந்திய; கானத்த - காட்டிலேயுள்ள; பண்புஇல் - பண்பு இல்லாத; மாக் கணம் - விலங்குகளின் கூட்டம்
5. செல்லல் - செல்லாதே; என்னாது - என்று கூறாத.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 317 | **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்து நீட்டித்துழி நெஞ்சினைத் தூதுவிட்ட தலைமகள் அது வாராது தாழ்த்துழித் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம் :

பிரிந்த தலைவன் திரும்பி வாராமல் காலம் தாழ்த்தினான். துயராலே மிகவும் வாடிய தலைவி தன் நெஞ்சினைத் தூது விடுத்தாள். அதுவும் அவனிடம் சென்று அங்கேயே நிலைத்துவிடவே, தலைவி நொந்து தோழியிடம் சொல்லியது.

சூழ்கம் வம்மோ தோழி, பாழ்பட்டுப்
பைதற வெந்த பாலை வெங்காட்டு
அருஞ்சுரம் இறந்தோர் தேஎத்துச்
சென்ற நெஞ்சம் நீடிய பொருளே.

தெளிவுரை

"தோழி! வளமனைத்தும் பாழ்பட்டுப் பசுமையே இல்லாமையால் வெம்மையுற்றுக் கிடக்கும் பாலைநிலக் காட்டிலே கடத்தற்கரிய சுரத்தைக் கடந்து சென்றுள்ளார், நம் காதலர். அவர் சென்ற நாட்டிற்கு அவரிடம் என் பொருட்டாய் என்

நெஞ்சம் தூது சென்றது. அதுவும் என்னிடம் மீளாதே, தாழ்த்துவதன் உட்பொருள் என்னவென்று தெரியவில்லை. அதனை ஆராய்வோம், வா.”

கருத்து

தலைவனைக் கண்டுவர என் நெஞ்சினைத் தூதாய் அனுப்பினேன். ஆனால் சென்ற நெஞ்சு திரும்ப வாராது அவனுடனே தங்கிவிட்டது. அது எதனால்?

சொற்பொருள்

1. சூழ்கம் - ஆராய்வோம்; வம்மோ - வருக.
2. பைதற - பசுமை கெட்டொழிய; வெந்த - வெந்து கருகிய; பாலைவெங்காடு - பாலை நிலத்துக் கொடிய காடு.
3. இறந்தோர் -கடந்து சென்றோர்; தேஎத்து - இடத்துக்கு.
4. நீடிய பொருள் - வாராது காலம் தாழ்த்தக் காரணம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 475 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தலைமகன் உழைநின்று வந்தார் கேட்பத் தன் மெலிவு கண்டு இரங்கிய பாணனைத் தோழிக்கு மகிழ்ந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றதால் ஆற்றாத தலைவியின் மெலிவு கண்டு பாணன் வருந்தினான். அவன் அன்பு கண்டு மகிழ்ந்த தலைவி, தலைவனிட மிருந்து வந்த பிறர் கேட்குமாறு பாணனைப் பாராட்டி தன் தோழியிடம் உரைத்தது.

தொடிநிலை கலங்க வாடிய தோளும்
வடிநலன் இழந்தஎன் கண்ணும் நோக்கிப்
பெரிதுபுலம் பினனே சீறியாழ்ப் பாணன்
எம்வெங் காதலொடு பிரிந்தோர்
தம்மோன் போலான்;பேரன் பினனே!

தெளிவுரை

"தோழி! தொடிகள் நெகிழ்ந்து விழுமாறு வாட்டமுற்ற என் தோளினையும், எழிலினை இழந்துவிட்ட மாவடு போன்ற என் கண்களையும் நோக்கி, இச்சீறியாழ்ப் பாணன் மிகவும் புலம்பினான். இவன், விருப்பமிக்க என் காதலைக் கைக்கொண்டு பிரிந்து சென்றுள்ள தலைவனைப் போன்றவன் அல்லன்; நம்மிடம் மிகுதியான அன்பினைக் கொண்டவன்தான்."

கருத்து

பாணன் நமக்காக வருந்துகின்றான். அவன் தலைவனைப் போன்று இரக்கமற்றவன் அல்லன்.

விளக்கம்

தலைவனோடு மிகவும் தொடர்பு கொண்டவன்மட்டுமன்றி அவன் சொல்வதைச் செய்வதையே கடமையாய்க் கொண்டவன் என்றாலும், பாணன் நமக்காக வருந்துகிறான். இவன் இரங்குதற்குரியவன். தலைவன் செய்யும் கொடுமைக்கு இவன் என்ன செய்வான்?

சொற்பொருள்

1. தொடி - வளைகள்; நிலை கலங்க - தம் நிலையிலிருந்து நழுவி விழ; வாடிய - மெலிந்து தளர்ந்த.
2. வடி நலன் - மாவடுப் போலும் அழகு.
3. புலம்புதல் - வருந்துதல்.
4. எம் வெம் காதலொடு - எம் விருப்பமிக்க அன்போடு.
5. தம்மோன் - தம்மவன், தலைவன்; போலான் - போன்றவன் அல்லன்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 473 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'தலைமகன் பிரிந்த நாட்டிற்குச் செல்வேம்' என்ற அவன் பாணற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவன் இருக்குமிடம் செல்வேன். நீங்கள் கொண்டுள்ள துயரை எடுத்துரைத்து விரைவிலே திரும்புமாறு கூறுவேன்' என இரங்கிக் கூறினான், பாணன். அவனிடம், "அவரைச் சென்று சேர்ந்ததும் நீயும் அவரைப் போல எம்மை மறந்துவிடாதிரு" எனத் தலைவி சொல்லியது.

பலர்புகழ் சிறப்பின்நும் குருசில் உள்ளிச்
செலவுநீ நயந்தனை ஆயின், மன்ற
இன்னா அரும்படர் எம்வயிற் செய்த,
பொய்வ லாளர் போலக்,
கைவல் பாண!எம் மறவா தீமே.

தெளிவுரை

"யாழ் மீட்டுதலில் வல்லவனான பாணனே! பலரும் புகழும் வண்ணம் சிறப்பினைக் கொண்டவரான உன் தலைவரைக் காண விரும்பி அவரிருக்கும் இடத்திற்குச் செல்லவிருக்கின்றாய். தீர்த்தற்கரிய பெரிய வருத்தத்தை எமக்குத் தந்து சென்றுள்ள, பொய் பேசுதலில் வல்லமை கொண்ட உன் தலைவரைப் போல நீயும் அங்குச் சென்றதும் எம்மை மறந்துவிடாதே."

கருத்து

பாண! கைவலாளனான நீதான் பொய்வலாளரான அவரிடம் மறவாது என் நிலையை எடுத்துச் சொல்ல வேண்டும்; அங்குச் சென்றதும் எம்மை மறந்து அவரோடு சேர்ந்துவிடாதே.

சொற்பொருள்

1. குருசில் - தலைவன்; உள்ளி - நினைத்து.
2. செலவு - செல்லுதலை; நயந்தனை ஆயின் - விரும்பினாய் ஆனால்.

3. அரும்படர் - பெரிய துன்பம்; எம்வயின் - எம்மிடத்தே.
4. பொய்வலாளர் - பொய் பேசுவதில் வல்லவரான தலைவர்.
5. கைவல் - கைவினைத்திறனிலே (யாழ் மீட்டுவதிலே) வல்லமை பெற்ற; மறவாதீ - மறந்துவிடாதே.

பாணன் கூற்று

அகநானூறு 14 **ஒக்கூர் மாசாத்தியார்**

திணை : முல்லை

கூற்று

பாணன் தனக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்தான்; தலைவி ஆற்றாளாய் வருந்தினாள். பாணனை அழைத்து, 'நம் தலைவர் இம்மாலைப்பொழுதினுள் வாராராயின் எதிர்வரும் காலைப்பொழுதில் நான் எந்நிலை எய்துவேன்? அதனை நான் அறியேன்' எனக் கூற, அதுகேட்ட பாணன் வருந்திய உள்ளத்தினனாய்த் தலைவரிடம் செல்லுதலுற்றான். எதிரே தலைவன் தேரிலே வரக்கண்டு, அவன் வரவினைத் தன் தோழர்க்கு உவப்புடன் சொல்லியது.

அரக்கத்து அன்ன செந்நிலப் பெருவழி,
காயா செம்மல் தாஅய், பலஉடன்
ஈயல் மூதாய் வரிப்ப, பவளமொடு
மணிமிடைந்து அன்ன குன்றம் கவைஇய
அம்காட்டு ஆர்இடை, மடப்பிணை தழீஇ,
திரிமருப்பு இரலை புல்அருந்து உகள,
முல்லை வியன்புலம் பரப்பி, கோவலர்
குறும்பொறை மருங்கின் நறும்பூ அயர,
பதவுமேயல் அருந்து மதவுநடை நல்ஆன்
வீங்குமாண் செருத்தல், தீம்பால் பிலிற்ற,
கன்றுபயிர் குரல, மன்றுநிறை புகுதரும்
மாலையும் உள்ளார் ஆயின், காலை
யாங்குஆ குவம்கொல்? பாண என்ற

மனையோள் சொல்எதிர் சொல்லல் செல்லேன்,
செவ்வழி நல்யாழ் இசையினென், பையென,
கடவுள் வாழ்த்தி, பையுள் மெய்நிறுத்து,
அவர்திறம் செல்வேன் கண்டனென், யானே
விடுவிசைக் குதிரை விலங்குபரி முடுக,
கல்பொருது இரங்கும் பல்ஆர் நேமிக்
கார்மழை முழக்குஇசை கடுக்கும்,
முனைநல் ஊரன், புனைநெடுந் தேரே.

தெளிவுரை

“செவ்வரக்கினைப் போன்று செந்நிறம் பொருந்திய நிலத்தில் அமைந்துள்ள பெரிய வழியில், அலர்ந்து வீழ்ந்த காயாவின் பழம் பூக்கள் பரவிக் கிடக்கும்; அவற்றின்மேல், இந்திர கோபப்பூச்சிகள் பலவும் ஒருங்கே வரிசை வரிசையாய் ஊர்ந்து சென்று அவ்வழியை அழகு செய்யும்; அவை, பவளத்தோடு நீலமணி நெருங்கியிருந்தாற் போன்ற தோற்றத்தினைத் தரும்; இத்தகைய சிறப்பினைப் பெற்ற குன்றம் சூழ்ந்த அழகிய காட்டகத்தே செல்லுதற்கு அரிய இடங்களிலெல்லாம் முறுக்கி விட்டாற்போன்ற கொம்பினைக் கொண்ட ஆண்மான் தன் இளைய பெண்மானைத் தழுவிக் கொண்டு புல்லை அருந்தித் துள்ளித் திரியும்.

ஆயர்கள் தம் பசுக்களை அகன்றமைந்த முல்லை நிலத்தில் பரக்க மேயவிட்டுச் சிறிய குன்றுகளிடத்தே மணம் நாறும் பூக்களை மாலையாய்க் கட்டி மார்பிலே அணிந்து மகிழ்ந் திருப்பர்; அறுகம்புல் தீனியை அருந்திய வலிய நடையினைக் கொண்ட சிறந்த பசுக்களின் பருத்த மாண்புற்ற மடி இனிய பாலைச் சொரிய, கன்றுகளை நினைத்து அழைக்கும் குரலுடன் மன்றுகள் நிறையுமாறு சென்று புகும்.

(தனிமைத்துன்பம் மிகுதற்குரிய) இத்தகைய மாலைப்பொழு தினுள் நம் தலைவர் நம்மை நினைத்து வாராராயின், ‘பாணனே! எதிர்வரும் காலைப்பொழுதில் நான் எந்நிலையினை எய்துவேன்? அதனை நான் அறியேன்!’ என்று தலைவி கூறினாள். “தலைவியின் சொல்லிற்கு மறுமொழி கூற இயலாது யாழில்

நல்ல செவ்வழிப் பண்ணை மெல்லென இசைத்தேன் (தலைவியைக் காக்க வேண்டி), கடவுளை வாழ்த்தினேன்; துயர் கொண்ட உடலினனாய்த் தலைவர் இருக்குமிடம் செல்லலுற்றேன்.

“அங்ஙனம் புறப்படுகையில், இடியோசைபோல, உருளைகள் கற்களில் மோதுமாறு விரைந்து குதிரை இழுத்துவரும் தலைவனின் அலங்கரிக்கப்பட்ட தேரினை நேரில் கண்டேன்” எனப் பாணன் தன் தோழர்களிடம் கூறினான்.

கருத்து

‘தலைவன் தேரிலே வரக் கண்டேன்’ எனத் தலைவி அறியுமாறு பாணன் தனக்குப் பாங்காயினாரிடம் கூறினான்.

விளக்கம்

தலைவன் பிரிந்து சென்ற பின் இல்லத்திலிருந்த தலைவிக்கு எதிரே பாணன் சென்றான். அவனைப் பார்த்துத் தலைவி, ‘இது கார் கால மாலைப்பொழுது. இப்பொழுதும் தலைவன் வரவில்லை என்றால், காலைப் பொழுதை எவ்வாறு ஆற்றுவேன்?’ என்றாள். அவட்கு மறுமொழி கூற இயலாத பாணன், தன் யாழிசையால் கடவுளை வாழ்த்தி, வருத்தம் தோய்ந்த மனத்தோடு, தலைவன் உள்ள இடத்திற்குச் செல்லத் தொடங்கியவன், பிரிந்து சென்ற தலைவன், தன் எதிரே வினை முடித்துத் திரும்பிவரும் தேரைக் கண்டான். இந்நிகழ்ச்சியை அப்பாணன் தனக்குப் பாங்காயினார் கேட்பத் தலைவியிடம் சொல்லியது.

சொற்பொருள்

1. அரக்கத்து அன்ன - செவ்வரக்கினை ஒத்த.
2. காயா செம்மல் - காயாவின் வாடிய பூக்கள்; தாஅய் - பரவிக் கிடக்க.
3. ஈயல் மூதாய் - இந்திரகோபப்பூச்சிகள் (தம்பலப்பூச்சிகள்); வரிப்ப - வரிசை வரிசையாய் ஊர்ந்து செல்ல.
4. மிடைந்தன்ன - நெருங்கி இருந்தாற் போன்ற; கவைஇய - சூழ்ந்த.
5. ஆர் இடை - அரிய இடங்கள் (வழிகள்); மடப்பிணை - இளைய பெண் மான்.
6. திரிமருப்பு - முறுக்கப்பட்டுள்ள கொம்பு; இரலை - ஆண்மான்; உகள - துள்ளித் திரிய.

7. முல்லை வியன்புலம் - அகன்ற முல்லை இடம்; பரப்பி - பரவ விட்டு; கோவலர் - இடையர்.
8. குறும்பொறை மருங்கு - சிறிய குன்றுகளிடத்தே; நறும்பூ - நறிய பூக்கள்; அயர - (மாலையாய்க் கட்டி அணிந்து) மகிழ்ந்திருக்க (சிறிய மலைப்பக்கத்தில் காடுறை தெய்வமாகிய மாயோனை நறுமண மலர் களைப் பலியாய்த் தூவி வழிபடுவர் என்று சொல்வாருமுளர்).
9. பதவு - அறுகம்புல்; மதவு - வலிய; ஆன் - பசு.
10. வீங்கு - பருத்த; மாண் - மாட்சிமைப்பட்ட; செருத்தல் - மடி; பிலிற்ற - சொரிய.
11. கன்று பயிர் - கன்றை நினைத்து; குரல - குரல் கொடுத்து அழைக்கும்; மன்று - தொழுவம்.
12. உள்ளுதல் - நினைத்தல்.
13. யாங்கு ஆகுவம்? - யாம் என்ன நிலை உறுவேம்.
14. மனையோள் - இல்லத்திற்குரியவள் (தலைவி); செல்லேன் - இயலாதவனாய்.
15. செவ்வழி - செவ்வழிப்பண்; இசையினென் - இசைத்தேன்; பையென - மெல்ல.
16. பையுள் - துன்பம், வருத்தம்; மெய் நிறுத்து - உடலிலே நிலை நிறுத்தி.
18. விடுவிசை - தூண்டப்பெறும் வேகம்; விலங்குபரி எதிர்ப்படுமவற்றை விலகி; முடுக - விரைவு, தாவிச் செல்லல்.
19. கல்பொருது - கற்களில் மோதி; இரங்கும் - ஒலிக்கும்; பல்ஆர் - பல ஆரக்கால்கள் (கொண்ட); நேமி - (தேர்ச்) சக்கரம்.
20. முழக்கு இசை - இடி ஒலி.
21. முனை நல்லூரன் - பகைப்புலமாகிய நல்ல ஊரிடத்திருந்த தலைவன்; புனை - அணி செய்யப்பெற்ற; நெடுந்தேர் - நெடிய தேர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 471 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் தூதாக வந்த பாணன் கூறியவழித் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் குறித்த காலத்தில் திரும்பி வாராத கொடுமை நினைந்து தலைவி வாடியிருக்கிறாள்; தோழி தேற்றுகிறாள். அவ்வேளை தலைவனிடமிருந்து தூதாய் வந்த பாணன், 'தலைவன் குறித்துச் சென்ற வினை முடிய மேலும் சில காலம் ஆகுமென்றும், அதுவரையில் அவள் துயர் பொறுத்து ஆற்றியிருக்க வேண்டு'மென்றும் தலைவியிடம் சொல்லுகின்றான். அவனிடம் தோழி சொல்லியது.

எல்வளை நெகிழ, மேனி வாடப்
பல்இதழ் உண்கண் பனியலைக் கலங்கத்
துறந்தோன் மன்ற, மறங்கெழு குருசில்!
அதுமற்று உணர்ந்தனை போலாய்
இன்னும் வருதி; என்அவர் தகவே!

தெளிவுரை

"பாணனே! ஒளியோடிலங்கும் தலைவியின் வளைகள் நெகிழ்ந்து கழன்று விழுகின்றன; துயராலே மேனி வாட்டமுற்று மெலிவுற்றது. மை பூசப்பட்ட மலர் போன்ற கண்கள் துயரம் பொங்கக் கண்ணீர் சொரிந்து கலங்குகின்றன; இவ்வாறு இவளைத் தனிமையிலே வாடும்படி விட்டுப் பிரிந்து சென்றோன், வீரமிக்க உன் தலைவன். அதனை நீ உணர்ந்தவன்போலத் தோன்றவில்லை. மேலும், அவன் தூதுவனாகவும் வந்துள்ளாய். உன்னைத் தூது விடுத்த அவன் தகுதி எத்தகைமையதோ?" என்று தோழி பாணனிடம் வினவினாள்.

கருத்து

'பாணனைத் தூது விடுத்துள்ள தலைவன் தகைமையாளனே அல்லன்'.

விளக்கம்

தலைவன் கொடுமையாளன் என்பதை உணர்ந்திருந்தும் ஏதும் உணராதவன்போலப் பேசுகிறாயே என்று பாணனைப் பழிக்கிறாள், தோழி!

சொற்பொருள்

1. எல்வளை - ஒளி வீசும் வளையயல்.
2. பல் இதழ் - பலவாகிய இதழ்களைக் கொண்ட; பனி - பிரிவுத்துன்பம்; அலைக் கலங்க - அலைத்தலாலே கலக்கம் கொள்ள.
3. மறங்கெழு குருசில் - மறத்தன்மை பொருந்திய தலைவன்.
4. அது உணர்ந்தனை போலாய் - அதனை நீ உணர்ந்தவன்போலத் தோன்றவில்லை;
5. வருதி - வந்துள்ளாய்; தகவு - தகைமை, பெருமித நிலை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 472 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவம் வரவும், தலைமகன் வாரானாகியவழித் தூதாய் வந்த பாணற்குத் தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கியது, அவன் வரவில்லை; அவன் தூதாய்ப் பாணன் வந்தான்; அப்பாணனிடம் தோழி சொல்லியது.

கைவல் சீறியாழ்ப் பாண! நுமரே
செய்த பருவம் வந்துநின் றதுவே!
எம்மின் உணரார் ஆயினும், தம்வயின்
பொய்படு கிளவி நாணலும்
எய்யார் ஆகுதல் நோகோ யானே!

தெளிவுரை

"சிறிய யாழை மீட்டுவதில் வல்ல பாணனே! உன் தலைவர் வருவதாய்ச் சொன்ன பருவமும் தொடங்கி, நிலைபெற்று விட்டது. அதன் வரவை நாங்கள் உணர்வதைப்போல அவர் உணரார். ஆனாலும், அவர் கூறிய உறுதிமொழிகள் பொய்த்து விட்டன என்பதற்காகவாவது நாணம் கொள்கிறாரா? அவ்வாறு நாணம் கொள்ளாதாரைக் கண்டு நான் வருத்தப்படுகின்றேன்."

கருத்து

பாண! சொன்ன சொல் பொய்த்துவிட்டதை எண்ணித் தலைவன் நாணம் கொள்ளவில்லையா?

விளக்கம்

"தலைவன் தான் குறித்த பருவம் தொடங்கியதையே உணரும் தன்மையை இழந்தனனோ? அல்லது அதனை எம்போல, மன வேதனையை மிகுவிக்கும் கொடிய பருவம் இஃது எனக் கருதா தாயினனோ? நாம் சொல்லி வந்த பருவத்தை இதோ இயற்கை தோற்றுவித்துவிட்டது என்றேனும் நினைத்தானோ?" என்று வினவுகிறாள், தோழி.

சொற்பொருள்

1. கைவல் சீறியாழ்ப் பாண! - மீட்டுதலில் வல்ல சிறிய யாழையுடைய பாணனே!; நுமர் - என்றது தலைவனை (நும்மவர்).
2. செய்த பருவம் - குறித்துச் சென்ற பருவம் (கார் காலம்).
3. எம்மின் உணரார் - எம்போல உணர்வு கொள்ளார்; தம்வயின் - தன்னிடத்தில்.
4. பொய்படு கிளவி - பொய்யாகிய பேச்சு.
5. எய்யார் - அடையார், அறியார்; நோகோ யானே - நான் வருந்துகிறேன்.

தலைவி தோழிக்குக் கூறியது.

தலைவி கூற்று

அகநானூறு 115 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் கருதிப் பிரிந்து சென்ற தலைவனை நினைந்து தலைவி வருந்தி யிருந்தாள். தலைவன் வரும்வரை தலைவி ஆற்றியிருக்க வேண்டுமென்று கூறிய தோழியிடம் தலைவி சொல்லியது.

அழியா விழவின், அஞ்சுவரு மூதூர்ப்
பழிஇலர் ஆயினும், பலர்புறங் கூறும்
அம்பல் ஒழுக்கமும் ஆகிய வெஞ்சொல்
சேரிஅம் பெண்டிர் எள்ளினும் எள்ளுக;
நுண்பூண் எருமை குடநாட் டன்னஎன்
ஆய்நலம் தொலையினும் தொலைக! என்றும்
நோய் இலராக, நம்காதலர்— வாய்வாள்
எவ்வி வீழ்ந்த செருவில் பாணர்
கைதொழு மரபின்முன் பரித்துஇடூஉப் பழிச்சிய
வள்ளுயிர் வணர்மருப்பு அன்ன ஒள்இணர்
சுடர்ப்பூங் கொன்றை ஊழுறு விளைநெற்று
அறைமிசைத் தாஅம் அத்தம் நீளிடைப்
பிறைமருள் வான்கோட்டு அண்ணல் யானை,
சினம்மிகு முன்பின், வாம்மான், அஞ்சி
இனம்கொண்டு ஒளிக்கும் அஞ்சுவரு கவலை,
நன்னர் ஆய்கவின் தொலைய, சேய்நாட்டு,
நம்நீத்து உறையும் பொருட்பிணிக்
கூடா மையின், நீடி யோரே.

தெளிவுரை

தோழி! என்றும் நீங்காத விழாவினைக் கொண்ட நம் ஊர் பகைவர்க்கு அச்சம் தரும் முதுமையான ஊர். இங்குள்ளோர்

பழியில்லாதவர்; ஆயினும், புறங்கூறுபவராயும் வெவ்விய சொற்களைக் கொண்டவராயும் உள்ள சேரிப்பெண்டிர் பலர் உள்ளனர். அவர் நம்மை இகழினும் இகழுக.

நுண்ணிய தொழிற்பாடமைந்த அணிகலனைக் கொண்ட 'எருமை' என்பானின் குடநாட்டினை ஒத்த என் நல் அழகு அழிவதாயினும் அழிக.

கூரிய வாளையுடைய எவ்வி என்பான் வீழ்ந்த போர்க் களத்தில் அவனால் புரக்கப்பட்ட பாணர்கள் அவனைத் தொழுது வாழ்த்தித் தம் கையில் வைத்திருந்த யாழை முரித்துப் போட்டதுபோலத் தலைவன் சென்ற காட்டு வழியில் ஒளி பொருந்திய பூக்களைக் கொண்ட கொன்றையின் விளைந்து முற்றிய நெற்றுகள் கற்பாறையின்மேல் பரவிக் கிடக்கும்.

பிறை போன்ற வெண்மையான தந்தத்தைக் கொண்ட பெருமை மிக்க யானைகளையும், சினம் மிகுந்து வலிமையுடன் தாவும் குதிரைகளையுமுடைய அஞ்சி என்பவன், அச்சம் தோன்றும் அக்காட்டு வழியில், பகைவரின் பசுக்கூட்டங்களைக் கைப்பற்றி மறைத்து வைப்பான்.

தொலைவில் இவ்வாறான காட்டு வழியில் பொருளுக்காகப் பிரிந்து சென்றுள்ள தலைவர், பொருளீட்டும் தம் செயல் முற்றுப் பெறாமையால், வாராது காலம் தாழ்த்தியுள்ளார் போலும்! அவர் என்றும் நோயின்றி இனிதே இருக்கட்டும்!

கருத்து

பொருளீட்டும் செயல் முற்றுப்பெறாமையால் தலைவர் இன்னும் வந்திலர்; ஆயினும், அவர் துன்பமின்றி இனிதிருக்கட்டும்.

விளக்கம்

போரிலே சிறந்த எவ்வி என்னும் வள்ளலின் முன்னர்ப் பாணர் ஒடித்துப் போட்ட யாழ் மருப்பினைப் போலக் கொன்றைப்பழ நெற்றுகள் பரவிக் கிடக்கும் காட்டுவழியே தலைவர் சென்றுள் ளார். அச்சம் தரும் அக்காட்டுவழியில் அஞ்சி என்பான் பகைவரின் பசுக்கூட்டத்தைக் கவர்ந்து கொண்டு வந்து ஒளித்து

வைப்பான். தொலைவிலுள்ள இத்தகு நாட்டில் நம்மைப் பிரிந் திருக்கும் தலைவர் பொருளீட்டும் செயல் முற்றுப்பெறாமை யால் இன்னும் திரும்பாதுள்ளார்; எனினும், அவர் துன்பமின்றி இன்புற்று வாழட்டும் என்று தலைவனை வாழ்த்தினாற்போல் தலைவி தன் ஆற்றாமையைக் கூறினாள்.

சொற்பொருள்

1. அழியா - நீங்காத; விழவு - விழா; அஞ்சுவரு - (பகைவர்) அஞ்சத்தக்க.
3. அம்பல் ஒழுக்கம் - பழிச்சொல் கூறும் ஒழுக்கம்; ஆகியர் - கொண்டவர்; வெஞ்சொல் - கடுஞ்சொல், வெவ்விய சொல்.
4. எள்ளுதல் - பழித்துப் பேசுதல்.
5. எருமை - குறுநில மன்னருள் ஒருவன்.
6. ஆய்நலம் - நல் அழகு; தொலையினும் - அழிவதாயினும்.
7. நோய் - துன்பம்; வாய்வாள் - கூரிய வாள்.
8. எவ்வி - வள்ளல்களுள் ஒருவன்; செரு - போர்.
9. பரிதல் - முறித்தல்; பழிச்சிய - வாழ்த்திய.
10. வள் உயிர் - வள்ளிய ஓசையைக் கொண்ட (வள் - வளம், பெருமை); வணர் - வளைந்த; மருப்பு - யாழ் உறுப்பு; ஒள் இணர் - ஒளி திகழும் பூங்கொத்து.
11. சுடர் - ஒளி; கொன்றை - கொன்றை (பழம்); ஊழுறு - முறையாய்; விளை - முற்றிய; நெற்று - விதை.
12. அறை - பாறை; மிசை - மேலே; தாஅம் - பரவிக் கிடக்கும்; அத்தம் - சுரம்; நீள் இடை - நீண்ட வழி.
13. மருள் - போன்ற; வான்கோடு - வெண்மையான கொம்பு; அண்ணல் - பெருமை.
14. முன்பு - வலிமை; வாம் - தாவும்.
15. அஞ்சுவரு - அச்சம் தரும்; கவலை - கவர்த்த வழி.
16. நன்னர் - நன்றாகிய; கவின் - அழகு; தொலைய - நீங்க; சேய்நாடு - நெடுந்தொலைவிலுள்ள நாடு.
17. நீத்து - நீங்கி; உறையும் - தங்கியிருக்கும்; பொருட்பிணி - பொருளீட்டும் செயல்.
18. நீடியோர் - காலம் தாழ்த்திருப்போர்.

தலைவி கூற்று

அகநானூறு 205 **நக்கீரர்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் வற்புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்த தலைவன் திரும்பி வரக் காலம் தாழ்த்ததால் தலைவி மிகவும் வருந்தினாள்; அது கண்ட தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்திக் கூறினாள். அப்போது தலைவி கூறியது.

'உயிர்கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பின்
செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர் போலத்
தையல்! நின்வயின் பிரியலம் யாம்'எனப்
பொய்வல் உள்ளமொடு புரிவுஉணக் கூறி,
துணிவுஇல் கொள்கையர் ஆகி, இனியே
நோய்மலி வருத்தமொடு நுதல்பசப் பூர,
நாம்அழத் துறந்தனர் ஆயினும், தாமே
வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்இசை
வளம்கெழு கோசர் விளங்குபடை நூறி,
நிலம்கொள வெஃகிய பொலம்பூண் கிள்ளி,
பூவிரி நெடுங்கழி நாப்பண், பெரும்பெயர்க்
காவிரிப் படப்பைப் பட்டினத் தன்ன
செழுநகர் நல்விருந்து அயர்மார், ஏமுற
விழுநிதி எளிதினின் எய்துக தில்ல—
மழைகால் அற்சிரத்து மால்இருள் நீங்கி,
நீடுஅமை நிவந்த நிழல்படு சிலம்பில்,
கடாஅ யானைக் கவுள்மருங்கு உறழ,
ஆம்ஊர்பு இழிதரு காமர் சென்னி,
புலிஉரி வரிஅதள் கடுப்ப, கலிசிறந்து,
நாட்பூ வேங்கை நறுமலர் உதிர,
மேக்குஎழு பெருஞ்சினை ஏறி, கணக்கலை
கூப்பிடூஉ உகளும் குன்றகச் சிறுநெறிக்

கல்பிறங்கு ஆர்இடை விலங்கிய
சொல்பெயர் தேஎத்த சுரன்இறந் தோரே.

தெளிவுரை

தோழி! பிறவிதோறும் தொடர்ந்து வரும் நட்பினைக் கொண்டவர்போல் குற்றமற்ற நெஞ்சத்தால் ஒன்றுகலந்தாற் போல, 'பெண்ணே! உன்னைவிட்டுப் பிரியேன்' என்று பொய் சொல்வதில் வல்லமை வாய்ந்த உள்ளத்தோடு நான் விரும்பும் வகையில் தலைவர் கூறினார். ஆனால், தம் சொல்லைக் காக்கும் உறுதியில்லாத நெஞ்சத்தோடு, இப்போது துன்பம் நாளுக்கு நாள் மிகுவதற்குக் காரணமான பிரிவாற்றாமை என்னும் துன்பத்தால் என் நெற்றியில் பசலை படர்ந்திட நான் அழுமாறு பிரிந்து சென்றுவிட்டார்.

அவர், மழைபோலப் பனி பெய்யும் முன்பனிக்காலம் முடியும் பொழுதில் சென்றுள்ளார்; வழியில் இருள் நீங்கிய காலை நேரத்தில், நீண்ட மூங்கில்கள் நிழல் பொருந்திய பக்க மலை களில் உயர்ந்து நிற்கும். மத யானையின் கன்னத்தில் ஒழுகும் மதநீர்போல, மலை உச்சியிலிருந்து சிறிதளவு நீரோடு அருவி வழிந்தோடும்; வரிகள் உள்ள புலியின் தோலைப் போன்று தோன்றுமாறு வேங்கையின் நறிய பூக்கள் உதிர்ந்திருக்கும். ஆண் குரங்குகளின் கூட்டம் மேல் நோக்கி எழுந்துள்ள வேங்கையின் கிளையில் ஏறித் தம் இனத்தைக் குரல் எழுப்பி அழைத்துத் தாவும். குன்றிடையே செல்லும் சிறிய வழியில், கற்கள் விளங்கும் அரிய இடங்கள் குறுக்கிடும். மொழி வேறுபட்ட நாடுகளில் உள்ள பாலை நிலத்தைக் கடந்து அவர் சென்றுள்ளார். அவர் எண்ணம் நிறைவேறட்டும்.

உண்மை பேசுதலால் நெடுந்தொலைவு புகழ் விளங்கும், செல்வம் மிக்க கோசர்களுடைய நாட்டைக் கைப்பற்ற விரும்பிய சோழ மன்னன் அக்கோசர்களுடைய படையை அழித்து வெற்றி பெற்றான். அச்சோழ மன்னனுக்குரிய காவிரிப்பூம்பட்டினம், காவிரி கடலொடு கலக்குமிடத்தில் உப்பங்கழிகள் சூழ அதன் நடுவே தோட்டங்கள் மிகுதியாய் இருக்குமாறு அமைந்துள்ளது. அப்பட்டினத்தையொத்த வளம்மிக்க நம் இல்லத்தில் விருந் தினரைப் பேணி இன்பம் எய்த, மிகுந்த பொருளைத் தலைவர் எளிதில் அடையட்டும்.

கருத்து

நான் அழுமாறு பிரிந்து சென்றவர், விருந்து பேணுதற்கான சிறந்த பொருளொடு திரும்பட்டும்; அதுவரை ஆற்றியிருப்பேன்.

விளக்கம்

"தோழி! 'பெண்ணே! உன்னை என்றும் பிரியேன்' என்று சொன்ன நம் தலைவர், தம் சொல்லைக் காப்பாற்றும் உறுதி யற்றவராய் நாம் அழும்படி நம்மைப் பிரிந்து சென்றார். ஆயினும், வேற்று மொழி கொண்ட நாடுகளைக் கடந்து சென்ற அவர், காவிரிப்பூம்பட்டினத்தை ஒத்த வளமான நம் மனையில், விருந்தினரைப் பேணுதற்குச் சிறந்த பொருளை எளிதில் பெறுவாராக!"

சொற்பொருள்

1. ஒன்றிய - பொருந்திய; தொன்றுபடு - பிறவிதோறும் தொடர்ந்து வரும்.
2. செயிர் - குற்றம்; செறிந்தோர் - கலந்தோர்.
3. தையல் - பெண்ணே!
4. புரிவுஉண - விரும்பும்படி.
5. துணிவு - சொல்லைக் காப்பாற்றும் உறுதி.
6. நோய்மலி - துன்பம் மிக்க; பசப்பு - பசலை; ஊர - படர.
8. வாய்மொழி - உண்மை பேசுதல்; நிலைஇய - நிலை பெற்ற; இசை - புகழ்.
9. கோசர் - ஒரு குடியினர்; நூறி - அழித்து.
10. வெஃகிய - விரும்பிய; கிள்ளி - சோழ மன்னன்.
11. நாப்பண் - நடுவில்.
12. படப்பை - தோட்டம்.
13. செழுநகர் - வளமான வீடு; அயர்தல் - பேணுதல்; ஏமுற - இன்பம் உண்டாக.
14. விழுநிதி - பெருஞ்செல்வம்; எய்துக - பெறுக.
15. அற்சிரம் - முன்பனி; மால்இருள் - மயக்கம் தரும் இருள்.
16. நீடுஅமை - நீண்ட மூங்கில்; நிவந்த - உயர்ந்த; சிலம்பு - மலை.
17. கடாஅம் - மதம்; கவுள் - கன்னம்; மருங்கு - பக்கம்; உறழ - ஒப்ப.

18. ஆம் ஊர்பு - நீர் ஊர்ந்து; ஆம் - நீர்; இழிதரும் - வழியும்; காமர் - விருப்பம்; சென்னி - உச்சி.
19. வரி - வரிகளைக் கொண்ட; அதள் - தோல்; கலிசிறந்து - செருக்கு மிக்கு.
20. நாட்பூ - மணநாளைக் காட்டும்பூ (வேங்கைப்பூ).
21. மேக்குஎழு - மேல் நோக்கி எழுந்த; சினை - மரக்கிளை; கணக்கலை - கூட்டமான ஆண்குரங்கு.
22. உகளும் - தாவும்; நெறி - வழி.
23. பிறங்கு - விளங்குகின்ற; ஆர்இடை - அரிய இடங்கள்; விலங்கிய - குறுக்கிட்ட.
24. சொல்பெயர் - மொழி வேறுபட்ட; தேஎத்து - நாட்டில்; சுரன் - பாலை வழி; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தலைவி கூற்று

அகநானூறு 347 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து இருக்க ஆற்றாத தலைவி, ஊராரின் பழிச்சொற்களுக்கு ஆளாகிய நிலையில் தோழியை நோக்கிக் கூறியது.

தோளும் தொல்கவின் தொலைய, நாளும்
நலம்கவர் பசலை நல்கின்று நலிய,
சால்பெருந் தானைச் சேர லாதன்
மால்கடல் ஓட்டி, கடம்புஅறுத்து, இயற்றிய
பண்அமை முரசின் கண்அதிர்ந் தன்ன,
கவ்வை தூற்றும் வெவ்வாய்ச் சேரி
அம்பல் மூதூர் அலர்நமக்கு ஒழிய,
சென்றனர்ஆயினும், செய்வினை அவர்க்கே

வாய்க்கதில்— வாழி, தோழி!— வாயாது,
மழைகரந்து ஒளித்த கழைதிரங்கு அடுக்கத்து,
ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தென, குவவுஅடி
வெண்கோட்டு யானை முழக்குஇசை வெரீஇ,
கன்றுஒழித்து ஓடிய புன்தலை மடப்பிடி
கைதலை வைத்த மையல் விதுப்பொடு,
கெடுமகப் பெண்டிரின் தேரும்
நெடுமர மருங்கின் மலைஇறந் தோரே!

தெளிவுரை

தோழி! நீ வாழ்க! மழை பெய்யாது மறைந்து ஒளித்தமையால் பக்க மலையில் உள்ள மூங்கில்கள் வாடியிருந்தன. அங்கு ஒள்ளிய நிறம் கொண்ட வலிய புலி பாய்ந்தமையால், திரண்ட அடியினையும் வெள்ளிய கொம்பினையும் கொண்ட ஆண்யானை முழக்கம் செய்தது. அதைக் கேட்டு அஞ்சி ஓடிய புன்மையான தலையினைக் கொண்ட பெண்யானை தன் தலைமீது கை வைத்தவாறு மயக்கமுற்றது. பிறகு, குழந்தையைக் காணாது வருந்திய மகளிர் போல, அப்பெண்யானை வருத்தமுற்றுத் தன் கன்றினைத் தேடத் தொடங்கியது. ஓங்கி உயர்ந்த மரங்கள் வளரும் பக்க மலைகளைக் கொண்டுள்ள மலைவழியே நம் தலைவர் சென்றுள்ளார்.

நம் தோள்களின் பழைய அழகு கெட, நாளும் பசலை அருளின்றி நம்மை வருத்துகிறது.

நெடுஞ்சேரலாதன் என்பான் மிகுந்த பெரிய படையினைக் கொண்டவன். அவன் கடலில் தன் பகைவர்களை வென்று ஓட்டி, அவர்களது காவல்மரமாகிய கடம்ப மரத்தினை வெட்டினான். அம்மரத்தை அறுத்துச் செய்யப்பட்ட அழகிய முரசானது முழங்கினாற்போல, நம் மூதூரில் உள்ள கொடிய வாய் கொண்ட பெண்கள் அம்பலும் அலருமாகிய பழிச் சொற்களைப் பேசுகின்றனர். அப்பேச்சினை நாம் கேட்குமாறு நம்மை இங்கே விட்டுவிட்டு அவர் நம்மைப் பிரிந்து சென் றுள்ளார்.

ஆயினும், அவர் மேற்கொண்டுள்ள செயல் கைகூடட்டும்.

கருத்து

அவர் பிரிவால் நாம் வருந்துகின்றோமாயினும் அவர் மேற்கொண்ட செயல் நிறைவேறட்டும்; அவர் வரும்வரை ஆற்றியிரு.

விளக்கம்

தோழி! மரங்கள் நிறைந்த மலைவழியே நம் தலைவர் சென்றுள்ளார். நாம் பசலை கொண்டு அழகு கெட, ஊரார் அலர் பேச, அவர் நம்மை இங்குத் தனியே விட்டுச் சென்றுள்ளா ராயினும், அவர் மேற்கொண்டுள்ள பணி சிறப்புறக் கை கூடட்டும்.

குறிப்பு

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடலில் தன் பகைவரை வென்று ஓட்டி, அவரது காவல் மரமாகிய கடம்பினை வெட்டி அதுகொண்டு முரசி யற்றினான் என்பது பதிற்றுப்பத்தின் இரண்டாம் பத்தால் அறியப்படுகிறது.

சொற்பொருள்

1. தொல்கவின் - பழமையான அழகு; தொலைய - அழிய, நீங்க.
2. நலம் - அழகு; நல்கு இன்று - அருள் இன்றி; நலிய - வருத்த.
3. சால்பெரும் - மிகவும் பெரிய; தானை - படை, சேனை.
4. மால் - பெரிய; கடம்பு - கடம்ப மரம்.
5. அதிர்ந்தன்ன - ஒலித்தாற்போல.
6. கவ்வை - பழிச்சொல்; வெவ்வாய் - வெம்மையான சொற்களைப் பேசும் வாய்; சேரி - சிற்றூர்.
7. அம்பல், அலர் - பழிச்சொற்கள்; நமக்கு ஒழிய - நாம் கேட்குமாறு விட்டுவிட்டு.
8. செய்வினை - நிறைவேற்றுவதற்காக மேற்கொண்டுள்ள செயல்.
9. வாய்க்க - கை கூடட்டும்; வாயாது - பெய்யாது.
10. கரத்தல் - மறைதல்; கழை - மூங்கில்; திரங்கு - செறிந்த, நெருங்கிய; அடுக்கம் - பக்க மலை.
11. ஒண்கேழ் - செம்பொன் நிறம்; வயம் - வலிமை; குவவுஅடி - திரண்ட அடி.
12. கோடு - கொம்பு, தந்தம்; இசை - ஒலி; வெரீஇ - அஞ்சி.
13. ஒழித்து - நீங்கி, விட்டுவிட்டு; மடம் - இளமை.

14. கைதலை வைத்த - கையைத் தலைமீது வைத்துக்கொண்ட; மையல்- மயக்கம்; விதுப்பு - விரைவு.
15. கெடுமகப் பெண்டிர் - குழந்தையைத் தொலைத்த பெண்கள்; தேரும் - தேடும்.
16. நெடுமரம் - உயரமான மரங்கள்; மருங்கு - பக்கம்; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தலைவி கூற்று

அகநானூறு 155 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்னைப் பிரிந்து பொருள் தேடச் சென்ற தலைவனை எண்ணி வருந்தியிருந்த தலைவிக்குத் தோழி தேறுதல் கூறினாள்; ஆயினும், தலைவி அமைதி அடையாது தன் ஆற்றாமையைக் கூறியது.

அறன்கடைப் படாஅ வாழ்க்கையும், என்றும்
பிறன்கடைச் செலாஅச் செல்வமும், இரண்டும்
பொருளின் ஆகும், புனையிழை! என்று,நம்
இருள்ஏர் ஐம்பால் நீவி யோரே—
நோய்நாம் உழக்குவம் ஆயினும், தாம்தம்
செய்வினை முடிக்க; தோழி! பல்வயின்
பயநிரை சேர்ந்த பாணாட்டு ஆங்கண்
நெடுவிளிக் கோவலர் கூவல் தோண்டிய
கொடுவாய்ப் பத்தல் வார்ந்துஉகு சிறுகுழி,
நீர்காய் வருத்தமொடு சேர்விடம் பெறாது
பெருங்களிறு மிதித்த அடியகத்து இரும்புலி
ஒதுங்குவன கழிந்த செதும்பல் ஈர்வழி,
செயிர்தீர் நாவின் வயிரியர் பின்றை
மண்ஆர் முழவின் கண்ணகத்து அசைத்த

விரல்ஊன்று வடுவில் தோன்றும்
மரல்வாடு மருங்கின் மலைஇறந் தோரே.

தெளிவுரை

“தோழி! தலைவர் ஒருநாள் என் கரிய அழகிய கூந்தலைத் தடவியவாறே, என்னிடம், ‘அழகிய அணியுடையாளே! எக்காலத்தும் அறநெறியில் பிறழாத இல்லற வாழ்க்கையும், பிறன் ஒருவன் வீட்டு வாயிலில் சென்று நின்று இரந்து எதையும் கேட்காத மேம்பாடும் ஆகிய இவ்விரண்டும் செல்வத்தாலேயே ஆகும்’ என்று சொன்னார்.

“அச்செல்வத்தை ஈட்ட அவர் பாலைநில வழியில் சென்றுள்ளார். அவர் செல்லுகின்ற வழியில் பாணாடு உள்ளது. அவ்விடத்தில் பசுக்கூட்டம் மிகுதி. அவற்றை மேய்க்கும் கோவலர் சீழ்க்கை ஒலி எழுப்புவதில் திறன் கொண்டவர். அவர்கள் பருகும் நீருக்காகக் கிணற்றில் வளைந்த வாயினைக் கொண்ட பத்தலைக் கிணற்றில் இட்டு (நீர் முகக்கும் பாத்திரத்தை விட்டு) நீரை முகந்து குழியில் நிறைப்பர். கோடைக் காலத்தில் சிறிதளவே நீர் ஊறியதால், அக்கோவலர் பருகிய பின்பு நீரின்றிக் குழிகள் காய்ந்திருக்கும். அதனால், நீர்வேட்கையுடன் அங்கு வரும் யானை, நீர் பெறாமல் வருந்தித் திரும்பும். பெரிய யானை மிதித்துச் சென்ற அடிச்சுவட்டில் பெரிய புலி அடி வைத்து நடந்து சென்றதால் அந்த இடம் சேறாகும். குற்றமற்ற நாவினைக் கொண்ட கூத்தர் முழக்கும் முழவில் விரலால் அடிப்பதால் உண்டாகும் வடுக்கள் புலியின் அடிச்சுவடுபோலத் தோன்றும். அவ்வழியில் நீர்ப்பசையுள்ள மரல் செடிகள் காய்ந்து கிடக்கும். அத்தகைய மலைவழியில் சென்றுள்ள நம் தலைவர், நாம் அவரது பிரிவால் துன்புற்றாலும் தம் பணியினை முடித்துவிட்டு வரட்டும்.”

கருத்து

தோழி! அவர் பிரிவால் நாம் வருந்துவோமாயினும் பொருளீட்டும் செயலை முடித்துவிட்டு அவர் வரட்டும்; நாம் ஆற்றியிருப்போம்.

விளக்கம்

"தோழி! மரல் வாடியிருக்கும் பக்கங்களைக் கொண்ட மலைகளைக் கடந்து சென்றுள்ள தலைவர், 'சிறந்த அணிகலன்களை அணிந்தவளே! எக்காலத்திலும் ஒருவன் அறநெறி பிறழாது வாழ்வதற்கும், பிறனொருவனிடம் எதையும் இரக்காமல் மானத்துடன் வாழ்வதற்கும் செல்வம் வேண்டும்' என்று கூறி, தாம் பொருளீட்டச் செல்வதற்கு என்னை உடம்படுத்தும் பொருட்டு இருண்ட என் அழகிய கூந்தலை நீவினார். அவர் பிரிவால் நாம் வருத்தமுற்றாலும் தாம் மேற்கொண்ட பணியை அவர் முடித்து வரட்டும்" என்று தோழியிடம் தலைவி கூறினாள்.

சொற்பொருள்

1. அறன்கடைப் படா - அறநெறி பிறழாத.
2. பிறன்கடை - பிறர் மனை வாயில்; செலாஅ - சென்று நில்லாத; செல்வமும் - சிறப்பும், மேம்பாடும்.
3. புனை இழை - அணிகலன்களை அணிந்தவளே!
4. இருள்ஏர் - கரிய அழகிய; ஐம்பால் - ஐவகையாகப் பகுத்துப் பின்னப்பட்ட கூந்தல்.
5. நோய் - துன்பம், வருத்தம்; உழக்குவம் - கலங்குவோம்.
6. செய்வினை - பொருளீட்டும் செயல்; பல்வயின் - பல இடத்தும்.
7. பயநிரை - பால் தரும் பசுக்கள்; பாணாடு - ஒரு நாடு.
8. நெடுவிளி - சீழ்க்கை; கோவலர் - இடையர்; கூவல் - கிணறு.
9. கொடுவாய் - வளைந்த வாய்; பத்தல் - நீர் இறைக்கப் பயன்படும் பாத்திரம்; (நீர்) வார்ந்துஉகு - (நீர்) வடிந்து செல்லும்.
10. நீர்காய் - நீர் காய்ந்ததால்; சேர்விடம் - சேரத்தக்க வேறிடம்.
11. அடியகம் - காலடி; இரும்புலி - பெரிய புலி.
12. ஒதுங்குவன கழிந்த - அடி வைத்து நடந்து சென்ற; செதும்பல் - சேற்று நிலம்; ஈர் - ஈரம்.
13. செயிர்தீர் - குற்றம் நீங்கிய; நாவின் - நாக்கினைக் கொண்ட; வயிரியர் - கூத்தர்; பின்றை அசைத்த - தோளின் பின்னே கட்டிய.
14. மண்ஆர் முழவு - மார்ச்சனை அமைந்த மத்தளம்; கண்அகம் - அடிக்கும் இடம்.

15. வடு - அடையாளம்.
16. மரல் - ஒரு வகைக் கற்றாழை; மருங்கு - பக்கம்.

தலைவி கூற்று

அகநானூறு 375 **இடையன் சேந்தங்கொற்றனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகள் தோழியிடம் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவன் குறித்த காலத்தில் திரும்பாமையால் தலைவி வருந்தினாள். அதனைக் கண்ட தோழி தேற்றியுரைக்க, தலைவி தன் ஆற்றாமையைத் தோழியை நோக்கிக் கூறியது.

'சென்று நீடுநர் அல்லர்; அவர்வயின்,
இனைதல் ஆனாய் என்றிசின்– இகுளை!–
அம்புதொடை அமைதி காண்மார், வம்பலர்,
கலன்இலர் ஆயினும், கொன்று,புள் ஊட்டும்,
கல்லா இளையர் கலித்த கவலை,
கணநரி இனனொடு குழீஇ, நிணன்அருந்தும்
நெய்த்தோர் ஆடிய மல்லல் மொசிவிரல்,
அத்த எருவைச் சேவல் சேர்ந்த
அரைசேர் யாத்த வெண்திரள், வினைவிறல்,
எழூஉத் திணிதோள், சோழர் பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ் சென்னி
குடிக்கடன் ஆகலின், குறைவினை முடிமார்,
செம்புறழ் புரிசைப் பாழி நூறி,
வம்ப வடுகர் பைந்தலை சவட்டி,
கொன்ற யானைக் கோட்டின் தோன்றும்,
அஞ்சுவரு மரபின் வெஞ்சுரம் இறந்தோர்
நோய்இலர் பெயர்தல் அறியின்,
ஆழல மன்னோ, தோழி!என் கண்ணே.

தெளிவுரை

“தோழி! ‘பொருள் ஈட்டச் சென்றுள்ள நம் தலைவர் காலம் தாழ்த்தாது திரும்பி வருவார்; அவருக்காக நீ வருந்துவதை விடு’ என்கிறாய். அம்பு எய்தலில் தம் திறமையைக் காணும்பொருட்டு, வழியில் புதியவர் அணிகலன் இன்றி வந்தாலும், அவர்களைக் கொன்று, பறவைகளுக்கு உண்ணக் கொடுக்கும் வழிப்பறியைத் தவிர, பிற தொழிலை அறியாத இளைஞர் செருக்குடன் திரியும் காட்டுவழி; அவ்வழியில் நரிகள் கூட்டமாய் இனத்துடன் தசைக் கொழுப்பினை உண்டுகொண்டிருக்கும். குருதி படிந்து வடியும் நெருங்கிய கால் விரல்களைக் கொண்ட ஆண்பருந்து யா மரத்தில் தங்கியிருக்கும். அடி திரண்ட அந்த யா மரத்தின் வெண்மையான திரண்ட கிளை வெண்ணிறத் தந்தம் போல் தோன்றும்.

இளம்பெருஞ்சென்னி என்னும் சோழ அரசன், போரில் வெற்றி மேம்பட்ட திரண்ட தோளினைக் கொண்டவன்; உலகில் என்றும் நிலைத்து நிற்கும் புகழை நிலை நிறுத்தியவன்; தன் குடிமக்களுக்குச் செய்ய வேண்டிய கடமை காரணமாகப் பொருளுக்காகப் போர்ச் செயல் புரிபவன்; செம்பினை ஒத்த மதிலைக் கொண்ட ‘பாழி’ என்னும் அரணை அழித்து, புதிதாய் வந்த வடுகரது பசிய தலையைச் சிதைத்துக் கொன்ற அவனுடைய யானைகளின் கொம்புகள், இரத்தம் தோய்ந்த கால்விரல் களுடன் பருந்து தங்கியிருக்கும், யா மரத்தின் கொம்புகள் போலத் தோன்றும்.

அச்சம் தரும் இத்தகைய கொடிய பாலைநில வழியைக் கடந்து சென்ற நம் தலைவர் தீங்கு இல்லாதவராய், மீண்டு வருதலை அறிவேனாயின் தோழியே! என் கண்களும் அழ மாட்டா. (அஃது அறிந்திலேனே.)

கருத்து

வழியில் தீங்கு ஏதும் நேராது தலைவர் திரும்பி வருவார் என்பதை அறிவேனாயின் ஆற்றியிருப்பேன்.

விளக்கம்

"தோழியே! 'நம் தலைவர் காலம் கடத்த மாட்டார்; நீ வருந்தாதிரு' என்று சொல்கிறாய். கொடிய காட்டுவழியே சென்ற அவர் தீங்கில்லாதவராய்த் திரும்பி வருதலை அறிவேனாயின், தோழி! என் கண்கள் அழமாட்டா" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. நீடுநர் - காலம் நீட்டிப்பவர்.
2. இனைதல் ஆனாய் - வருந்தாமல் இரு; என்றிசின் - என்று சொல்கிறாய்; இகுளை - தோழி.
3. அம்புதொடை - அம்பு தொடுத்தலில்; அமைதி காண்மார் - சிறப்பினைக் காண்பவர் (ஆறலை கள்வர்); வம்பலர் - புதியவர் (வழியில் புதியவராய் வருபவர்).
4. கலன் - அணிகலன்; புள் ஊட்டும் - பறவைகளுக்கு ஊட்டும்.
5. கலித்தல் - செருக்குதல்; கவலை - கவர்த்த வழி.
6. கணநரி - கூட்டமாகிய நரிகள்; குழீஇ - கூடி; நிணன் - கொழுப்பு.
7. நெய்த்தோர் - குருதி; ஆடிய - படிந்த; மல்லல் - வளப்பம்; மொசி விரல் - நெருங்கிய விரல்.
8. அத்தம் - வழி; எருவை - பருந்து; சேர்ந்த - தங்கிய.
9. அரைசேர் - அடி திரண்ட; யாத்த - யா மரத்தின்; வெண்திரள் - வெள்ளிய திரண்ட கொம்பு; வினை - போர்; விறல் - வெற்றி.
10. எழூஉ - மேம்பட்ட; திணிதோள் - வலிய தோள் (திண்மை - வலிமை).
11. விளங்குபுகழ் நிறுத்த - என்றும் விளங்கும் புகழினை நிலை நிறுத்திய; இளம்பெருஞ் சென்னி - சோழ மன்னருள் ஒருவன்.
12. குடிக்கடன் - குடி மக்களுக்கு ஆற்றும் கடமை.
13. செம்பு உறழ் - செம்பினை ஒத்த; புரிசை - அரண், கோட்டை; பாழி - பாழி என்னும் கோட்டை; நூறி - அழித்து.
14. வம்ப வடுகர் - புதியராய வடுக இனத்தினர்; சவட்டி - சிதைத்து, அழித்து.
15. கோடு - கொம்பு.
16. அஞ்சுவரு - அச்சம் தரும்; வெஞ்சுரம் - கொடிய பாலைநில வழி.

17. நோய்இலர் - தீங்கு இல்லாதவராய்; பெயர்தல் - திரும்புதல்.
18. ஆழல - அழ மாட்டா.

தலைவி கூற்று

குறுந்தொகை 288 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகனது வரவுணர்ந்து, 'நம் பெருமான் நமக்கு அன்பிலன்' என்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

'நம் தலைவன் குறித்த காலத்து வருதலை மறந்து நம்மை வாடச்செய்த மையால், நம்மீது அன்பற்றவன்' எனத் தோழி பழித்து உரைக்கின்றாள். அப்போது, தலைவி தோழியிடம் கூறியது.

கறிவளர் அடுக்கத்து ஆங்கண், முறிஅருந்து
குரங்குஒருங்கு இருக்கும் பெருங்கல் நாடன்
இனியன்; ஆகலின், இனத்தின் இயன்ற
இன்னா மையினும், இனிதோ –
இனிதுஎனப் படுஉம் புத்தேள் நாடே?

தெளிவுரை

தோழி! மிளகுக்கொடி வளர்கின்ற மலைப்பக்கத்தில் தளிரை அருந்துகின்ற குரங்குகள் பலவும் ஒருங்கே திரண்டிருக்கின்ற பெரிய மலைநாட்டைச் சார்ந்த தலைவன், நமக்கு என்றுமே இனியன். ஆகலின், இனிமை தருவதெனச் சான்றோரால் கூறப்படும் புத்தேள் நாடு, உறவுடையாரால் ஏற்படும் துன்பத்தைத் தாங்குவதில் உள்ள இன்பத்தைக்காட்டினும், இனிமை உடையதாகுமோ?

கருத்து

அன்புள்ள தலைவன் எது செய்தாலும் நமக்கு இனிமையே தரும். ஆதலின், அவன் வரும்வரை ஆற்றியிருப்பேன்.

விளக்கம்

நமக்கு நெருக்கமானவர்களால் ஏற்படும் துன்பத்தைத் தாங்குவதில் உள்ள இன்பம், தேவருலக இன்பத்தினினும் மேலானதாகும். தலைவன் இனியவனாதலின், அவன் பிரிவால் ஏற்படும் துன்பத்தை அவன் வரவு இன்பமாக்கிவிடும் என்பது கருத்து.

தேவருலக இன்பம், உறவினரால் ஏற்படும் துன்பத்தைத் தாங்குவதில் உள்ள இன்பத்திற்கு ஈடாகாது.

சொற்பொருள்

1. கறி - மிளகுக்கொடி; அடுக்கம் - மலைச்சாரல்; முறி - தளிர்; அருந்தும் - உண்ணும்.
2. ஒருங்கு இருக்கும் - ஒன்றாய்க் கூடியிருக்கும்; பெருங்கல் - மலை.
3. இனத்தின் இயன்ற - உறவினரால் உண்டான.
4. இன்னாமை - துன்பம்.
5. எனப்படூஉம் - என்று சொல்லப்படும்; புத்தேள் நாடு - தேவருலகு.

தலைவி கூற்று

நற்றிணை 14 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

இயற்பழித்த தோழிக்குத் தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவினைப் பொறாத தலைவி துயருற்றுப் புலம்புகிறாள். அதனைக் கண்ட தோழி, அவளைத் தேற்றுவாளாய்த் தலைவனை ‘அன்பிலன்’ எனப் பழிக்கிறாள். அதனைப் பொறாத தலைவி, தலைவனின் நல்ல இயல்புகளைக் கூறியது.

தொல்கவின் தொலைய, தோள்நலம் சாஅய,
நல்கார் நீத்தனர் ஆயினும், நல்குவர்;
நட்டனர் வாழி! தோழி! குட்டுவன்,
அகப்பா அழிய நூறிச் செம்பியன்
பகல்தீ வேட்ட ஞாட்பினும் மிகப்பெரிது

அலர்எழச் சென்றனர் ஆயினும், மலர்கவிழ்ந்து
மாமடல் அவிழ்ந்த காந்தள்அம் சாரல்,
இனம்சால் வயக்களிறு பாந்தள் பட்டெனத்
துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத்து இயம்பும்
கடுமான் புல்லிய காடுஇறந் தோரே.

தெளிவுரை

"தோழி! மலர்கள் தலை கவிழ்ந்தும் பெரிய மடல்கள் விரிந்தும் இருக்கும் காந்தள்மலர்ச்செடிகளைக் கொண்ட மலைச்சாரலில் அங்குத் தன் இனத்தோடிருந்த வலிமை கொண்ட ஆண்யானை ஒன்று மலைப்பாம்பின் வாய்க்குள் அகப்பட்டது. அதனைக் கண்டு அஞ்சிய பெண்யானை பெருந் துயருடன் கதறி எழுப்பிய பேரொலி மலைப் பிளப்பிடையே எதிரொலிக்கும். விரைந்து செல்லும் குதிரையினையுடைய புள்ளி என்பவனுக்குரியது, இம்மலைச்சாரல். அவனுடைய வேங்கட நாட்டுக் காட்டைக் கடந்து சென்றுள்ளான், என் காதலனாகிய தலைவன். என் எழில் கெடவும், தோள் மெலிந்து குன்றவும், என்னிடம் அருள் செய்யாது தலைவன், என்னைக் கைவிட்டுப் பிரிந்தான் என்று குறை சொல்கிறாய். பல்யானைச் செல்கெழுகுட்டுவன், பகைவருடைய 'அகப்பா' என்னும் நகரையழித்து அங்கே இருந்த செம்பினால் இயன்ற மதிலைத் தீயிட்டழித்தபோது எழுந்த ஆரவாரத்தைவிடப் பெரிதான பழிச்சொல் ஊரில் எழும்படியாகத் தலைவன் பிரிந்துள்ளா னாதலின் அவனை அன்பில்லாதவன் என்கிறாய். என்றாலும் அவன் என்னிடம் பெருநட்புக் கொண்டவனாதலால், குறித்த பருவத்தில் வந்து சேர்ந்து அன்பு காட்டுவான்; அவன் வாழ்க" என்று தலைவி கூறினாள்.

கருத்து

தலைவன் அன்பு கொண்டவன்; அவனைப் பழித்துக் கூறாதே!

விளக்கம்

'தலைவன் என் மேனி வேறுபட்டு வருந்தவும், ஊரவர் அலர் கூறவும், என்னிடம் அன்பு செய்யாதவனாய்ப் பிரிந்தான்

என்பதால், அவனை அன்பில்லாதவன் எனக் குறை கூறுகிறாய். ஆயினும், அவன் என்னோடு பெருநட்புக் கொண்டவனாதலின் என் வருத்தம் உணர்ந்து உரிய காலத்தில் வந்து அருள் செய்யத் தவற மாட்டான்' எனத் தலைவி அவன் அன்பினைக் குறைத்துக் கூறிய தோழியின் கூற்றை மறுத்துக் கூறினாள்.

சொற்பொருள்

1. தொல்கவின் - பழைய அழகு; தொலைய - அழிய; சாஅய - இளைத்தல்.
2. நல்கல் - அருளுதல்; நீத்தனர் - பிரிந்தனர்.
3. நட்டனர் - நட்புக்கொண்டவர்; குட்டுவன் - சேர மன்னன்.
4. அகப்பா - ஒரு நகரம்; நூறி - அழித்து; செம்பியன் - செப்புஇயல் - செம்பினால் ஆன.
5. ஞாட்பு - போர்.
6. அலர் - பழிச்சொல்.
7. மாமடல் - பெரிய இதழ்; காந்தளம் சாரல் - காந்தள் பூக்களையுடைய அழகிய மலைச் சாரல்.
8. வயக்களிறு - வலிமையினைக் கொண்ட ஆண்யானை; பாந்தள் - மலைப்பாம்பு; பட்டென - அகப்பட.
9. துஞ்சாத்துயர் - பெருந்துயர்; பிடி - பெண்யானை; பூசல் - பேரொலி.
10. நெடுவரை - உயர்ந்த மலை; விடரகம் - மலைப்பிளவு; இயம்பும் - எதிரொலிக்கும்.
11. கடுமான் - விரைந்து செல்லும் குதிரை; புல்லி - தலைவருள் ஒருவன்.

தலைவி, 'ஆற்றுவல்' என்பதுபடச் சொல்லியது.

தலைவி கூற்று

குறுந்தொகை 94 **கதக்கண்ணனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, 'ஆற்றுவல்' என்பது படத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் மீள்வதாய்க் குறித்துச் சென்ற கார்ப்பருவத் தொடக்கத்தினைக் கண்ட தலைவி, குறித்தபடி அவன் வாராமையினாலே கலக்கமுற்றாள். அவளது கலக்கத்தைக் கண்டு வருந்திய தோழியிடம் தலைவி தான் ஆற்றியிருக்கும் துணிவுள்ளவள் என்று கூறியது.

பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்து
அரும்பே முன்னும் மிகச்சிவந் தனவே;
யானே மருள்வென்? தோழி! பானாள்
இன்னும் தமியர் கேட்பின், பெயர்த்தும்
என்ஆ குவர்கொல், பிரிந்திசி னோரே?
அருவி மாமலைத் தத்தக்
கருவி மாமழைச் சிலைதரும் குரலே.

தெளிவுரை

"தோழியே, கேள்! மிகவும் குளிர்ச்சியாயுள்ள மழைக் காலத்தில் மலரக்கூடிய பித்திகத்தின் மொட்டுகள், தம் அறியாமையினாலே, தாம் சிவக்க வேண்டிய காலத்துக்கு முன்பே சிவந்து மலர்ந்தன. இதைக் கண்டு நான் கார் காலம் என்று மயங்கிவிடுவேனா? (மாட்டேன்). ஆயினும், நள்ளிரவிலே அருவி நீர் பெரிய மலையிலே பாய்ந்து விழும்படி, கூட்டமான மேகங்கள் கூடி, மழை பெய்து முழங்குகின்றன. என்னைப் பிரிந்து இன்னும் தனித்திருக்கும் தலைவர் இந்த ஓசையைக் கேட்பாராயின், முன்னரே பிரிவுத் துன்பத்தால் வருந்தியிருக்கும்

அவர், மீண்டும் எவ்வாறு வருந்துவாரோ? (அவரை நினைத்தே வருந்துகிறேன்.)"

கருத்து

தலைவர் இந்த மழையொலியைக் கேட்டு, தாம் கருதிச் சென்ற செயலை முடித்திடாமல் கைவிட்டுத் திரும்பி விடுவாரோ என்றே வருந்துகிறேன். (வினை முடிந்து அவர் வரும்வரை நான் ஆற்றியிருப்பேன்.)

விளக்கம்

தலைவன் பிரிவுக்காகத் தான் வருந்தவில்லை என்றும், இந்தக் கார் காலத்தைக் கண்டு தலைவன் தன் செயலை நிறைவேற்றாமல் திரும்பிவிடுவானோ என்று நினைத்தே வருந்துவதாகவும், தான் தன் துன்பத்தைத் தாங்கிக்கொண்டிருக்க முடியும் என்றும் தலைவி கூறுகிறாள்.

குறிப்பு

பித்திகம், 'பிச்சிப்பூ' என்று வழங்கப்படுகிறது. பித்தி, பித்திகை என்றும் வழங்குவர்; இது மழைக்காலமாகிய கார்ப்பருவத்தில் அந்திப்பொழுதில் மலர்வது. வானம் இருண்டு கதிரவன் காணப்படா நிலையில், அந்திப் பொழுதை அறிய இம்மலர் மலர்வதையே அடையாளமாய்க் கொண்டனர். இதன் அரும்பின் காம்பு பசுமையானது; அரும்பின் முனைப்பகுதி சிவந்து தோன்றும்.

சொற்பொருள்

1. பெருந்தண்மாரி - பெரிய, குளிர்ச்சியான மழைக்காலம்; பேதைமை - அறிவின்மை; பித்திகம் - கார் காலத்தில் மாலைப் பொழுதில் மலரும் மலர்.
2. மிக - மிகவும்.
3. மருள்வென் - மயங்குவேன்; பானாள் - நள்ளிரவு.
4. தமியர் - தனித்திருப்பவர்; பெயர்த்தும் - மீண்டும்.
5. பிரிந்திசினோரே - பிரிந்து இருப்பவர்.
6. தத்த - பாய.
7. கருவி - தொகுதி, கூட்டம்; மாமழை - பெரிய மேகக் கூட்டம்; சிலை - முழக்கம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 341 **மிளைகிழான் நல்வேட்டனார்**

திணை : நெய்தல்

கூற்று

'பருவ வரவின்கண் வேறுபடும்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் கூறிச் சென்ற பருவம் முடிந்தும் அவன் வாராமை கண்டு தலைவி மிகவும் வருந்துவளே எனக் கவலையுற்ற தோழியிடம், 'நான் தலைவர் வரும்வரை ஆற்றியிருப்பேன்' என்று தலைவி கூறியது.

பல்வீ படரிய பசுநனைக் குரவம்
பொரிப்பூம் புன்கொடி பொழில்அணிக் கொளாஅச்
சினைஇனிது ஆகிய காலையும், காதலர்
பேணார் ஆயினும், 'பெரியோர் நெஞ்சத்துக்
கண்ணிய ஆண்மை கடவது அன்று'என,
வலியா நெஞ்சம் வலிப்ப,
வாழ்வேன் தோழி!என் வன்க ணானே.

தெளிவுரை

"தோழி! பல பூக்கள் நிரம்பிய, பசிய அரும்புகளைக் கொண்ட குரவ மரம், நெற்பொரியைப் போன்ற பூக்களைக் கொண்ட புன்கு மரத்தோடு கூடிச் சோலைப் புறங்களையெல்லாம் அழகு பெறச் செய்துள்ளன. குரவம், புன்கு ஆகியவற்றின் கிளைகள் கண்ணுக் கினியனவாய்க் காணப்படுகின்ற இந்த இளவேனிற்காலத்திலும் நம் தலைவர் வந்து நம்மைப் பாதுகாக்கவில்லை. ஆயினும், "பெரியோர் தம் உள்ளத்திலே செய்ய நினைத்த கடமைகளை முயற்சி மிக மேற்கொண்டு முற்றிலுமாய் முடிக்கப்பட வேண்டி யனவே" என முன்பு என் நெஞ்சம் துணியவில்லை. இப்போது என் மனம் (அவற்றை முடித்து மீள்வதே செய்தற்குரியது என்று) துணிந்தமையால், நானும் தலைவர் வினை முடித்து மீளும்வரை என் மன வலிமையால் வாழ்ந்திருப்பேன்" என்று தலைவி தோழி யிடம் கூறினாள்.

கருத்து

“தலைவர் தாம் குறிப்பிட்ட பருவத்தில் வந்திலரேனும், தாம் மேற் கொண்ட கடமையை முடித்தவுடனே திரும்புவார் என்னும் மனத்துணிவால் நான் அவர் வரும்வரை ஆற்றியிருப்பேன்” என்கிறாள், தலைவி.

குறிப்பு

குரவமும் புன்கும் கோட்டுப்பூக்கள்; இளவேனிற்காலத்தில் மலர்பவை.

சொற்பொருள்

1. பல்வீ - பல மலர்கள்; பசுநனை - பசுமையான மலர்மொட்டு; குரவம் - குரவ மரம்.
2. பொரி - நெற்பொரி; புன்கு - புன்கு மரம்; அணிக்கொளா - அழகுடன் விளங்க.
3. சினை - கிளை; காலையும் - பருவத்திலும்.
4. பேணார் ஆயினும் - (தலைவர்) நம்மைப் பாதுகாக்கவில்லை என்றாலும்.
5. கண்ணிய - நினைத்த; ஆண்மை - கடமை; கடவது - செய்ய வேண்டியது.
6. வலியா - துணியாத.
7. வன்கண்மை - மனவலிமை.

தலைவி கூற்று

அகநானூறு 141 **நக்கீரர்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் தலைவி வருந்தியிருந்ததைக் கண்ட தோழி கவலை கொண்டாள். அது கண்ட தலைவி, தோழியை நோக்கி, ‘திருக்கார்த்திகை விழாவினையேனும் அவர் நம்முடன் கொண்டாட வருவார்; நான் அதுவரை ஆற்றியிருப்பேன்’ என்று சொல்லியது.

அம்ம வாழி, தோழி! கைம்மிகக்
கனவும் கங்குல்தோறு இனிய; நனவும்
புனைவினை நல்இல் புள்ளும் பாங்கின;
நெஞ்சு நனிபுகன்று உறையும்; எஞ்சாது
உலகுதொழில் உலந்து, நாஞ்சில் துஞ்சி,
மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர, மதிநிறைந்து,
அறுமீன் சேறும் அகல்இருள் நடுநாள்;
மறுகுவிளக்கு உறுத்து மாலை தூக்கி,
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுஉடன் அயர, வருகதில் அம்ம—
துவரப் புலர்ந்து தூமலர் கஞலி,
தகரம் நாறும் தண்நறுங் கதுப்பின்
புதுமண மகடூஉ அயினிய கடிநகர்ப்
பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇ,
கூழைக் கூந்தல் குறுந்தொடி மகளிர்
பெருஞ்செய் நெல்லின் வாங்குகதிர் முறித்து,
பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கைக்
கடிதுஇடி வெரீஇய கமஞ்சூல் வெண்குருகு
தீம்குலை வாழை ஓங்குமடல் இராது
நெடுங்கால் மாஅத்துக் குறும்பறை பயிற்றும்
செல்குடி நிறுத்த பெரும்பெயர்க் கரிகால்
வெல்போர்ச் சோழன் இடையாற்று அன்ன,
நல்இசை வெறுக்கை தருமார், பல்பொறிப்
புலிக்கேழ் உற்ற பூவிடைப் பெருஞ்சினை
நரந்த நறும்பூ நாள்மலர் உதிர,
கலைபாய்ந்து உகளும், கல்சேர் வேங்கை,
தேம்கமழ் நெடுவரைப் பிறங்கிய
வேங்கட வைப்பிற் சுரன்இறந் தோரே.

தெளிவுரை

தோழி! வாழ்க! நான் கூறுவதைக் கேள். இரவுதோறும் இனிய கனவு காண்கிறேன். பகலிலும், சித்திரத்தொழில் அமைந்த நல்ல வீட்டிலே புள் நிமித்தங்களும் நன்றாகவே உள்ளன. என்

நெஞ்சும் சுருங்காது மிக்க விருப்பத்தோடு அமைதியாயிருக் கின்றது.

மணம் முடித்த புது மணமகள், கூந்தலை நன்கு உலர்த்தி, புதுமலரை நெருங்கச் சூடிக்கொண்டாள். மிகுதியாய் உணவு ஆக்கப்பட்டிருந்த அம்மனையில், 'மணமகள் பாற்சோறு சமைக்க வேண்டும்' என்னும் மரபுப்படி, அவள், முளைப் பாலிகை இடுவதற்காகக் கொண்டு வரப்பட்டிருந்த தாளோடு கூடிய நெற்கதிரை முரித்து, கூழைக் கூந்தலையும், சிறிய வளையல்களையும் கொண்ட கன்னிப்பெண்களுடன் சேர்ந்து, உரலில் இட்டுப் பச்சை அவலாய் இடித்தாள். பல புடைப்பாக உள்ள பெரிய அடுப்பிலே பாலை உலையாய் ஏற்றி, அதில் அவலை இட்டாள்.

இள மகளிர் வைரம் பாய்ந்த உலக்கையால் வேகமாய் இடித்த கடுமையான ஒலியை, அருகில் இனிய தாருடன் நின்ற வாழை யின் உயரமான மடலில் அமர்ந்திருந்த நிறைந்த சூலினைக் கொண்ட வெண்மையான நாரை கேட்டு அஞ்சியது. அது, அங்கிருந்து எழுந்து நீண்ட அடிமரத்தைக் கொண்ட மாமரத்தை நோக்கிப் பறந்து சென்றது. இத்தகைய காட்சிகளைக் கொண்டது இடையாறு என்னும் ஊர்.

போர் வெற்றியினைக் கொண்ட கரிகாற்சோழன், செல்வரை ஆதரிப்பதோடு, நலிந்தோரையும் பாதுகாக்கும் புகழ்மிக்க ஊர் அது. அதனையொத்த செல்வத்தை ஈட்டி வருவதற்காகத் தலைவர் சென்றார்.

மலையில் உள்ள வேங்கை மரம், பல புள்ளிகளைக் கொண்ட புலியின் நிறத்தைப் போன்ற பூக்களைக் கொண்டது. அப் பூக்களினிடையே பெரிய கிளையினைக் கொண்ட நாரத்தை மரத்தின் மணமிக்க அழகிய புதிய பூக்கள் உதிருமாறு ஆண் குரங்கு பாய்ந்து தாவுகிறது. (தேன் மணக்கும் இத்தகைய) சிகரங்கள் உயர்ந்து விளங்கும் வேங்கடமலையைச் சார்ந்த ஊர்களைக் கொண்ட வழியைத் தலைவர் கடந்து சென்றார்.

வெற்றிமிக்க நமது பழைய ஊரில் உழுதொழில் நின்றுள்ளது; மழை பெய்தல் நீங்கிவிட்டது. அதனால் தெளிவாய் உள்ள வானத்தில், தன்னிடமுள்ள குறுமுயலும் தெளிவாய்த்

தெரியுமாறு நிறைமதி ஒளி வீசும். இந்நிறைமதி கார்த்திகை மீனைச் சேரும் நாளின் இருள் அகன்ற நடு இரவில் தெருக்களில் விளக்குகளை வரிசையாய் ஏற்றி வைத்து, வீடுகளில் மாலை களைத் தொங்கவிட்டு, மக்கள் கூடி நின்று கார்த்திகை விழாக் கொண்டாடுவர்.

தலைவர் பொருளீட்டி, அவர் கூறியவாறு கார் காலத்தில் வாராவிடினும் கார்த்திகை விழாவை நம்முடன் சேர்ந்து கொண்டாட வந்து சேர்வார். (அதுவரை நானும் வருந்தா திருப்பேன்.)

கருத்து

தலைவர் கார் காலத்தில் வாராவிடினும் கார்த்திகை விழாவை நம்முடன் சேர்ந்து கொண்டாட உறுதியாய் வந்து சேர்வார்.

விளக்கம்

"தோழி! நான் சொல்வதைக் கேள். இரவுதோறும் கனவு தோன்றுகின்றது; புள் நிமித்தமும் நன்மை பயப்பதாய் உள்ளது; என் நெஞ்சம் நிறைவாய் (அமைதியாய்) இருக்கிறது. திருக் கார்த்திகைத் திருவிழாவில் இரவில் வீதிகளில் விளக்கேற்றி வைப்பர்; வீடுகளில் மாலைகளைத் தொங்கவிடுவர். ஊரில் பலரும் சேர்ந்து கொண்டாடும் இவ்விழாவினை நம்மோடு கொண்டாடும் வகையில், பொருளீட்டுதற்காக வேங்கடப் பகுதியைச் சார்ந்த ஊர்களில் உள்ள நம் தலைவர் வந்து சேர்வார். அதனாலேயே அவர் பிரிவினைப் பொறுத்து ஆற்றி யிருக்கின்றேன்" எனத் தலைவி தோழியை நோக்கிக் கூறினாள்.

குறிப்பு

1. 'கார் காலத்தில் வருவதாய்க் கூறிச் சென்ற தலைவர், அக்காலத்தில் வரவில்லையாயினும், ஒரு மாதம் கழித்துக் கார்த்திகையில் விழாக் கொண்டாட வந்து சேர்வார் என்னும் நம்பிக்கையினால் அமைதியோடு இருக்கிறேன்' என்கிறாள், தலைவி.

2. கானும் கனவுகள், புள் நிமித்தம் ஆகியன நடைமுறை வாழ்வில் நன்மை பயக்குமா, தீமை பயக்குமா என அறிய விரும்புவது பழங்காலத் தமிழ் மக்களின் வழக்கங்களாய் இருந்துள்ளன.

3. கார்த்திகை விளக்கு விழா, சங்க காலத்திலேயே கொண்டாடப்பட்டது.

4. திருமண நாளில் மணமகள் பச்சை அவல் இடித்துச் சமைப்பது அக்கால வழக்கம்; அவளோடு கன்னிப்பெண்களும் சேர்ந்து அவல் இடிப்பர். முளைப் பாலிகை வைப்பது திருமணச் சடங்குகளுள் ஒன்று.

சொற்பொருள்

1. கைம்மிகல் - மிகுதிப்படல்.
2. கங்குல் - இரவு.
3. புனைவினை - சித்திரத்தொழில் அமைந்த; புள்ளும் - புள் நிமித்தமும்; பாங்கின - நல்லன.
4. உறையும் - அமைதியுற்றிருக்கும்.
5. உலகுதொழில் - உழவுத்தொழில்; உலத்தல் - நீங்குதல்; நாஞ்சில் - கலப்பை; துஞ்சுதல் - ஓய்வு கொள்ளுதல்.
6. விசும்பு - ஆகாயம்.
7. குறுமுயல் - நிலவில் சிறிய முயல் ஒன்று உள்ளது போலத் தோன்றும்; மறு - அடையாளம், குற்றம்; நிறம் கிளர - நிறம் நன்கு விளங்க; மதிநிறைந்து - நிலவு நிறைவுற்று.
8. அறுமீன் - கார்த்திகை மீன்.
9. மறுகு - வீதி; உறுத்து - ஏற்றி; தூக்கி - தொங்கவிட்டு.
10. விறல் - வெற்றி; துவன்றல் - கூடி நிற்றல்.
11. அயர்தல் - கொண்டாடுதல்; வருக - வருவாராக.
12. துவரப் புலர்ந்து - முற்றும் உலர்ந்து; தூ - தூய, புதிய; கலுலுதல் - நெருங்குதல்.
13. தகரம் - மயிர்ச்சாந்து; கதுப்பு - கூந்தல்.
14. மகடூஉ - பெண்; அயினிய - மிகுந்த உணவு (அயினி - உணவு); கடி - காவல்.
15. கோடு - புடைப்பு; இரீஇ - இருத்தி, வார்த்து.
16. கூழை - குட்டையானது; தொடி - வளையல்.
17. செய் - வயல்; வாங்கு - வளைந்த.
18. பாசவல் - பச்சையான அவல்; இருங்காழ் - பெரிய வயிரமேறிய (காழ் - வயிரம்).
19. வெரீஇய - அஞ்சிய; கமம்சூல் - நிறைந்த கரு; குருகு - நாரை.
20. தீம் - இனிய; குலை - தாறு.
21. நெடுங்கால் - நீண்ட அடிமரம்; மா - மா மரம்; பயிற்றுதல் - செய்தல்.

22. செல்குடி நிறுத்த - நலிந்தோரைப் பாதுகாக்கும்; கரிகால் - கரிகாற் சோழன் - சோழப்பேரரசன்.
23. வெல்போர் - போர் வெற்றியினைக் கொண்ட; இடையாறு - கரிகாற் சோழனுக்குரிய ஊர்.
24. இசை - புகழ்; வெறுக்கை - செல்வம்; பல்பொறி - பல புள்ளிகள், கோடுகள்.
25. புலிக்கேழ் - புலியின் நிறம்.
26. நரந்தம் - நாரத்தை; நாள்மலர் - புதிய மலர்.
27. கலை - ஆண்குரங்கு; உகளும் - தாவும்; கல் - மலை, பாறை; வேங்கை - வேங்கை மரம்.
28. தேம் - தேன்; நெடுவரை - உயர்ந்த உச்சி; பிறங்குதல் - விளங்குதல்.
29. வேங்கடம் - வேங்கடமலை; வைப்பு - இடம், ஊர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 21 — **ஓதலாந்தையார்**

திணை : முல்லை

கூற்று

பருவம் வருந்துணையும் ஆற்றுவித்த தோழி, 'அவர் வரக் குறித்த பருவ வரவின்கண், இனி ஆற்றுவிக்குமாறு எவ்வாறு?' என்று தன்னுள்ளே கவன்றாட்கு, அவளது குறிப்பறிந்த தலைமகள், 'கானம் அவர் வரும் கார் காலத்தைக் காட்டிற்றாயினும், யான் இது கார் காலம் என்று தேறேன், அவர் பொய் கூறார் ஆகலின்', எனத் தான் ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

(பருவம் - கார் காலம்; கவன்றாட்கு - கவலைப்பட்டவளுக்கு; கானம் - காடு; தேறேன் - நம்ப மாட்டேன், தெளியேன்).

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியதும், 'தலைவி வருந்துவளே, அவளை எவ்வாறு ஆற்றுவிப்பது' என்று கவலையுற்றிருந்த தோழியிடம் தலைவி, 'இது கார் காலம் அன்று; அவர் பொய் கூறார்; அவர் வரும்வரை ஆற்றியிருப்பேன்' என்று கூறியது.

வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடையிடுபு,
பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்
கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம், 'கார்'எனக் கூறினும்,
யானோ தேறேன்; அவர்பொய் வழங்கலரே.

தெளிவுரை

"தோழி! வண்டுகள் தேனை உண்ணும்படியாக, செறிந்து, நீண்ட பூங்கொத்துகளைத் தழைகளிடையே கொண்டு கொன்றை மரம் விளங்குகிறது. அம்மரம் பொன்னாற் செய்துள்ள அணிகலன்களைத் தலையில் சூட்டியுள்ள மகளிரின் கூந்தலைப் போலக் காட்சி தருகிறது. இவ்வாறான கொன்றை மரங்களைக் கொண்டிருக்கிற காடு, அம்மலர்களைக் காட்டி, 'இது கார்ப்பருவமே' என்று கூறினாலும் நான் அதனை உண்மையெனக் கொள்ள மாட்டேன்; ஏனெனில், என் தலைவர் எப்பொழுதும் பொய்ம்மொழி கூறார்."

கருத்து

இது கார் காலம் என்று கூறினாலும் அதை நான் நம்ப மாட்டேன். அவர் பொய்ம்மொழி கூறார்; ஆதலின், வருவர் என ஆற்றியிருப்பேன்.

விளக்கம்

மலரையும் தழையையும் பொன் அணியையும் தம் கூந்தலிலே அணிந்துள்ள மகளிர் போல, காட்டிலுள்ள பூத்த கொன்றை மரங்கள் விளங்குகின்றன.

சொற்பொருள்

1. வண்டுபட - வண்டுகள் மொய்க்கும்படி; ததைதல் - அடர்ந்திருத்தல்; கொடிஇணர் - கொடி போன்று நீண்ட பூங்கொத்துகள்; இடை இடுபு - இடையிடையே சேர்த்து.
2. புனைஇழை - தலையில் அணியப்படும் அணி.
3. கதுப்பு - கூந்தல்.
4. கார் - கார் காலம்.
5. தேறேன் - நம்ப மாட்டேன், தெளிய மாட்டேன்; அவர் - என் தலைவர்; பொய் வழங்கலர் - பொய் கூற மாட்டார்.

தலைவி கூற்று

நற்றிணை 397 **அம்மூவனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாகி நின்ற தலைமகளை வற்புறாநின்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்தியிருந்த தலைவியை, வருந்தாது ஆற்றியிருக்குமாறு தோழி வற்புறுத்திக் கூறித் தேற்றினாள். தான் ஆற்றியிருப்பதைத் தோழி குறிப்பாய் உணருமாறு தலைவி சொல்லியது.

தோளும் அழியும், நாளும் சென்றென
நீள்இடை அத்தம் நோக்கி,வாள் அற்றுக்
கண்ணும் காட்சி தௌவின; என்நீத்து
அறிவும் மயங்கி, பிறிது ஆகின்றே;
5 நோயும் பெருகும்; மாலையும் வந்தன்று;
யாங்குஆ குவென்கொல் யானே? ஈங்கோ
சாதல் அஞ்சேன்; அஞ்சுவல், சாவின்
பிறப்புப்பிறிது ஆகுவது ஆயின்,
மறக்குவேன் கொல்என் காதலன் எனவே.

தெளிவுரை

"தோழி! 'தலைவர் வருவதாய்க் குறித்த நாளும் கழிந்தது; அதனால் என் தோள் நலனும் அழிந்தது. அவர் வரும் நீண்ட பாலை வழியை நோக்கி என் கண்களும் மங்கின; அறிவும் மயங்கிப் பிரிதொன்றாயிற்று. காமநோய் பெருகுகின்ற மாலைப் பொழுதும் வந்துவிட்டது; நான் எவ்வாறு ஆற்றியிருப்பேனோ தெரியவில்லை. ('பிரிவைத் தாங்காது இறந்துவிடுவேனோ' என்று நீ எண்ணுகின்றாய்.) நான் சாதலுக்கு அஞ்சவில்லை. செத்த பின்னர் மறுபிறப்பு நேரின் அது மக்கட்பிறப்பாய் இல்லாது போய்விட்டால் என் காதலனை மறந்துவிட நேருமோ என்றுதான் அஞ்சுகிறேன்" என்று தலைவி தோழியிடம்

கூறினாள். (இறந்த பிறகு என்னாகுமோ என்று அஞ்சுவதால் தான் இறந்துபடாதவாறு ஆற்றியிருப்பதனைக் குறிப்பாய் உணர்த்தினாள்.)

கருத்து

அவனின்றி எனக்கு வாழ்வில்லை. அவன் வரும்வரை ஆற்றி யிருப்பேன்.

விளக்கம்

"தோழியே! 'காதலன் பிரிவைப் பொறுக்கவியலாது நான் இறந்துபடக்கூடும்' என்பதால் என்னை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்துகிறாய். ஆற்றாமையால் இறந்துவிடுவேன் என்பதற் காக நான் அஞ்சவில்லை. இறந்த பின் மக்கட்பிறப்பாய்ப் பிறந்தால் என் காதலனையே அடைவேன். ஒருவேளை, வேறு பிறப்பாய்விட்டால் காதலனை மறந்துவிடுவேனோ என்றுதான் அஞ்சுகிறேன். இறப்பிற்குப் பின் ஏற்படும் மறுபிறப்பை இப்போது ஏன் எண்ண வேண்டும்? என் காதலனை அடை வதற்காக ஆற்றியிருந்து இறந்துபடாது இருப்பேன், நீ வருந் தாதே" எனத் தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. அழியும் - அழகு அழிந்தது.
2. வாள் அற்று - ஒளியிழந்து.
3. தௌவின - பொலிவிழந்தன; நீத்து - நீங்கி.
4. பிறிது ஆகின்று - வேறாகின்றது.
5. நோய் - துன்பம்; வந்தன்று - வந்துவிட்டது.
6. யாங்கு ஆகுவென்? - என்ன ஆவேனோ?; ஈங்கு - இங்கு.
7. சாதல் - சாதலுக்குப் பிறகு.

7-8. பிறப்புப் பிறிது ஆகுவது - பிறப்பு வேறொன்றாய் நேர்வது; அஞ்சுவல் - அஞ்சுகின்றேன்; ஆயின் - அவ்வாறு நேர்ந்தால்.

9. மறக்குவேன், (எனவே) அஞ்சுவல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 46 **மாமலாடனார்**

திணை : மருதம்

கூற்று

பிரிவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி, 'ஆற்றுவல்' என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருக்கும் பொழுது, தலைவி அப்பிரிவைத் தாங்க மாட்டாள் என்று தோழி கலங்கியபோது, தலைவி தான் தலைவன் வரும்வரை பொறுத்திருக்கக்கூடியவள் என்று கூறியது.

ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன
கூம்பிய சிறகர் மனைஉறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து
எருவின்நுண் தாது குடைவன ஆடி,
இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
புன்கண் மாலையும் புலம்பும்,
இன்றுகொல் தோழி!அவர் சென்ற நாட்டே?

தெளிவுரை

வீட்டில் வாழும் சிட்டுக்குருவி ஆம்பல் பூவின் வாடிய இதழ் போன்று குவிந்த சிறகைக் கொண்டது. இக்குருவி, வீட்டு முற்றத்தில் உலர வைக்கப்படும் தானிய மணிகளை உண்டு, பொது இடத்திலுள்ள எருவின் நுண்மையான பொடிகளைக் குடைந்து விளையாடி மாலை நேரத்தில் வீட்டின் இறப்பில் உள்ள தன் கூட்டையடைந்து தன் குஞ்சுகளோடு தங்கியிருக்கும். இத்தகைய காட்சியைக் கொண்ட மாலைக்காலமும், தனிமைத் துயரும் தலைவன் சென்றுள்ள அந்த நாட்டில் இல்லையோ? (இருக்கும். அதனைக் காணும் தலைவன் உடனே திரும்புவான் எனத் தலைவி நம்புகிறாள்.)

கருத்து

மாலையில் என்னைப் போலவே தலைவனும் துன்புறுவான்; ஆதலின் உடனே திரும்புவான்; அதுவரை ஆற்றியிருப்பேன்.

சொற்பொருள்

1. சாம்பல் - வாடிய இதழ்.
2. கூம்பிய - குவிந்த; சிறகர் - இறக்கை; குரீஇ - சிட்டுக்குருவி.
3. முன்றில் - வீட்டு முற்றம்; உணங்கல் - உலர வைக்கப்பட்டுள்ள தானியம்; மாந்தி - தின்று; மன்றம் - பொது இடம்.
4. நுண் தாது - நுண்ணிய பொடி; குடைவன - குடைந்து; ஆடி - விளையாடி.
5. இல் இறை - வீட்டு இறப்பு; பள்ளி - இருப்பிடம், வீடு; பிள்ளை - குஞ்சு; வதியும் - தங்கும்.
6. புன்கண் - துன்பம்; புலம்பு - தனிமைத்துயர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 329 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த கிழத்தி வற்புறுத்தும் தோழிக்கு, 'யான் ஆற்றுவல்' என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்த காலத்து வருந்திய தலைவியை ஆற்றியிருக்குமாறு தோழி வற்புறுத்தினாள். அதற்குத் தலைவி, 'நான் ஆற்றியிருக்க முயல் கின்றேன்; ஆனால் என் கண்கள் உறங்காது அழுகின்றன; என் செய்வேன்?' என்று சொல்லியது.

கான இருப்பை வேனல் வெண்பூ
வளிபொரு நெடுஞ்சினை உகுத்தலின், ஆர்கழல்பு,
களிறுவழங்கு சிறுநெறி புதையத் தாஅம்
பிறங்குமலை அருஞ்சுரம் இறந்தவர்ப் படர்ந்து,
பயில்இருள் நடுநாள் துயில்அரிது ஆகித்
தெள்நீர் நிகர்மலர் புரையும்
நல்மலர் மழைக்கணிற்கு எளியவால், பனியே.

தெளிவுரை

"தோழி! காட்டில் வேனிற்காலத்தில் இருப்பை மரத்தில் வெண்பூக்கள் தோன்றும். காற்றால் அலைக்கப்பட்ட நெடிய கொம்புகளிலிருந்து அப்பூக்கள் காம்பினின்று கழன்று வீழும். அவ்வாறு விழுகின்ற மலர்கள் யானைகள் செல்லும் சிறிய வழிகள் மறையும்படியாக உதிர்ந்து பரவும். அத்தகைய மலைகளைக் கொண்டு விளங்கும் அப்பாலைநிலத்து வழிகளைக் கடந்து சென்றுள்ளார், நம் தலைவர். அவரை நினைந்து, இருள் நிறைந்த இரவின் நடுயாம வேளையிலும் துயில முடியாதவள் ஆயினேன். தெளிந்த நீரில் நிற்கும் ஒள்ளிய மலரைப் போன்று நன்கு மலர்ந்து குளிர்ச்சியைக் கொண்ட என் கண்களுக்கு நீர்த்துளிகளைச் சிந்துவது எளிதாயிருக்கிறது (என் கட்டுப் பாட்டை மீறி என் கண்கள் உறங்காது நீரைச் சொரிகின்றன)" எனத் தலைவி கூறினாள்.

கருத்து

'நான் ஆற்றியிருந்தாலும் என் கண்கள் உறங்காமல் அவரை நினைந்து அழுகின்றன. இருந்தாலும், ஆற்றியிருப்பேன்.

விளக்கம்

தலைவன் பிரிவை ஆற்ற இயலாமல் தலைவி கண்ணீர் விட்டு அழுதாள்; இரவிலும் தூங்காமல் துக்கப்பட்டுக்கொண்டிருந்தாள். அதைக் கண்ட தோழி, 'நீ இப்படி அழுவதும் உறங்காமல் இருப்பதும் தகாது; துன்பத்தைப் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும்' என்றாள். அதற்குத் தலைவி, 'என்னால் துன்பத்தைத் தாங்கிக்கொண்டிருக்க இயலும்; ஆயினும், எனக்கு அடங்காமல் என் கண்கள் தாமே அழுகின்றன; நான் என்ன செய்வேன்' என்றாள்.

சொற்பொருள்

1. இருப்பை - இலுப்பை மரம்; வேனல் - வேனில்.
2. ஆர் கழல்பு - காம்புகளிலிருந்து கழலப் பெற்று.
3. தாஅம் - பரவும்.
4. பிறங்குதல் - விளங்குதல்; இறந்து - கடந்து.
5. பயில் இருள் - இருள் நிறைந்த; நடுநாள் - யாமம், நள்ளிரவு.

6. தெள்நீர் - தெளிந்த நீர்; புரைய - போன்ற.
7. கணிற்கு - கண்ணிற்கு; பனி - நீர்த்துளி.

தலைவி கூற்று

அகநானூறு 11 **ஔவையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள்வயிற்பிரிந்த இடத்து, ஆற்றாளாய தலைமகள் வேறுபாடு கண்டு ஆற்றாளாய தோழிக்குத் தலைமகள், 'ஆற்றுவல்' என்பது படச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் ஈட்டக் கருதிப் பிரிந்தான். அது பொறாது தலைவி துயரடைவதைக் கண்டு தோழி வருந்தினாள். அத்தோழியிடம், தலைவன் வரும் வரை, 'நான் பிரிவுத்துன்பத்தைப் பொறுத்திருப்பேன்' என்னும் கருத்தமையச் சொல்லியது.

வானம் ஊர்ந்த வயங்குஒளி மண்டிலம்
நெருப்புஎனச் சிவந்த உருப்புஅவிர் அம்காட்டு,
இலைஇல மலர்ந்த முகைஇல் இலவம்
கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த
அம்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி,
கயம்துகள் ஆகிய பயன்தபு கானம்
எம்மொடு கழிந்தனர் ஆயின், கம்மென,
வம்புவிரித் தன்ன பொங்குமணற் கான்யாற்றுப்
படுசினை தாழ்ந்த பயில்இணர் எக்கர்,
மெய்புகுவு அன்ன கைகவர் முயக்கம்
அவரும் பெறுகுவர் மன்னே, நயவர,
நீர்வார் நிகர்மலர் கடுப்ப, ஓமறந்து
அறுகுளம் நிறைக்குந போல, அல்கலும்
அழுதல் மேவல ஆகி,
பழிதீர் கண்ணும் படுகுவ மன்னே!

தெளிவுரை

"தோழியே! வானத்தில் செல்லும் ஒளியைக் கொண்ட ஞாயிறு, நெருப்புப் போலச் சினந்து கதிர்களைப் பரப்புகிறது. அதனால் வெப்பம் மிகுந்திருக்கும் காட்டில் இலையில்லாத இலவ மரங்களில் அரும்புகள் அனைத்தும் மலர்ந்துள்ளன. அப்பூக்கள், மகளிர் மகிழ்ந்தெடுக்கும் கார்த்திகை விளக்குகளின் வரிசைபோல அழகுறத் தோற்றமளிக்கின்ற குளங்களெல்லாம் நீரின்றி வறண்டிருக்கும். அத்தகைய காட்டின் வழியே பொருளீட்டச் சென்ற நம் தலைவர் என்னையும் உடன் கொண்டு சென்றிருக்கலாம்.

"அங்ஙனம் சென்றிருந்தால், மணல் மிக்க காட்டாற்றில் மணத்தைப் பரப்பி வைத்தாலொத்த பூங்கொத்துகளைக் கொண்ட பெரிய கிளைகள் தாழ்ந்துள்ள மணல்மேட்டில் உடல்கள் ஒன்றனுள் ஒன்று உட்புகுந்துகொண்டால் போன்ற தழுவுதலைத் தலைவரும் பெற்றிருப்பார். நீர் வடிகின்ற ஒளி கொண்ட நீல மலரைப் போன்றிருக்கும் என் கண்களும் நீரற்ற குளத்தை நிறைக்கும் மடைபோலக் கண்ணீரைச் சிந்தாமல் நிம்மதியான தூக்கத்தைப் பெற்றிருக்கும். (அவ்வாறு செய்யாமற் போனார். இனி ஆற்றியிருத்தலன்றி வேறென் செய்வது?)" என்று தலைவி தோழியிடம் (தான் துன்பத்தைத் தாங்கியிருப்பதாய்) கூறுகிறாள்.

கருத்து

என்னையும் தலைவர் உடனழைத்துச் சென்றிருந்தால் அவரும் என் தழுவுதலைப் பெற்றிருப்பார்; என் கண்களும் நிம்மதியாய் உறங்கி யிருக்கும். அதை செய்யாமற்போனார்; இனி, ஆற்றியிருத்தலன்றி என் செய்வது?

விளக்கம்

"பிரிந்து சென்ற தலைவர் என்னையும் உடன்கொண்டு சென்றிருப்பாராயின் உடம்பினுள் உடம்பு புகுந்தால் ஒத்த தழுவுதலை அவர் பெற்றிருக்கலாம். என் கண்களும் அழாது உறங்கியிருக்கும். இவ்விரு செயல்களும் இப்பொழுது நிகழவில்லை" என்று தலைவி தன் வருத்தத்தினை வெளியிட்டு,

'எனினும் பிரிவுத் துன்பத்தைப் பொறுத்திருப்பேன்' என்று தோழியிடம் சொன்னாள்.

குறிப்பு

இலவ மரத்தில் இலைகள் யாவும் உதிர்ந்த கிளைகளில் வரிசையாய்ப் பூக்கள் பூத்திருக்கும். கிளைகளில் இவ்வாறு தொடர்ந்து வரிசையாகப் பூக்கள் பூத்திருக்கும் காட்சி, கார்த்திகை நாளில் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு மகளிர் ஏற்றிய அழகிய சுடர் விளக்குகளின் நெடிய வரிசை போலத் தோன்றும்.

சொற்பொருள்

1. வயங்குதல் - விளங்குதல்; ஒளி மண்டிலம் - ஞாயிறு.
2. உருப்புஅவிர் - வெப்பம் விளங்கும்.
3. இலவம் - இலவ மரம்.
4. கலிகொள் - ஆரவாரம் மிக்க; ஆயம் - மகளிர் கூட்டம்; மலிபு தொகுபு - மகிழ்ந்து கூடி.
5. அம்சுடர் நெடுங்கொடி - அழகிய கார்த்திகை விளக்கின் நெடிய வரிசை.
6. கயம் - குளம்; பயன்தபு - வளம் கெட்ட.
7. கழிந்தனர்ஆயின் - சென்றிருந்தார் என்றால்; கம் என - விரைவாய்.
8. வம்பு - மணம்; கான்யாறு - காட்டாறு.
9. படுசினை - பெரிய கிளை; இணர் - பூங்கொத்து; எக்கர் - மணல்மேடு.
10. மெய் - உடல்; கைகவர் - கைகளால் கவர்ந்துகொள்ளும்; முயக்கம் - தழுவல்.
11. நயவர - அன்பு தோன்ற.
12. வார் - சொரியும்; ஓமறந்து - ஒழிதலின்றி, இடையறாது.
13. அறுகுளம் - நீரற்ற குளம்; நிறைக்குந போல - நிறைக்கும் மடைபோல; அல்கலும் - நாளும்.
14. மேவல - பொருந்துதல்.
15. படுகுவ - தூக்கத்தைப் பெற்றிருக்கும்.

தலைவி கூற்று

நற்றிணை 186 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் தலைவி நலிவாள் எனக் கருதித் தோழி வருந்தினாள். அத்தோழியிடம், தலைவன் திரும்பி வரும்வரையில் தான் பிரிவினை ஆற்றிப் பொறுத்திருப்பதாய்த் தலைவி கூறியது.

கல்ஊற்று ஈண்டல கயன்அற, வாங்கி,
இரும்பிணர்த் தடக்கை நீட்டி நீர்நொண்டு,
பெருங்கை யானை பிடிஎதிர் ஓடும்
கானம் வெம்பிய வறம்கூர் கடத்திடை,
வேனில் ஓதி நிறம்பெயர் முதுபோத்துப்
பாண்யாழ் கடைய, வாங்கிப் பாங்கர்
நெடுநிலை யாஅம் ஏறும் தொழில
பிறர்க்குஎன முயலும் பேர்அருள் நெஞ்சமொடு
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற ஆறே.

தெளிவுரை

“கற்பாறையில் அமைந்துள்ள நீர் ஊற்றில் சேர்ந்திருந்த சிறிதளவான நீர் முழுவதையும் ஆண்யானை தன் சொர சொரப்பான நீண்ட துதிக்கையால் மொண்டு, தான் குடிக்காமல், தன் பெண்யானைக்குக் கொடுக்க அதனை நோக்கி ஓடும். அத்தகைய வறட்சி மிகுந்த காட்டில் வெப்பமான வழியில் பிறர்க்கு உதவப் பொருளீட்டி வரவேண்டும் என்னும் பேரருள் வாய்ந்த உள்ளத் தோடு என் காதலர் சென்றுள்ளார். அவ் வழியில், வேனிற் காலத்தில் மாறி மாறி நிறம் தோன்றும் உடலைக் கொண்ட ஓந்திப்போத்து (பச்சோந்தி) யாமரத்தின் மீது ஏற இயலாது வருந்தும். அவ்வழிச் செல்லும் பாணர் தம் வருத்தம் நீங்கச் சிறிதளவு நேரம் யாழ் இசைக்க, அவ்விசையைக்

கேட்டு ஓந்தி தன் வருத்தம் தீர்ந்து அந்த யாமரத்தின்மீது ஏறும் தொழிலை மேற்கொள்ளும் என்பர். இத்தகைய நெறியில் சென்ற காதலரை நினைந்து நான் ஆற்றியிருப்பேன்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

அற உள்ளத்தோடு தலைவன் பொருளீட்டச் சென்றுள்ளதால் அவன் பிரிவைப் பொறுத்திருப்பேன்.

விளக்கம்

"கல்லூற்றில் ஊறுகின்ற நீரை உறிஞ்சிய ஆண்யானை அதனைத் தான் உண்ணாமல், நீர் வேட்கையுற்றிருக்கும் தன் பெண்யானைக்குக் கொடுக்கும் வெப்பமான காட்டுவழி. அவ்வழியில் மரமேற இயலாது சோர்ந்திருந்த ஓதி, பாணர் யாழிசை கேட்டு, முயன்று மரமேறும். இவற்றைப் பிறர் கூறக் கேட்ட நான், வாழ்க்கையில் தளர்ச்சியுறுதல் இயல்பாயினும், அத்தளர்ச்சி நீங்க ஊக்கம் பெறுதல் வேண்டும் என்பதை உணர்ந்த நிலையில் தலைவனின் பிரிவை ஆற்றியிருப்பேன்" என்கிறாள், தலைவி.

குறிப்பு

நீரற்ற காலத்துக் கல்லூற்றிலே ஊறும் நீர் கொண்டு களிறு தன் பிடியை ஓம்பும் என்னும் கருத்து மூலம், பொருளற்ற காலத்துத் தலைவன் தன் முயற்சியால் ஈட்டிய பொருள் கொண்டு இல்லறம் பேணுவான் என்னும் குறிப்புப் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. ஈண்டுதல் - தொடுதல், வருடுதல்; கயன் - நீர்நிலை; அற - முற்றிலும் அற்றுப்போகும்படி; வாங்கி - குடித்து.
2. இரும்பிணர் - கரிய சொரசொரப்பான; தடக்கை - பெரிய கை; நொண்டல் - முகத்தல்.
3. பிடி - பெண்யானை.
4. வறம்கூர் - வறட்சி மிகுந்த; கடம் - காடு.
5. ஓதி - பச்சோந்தி; போத்து - ஆண்.
6. பாண் - பாணர்; கடைய - இசைக்க; பாங்கர் - அருகே.

7. யாஅம் - யா மரம்; ஏறும் தொழில - ஏறும் தொழிலை மேற்கொள்ளும்.
9. காமர் - விருப்பம்; பொருட்பிணி - பொருள் ஈட்டம்.
10. வெங்காதலர் - விரும்பும் காதலர்; ஆறு - வழி.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 15 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைத் தலைவி தாங்க மாட்டாளோ என வருந்திய தோழியிடம் தலைவி, 'நான் ஆற்றியிருப்பேன்' என்று சொல்லியது.

சிறுபுன் புறவொடு சிற்றெழால் சீறும்
நெறிஅரு நீள்சுரத்(து) அல்குவர்கொல் தோழி!
முறிஎழில் மேனி பசப்ப அருள்ஒழிந்(து)
ஆர்பொருள் வேட்கை யவர்.

தெளிவுரை

தோழி! இளந்தளிர் போன்ற எழில் கொண்ட என் மேனியில் பசலை படர்ந்து நிறம் மாறியது. நம்மீது கொண்டிருந்த அன்பு நீங்கியவராய், பொருள் ஈட்டுவதையே நோக்கமாய்க் கொண்டுள்ளார், நம் தலைவர். அவர், சிறிய புறாக்களுடன் எழால் என்னும் சிறு பறவை சினந்து போர்புரியும், வழிகளே இல்லாத பெரிய பாலைநிலத்தில் தங்கியுள்ளார்; அவர் என்னை மறப்பாரோ? மாட்டார்!

கருத்து

தலைவர் என்னை மறவாது விரைந்து வந்து அணுகுவார்; ஆதலின், ஆற்றியிருப்பேன்.

சொற்பொருள்

1. சிறு - சிறிய; புன் - புல்லிய; புறவு - புறா; சிற்று - சிறு - சிறிய; எழால் - ஒரு வகைப் பறவை; சீறும் - சினந்து போர் புரியும்.
2. நெறிஅரு - வழி காணுதற்கு அரிய; நீள் - பெரிய; சுரம் - பாலை நிலம்; அல்குவர்கொல் - தங்கிவிடுவாரோ?
3. முறி - இளந்தளிர்; பசப்ப - பசலை படர.
4. ஆர் - நிறைந்த; வேட்கையவர் - விருப்பம் கொண்டவர்.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 17 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து தலைவி தவிப்பாள் என வருந்திய தோழியிடம், தன்னால் ஆற்றியிருக்க இயலும் எனத் தலைவி கூறியது.

கல்அதர் வாயில் கடுந்துடி கள்,பம்பும்
வில்லுழுது வாழ்நர் குறும்புள்ளும் போவர்கொல்
எல்வளை மென்தோள் நெகிழப் பொருள்நசைஇ
நல்காத் துறந்த நமர்.

தெளிவுரை

"என் தோழியே! ஒளிமிக்க வளையல்களை அணிந்த நம் மென் தோள்கள் மெலியும்படி, பொருளை விரும்பி, நமக்கு நன்மையினைச் செய்யாது பிரிந்து சென்றுள்ளார், நம் காதலர். அவர் பரற்கற்கள் பொருந்திய பாலை நிலத்தில் வாயில்தோறும் அச்சத்தினைத் தோற்றுவிக்கும் உடுக்கைகள் ஒலிக்கும்படியான விற்போர் செய்து வாழ்க்கையை நடத்தும் மறவர்களின் ஊர்களினிடையேயும் செல்வரோ?" (செல்லார்; மீள்வர் என்பது கருத்து.)

கருத்து

தலைவர் விரைவில் மீள்வர்; நான் ஆற்றியிருப்பேன்.

சொற்பொருள்

1. கல் - கற்களைக் கொண்ட; அதர் - வழி; கடும் துடிகள் - அச்சத்தை உண்டாக்கும் உடுக்கைகள்; பம்பும் - ஒலிக்கும்.
2. வில் உழுது வாழ்நர் - வில்லாலே போர் செய்து வாழ்பவர் (மறவர்கள்); குறும்பு - ஊர்கள்; உள்ளும் - உள்ளேயும்.
3. எல்வளை - ஒளிமிக்க வளையல்; நெகிழ - மெலியும்படி; நசைஇ - விரும்பி.
4. நல்கா - நமக்கு நன்மையினைச் செய்யாது; துறந்த - பிரிந்த; நமர் - நம்மவர், நம் காதலர்.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 19 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினை ஆற்ற இயலாது தலைவி வருந்தியிருப்பாள் என்று கவலையுற்றிருந்த தோழியிடம், தான் ஆற்றியிருப்பதாய்த் தலைவி கூறியது.

கலையொடு மான்இரங்கும் கல்அதர் அத்தம்
நிலைஅஞ்சி நீள்சுரத்(து) அல்குவர்கொல் தோழி!
முலையொடு சோர்கின்ற பொன்வண்ணம்; அன்னோ
வளையொடு சோரும்,என் தோள்.

தெளிவுரை

தோழி! பொன்போன்ற என் மேனியில் உள்ள மார்பகங்கள் தளர்ந்து சோர்ந்துள்ளன; தோள்களும் வளை கழலுமாறு மெலிவுற்றுள்ளன. இவ்வாறிருக்க, ஆண்மான்களோடு பெண் மான்கள் தண்ணீரின்றித் துன்புற்று வருந்தும் கற்கள் நிரம்பிய,

நுண்மணல் கொண்ட பாலைநில வழியில் செல்லும் நம் தலைவர், அப்பாலைநிலத்திலே தங்கியிருப்பாரோ? (இரார்; விரைந்து மீள்வார்; எனவே, நான் ஆற்றியிருப்பேன் என்று தலைவி கூறுகிறாள்.)

கருத்து

பெண்மானுக்காக ஆண்மான் வருந்துவதைக் காணும் தலைவர் என்னை நினைந்து உடனே மீள்வார்; அதனால் ஆற்றியிருப்பேன்.

சொற்பொருள்

1. கலை - ஆண்மான்; மான் - பெண்மான்; இரங்கும் - துன்புற்று வருந்தும்; கல்அதர் - கற்கள் நிரம்பிய நுண்மணல்; அத்தம் - வழி.
2. நிலை - தன்மை; நீள்சுரம்- பெரிய பாலை நிலம்; அல்குவர்கொல் - தங்குவாரோ?
3. பொன் வண்ணம் - பொன்னிறம் கொண்ட (என் மேனி); அன்னோ - அந்தோ.
4. சோரும் - வாடும், மெலிவுறும்.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 35 — **மாறன் பொறையனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள்வயிற்பிரிந்த காலத்து ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவல் என்பதுபட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி மிக வருந்துவாள் எனத் தோழி கருதியிருந்தாள். அவளிடம் தலைவி, 'நான் ஆற்றியிருப்பேன்' என்று நம்பிக்கையாய்ச் சொல்லியது.

கொடுவில் எயினர்தம் கொல்படையால் வீழ்த்த
தடிநிணம் மாந்திய பேஎய் – நடுகல்
விரிநிழல் கண்படுக்கும் வெம்கானம் என்பர்
பொருள்புரிந்தார் போய சுரம்.

தெளிவுரை

'தோழி! பாலை நில வழியில் வளைந்த வில்லேந்திய வேட்டுவர் தம் கொலைக்கருவிகளால் வீழ்த்தப்பட்டோரின் தசையையும் கொழுப்பையும் பேய்கள் தின்னும். பிறகு, அவை போரிலே மடிந்தாரின் பெயர் பொறிக்கப்பட்டு அங்கே நடப்பட்டுள்ள நடுகல்லினால் ஏற்படும் நீண்ட நிழலில் படுத்துத் தூங்கும். பொருள் தேடுதலை விரும்பிச் சென்ற நம் தலைவர் சென்ற வழி, இத்தகைய கொடிய காட்டில் உள்ளது எனக் கூறுவர்' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

வெம்மையான காட்டின் வழியே சென்றுள்ள தலைவர் விரைவில் மீள்வர்; ஆதலின், ஆற்றியிருப்பேன்.

சொற்பொருள்

1. கொடு - வளைந்த; எயினர் - வேட்டுவர்; வீழ்த்த - மடித்து வீழ்த்த.
2. தடி - தசை; நிணம் - கொழுப்பு; மாந்திய - உண்ட; பேஎய் - பேய்.
3. விரி - தோன்றுகின்ற; கண்படுக்கும் - தூங்கும்.
4. பொருள் புரிந்தார் - பொருள் தேடுதலை விரும்பிச் சென்றவர் (தலைவர்); போய - சென்ற.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 36 **மூவாதியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள்வயிற்பிரிந்த காலத்து ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவல் என்பதுபட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்ற காலத்தில் தலைவி துன்பம் தாங்க மாட்டாளோ என்று கவலையுற்ற தோழியிடம் தலைவி, தான் ஆற்றி யிருப்பதாய்ச் சொல்லியது.

முள்ளுடை மூங்கில் பிணங்கிய சூழ்படப்பை
புள்ளி வெருகுதன் குட்டிக்(கு) இரைபார்க்கும்
கள்ளர் வழங்கும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி.

தெளிவுரை

“தோழி! நம் தலைவர் பொருள் தேடுதலை எண்ணிச் சென்ற வழி, முள்களைக் கொண்ட மூங்கில் புதர்கள் பின்னிக் கிடக்கும்படியான தோட்டங்களைக் கொண்டது. அங்குப் புள்ளிகளைக் கொண்ட காட்டுப்பூனை தன் குட்டிகட்கு இரை தேடித் திரியும். மேலும், அஃது ஆறலை கள்வர் உலவும் கொடிய பாலை நிலம் என்றும் சொல்லுவர்.”

கருத்து

கொடுமை நிறைந்த வழியில் சென்றுள்ள காதலர் விரைந்து மீள்வர்; ஆதலால், ஆற்றியிருப்பேன்.

சொற்பொருள்

1. பிணங்கிய - பின்னிக்கொண்டிருக்கும்; படப்பை - தோட்டம்.
2. வெருகு - காட்டுப்பூனை; பார்க்கும் - தேடிக்கொண்டிருக்கும்.
3. கள்ளர் - வழிப்பறி செய்யும் கள்வர்.
4. படர்ந்த - சென்ற.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 78 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

ஆற்றாளெனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்த கவலை, தலைவியை வாட்டும் என்று தோழி கருதியபோது, ‘ஆறுதல் கொள்ளுவேன்’ என்று தலைவி, தோழியிடம் சொல்லியது.

ஒருகை, இருமருப்பின், மும்மத,மால் யானை
பருகுநீர் பைஞ்சுனையில் காணா(து), – அருகல்,
வழிவிலங்கி வீழும் வரைஅத்தம் சென்றார்
அழிவிலர் ஆக, அவர்.

தெளிவுரை

"ஒரு துதிக்கையையும், இரு கொம்புகளையும், மும்மதங்களை யும் கொண்ட பெரிய யானைகள் பசுமையான சுனையில் குடிப்பதற்குத் தண்ணீர் பெறாது தவிக்கும். அச்சுனையை விட்டு அப்பால் நடக்க இயலாது, தளர்ந்து அங்கேயே விழுந்து கிடக்கும். அத்தகைய மலைகளைக் கொண்ட பாலை வழியே சென்ற தலைவர் எத்தகைய இடையூறும் இல்லாது திரும்ப வேண்டும்" எனத் தலைவி தோழியிடம் சொன்னாள்.

கருத்து

கொடிய வழியிலே சென்ற தலைவர் குறையேதுமின்றித் திரும்ப வேண்டும் என்னும் நினைவோடு ஆற்றியிருப்பேன்.

சொற்பொருள்

1. ஒரு கை - ஒரு துதிக்கை; இருமருப்பு - இரு தந்தங்கள்; மும்மதம் - மும்மதங்கள்; மால் - பெரிய.
2. பருகு நீர் - குடிப்பதற்குரிய நீர்; பைஞ்சுனை - பசிய சுனை; அருகல் - (அச்சுனைக்கு) அருகிலேயே.
3. வழி விலங்கி - வழி நடக்க இயலாமல்; வீழும் - விழுந்து கிடக்கும்; வரை - மலைகளைக் கொண்ட; அத்தம் - பாலை நில வழி.
4. அழிவிலர் - எவ்வித இடையூறுமின்றி; ஆக - இருப்பாராக.

தலைவி கூற்று

அகநானூறு 133 **உறையூர் மருத்துவன் தாமோதரனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாயினாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்த காலத்தில் தலைவியின் வாட்டம் கண்டு, 'இவள் எப்படிப் பொறுப்பாளோ?' என்று கலங்கினாள், தோழி. அவளிடம் தலைவி, தான் பொறுத்திருப்பதாய்ச் சொல்லியது.

'குன்றி அன்ன கண்ண, குரூஉமயிர்,
புன்தாள், வெள்ளெலி மோவாய் ஏற்றை
செம்பரல் முரம்பில் சிதர்ந்த பூழி,
நல்நாள் வேங்கைவீ நன்கனம் வரிப்ப,
கார்தலை மணந்த பைம்புதல் புறவின்,
வில்எறி பஞ்சியின் வெண்மழை தவழும்
கொல்லை இதைய குறும்பொறை மருங்கில்,
கரிபரந் தன்ன காயாஞ் செம்மலொடு
எரிபரந் தன்ன இலமலர் விரைஇ,
பூங்கலுழ் சுமந்த தீம்புனல் கான்யாற்று
வான்கொல் தூவல் வளிதர உண்கும்;
எம்மொடு வருதல் வல்லையோ மற்று?'எனக்
கொன்ஒன்று வினவினர் மன்னே!– தோழி!
இதல்முள் ஒப்பின் முகைமுதிர் வெட்சி
கொல்புனக் குருந்தொடு கல்அறைத் தாஅம்,
மிளைநாட்டு அத்தத்து ஈர்ஞ்சுவல் கலித்த
வரிமரல் கறிக்கும் மடப்பிணைத்
திரிமருப்பு இரலைய காடுஇறந் தோரே.

தெளிவுரை

"தோழி! கவுதாரியின் காலில் உள்ள முள் போல வெட்சி மரத்தின் அரும்பு இருக்கும். வெட்சியின் முதிர்ந்த பூக்கள்,

வெட்டித் திருத்திய முல்லை நிலத்திலுள்ள குருந்த மலர்களோடு கற்பாறையின்மீது உதிர்ந்து பரவலாய்க் கிடக்கும். ஈரமுள்ள மேட்டு நிலத்தில் தழைத்துள்ள வரிகளைக் கொண்ட மரல் என்னும் கற்றாழையை இளைய பெண்மானுடன் முறுக்கிய கொம்பினைக் கொண்ட ஆண்மான் கடித்து உண்ணும். மிளை நாட்டில் உள்ள இத்தகைய காட்டு வழியிலே நம் தலைவர் சென்றுள்ளார். (அவர் புறப்படுமுன் என்னிடம் ஒன்றைப் பற்றி வினவினார்; என்ன தெரியுமா?)

“குன்றிமணி போன்ற கண், நல்ல நிறம் வாய்ந்த மயிர், மெல்லிய கால், அழகிய தாடி ஆகியவற்றைக் கொண்ட ஆண்வெள்ளெலி ஒன்று, சிவந்த பரற்கற்கள் நிறைந்த வன்னிலத்தில் வளையை அமைக்கக் கிளறிய புழுதி பரந்து கிடக்கும். திருமணம் செய்வதற்குரிய காலத்தை அறிவிப்பது போல் மலரும் வேங்கை மலர்கள் அங்கே உதிர்ந்து அவ்விடத்தை வெறியாடு களம்போல அழகு செய்யும்.

“இம்முல்லை நிலத்தின் மற்றொரு பகுதியில், கார் கால மழை பெய்தமையால் பசுமையான புதர்கள் வளர்ச்சி பெற்றிருக்கும். சிறிய குன்றுகளுக்கு அருகில் புதிய தோட்டங்கள் இருக்கும். வில்லாலடிக்கப்பட்ட பஞ்சுபோல வெண்மேகங்கள் அக்குன்று களில் தவழும். அங்கிருந்து ஓடி வரும் காட்டாறு, கரி பரப்பினா லொத்த காயாமரத்தின் வாடிய பூக்களொடு, தீப்பரவியது போன்ற இலவம் பூக்களையும் சுமந்து கொண்டு இனிய நீருடன் ஓடி வரும். அக்காட்டாற்றின் கரையில் அமர்ந்து, காற்று மோதுவதால் மேலே எழுந்தாடும் நீர்த்துளிகளை நாம் வேடிக்கையாகப் பிடித்து உண்ண என்னோடு வர இயலுமா, கூறு' என்று தலைவர் என்னைக் கேட்டார்” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தலைவர் புறப்பட்டபோது, “காட்டாற்றங்கரையில் என்னுடனிருந்து மகிழ வருவாயா? கூறு” என்று கேட்டார். அவ்வாறு கேட்டவர் என்னை அழைத்துச் செல்ல வருவார் என்பதால் ஆற்றியிருப்பேன்.

விளக்கம்

தோழி! காடுகளைக் கடந்து சென்றாராகிய நம் தலைவர், "காட்டாற்றின் நீர்த்துவலையைக் காற்று எழுப்பித் தர உண்ணலாம்; நீயும் என்னோடு வர இயலுமோ?" என்னும் பெருமை பொருந்திய வார்த்தைகளால் கேட்டார். கேட்டாரே யன்றி, உடன் அழைத்துச் செல்லவில்லை.

குறிப்பு

"காட்டுவழியில் சென்ற தலைவர், எழுந்தாடும் காட்டாற்று நீர்த் திவலைகளைப் பிடித்து விளையாடியபடியே என்னை அழைத்துச் செல்ல மீண்டும் வருவார்" என்று தலைவி, தான் வருத்தத்தினை ஆற்றியிருப் பதற்குக் காரணம் கூறுகின்றாள்.

சொற்பொருள்

1. குன்றி - குன்றிமணி; குரூஉ - நல்ல நிறம்.
2. புன்தாள் - மெல்லிய அடி; மோவாய் - தாடி; ஏற்றை - ஆண்.
3. முரம்பு - பரற்கற்கள்; சிதர்ந்த - பரவிக் கிடக்கும்; பூழி - புழுதி.
4. நல்நாள் - திருமண நாள்; வீ - மலர்; நன்கனம் - நன்றாக; வரிப்ப - அழகு செய்ய.
5. பைம்புதல் - பசிய புதர்; புறவு - முல்லை நிலம்.
6. வில்எறி - வில்லாலடிக்கப்பட்ட; பஞ்சி - பஞ்சு; வெண்மழை - வெண்மையான மேகம்.
7. கொல்லை இதைய - கொல்லையாகிய புதுப்புனம்; பொறை - மலை, குன்று; மருங்கு - பக்கம், அருகில்.
8. காயா - காயா மலர்; செம்மல் - பழம் பூ.
9. எரி - நெருப்பு; இலமலர் - இலவ மலர்; விரைஇ - கலந்து.
10. கலுழ் - கலங்கிய நீர்; தீம் - இனிய; கான்யாறு - காட்டாறு.
11. தூவல் - நீர்த்துளி; வளிதர - காற்று மோதுவதால் எழும்; உண்கும் - உண்போமா?
12. வல்லையோ - வர இயலுமோ?
13. கொன் - பெருமை.
14. இதல் - கவுதாரி என்னும் பறவை; முகை - மொட்டு; வெட்சி - ஒரு வகை மரம்.
15. கொல்புனம் - காடு வெட்டிப் பண்படுத்தப்பட்ட நிலம்; குருந்து - ஒரு வகை மரம்; கல்அறை - கற்பாறை; தாஅம் - பரவிக் கிடக்கும்.

16. அத்தம் - வழி; ஈர் - ஈரமான; சுவல் - மேட்டு நிலம்; கலித்த - தழைத்த.
17. வரி - வரிகளைக் கொண்ட; மரல் - ஒரு வகைக் கற்றாழை; கறிக்கும் - கடித்து உண்ணும்; மடப்பிணை - இளைய பெண்மான்.
18. திரி மருப்பு - முறுக்கிய கொம்பு; இரலை - ஆண்மான்.

தலைவி கூற்று

கைந்நிலை 24 **புல்லங்காடனார்**

திணை : பாலை

கூற்று

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் ஆற்றாமை அறிந்து தோழி வருந்தினாள். அத்தோழியிடம் தலைவி, ஆற்றுவல் என்பது தோன்றக் கூறியது.

வெஞ்சுரம் தேரோட வெஃகிநின்று அத்தமாச்
சிந்தையான் நீர்என்று செத்துத் தவாஓடும்
பண்பில் அருஞ்சுரம் என்பவால் ஆய்தொடி
நண்பிலார் சென்ற நெறி.

தெளிவுரை

"ஆராய்ந்து அழகுடன் செய்யப்பட்ட வளையல்களை அணிந்துள்ள தோழியே! பாலைநிலத்தில் காணப்படும் பேய்த் தேரை (கானல் நீரை, நீர் எனக் கருதி அதைப் பருக வேண்டும் என்னும் நோக்கோடு ஓடுகின்ற மான்கள் வாழும் பயனற்ற கொடிய காடே, நம்மீது நட்பு இல்லாத நம் தலைவர் சென்ற வழி என்று பலரும் கூறுவர். அதை எண்ணியே வருந்துகிறேன்" என்று தலைவி தோழியைப் பார்த்துக் கூறினாள்.

கருத்து

நீரற்ற கொடிய காட்டுவழியே நம் தலைவர் சென்றுள்ளதை அறிந்து வருந்துகிறேன்; ஆயினும், ஆற்றியிருப்பேன்.

விளக்கம்

பிரிவினை நான் ஆற்றியிருப்பேன்; என்றாலும், நீர் இல்லாத கொடிய காட்டுவழியில் தலைவர் சென்றுள்ளதால் வருந்துகிறேன்.

சொற்பொருள்

1. வெஞ்சுரம் - கொடிய காடு; தேர் - பேய்த் தேர் (கானல் நீர்); ஓட - பரந்து தென்பட; வெஃகி - (அதைப் பருக) விரும்பி; அத்தமா - அத்தம்+மா - காட்டில் உள்ள மான்கள்.
2. சிந்தையான் - எண்ணி; செத்து - கருதி; தவா - கெடாமல்.
3. பண்பில் - பயனற்ற; அருஞ்சுரம் - அரிய காடு; என்ப - என்று கூறுவர்.
4. நண்பிலார் - நட்பு இல்லாதவர்; நெறி - வழி.

தலைவி கூற்று

நற்றிணை 226 **கணியன் பூங்குன்றனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகள், வன்புறை எதிர்மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவிடை வருந்திய தலைவியை நோக்கிச் சில காலம் பொறுத்திருக்குமாறு தோழி கூற, தலைவி அதை மறுப்பாளாய் வருந்திக் கூறியது.

மரம்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்;
உரம்சாச் செய்யார், உயர்தவம்; வளம்கெடப்
பொன்னும் கொள்ளார் மன்னர், நன்னுதல்!
நாம்தம் உண்மையின் உளேம்; அதனால்
தாம்செய் பொருள்அளவு அறியார் தாம்கசிந்து
என்றூழ் நிறுப்ப, நீள்இடை ஒழியச்
சென்றோர் மன்றநம் காதலர்; என்றும்
இன்னா நிலைமைத்து என்ப;
என்னோரும் அறிப,இவ் உலகத் தானே.

தெளிவுரை

நல்ல நெற்றியைக் கொண்ட தோழியே! இவ்வுலகமாந்தர் மரம் பட்டுவிடுமாறு மருந்துக்கு என முழுவதுமாக எடுத்துக் கொள்ளார். உயர்வான தவம் புரிபவரும் தமது உடல்வலிமை முற்றிலும் கெடுமாறு அத்தவத்தைச் செய்யார். மன்னர்கள் தம் நாட்டு மக்களின் வளம் முற்றும் நீங்குமாறு அவரிடமிருந்து வரி கொள்ளார். தலைவர் நம்மிடம் கொண்டுள்ள அன்பினா லேயே நாமும் உயிர் வாழ்கின்றோம். ஆயினும், பொருளீட்டு தலே தாம் செய்யத்தக்கது எனத் தலைவர் கருதுகிறார். ஆதலால், நான் வருத்தம் கொள்ளுமாறு என்னைத் தனித்து இருக்கவிட்டுத் தாம் பிரிந்து வெயில் நிலை பெற்ற நீண்ட பாலை வழியில் சென்றார். பொருளீட்டுதலே மேலானது என்று உலகத்தோர் கருதுவர். எனவே, அவரும் இதனையே எண்ணிச் சென்றுள்ளார். ஆதலின், நானும் அவர் மீண்டும் வரும்வரை பொறுத்திருப்பேன்.

கருத்து

அவர் பிரிந்திருந்தால் நான் இறந்துபடுவேன் என்பதை அவர் அறிவார்; ஆதலின், விரைந்து வருவார்; நானும் பொறுத்திருப்பேன்.

விளக்கம்

'பொருள் ஈட்டி வருவது இன்பம் நுகர்தற்பொருட்டே. அவ்வின்ப நுகர்ச்சிக்கு இன்றியமையாத நான் நலிவுற்று அழிந்த பின் அவ்வின்பம் வாய்க்குமோ? ஆகவே, என்னைத் தலைவர் நலியச் செய்யார்' என்று பொருத்தமான உவமைகளால் தன் நிலையையும் தன்னைப் பிரிந்த தலைவனின் தன்மையையும் தலைவி விளக்குகின்றாள்.

'மரம் இருந்தால்தான் மரத்தின் பகுதிகளைக் கொள்ள முடியுமென்பதால் மருந்து மரத்தை மாந்தர் முற்றுமாய் அழித்து விடமாட்டார்; உடல் வலிமை இருந்தால்தான் தவத்தைத் தொடர்ந்து புரிய இயலும். அதனால் தவம் செய்வோர் தம் உடல் வலிமையை முற்றிலும் இழந்துவிடும் அளவுக்குத் தவம்

புரியார். மீண்டும் வரி வாங்க வேண்டியது கருதியே அரசரும் மக்களின் வளத்தை ஒருமுறையிலே முற்றிலுமாய்ப் பெற்றிடக் கருதார். இதுதான் உலக இயல்பு. தமக்கு நிலையாகப் பயன் படுவதான ஒன்றை எவருமே முற்றவும் அழித்தற்கு மனம் ஒப்பார். ஆனால், தலைவன் என்னைவிட்டுப் பிரிந்து போய் என்னை வருந்தச் செய்தனரே' என்று தலைவி நினைந்து மனம் நோகின்றாள்.

இவ்வாறு உளம் நைந்தாளாயினும், உலகத்து ஆடவர் தன்மை இதுவே என அவள் அறிவாள். ஆதலின், இதற்குத் தலைவனை நோவதால் பயனில்லை; ஆற்றியிருந்தலே செய்யத் தக்கது என்று கருதித் தலைவி அமைதி கொள்ளுகிறாள்.

சொற்பொருள்

1. சா - சாகும்படியாக.
2. உரம் சா - வலிமை அழியுமாறு; வளம் கெட - மக்களின் வளம் முற்றும் நீங்குமாறு.
3. பொன் - அரசர்க்குச் செலுத்தப்படும் பொருள் முதலான வரிகள்; மன்னர் - அரசர்; நுதல் - நெற்றி.
4. தம் உண்மையின் - தலைவர் இருப்பதாலேயே; உளேம் - இருக்கிறோம்.
5. தாம் செய் பொருள் அளவு அறியார் - தாம் செய்யும் பொருளின் அளவும் பயனும் நமது வாழ்வும் அறமும் என்பது கருதாராய்; தாம் கசிந்து - பொருளீட்டல் மட்டுமே கருதி, மனம் நெகிழ்ந்து; கசிந்து - வருந்தி.
6. என்றூழ் - வெயில்; நீள்இடை - நீண்ட பாலை வழி; ஒழிய - கடந்து.
7. என்னோரும் - எல்லாரும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 191 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருந்த காலத்தில் தலைவி ஆற்றாள் என வருந்திய தோழியிடம் தலைவி, 'அவர் பிரிவினால் நான் வருந்துவேன் என்பது கருதாமற் பிரிந்து சென்ற தலைவர் மீண்டு வரும்போது அவரை நெருங்கவிட மாட்டேன்' என்று கூறியது.

உதுக்காண் அதுவே; இதுஎன மொழிகோ?
நோன்சினை இருந்த இருந்தோட்டுப் புள்ளினம்
தாம்புணர்ந் தமையின் பிரிந்தோர் உள்ளாது
தீம்குரல் அகவக் கேட்டும், நீங்கிய
ஏதி லாளர் இவண்வரின், போதின்
பொம்பல் ஓதியும் புனையல்;
எம்மும் தொடாஅல் என்குவம் மன்னே.

தெளிவுரை

"தோழி! அவர் பிரிவால் உண்டான துன்பத்தை எப்படி எடுத்துரைப்பேன்? வலிய மரக்கிளைகளில் கூடியிருந்த பெருந்தொகுதியான பறவை இனங்கள், தாம் ஒன்றோடொன்று கூடிக் களித்திருக்கின்ற காரணத்தினால், காதலனைப் பிரிந்து வருந்துவோரைப் பற்றிச் சிறிதும் நினையாமல், தம் இனிய குரலால் ஒன்றையொன்று அழைத்துக்கொள்கின்றன. அதைக் கேட்ட பின்பும், அயலார்போல என்னை விட்டு நீங்கிய தலைவர், இங்கே வந்தால், செறிந்து திரண்டுள்ள என் கூந்தலை மலர்களால் அலங்கரிக்க அவரை விட மாட்டேன்; என்னைத் தொடவும் வேண்டா என்றும் கூறுவேன். அங்ஙனம் நான் நடந்துகொள்வதை நீ அப்போது பார்!" என்று தலைவி கூறினாள்.

கருத்து

அவர் வரும்வரையும் ஆற்றியிருப்பேன்; வந்த பின்னர் இடித் துரைப்பேன்; என்னைத் தழுவ விடேன்.

குறிப்பு

கூடியிருப்பதற்கான காலத்தேயும் பிரிந்து செல்லும் வன்னெஞ்சம் கொண்டவராயினார் தலைவர், என்கிறாள் தலைவி.

சொற்பொருள்

1. உதுக்காண் - இனி நடப்பதைப் பார்.
2. நோன் - வலிய; இரு - பெரிய; தோட்டு - தொகுதி, கூட்டம்.
3. உள்ளாது - நினையாது.
4. அகவுதல் - அழைத்தல்.
5. ஏதிலாளர் - அயலார், தலைவர்; போதின் - பொழுதில்.
6. பொம்மல் - செறிந்து திரண்டுள்ள; ஓதி - கூந்தல்.
7. தொடாஅல் - தொட வேண்டா.

தோழி கூற்று

நற்றிணை 237 **காரிக் கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தோழி உரை மாறுபட்டது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைத் தலைவி ஆற்றாள் எனக் கருதித் தோழி தேறுதல் மொழி உரைத்தனள். அப்போது தலைவி தானே ஆற்றியிருக்கும் திறங்கண்டு தோழி வியந்து கூறியது.

நனிமிகப் பசந்து தோளும் சாஅய்,
பனிமலி கண்ணும் பண்டு போலா;
இன்உயிர் அன்ன பிரிவுஅருங் காதலர்
நீத்து நீடினர் என்னும் புலவி

உட்கொண்டு ஊடின்றும் இலையோ? மடந்தை!
உவக்காண் தோன்றுவ, ஓங்கி வியப்புடை
இரவலர் வரூஉம் அளவை, அண்டிரன்
புரவுஎதிர்ந்து தொகுத்த யானை போல,
உலகம் உவப்ப ஓதுஅரும்
வேறுபல் உருவின், ஏர்தரும் மழையே!

தெளிவுரை

"தலைவியே! இரவலர் வரும்போது அவர்களுக்கு வழங்கக் கருதி ஆய் அண்டிரன் பல யானைகளைக் கொண்டிருந்தான். அவனுடைய யானைக்கூட்டம் போன்று, உலகம் மகிழுமாறு மழை பெய்ய எழுச்சி மிகுந்த மேகங்கள் ஓங்கித் தோன்றும். அவற்றை அதோ நீ பார்! இஃது அவர் மீண்டும் வருவதாய்க் கூறிய பருவம் அன்றோ? இதுவரை (தலைவனைப் பிரிந்த மகளிர் போல) உன் மேனி பசப்புற, தோள்கள் மெலிவுற, கண்ணீர் மல்கியவாறு இருந்தாய்! ஆயினும், இனிய உயிர் போன்றவரும், பிரிவதற்கு அரியவருமான உன் காதலர், உன்னை விட்டு நெடுந்தூரம் சென்றுள்ளார் என்று கூறிச் சினந்து நீ உன் உள்ளத்தால் ஊடல் கொள்ளவே இல்லையே! இஃதென்ன வியப்பு?" என்று தோழி கூறினாள்.

கருத்து

ஆற்றாமையோடு இருக்க வேண்டிய நீ ஆற்றியிருக்கிறாய்; இது வியப்பே!

விளக்கம்

"தலைவி! பிரிந்த காதலர் குறித்த காலத்தில் வாராது நீட்டிப் பாராயின் மகளிர் தம் மேனி பசப்புற வருந்தியிருப்பர். கார் காலம் தொடங்கியதால் மழை பெய்யத் தொடங்கிவிட்டது. இது கண்டு உன் நுதல் பசப்புற்று, தோள் மெலிவுற்று, கண்களில் நீர் நிறைந்து ஒளி மழுங்கியுள்ளது; ஆனால், மற்ற மகளிர்போல நீ உள்ளத்தால் ஊடுதலின்றி இருக்கின்றாய். இஃது எனக்கு வியப்பளிப்பதாய் இருக்கிறது" என்று ஆற்றாமையோடிருக்க

வேண்டிய தலைவி, ஆற்றியிருப்பது கண்டு தோழி வியந்து கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நனிமிக - மிகவும்; பசந்து - பசலையுற்று; சாஅய் - மெலிந்து.
2. பனிமலி - கண்ணீர்த்துளி மிகுந்து; பண்டுபோலா - முன்பு போன்று இல்லை.
4. நீத்து - பிரிந்து; நீடினர் - பிரிவுக்காலத்தை நீட்டி,ஹதார்; புலவி - வருத்தம்.
5. ஊடின்றும் இலையோ? - ஊடல் கொள்ளவும் இல்லையே.
6. உவக்காண் - அதோ பார்.
7. இரவலர் - யாசிப்போர்; அண்டிரன் - ஆய் அண்டிரன், வள்ளல்களுள் ஒருவன்..
8. புரவு - கொடுத்தல்; எதிர்ந்து - எதிர்நோக்கி; தொகுத்த - சேர்த்து வைத்த.
9. ஓதுஅரும் - சொல்லுதற்கரிய.
10. வேறுபல் உருவின் - பல வேறு உருவங்களுடன்; ஏர்தரும் - எழும்; மழை - மேகம்.

திருக்குறள், அதிகாரம் 120 தனிப்படர் மிகுதி

தலைவி கூற்று

திருக்குறள் 1191 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

'காதலரும் ஆற்றாராய்க் கடிதின் வருவர்; நீ அவரோடு பேரின்பம் நுகர்தி' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'உன்னைப் போன்றே ஆற்றாது வருந்தியிருக்கும் தலைவரும் விரைந்து வருவார்; அவரோடு சேர்ந்து பேரின்பம் நுகர்க' என்று, தன்னிடம் சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழ்இல் கனி.

தெளிவுரை

தாம் விரும்பும் தலைவர் தம்மை விரும்பும் நிலையிலுள்ள மகளிரே, விதையில்லாக் கனியைப் போன்ற வாழ்க்கை பெற்றவர் ஆவர்.

கருத்து

தம் தலைவரால் காதலிக்கப்படும் மகளிரே, இன்ப வாழ்வு என்னும் விதையில்லாப் பழத்தைப் பெற்றவராவர்.

விளக்கம்

பழங்களில் உள்ள விதை, அதை உண்ணும்போது தடையாய் இருக்கும். காதலின்பம் துய்க்கும்போது பழத்தில் விதை தடையாய் இருப்பதுபோலப் பிரிவும் தடையாய் நேரிடுகிறது. ஆதலால், பிரிவின்றி இணைந்து வாழ்வதே விதையில்லாப் பழம் போலத் தடையின்றி இன்பம் துய்க்க வழி செய்யும். தான் விதை யில்லாப் பழம்போலத் துய்ப்பதற்குத் தக்கவளாய் இருந்தும், தலைவர் தன்னைப் பிரிந்து சென்றுள்ளாரே என்பது தலைவி யின் வருத்தம்.

குறிப்பு

காதலர், பிரிவின்றி இணைந்து வாழ்வாராயின், தடையின்றி முழு இன்பம் பெறலாம்.

சொற்பொருள்

1. தாம் வீழ்வார் - தாம் விரும்பிய தலைவரையே; வீழப் பெற்றவர் - தம்மை விரும்புகின்ற காதலராய்ப் பெற்ற மகளிர்.
2. காமத்து - இன்ப வாழ்வின்; காழ்இல் கனி - விதையில்லாப் பழத்தை; பெற்றார் - பெற்றவராவர்.

தலைவி கூற்று

திருக்குறள் 1192 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

'காதலரும் ஆற்றாராய்க் கடிதின் வருவர்; நீ அவரோடு பேரின்பம் நுகர்தி' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'உன்னைப் போன்றே ஆற்றாது வருந்தியிருக்கும் தலைவரும் விரைந்து வருவார்; அவரோடு சேர்ந்து பேரின்பம் நுகர்க' என்று, தன்னிடம் சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

வாழ்வார்க்கு வானம் பயந்(து)அற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி.

தெளிவுரை

தன்னை விரும்பும் காதலிக்கு அவள் காதலன் காட்டும் அன்பு, மழையை நோக்கி வாழ்பவர்க்கு வான்மழை பெய்வது போன்றது.

கருத்து

காதலிக்குக் காதலன் காட்டும் அன்பு, வாழும் உயிர்க்கு வான் மழை போன்றது.

விளக்கம்

வானிலிருந்து விழும் மழை, உலகைக் காக்கிறது. அதுபோலக் காதலன் அன்பு, காதலியை வாழ்விக்கிறது.

குறிப்பு

'மழை பொழியாமையால் உலகம் வாடுவதுபோலக் காதலன் வாராமையால் நான் வாடியிருக்கிறேன். மழை பொழிந்ததும் உலகம் செழிப்பதுபோலக் காதலன் வந்ததும் நானும் மகிழ்வேன்' என்று, தலைவி தோழிக்குக் கூறினாள்.

சொற்பொருள்

1. வீழ்வார்க்கு - (காதலனை) விரும்பும் காதலிக்கு.
2. வீழ்வார் - அவள் விரும்பும் காதலன்; அளிக்கும் அளி - காட்டும் அன்பு.
1. வாழ்வார்க்கு - உலகில் மழையை நோக்கி வாழ்பவர்க்கு; வானம் பயந்து அற்று - மழை பெய்வது போன்றது.

தலைவி கூற்று

திருக்குறள் 1193 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

'காதலரும் ஆற்றாராய்க் கடிதின் வருவர்; நீ அவரோடு பேரின்பம் நுகர்தி' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'உன்னைப் போன்றே ஆற்றாது வருந்தியிருக்கும் தலைவரும் விரைந்து வருவார்; அவரோடு சேர்ந்து பேரின்பம் நுகர்க' என்று, தன்னிடம் சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

வீழுநர் வீழப் படுவார்க்கு அமையுமே
வாழுநம் என்னும் செருக்கு.

தெளிவுரை

தன்னை விரும்பும் கணவனால், தான் விரும்பப்படும் மனைவிக்குத்தான், 'நாம் மகிழ்ச்சியான வாழ்வு வாழ்கிறோம்' என்னும் பெருமிதம் உண்டாகும்.

கருத்து

கணவனுடன் சேர்ந்து வாழ்கிறோம் என்பதே மனைவிக்குப் பெரு மிதம்.

விளக்கம்

"*பிரிந்துள்ள கணவர் வந்து சேரும்போதுதான் என் வாழ்க்கையில் மகிழ்ச்சியும் பெருமிதமும் உண்டாகும்*" என்று, தலைவி தோழிக்குக் கூறினாள்.

குறிப்பு

வாழ்க்கை என்பது கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்வதுவே!

சொற்பொருள்

1. வீழுநர் - தன்னை விரும்புவரால் (கணவரால்); வீழப்படுவார்க்கு - விரும்பப்படுபவர்க்கு (மனைவிக்கு மட்டுமே).

2. வாழுநம் - நாம் மகிழ்ச்சியாக வாழ்கிறோம்; என்னும் செருக்கு - என்னும் பெருமிதம்.
1. அமையும் - உண்டாகும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1194 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

'காதலரை இயற்பழித்தலை அஞ்சி, அவர் அருளின்மை மறைத்த நீ, கடவுட் கற்பினையாகலின், மகளிரால் நன்கு மதிக்கப்படுதி' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

" 'தலைவியைப் பிரிந்து அவளைப் பிரிவுத் துன்பத்துக்காளாக்கினான்' என்று ஊரார் அவன் இயல்புகளைக் குறை கூறுவர் என்றஞ்சி, அவ்வாறு அவர்கள் குறை கூறாதிருக்க, நீ பிரிவை ஆற்றியிருந்தாய்; ஆதலால் நீ மகளிரால் நன்கு மதிக்கப்படுவாய்" என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

வீழப் படுவார் கெழீஇயலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅர் எனின்.

தெளிவுரை

நான் விரும்புகின்ற தலைவன் என்னை விரும்பவில்லை என்றால், அவனை விரும்பும் நான் நல்வினைப் பயன் இல்லாதவள் ஆவேன்.

கருத்து

தான் விரும்பும் தலைவன் தன்னை விரும்புவதே நல்வினைப் பயன்.

விளக்கம்

நான் பிரிவினை ஆற்றியிருக்கிறேன். ஆதலால், தலைவன் குறை வெளிப்படவில்லை. ஆதலால், மகளிர் என்னை மதிக்கின்றனர். அதனால் என்ன பயன்? நான் விரும்புபவர் என்னை விரும்பவில்லையே! பிரிந்து என்னைத் தனிமையில் வாடவிட்டிருக்கிறாரே; நான் நல்வினைப் பயன் இல்லாதவள் ஆயினேன்.

சொற்பொருள்

1. தாம் வீழ்வார் - தாம் விரும்புகின்ற (தலைவன்).
2. வீழப் படார் எனின் - தம்மை விரும்பவில்லை என்றால்.
1. வீழப்படுவார் - (அவ்வாறு) விரும்பியவர்; கெழீஇயிலர் - நல்வினை இல்லாதவர்.

தலைவி கூற்று

திருக்குறள் 1195 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

'அவர்மேல் காதலுடைமையின் அவர் கருத்தறிந்து ஆற்றினாய்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவி தலைவன்மேல் அளவற்ற காதலுடையவள் ஆதலின், ஊரார் அவன் இயல்பைப் பழித்து விடக்கூடாது என்பதற்காகத் தலைவி அவன் பிரிவைப் பொறுத்திருக்கிறாள்' என்று தோழி சொன்னபோது தலைவி சொல்லியது.

நாம்காதல் கொண்டார் நமக்(கு)எவன் செய்பவோ?
தாம்காதல் கொள்ளாக் கடை.

தெளிவுரை

நம்மால் காதலிக்கப்பட்டவர் நம்மேல் காதல் கொள்ளாத நிலையில், அவர் நமக்கு என்ன நன்மை செய்யப் போகிறார்?

கருத்து

ஒருமித்த காதல் இல்லையேல் ஒரு பயனும் இல்லை.

விளக்கம்

நான் அவரைக் காதலிக்கிறேன். அவரும் என்னைக் காதலித்தால்தான் நன்மை விளையும். (என்னளவு அவரும் என்மேல் காதல் கொண்டிருப்பார் என்பதால்தான் பிரிவிலும் ஆற்றியிருக்கிறேன்.)

குறிப்பு

காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்.

சொற்பொருள்

1. நாம் காதல் கொண்டார் - நம்மால் காதலிக்கப்பட்டவர்.

2. தாம் காதல் கொள்ளாக் கடை - நம் மேல் காதல் கொள்ளாதபோது; நமக்கு எவன் செய்ப - நமக்கு என்ன நன்மை செய்யப் போகிறார்?

தலைவி கூற்று

திருக்குறள் 1196 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

அவர்மேல் காதலுடைமையின் அவர் கருத்தறிந்து ஆற்றினாய் என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவி தலைவன்மேல் அளவற்ற காதலுடையவள் ஆதலின், ஊரார் அவன் இயல்பைப் பழித்து விடக்கூடாது என்பதற்காகத் தலைவி அவன் பிரிவைப் பொறுத்திருக்கிறாள்' என்று தோழி சொன்னபோது தலைவி சொல்லியது.

ஒருதலையான் இன்னாது காமம்;காப் போல
இருதலை யானும் இனிது.

தெளிவுரை

ஒரு பக்கக் காதல் பெருந்துன்பம். காவடியின் இரு பக்கமும் சம எடை இருப்பதுபோல, இருவரிடமும் காதல் வந்திருப்பதே இனிமை.

கருத்து

ஒத்த காதலே இனிமை.

விளக்கம்

இருவரில் ஒருவரிடம் காதல் கூடியும் மற்றவரிடம் குறைந்து மிருந்தால், அது துன்பத்தையே தரும். காவடியின் இரு பக்கமும்

சமச் சுமை இருப்பதுபோல, இருவர் காதலும் ஒத்ததாய் இருந்தால்தான் இன்பம்.

குறிப்பு

காவடியில் சுமை ஒரு பக்கம் கூடியும் மறுபக்கம் குறைந்தும் இருந்தால் காவடியைச் சரியாகத் தூக்க முடியாது. அதுபோலக் காதலர் இருவரிடமும் காதல் சம அளவினதாய் இல்லையாயின், காதலின்பத்தை நிறைவாய்த் துய்க்க முடியாது.

சொற்பொருள்

1. காமம் - காதல்; ஒருதலையான் இன்னாது - ஒரு பக்கமாய் (காதலர் இருவரிடத்தில் ஒருவரிடம் மட்டுமே) இருத்தல்; இன்னாது - துன்பமானது; காப்போல - காவடிபோல.
2. இருதலையானும் இனிது - இரு பக்கங்களிலும் ஒத்திருப்பது இன்பமானது.

தலைவி கூற்று

திருக்குறள் 1197 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

அவர்மேல் காதலுடைமையின் அவர் கருத்தறிந்து ஆற்றினாய் என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவி தலைவன்மேல் அளவற்ற காதலுடையவன் ஆதலின், ஊரார் அவன் இயல்பைப் பழித்து விடக்கூடாது என்பதற்காகத் தலைவி அவன் பிரிவைப் பொறுத்திருக்கிறாள்' என்று தோழி சொன்னபோது தலைவி சொல்லியது.

பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்
ஒருவர்கண் நின்றொழுகு வான்.

தெளிவுரை

(காதலர் இருவரிடத்தும் ஒத்திராமல்) ஒருவர் பக்கமே நின்று காமன் என்னை மட்டும் வாட்டுகிறான். அதனால் நான் அடையும் வருத்தத்தையும் துன்பத்தையும் அவன் அறியானோ?

கருத்து

காமன் என்னை மட்டும் வருத்துவது ஏன்?

விளக்கம்

காமன் என்னை வாட்டுவதுபோலத் தலைவனையும் வாட்டி யிருந்தால், அவன் என்னை விட்டுப் பிரிந்திருக்க மாட்டா னன்றோ? காமன் ஒருவரைத்தான் வாட்ட வேண்டும் என்று விரும்புவானேயானால், தலைவன் பிரிந்திருக்கும் இப்போது என்னை விட்டு அவனை வாட்டினால் அவன் என்னை நினைந்து உடனே திரும்புவானல்லனோ? காமனுக்கு ஏன் இந்த ஒருதலை எண்ணம்?

குறிப்பு

'காதலுக்குக் கண்ணில்லை' என்பர். அதுபோலக் காமனுக்கும் கண்ணில்லையோ?

சொற்பொருள்

1. காமன் - காமன் என்பான்.
2. ஒருவர் கண்ட (இருவரிடத்தும் ஒன்றுபோல இராமல்) என் ஒருத்தி பக்கம் மட்டும்; நின்று ஒழுகலான் - நின்று இயங்குவதால் (என்னைப் பிடித்து வாட்டுவதால், நான் அடையும்).
1. பருவரலும் - வருத்தத்தையும்; பைதலும் - துன்பத்தையும்; காணான்கொல்? - (அக் காமன்) அறியாது போயினனோ?

தலைவி கூற்று

திருக்குறள் 1198 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் தூது வரக் காணாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனிடமிருந்து செய்தி ஏதும் வரப் பெறாத தலைவி, தன் நெஞ்சிடம் சொல்லியது.

வீழ்வாரின் இன்சொல் பெறாஅது உலகத்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

தெளிவுரை

தம்மால் நேசிக்கப்படுபவரின் இனிய சொல்லைக் கேட்க முடியாமல், உலகில் வாழ்கின்றவரினும் கொடுமையடைபவர் வேறு யாரும் இலர்.

கருத்து

காதலிப்பவரின் சொல் கேளாதிருப்பதினும் கொடுமையானது வேறு எதுவுமில்லை.

விளக்கம்

"தலைவன் பிரிந்து சென்றதிலிருந்து அவரிடமிருந்து இனிய சொல் எதனையும் பெறாது வாடும் என்னைப் போன்று கொடுமையடைந்தவர் உலகில் வேறு யாரும் இருக்க முடியாது" என்று, தலைவி தன் நெஞ்சிடம் கூறுகிறாள்.

குறிப்பு

காதலரின் சொல்லைக் கேட்க முடியாத நெஞ்சு என்ன நெஞ்சோ?

சொற்பொருள்

1. வீழ்வாரின் - தம்மால் நேசிக்கப்படுபவரின்; இன்சொல் - இனிய சொல்; பெறாஅது - பெற (கேட்க) முடியாமல்; உலகத்து - இவ்வுலகத்தில்.
2. வாழ்வாரின் - வாழ்கின்றவரினும்; வன்கணார் இலர் - கொடுமை யடைபவர் வேறு யாரும் இருக்க முடியாது.

தலைவி கூற்று

திருக்குறள் 1199 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் தூது வரக் காணாது சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனிடமிருந்து செய்தி ஏதும் வரப் பெறாத தலைவி, தன் நெஞ்சிடம் சொல்லியது.

நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்டு
இசையும் இனிய செவிக்கு.

தெளிவுரை

என்னால் விரும்பப்பட்ட தலைவர் என்னிடம் அன்பு செலுத்தாது போனாலும், அவரைப் பற்றிய பேச்சு என் காதில் இனிமை சேர்க்கிறது.

கருத்து

அவர் பற்றிய சொற்களைக் கேட்கும் போதெல்லாம் என் செவி இனிக்கிறது.

விளக்கம்

நெஞ்சே! தலைவர் பிரிந்து என்னைத் துன்பத்திற்கு ஆளாக்கி விட்டாரே என்று அவர்மீது வருத்தம் கொள்கிறேன். என்றாலும், அவர் பற்றி யாராவது பேசும் சொல்லைக் கேட்கும் போது, என் செவிகளில் இனிமை பாய்கிறது.

குறிப்பு

தலைவர் பற்றி ஒரு சொல் கேட்கும்போது தலைவிக்குப் பேரின்பம் உண்டாகிறது.

சொற்பொருள்

1. நசைஇயார் - (என்னால்) விரும்பப்பட்டவர் (தலைவர்); நல்கார் எனினும் - என்னிடம் அன்பு செலுத்தாது போனாலும்; அவர் மாட்டு - அவரைப் பற்றிய.

2. இசையும் - எச்சொல்லும்; செவிக்கு இனிய - என் செவிக்கு இனிமையாய் இருக்கிறது.

தலைவி கூற்று

திருக்குறள் 1200 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் தூது வரப்பெறாது தான் தூதுவிடக் கருதியவள் நெஞ்சொடு சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனிடமிருந்து செய்தி எதுவும் வராததால் வருந்திய தலைவி, தன் நெஞ்சைத் தூதாய் அனுப்பக் கருதி, அதனிடம் சொல்லியது.

உறாஅர்க்கு உறுநோய் உரைப்பாய் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு!

தெளிவுரை

என் நெஞ்சே! நீ வாழ்க! என் மேல் சிறிதும் அன்பில்லாத தலைவரிடம் என் காதல் நோயைத் தெரிவிக்கக் கருதுகிறாய். அஃது அரிது. அதைவிடக் கடலைத் தூர்க்கச் செல்; அஃது எளிது.

கருத்து

நெஞ்சே! நீ தலைவரிடம் சென்று சொல்வது அரிது.

விளக்கம்

நெஞ்சே! பொறுத்துக்கொள்; அவர் வந்த பின் உன் வேதனையைத் தீர்த்துக்கொள். என் பிரிவுத் துன்பத்தை அவரிடம் அறிவிக்கத் துடிக்கிறாயே! அது முடியாத செயல். அதைவிடக் கடலைத் தூர்க்க நினை; அஃது எளிது.

குறிப்பு

நெஞ்சைத் தானாகவே எண்ணித் தலைவி பேசிய பேச்சு இது.

சொற்பொருள்

2. நெஞ்சு - என் நெஞ்சே!; வாழிய - நீ வாழ்க!
1. உறாஅர்க்கு - உன்னிடம் அன்பு இல்லாதவரிடம்; உறுநோய் உரைப்பாய் - உனக்கு நேர்ந்த துன்பத்தைக் கூறக் கருதுகிறாய் (அஃது அரிது).

1-2. கடலைச் செறாஅஅய் - (அதைவிட) கடலைத் தூர்க்க முயல்க (அஃது எளிது).

திருக்குறள், அதிகாரம் 121 நினைந்து அவர் புலம்பல்

தலைவன் கூற்று

திருக்குறள் 1201 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தூதாய்ச் சென்ற தோழனுக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவி உன் பிரிவால் பெரிதும் வருந்தியிருக்கிறாள்; உனக்கும் அதே வருத்தம்தானே இருக்கும்' எனத் தூதாய் வந்த தோழன் சொல்ல, அவனுக்குத் தலைவன் சொல்லியது.

உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.

தெளிவுரை

மனத்தில் நினைத்தாலே நீங்காத மகிழ்ச்சியைத் தருதலால், (உண்டால் மட்டுமே மகிழ்ச்சி தரும்) கள்ளைவிடக் காமம் இன்ப மானது.

கருத்து

காமம், கள்ளினும் இன்பமானது.

விளக்கம்

காமம் சேர்ந்திருக்கும்போது மட்டுமன்று; பிரிவில் நினைக்கும்போதும் நீங்காத மகிழ்ச்சியைத் தருகிறது. கள்ளோ உண்ணும்போது மட்டுமே இன்பம் தந்து, நினைக்கும்போது இன்பம் தருவதில்லை. ஆதலால், கள்ளினும் காமம் இன்ப மானது.

குறிப்பு

'பிரிவு துன்பம்தான்! ஆனால் தலைவியைச் சேர்ந்திருந்த நினைவே இன்பம் தருகிறது; அதனால், தான் ஆற்றியிருப்பதைப் புலப்படுத்தி, பணி முடிந்ததும் காலம் தாழ்த்தாது திரும்புவேன்' என்று தூதாய் வந்த தோழனிடம் தலைவன் கூறினான்.

சொற்பொருள்

1. உள்ளினும் - நினைத்தாலும்; தீரா - நீங்காத; பெருமகிழ் - மிக்க மகிழ்ச்சியை; செய்தலால் - தருதலால்.
2. கள்ளினும் - (உண்டால் மட்டுமே மகிழ்ச்சி தரும்) கள்ளைவிட; காமம் இனிது - காமம் இன்பமானது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1202 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தூதாய்ச் சென்ற தோழனுக்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவி உன் பிரிவால் பெரிதும் வருந்தியிருக்கிறாள்; உனக்கும் அதே வருத்தம்தானே இருக்கும்' எனத் தூதாய் வந்த தோழன் சொல்ல, அவனுக்குத் தலைவன் சொல்லியது.

எனைத்தொன்(று) இனிதேகாண் காமம்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன்(று) இல்.

தெளிவுரை

தாம் விரும்பும் காதலரை நினைத்ததும் பிரிவால் வரக்கூடிய துன்பம் இல்லாமல் போகிறது; ஆதலால் காமம் எத்தகையதா யினும் இன்பம் தருவதேயாம்.

கருத்து

காதலிப்பவரை நினைக்கும்போதே துன்பம் ஒரு வகையில் நீங்குகிறது என்பதால், பிரிவும் ஒரு வகையில் இன்பமே.

விளக்கம்

தனக்குப் பிரியமானவர்களைப் பிரிந்திருக்கும்போது அவர்களைத் தொடர்ந்து நினைப்பதால் உண்டாகும் இன்பம் பிரிவுத் துன்பத்தை நீக்குகிறது. காதலைப் போல வேறெதுவும் இதுபோல நினைத்தவுடன் இன்பம் உண்டாக்குவதில்லை. இந்த இன்பம் பிரிவை ஆற்றியிருக்கச் செய்கிறது.

குறிப்பு

தலைவன் தான் ஆற்றியிருப்பதைத் தோழனுக்குக் குறிப்பாய்க் கூறுகிறான்.

சொற்பொருள்

1. தாம் வீழ்வார் - தாம் விரும்பும் காதலரை; நினைப்ப - நினைத்ததும்.
2. வருவது ஒன்று இல் - வரக்கூடிய துன்பம் இல்லையாகிறது (அதனால்).
1. காமம் - காமம்; எனைத்து - எத்தகையது ஆயினும்; இனிது ஒன்று - இன்பம் தருவதேயாம்.

தலைவி கூற்று

திருக்குறள் 1203 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் வருந்தியிருக்கும் தலைவிக்கு, 'தலைவர் விரைவில் வந்துவிடுவார்; ஆற்றியிரு' என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.

தெளிவுரை

எனக்குத் தும்மல் உண்டாவதுபோலத் தோன்றி இல்லாது நின்றுவிடுகிறது. ஆதலால் என் தலைவர் என்னை நினைந்து மறந்து விடுகிறார் போலும்!

கருத்து

தலைவர் என்னை நினைக்கத் தொடங்கி நினைக்காமல் விட்டு விடுகிறாரோ?

விளக்கம்

"மிகவும் நெருங்கியவர் நினைக்கும்போது தும்மல் உண்டாகும் என்பது நம்பிக்கை. தலைவிக்குத் தும்மல் உண்டாவது போன்று தோன்றி இல்லாது போய்விட்டது. அதனால் தனக்கு நெருக்கமான தலைவன் தன்னை நினைக்கத் தொடங்கி உடனே நிறுத்திக் கொண்டான்போலும்" என்று, தலைவி தோழியிடம் கூறி வருந்துகிறாள்.

குறிப்பு

"தலைவன் மேற்கொண்ட பணி முடிந்ததாய்த் தோன்றி முடியாத தாயிற்றுப்போலும். அதனால்தான் தலைவன் தன்னை நினைந்து, நினையாமற் போனார்" என்று, தலைவி கருதி வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. தும்மல் - தும்மல்.
2. நினைப்பது போன்று - உண்டாவது போன்று (தோன்றி); கெடும் - நின்று விட்டது.
1. நினைப்பவர் போன்று - (காதலர்) நினைப்பதுபோல இருந்து; நினையார் கொல் - நினையாது விட்டாரோ?

தலைவி கூற்று

திருக்குறள் 1204 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் வருந்தியிருக்கும் தலைவிக்கு, 'தலைவர் விரைவில் வந்துவிடுவார்; ஆற்றியிரு' என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

யாமும் உளேம்கொல் அவர்நெஞ்சத்(து) எம்நெஞ்சத்(து)
ஓஒ உளரே அவர்.

தெளிவுரை

என் நெஞ்சத்துள் என் தலைவர் எப்போதும் இருக்கிறார். அதுபோல, 'அவர் உள்ளத்தில் நான் இருக்கின்றேனோ?' (தெரியவில்லையே).

கருத்து

என் உள்ளத்தில் தலைவர் இருப்பதுபோல, நான் அவருள்ளத்தில் இருக்கின்றேனா?

விளக்கம்

நான் தலைவரையே எண்ணியிருக்கிறேன். அதுபோல அவரும் என்னை எண்ணியிருப்பாரா? என்று, தலைவி தோழியிடம் கேட்கிறாள்.

குறிப்பு

என் உள்ளத்தில் அவர் இருப்பதுபோல, அவருள்ளத்தில் நானிருந்தால் என்னை இவ்வாறு கலங்க விட்டிருப்பாரா? என்று, தலைவி குறிப்பாய்க் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. ஓஓ - ஓ; எம் நெஞ்சத்து - என் நெஞ்சத்தில்.
2. அவர் உளரே - அவர் உள்ளாரே (அதுபோல).
1. அவர் நெஞ்சத்து - அவர் நெஞ்சத்தில்; யாமும் உளேம் கொல்? - நானும் இருப்பேனா?

தலைவி கூற்று

திருக்குறள் 1205 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தலைமகனை நினைந்து வருந்துகின்ற தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் வருந்தியிருக்கும் தலைவிக்கு, 'தலைவர் விரைவில் வந்துவிடுவார்; ஆற்றியிரு' என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

தம்நெஞ்சத்(து) எம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத்(து) ஓவா வரல்.

தெளிவுரை

தன் உள்ளத்தில் என்னை நுழைய விடாது காவல் செய்து கொண்ட காதலர், தான் மட்டும் என் உள்ளத்தில் இடைவிடாமல் நுழைவதற்கு நாணம் அடைய மாட்டாரோ?

கருத்து

காதலர் என்னை எண்ணாதிருப்பது ஏன்?

விளக்கம்

தன் உள்ளத்துள் என்னை வைத்துக்கொள்ளாத அவர், என் உள்ளத்துள் மட்டும் விடாது நுழைகிறாரே; அவருக்கு வெட்கமே இல்லையோ?

குறிப்பு

ஒருவரைத் தம்மிடத்துக்கு வராது தடுத்துவிட்டு, தாம் மட்டும் அவரிடத்துக்குச் செல்வதற்கு வெட்கப்பட வேண்டாமா?

சொற்பொருள்

1. தம் நெஞ்சத்து - தம் உள்ளத்தில்; எம்மை - என்னை; கடி கொண்டார் - (நுழைய விடாது) காவல் கொண்டவர்.
2. எம் நெஞ்சத்து - என் உள்ளத்தில்; ஓவாவரல் - இடைவிடாமல் நுழைவதற்கு.
1. நாணார் கொல் - நாணம் அடைய மாட்டாரோ?

தலைவி கூற்று

திருக்குறள் 1206 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

அவரொடு புணர்ந்த ஞான்றை இன்பத்தை நினைந்து இறந்துபாடு எய்தா நின்றாய்; அதுமறத்தல் வேண்டும் என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

“தலைவன் பிரிந்திருக்கும் இவ்வேளையில் அவனோடு கூடியிருந்த போது பெற்ற இன்பத்தை நினைந்து நினைந்து இறந்துவிடுவாய் போலத் தோன்றுகிறது. பிரிவுத் துன்பத்தை மறந்து ஆற்றியிருத்தல் வேண்டும்” என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

மற்(று)யான் என்உளேன் மன்னோ அவரொ(டு)யான்
உற்றநாள் உள்ள உளேன்.

தெளிவுரை

நான் தலைவரோடு கூடியிருந்த நாளில் பெற்ற இன்பத்தை இடைவிடாது நினைத்தலால் உயிரோடு இருக்கிறேன். அதுவன்றி நான் உயிரோடிருக்க வேறு என்ன இருக்கிறது?

கருத்து

தலைவரோடு முன்பு பெற்ற இன்பத்தை நினைத்திருப்பதாலேயே உயிரோடுள்ளேன்.

விளக்கம்

என் தலைவர் தந்த இன்பத்தை எண்ணியிருப்பதால்தான் உயிர் வாழ்கிறேன். அவரைப் பிரிந்தபோது அந்த எண்ணம் அல்லாமல் எனக்கு உலகில் வேறு என்ன இருக்கிறது?

குறிப்பு

தலைவனைப் பிரிந்துள்ள பெண்ணுக்கு, அவன் தந்த இன்பத்தை நினைத்திருப்பதன்றி வேறு என்ன இருக்கிறது?

சொற்பொருள்

1. யான் - நான்; அவரொடு - தலைவரொடு.
2. உற்ற நாள் - கூடியிருந்த நாளில் (பெற்ற இன்பத்தை); உள்ள - (இடைவிடாது) நினைத்தலால்; உளேன் - உயிரோடு இருக்கிறேன்.
1. மற்றுயான் - அதுவன்றி நான்; எவன் உளேன்? - எதனால் உயிரோடு இருக்கிறேன்?

தலைவி கூற்று

திருக்குறள் 1207 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

அவரொடு புணர்ந்த ஞான்றை இன்பத்தை நினைந்து இறந்துபாடு எய்தா நின்றாய்; அதுமறத்தல் வேண்டும் என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

"தலைவன் பிரிந்திருக்கும் இவ்வேளையில் அவனோடு கூடியிருந்த போது பெற்ற இன்பத்தை நினைந்து நினைந்து இறந்துவிடுவாய்போலத் தோன்றுகிறது. பிரிவுத் துன்பத்தை மறந்து ஆற்றியிருத்தல் வேண்டும்" என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

மறப்பின் எவன்(ஆ)வன் மன்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்.

தெளிவுரை

காதலனுடன் கூடியிருந்த இன்பத்தை மறவேன்; அவர் பிரிவை நினைத்தாலே அது என் உள்ளத்தைச் சுடுகிறது; காதலன் தந்த இன்பத்தை நான் மறந்தால் என் நிலை என்ன ஆகும்? (உயிருடன் இருக்கமாட்டேன்.)

கருத்து

காதலனுடன் கூடியிருந்த இன்பத்தை நினைந்திருப்பதாலேயே உயிர் வாழ்கிறேன்.

விளக்கம்

காதலனுடன் சேர்ந்து வாழ்ந்து இன்பமடைந்தேன்; அவன் பிரிந்து சென்றுள்ளதோ என் உள்ளத்தைச் சுடுகின்றது. இந் நிலையில் அவன் தந்த இன்பத்தை நினைந்திருப்பதே என்னை வாழவைக்கிறது.

குறிப்பு

காதலன் அன்பே காதலிக்கு உயிர்.

சொற்பொருள்

1. மறப்பறியேன் - (காதலனுடன் கூடியிருந்த இன்பத்தை) என்றும் மறவேன்.
2. உள்ளினும் - (அவர் பிரிவை) நினைத்தாலே; உள்ளம் சுடும் - உள்ளம் சுடுகின்றது.
1. மறப்பின் - (காதலன் தந்த இன்பத்தை) மறந்தால்; எவன் ஆவன்? எந்நிலை என்ன ஆகும்?

தலைவி கூற்று

திருக்குறள் 1208 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

இப்பிரிவுத் துன்பம் அறிந்து வந்து காதலர் நினக்கு இன்பம் செய்வார் என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'காதலனைப் பிரிந்திருப்பதை நினைந்து வருந்தியிராதே! உன் துன்பம் அறிந்து அவன் வந்து உனக்கு இன்பம் தருவான்' என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

எனைத்து நினைப்பினும் காயார்; அனைத்(து)அன்றோ
காதலர் செய்யும் சிறப்பு.

தெளிவுரை

என் காதலரை நான் எவ்வளவு நினைத்தாலும் அவர் சினங் கொள்ளார். இதுவே காதலர் எனக்குச் செய்யும் பெருஞ்சிறப்பு.

கருத்து

நான் காதலரை எந்நேரமும் எண்ணியிருப்பேன்.

விளக்கம்

அவர் நினைவே என் உள்ளத்தில் எப்பொழுதும் உள்ளது. அதுபோல என் நினைவும் அவர் உள்ளத்தில் இருக்க வேண்டு மன்றோ? இருந்திருப்பின் என்னை வாடவிட்டு வராமல் இருப்பாரா?

குறிப்பு

'ஓயாது நான் அவரை நினைத்திருக்க, அவர் என்னை நினைப்ப தில்லையோ!' என்று, தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. எனைத்து - எவ்வளவு; நினைப்பினும் - (அவரை) நினைத்தாலும்; காயார் - (அதற்காக அவர்) சினங்கொள்ளார்; அனைத்து அன்றோ? - இத்தனை பெரியது அன்றோ.
2. காதலர் செய்யும் சிறப்பு - காதலர் எனக்குச் செய்யும் பெருஞ்சிறப்பு.

தலைவி கூற்று

திருக்குறள் 1209 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் தூதுவரக் காணாது வருந்துகின்றாள், வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

"பிரிந்திருக்கும் தலைவி தலைவனிடமிருந்து எவ்விதச் செய்தியுமில்லாதிருப்பதால், மிகவும் வருந்தியிருக்கிறாள். தலைவர் தப்பாது வருவார்; வருந்தாதே" என்று கூறித் தேற்றிய தோழிக்குத் தலைவி சொல்லியது.

விளியும்என் இன்உயிர் வேறு(அ)ல்லம் என்பார்
அளிஇன்மை ஆற்ற நினைந்து.

தெளிவுரை

'நான் வேறு, நீ வேறு அல்லர், ஒருவரே' என்றெல்லாம் பேசிய தலைவர், சிறிதும் அன்பில்லாமல் என்னைப் பிரிந்திருக்கிறாரே! அதை மிகவும் நினைந்து என் உயிர் அழிந்துகொண்டிருக்கிறது.

கருத்து

தலைவி, ‘அன்பில்லாமல் பிரிந்து சென்றதை எண்ணி என் உயிர் அழிகின்றது.’

விளக்கம்

‘நாம் இருவரல்லர், ஒருவரே’ என்று கூறியவர் பிரிந்து சென்றுள்ளார். அவருடைய அன்பின்மையை எண்ணி என் உள்ளம் அழிகின்றது.

குறிப்பு

“தோழி! காதலர் வருவார், வருந்தாதே” என்று என்னை வற்புறுத்து கின்றாயே! என் உயிர் அழிவது அவர் பிரிவினால் அன்று; அவரது அன்பின்மை பற்றியே” என்று, தோழி தலைவிக்குக் கூறினாள்.

சொற்பொருள்

1. வேறு அல்லம் என்பார் - நான் வேறு நீ வேறு அல்லர் ஒருவரே என்று பேசிய தலைவர்.
2. அளிஇன்மை - அன்பு இல்லாமை; ஆற்ற நினைந்து - மிகவும் நினைத்து.
1. என் இன் உயிர் - என் இனிய உயிர்; விளியும் - அழிந்துகொண்டிருக் கிறது.

தலைவி கூற்று

திருக்குறள் 1210 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

வன்புறை எதிரழிந்தாள் காமமிக்க கழிபடரால் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் வருந்தியிருந்த தலைவி பெரிதும் துயருற்றுத் தலைவனை நினைந்து உருகி நிலவை நோக்கிப் பேசியது. (வன்புறை எதிரழிதல் - தோழி வற்புறுத்தியதனை ஏலாது தலைவி வருந்திக் கூறுதல்; காமம் மிக்க கழிபடர் கிளவி - வேட்கை மிகுந்து தலைவனைக் கூட விரும்பும் தலைவி, பெரிதும் துயருற்றுத் தலைவனை நினைந்து உருகி, விலங்கு, பறவை முதலிய பகுத்தறிவில்லா உயிரினங்களையும், நிலவு, கடற்கானல் முதலிய உயிரில்லா இயற்கைப் பொருள்களையும் பார்த்துக் கூறும் கூற்று.)

விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்
படாஅதி வாழி மதி!

தெளிவுரை

இணை பிரியாதிருந்து இப்போது பிரிந்து சென்றுள்ள காதலரை என் கண்கள் தேடிக் கண்டுபிடிக்கத் துணையாக, நிலவே! நீ மறையாமல் இரு.

கருத்து

நிலவே! நீ மறையாதே! என் கண்கள் தலைவனைக் கண்டுபிடிக்க வேண்டும்.

விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றுள்ளான். அவனை இரவு பகலாய் என் கண்கள் சென்று தேடி வருகின்றன. நிலவே! நீ மறைந்தால் இருள் சூழ்ந்து விடும்; கண்களால் தேட முடியாது. இருளில்லா திருக்க நிலவே நீ மறையாதே! அவ்வாறிருந்தால் நான் உன்னை வாழ்த்துவேன்.

குறிப்பு

'நிலவே! நாங்கள் முதலில் களவில் சேரும்போது நீ மறைந்து இருளுண் டாக்கித் துணை செய்தாய்; இப்போது பிரிந்தவரை என் கண்கள் சென்று தேடுகின்றன. நீ மறையாது ஒளி தந்து உதவு' என்பது தலைவி வேண்டு கோளின் குறிப்புப் பொருள்.

சொற்பொருள்

2. மதி - நிலவே!; வாழி - நீ வாழ்க!
1. விடாஅது - (இணைபிரியாது ஒருவரை ஒருவர்) விட்டு நீங்காதிருந்து; சென்றாரை - (இப்போது) பிரிந்து சென்றுள்ள தலைவனை; கண்ணினால் காண - என் கண்கள் சென்று காணும்படியாக.
2. படாஅதி - மறையாமல் (இரு).

திருக்குறள், அதிகாரம் 122 கனவுநிலை உரைத்தல்

தலைவி கூற்று

திருக்குறள் 1211 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் தூதுவரக் கண்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்திருக்கும் தலைவனிடமிருந்து தூது வந்ததாய்க் கனாக் கண்ட தலைவி, அதனைத் தோழிக்குச் சொல்லி மகிழ்ந்தது.

காதலர் தூதொடு வந்த கனவினுக்(கு)
யாதுசெய் வேன்கொல் விருந்து.

தெளிவுரை

என் பிரிவுத் துன்பத்தை நீக்கக் காதலர் அனுப்பி வைத்துத் தூதுவனாய் வந்துள்ள இக்கனவினுக்கு, எவ்வகையில் விருந்து செய்வேன்?

கருத்து

காதலர் விடுத்த தூதுச் செய்தியோடு என்னிடத்து வந்துள்ள கனவினுக்கு, எவ்வகையில் விருந்தளிப்பேன்?

விளக்கம்

'தலைவன் பிரிவினால் வருந்தியிருந்த தலைவி தலைவன் அனுப்பி வைத்த தூதுவன் வந்திருப்பதாய்க் கனாக் கண்டாள். நல்லது செய்த அக்கனவினுக்கு, எவ்வகையில் விருந்தளிப்பது?' எனத் தோழியிடம் கேட்கிறாள்.

குறிப்பு

நேரில் இருப்பவர்க்கு விருந்து படைக்கலாம். கனவுக்கு எவ்வகையில் உணவு படைப்பது? என்பதால், 'யாது செய்வேன்'என்கிறாள்.

சொற்பொருள்

1. தூதொடு வந்த கனவினுக்கு - காதலர் அனுப்பிய தூதுச் செய்தியோடு என்னிடம் வந்துள்ள கனவினுக்கு.
2. யாது செய்வேன் விருந்து? - எவ்வகையில் விருந்து படைப்பேன்?

தலைவி கூற்று

திருக்குறள் 1212 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் குறித்த காலத்தில் வராதிருந்தது பற்றித் தூதுவிடக் கருதிய தலைமகள், தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

வருவதாய்ச் சொல்லிச் சென்ற காலத்துள் தலைவன் வாராமையால் தன் வருத்தத்தைத் தலைவனிடம் கூறத் தூது அனுப்ப இருப்பதாய்த் தலைவி, தோழிக்குக் கூறியது.

கயல்உண்கண் யான்இரப்பத் துஞ்சின் கலந்தார்க்(கு)
உயல்உண்மை சாற்றுவேன் மன்.

தெளிவுரை

கெண்டை மீன் போலும் மையுண்ட கண்களே! என் வேண்டு தலுக்கு இரங்கி நீங்கள் உறங்கினால்தானே கனவில் தோன்றும் துணைவருக்கு நான் பிழைத்திருக்கும் உண்மையை எடுத்துரைக்க முடியும்!

கருத்து

கண்கள் தூங்குமானால்தானே கனவில் தோன்றும் காதலருக்கு, நான் உயிரோடிருப்பதைக் கூற முடியும்.

விளக்கம்

தலைவன் பிரிவால் வருந்தும் தலைவியின் கண்கள் உறங்க வில்லை. அவள் வேண்டுகோளுக்கு இணங்க அவை உறங்கினால் தானே கனவில் தோன்றும் காதலனுக்கு, 'நான் பிழைத் துள்ளேன் என்ற உண்மையைக் கூற முடியும்' என்று, தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

குறிப்பு

கண் உறக்கம் இல்லையென்றால் கனவில்லை; கனவில்லையென்றால் காதலனை எவ்வாறு காண முடியும்?

சொற்பொருள்

1. கயல் உன் கண் - கெண்டை மீன் போலும் மையுண்ட கண்கள்; யான் இரப்ப - என் வேண்டுதலுக்கு (இரங்கி); துஞ்சின் - உறங்குமானால்; கலந்தார்க்கு - (கனவிலே தோன்றும்) என் காதலர்க்கு.
2. உயல் உண்மை - உயிர் பிழைத்திருக்கும் உண்மையை; சாற்றுவேன் - கூறுவேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1213 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

ஆற்றாளெனக் கவன்றாட்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைப் பொறுத்திருக்க வேண்டுமெனத் தோழி தலைவிக்குக் கூறியபோது, தலைவி தலைவனைக் கனவில் காண்பதாலேயே, தான் ஆற்றிருப்பதாய்க் கூறியது.

நனவினால் நல்கா தவரைக் கனவினால்
காண்டலின் உண்(டு)என் உயிர்.

தெளிவுரை

நேரில் வந்து அன்பு செய்யாத தலைவனைக் கனவினில் கண்டு வருவதாலேயே நான் இன்னும் உயிர் வாழ்கிறேன்.

கருத்து

தலைவனைக் கனவில் கண்டு வருவதால்தான் என் உயிர் இருக்கிறது.

விளக்கம்

தலைவன் பிரிவினால் வருந்தியிருக்கும் தலைவியை ஆற்றி யிருக்குமாறு கூறிய தோழியிடம், 'தலைவனைக் கனவில் காண்கிறேன்; அந்தக் காட்சி என்னை வாழச் செய்கிறது' என்று கூறுகிறாள்.

குறிப்பு

கனவு என்னைக் காப்பாற்றுகிறது.

சொற்பொருள்

1. நனவினால் - நனவிலே வந்து (நேரில் தோன்றி); நல்காதவர் - அன்பு செய்யாத தலைவனை.

1-2.கனவினால் காண்டலின் - கனவில் கண்டுவருதலால்.

2. என் உயிர் உண்டு - நான் இன்னும் உயிர் வாழ்கிறேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1214 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

ஆற்றாளெனக் கவன்றாட்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைப் பொறுத்திருக்க வேண்டுமெனத் தோழி, தலைவிக்குக் கூறியபோது, தலைவி தலைவனைக் கனவில் காண்பதாலேயே, தான் ஆற்றிருப்பதாய்க் கூறியது.

கனவினால் உண்டாகும் காமம் நனவினால்
நல்காரை நாடித் தரற்கு.

தெளிவுரை

நேரில் தோன்றி அருள் செய்யாத காதலனைக் கனவு அவன் இருக்குமிடம் தேடிச் சென்று கொண்டுவந்து காட்டுதலால், அக் கனவின்மீது எனக்கு விருப்பம் உண்டாகிறது.

கருத்து

காதலனைக் கொண்டு வந்து காட்டுவதால் கனவு தலைவியின் விருப்பத்திற்குரியதாகிறது.

விளக்கம்

காதலன் தொலைவில் இருப்பதால் தலைவி விழித்திருக்கும் போது அவனைக் காண முடிவதில்லை. அவன் இருக்குமிடம் தேடிச்சென்று அவனைக் கொண்டு வந்து, அவள் உறங்கும் போது கனவு காட்டுகிறது. ஆதலின் கனவின்மீது தலைவிக்கு ஒரு தனித்த விருப்பம் உண்டாகிறது.

குறிப்பு

பிரிந்திருக்கும் காதலனைக் கொண்டுவந்து காட்டுவதால், கனவினிடம் தலைவிக்கு மிகுதியும் இன்பம் ஏற்படுகிறது.

சொற்பொருள்

1-2. நனவினால் நல்காரை - நேரில் தோன்றி அருள் செய்யாத காதலனை; நாடி - (அவன் இருக்குமிடம் சென்று தேடி); தரற்கு - (கொண்டு வந்து) தருதலால்.

1. கனவினால் - அக்கனவின்மீது; உண்டாகும் காமம் - எனக்கு விருப்பம் உண்டாகிறது.

தலைவி கூற்று

திருக்குறள் 1215 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

ஆற்றாளெனக் கவன்றாட்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைப் பொறுத்திருக்க வேண்டுமெனத் தோழி, தலைவிக்குக் கூறியபோது, தலைவி தலைவனைக் கனவில் காண்பதாலேயே, தான் ஆற்றிருப்பதாய்க் கூறியது.

நனவினால் கண்டதூஉம், ஆங்கே, கனவும்தான்
கண்ட பொழுதே இனிது.

தெளிவுரை

காதலர் நேரிலிருக்கும்போது நான் பெறும் இன்பம் அவர் இருக்கும் நேரம் மட்டுமே; கனவிலேயும், அக்கனவைக் கண்டு கொண்டிருக்கும் அந்நேரம் மட்டுமே இன்பம்.

கருத்து

நனவிலும் கனவிலும் காணும்பொழுது மட்டுமே இன்பம்!

விளக்கம்

‘காதலர் நேரில் இருந்தபோது துய்த்த இன்பத்தைக் கனவிலும் அவரைக் காணும்போது பெற்று வருகிறேன்; ஆதலால் ஆற்றி யிருக்கிறேன்’ என்று தோழிக்குத் தலைவி கூறுகிறாள்.

குறிப்பு

கனவில் பெறும் இன்பமும் நனவில் பெறும் இன்பத்தை ஒத்ததே!

சொற்பொருள்

1. நனவினால் - நனவிலே; கண்டதூஉம் - அவரைக் கண்டு நுகர்ந்த இன்பம்; ஆங்கே (இனிது) - அவரொடு இருந்த அந்நேரம் மட்டுமே இனிது.

2. கனவும்தான் கண்ட பொழுதே இனிது - கனவில் அவரைக் கண்டு நுகர்ந்த இன்பமும் கண்ட அந்நேரம் மட்டுமே இனிமை.

தலைவி கூற்று

திருக்குறள் 1216 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

ஆற்றாளெனக் கவன்றாட்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைப் பொறுத்திருக்க வேண்டுமெனத் தோழி, தலைவிக்குக் கூறியபோது, தலைவி தலைவனைக் கனவில் காண்பதா லேயே, தான் ஆற்றிருப்பதாய்க் கூறியது.

நன(வு)என ஒன்(று)இல்லை ஆயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன்.

தெளிவுரை

விழிப்பு என்ற ஒன்று இல்லாதிருக்குமாயின், கனவில் வந்து என்னைக் கூடிய காதலர் என்னை விட்டுப் பிரியவே மாட்டார்.

கருத்து

விழிப்பு இல்லையென்றால், கனவில் தோன்றிய காதலர் பிரியமாட்டார்.

விளக்கம்

தலைவி, தலைவனைக் கனவில் கண்டிருந்தாள். விழிப்பு வந்ததும் கனவு மறையவே தலைவனும் மறைந்துவிட்டான்.

விழிப்பு இல்லையென்றால் எப்பொழுதும் தலைவன் தன்னு டனிருப்பான் என்று தலைவி கருதுகிறாள்.

குறிப்பு

விழிப்புத் தோன்றித் தலைவியின் இன்பத்தைத் தொலைத்துவிட்டது.

சொற்பொருள்

1. **நனவு என ஒன்று இல்லை ஆயின் - விழிப்பு என்ற ஒன்று இல்லாதிருந்தால் (உறக்கத்திலேயே இருந்திருந்தால்).**
2. **கனவினால் காதலர் - கனவில் வந்து என்னைக் கூடிய என் காதலர்; நீங்கலர் - பிரியார்.**

தலைவி கூற்று

திருக்குறள் 1217 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

விழித்துழிக் காணாளாயினாள் கனவிற் கூட்டம் நினைந்து ஆற்றாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கண் விழித்தபோது தலைவனைக் காணாதவளாய்க் கனவில் தழுவிப் புணர்ந்து துய்த்த இன்பத்தை நினைந்து வருந்தி, அவ்வருத்தம் பொறுக் காமல் தலைவி கூறியது.

நனவினால் நல்காக் கொடியார் கனவினால்
என்எம்மைப் பீழிப் பது?

தெளிவுரை

நேரில் வந்து அருள் கொடாத கொடியவராகிய தலைவர், நாள்தோறும் கனவில் மட்டும் தோன்றித் துன்புறுத்துவது ஏன்?

கருத்து

கனவில் தோன்றுபவர் விழிப்பில் தோன்றாது துன்பம் தருவது ஏன்?

விளக்கம்

தலைவனைப் பிரிந்து வருந்தியிருக்கும் தலைவி, உறக்கத்தில் தலைவனைக் கண்டு மகிழ்ந்திருந்தாள். விழிப்பு வந்ததும் கனவு மறைய மீண்டும் துன்பம் எய்துகிறாள். கனவில் தோன்றியவன் நீட்டித்துத் தங்காது பிரிவதால் அவள் கனவில் பெற்ற இன்பம்கூடத் துன்பத்தை விளைவித்துவிட்டதாய் எண்ணித் துயருறுகிறாள்.

குறிப்பு

இன்பம் பெற்றவர் துன்புறுங்கால், முன்பு பெற்ற இன்பமும் துன்பமான தாகவே தோன்றுவது உலக இயல்பு.

சொற்பொருள்

1. நனவில் - நேரில் வந்து; நல்கா - அருள் கொடாத; கொடியார் - கொடியவராகிய தலைவர்; கனவினால் - (நாள்தோறும்) கனவில் வந்து.
2. எம்மைப் பீழிப்பது என்? - என்னை வருத்துவது ஏன்?

தலைவி கூற்று

திருக்குறள் 1218 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தான் ஆற்றுதற் பொருட்டுத் தலைமகனை இயற்பழித்த தோழிக்கு இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தன்னைப் பொறுத்திருக்கச் செய்யும் பொருட்டுத் தலைவன் குணங்களைப் பழித்துப் பேசிய தோழிக்கு, அவன் குணத்தைப் பழியாதிருக்குமாறு தலைவி சொல்லியது.

துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்
நெஞ்சத்தர் ஆவர் விரைந்து.

தெளிவுரை

நான் தூங்கும்போது தலைவர் கனவில் என் தோள்மீது அணைந்திருப்பவராய்த் தோன்றி, நான் விழித்ததும் விரைந்து சென்று என் நெஞ்சினுள் தங்குகிறார்.

கருத்து

தலைவர் என்னைவிட்டு ஒரு போதும் நீங்காதவர்.

விளக்கம்

‘தோழி! தலைவர் பிரிந்தார் என்று அவர் குணநலன்களைக் குறை கூறுகிறாயே! அவர் எங்கே பிரிந்தார்? இரவில் என் தோள் மீது இருக்கிறார்; பகலில் என் நெஞ்சத்தில் பாதுகாப்பாய்த் தங்கியிருக்கிறார். அவரைக் குறை கூறாதே’ எனத் தலைவி தோழிக்குக் கூறுகிறாள்.

குறிப்பு

தலைவன் உடலால் நீங்கியிருந்தாலும் தலைவியின் உள்ளத்திலிருந்து ஒரு கணமும் நீங்குவதில்லை.

சொற்பொருள்

1. துஞ்சுங்கால் - நான் தூங்கும்போது; தோள் மேலர் ஆகி - தோளின் மேல் (அணைந்து) இருப்பவராகி; விழிக்குங்கால் - (உறக்கம் நீங்கி) விழிக்கும்போது.
2. விரைந்து - விரைந்து வந்து; நெஞ்சத்தவர் ஆவர் - என் நெஞ்சில் இருப்பவர் ஆகின்றார்.

தலைவி கூற்று

திருக்குறள் 1219 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தான் ஆற்றுதற் பொருட்டுத் தலைமகனை இயற்பழித்த தோழிக்கு இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தன்னைப் பொறுத்திருக்கச் செய்யும் பொருட்டுத் தலைவன் குணங்களைப் பழித்துப் பேசிய தோழிக்கு, அவன் குணத்தைப் பழியாதிருக்குமாறு தலைவி சொல்லியது.

நனவினால் நல்காரை நோவர் கனவினால்
காதலர்க் காணா தவர்.

தெளிவுரை

கனவிலே தம் கணவரைக் கண்டறியா மகளிரே, நனவில் அவர் வந்து அருள் செய்யவில்லை என்று இகழ்ந்து வருந்துவர்.

கருத்து

கனவில் காதலரைக் காணும் மகளிர், காதலர் பிரிவினை இகழ்ந்து கூறார்.

விளக்கம்

கனவில் தம்முடைய கணவரைக் கண்டு மகிழா மகளிரே, தம்முடைய கணவர் நனவில் வராததற்கு நொந்துகொள்ள வேண்டும். கனவில் என் கணவரைத் தொடர்ந்து கண்டுவரும் நான் ஏன் அவரை நோகச் செய்ய வேண்டும்? (தோழியே! நீ இதனை அறியாது அவர் பண்புகளைக் குறைத்துப் பேசாதே.)

குறிப்பு

கணவரைக் கணமும் மறக்காத மகளிர், அவரைக் கனவில் தவறாது கண்டு மகிழ்வர்.

சொற்பொருள்

1. கனவினால் - கனவிலே.
2. காதலர் - கணவரை; காணாதவர் - காணதவராகிய (மகளிரே).
1. நனவினால் - நனவிலே வந்து; நல்காரை - அருள் செய்யாதவர் (என்று); நோவர் - (கணவரை) நொந்து கொள்வர்.

தலைவி கூற்று

திருக்குறள் 1220 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தான் ஆற்றுதற் பொருட்டுத் தலைமகனை இயற்பழித்த தோழிக்கு இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தன்னைப் பொறுத்திருக்கச் செய்யும் பொருட்டுத் தலைவன் குணங்களைப் பழித்துப் பேசிய தோழிக்கு, அவன் குணத்தைப் பழியா திருக்குமாறு தலைவி சொல்லியது.

நனவினால் நம்நீத்தார் என்பர் கனவினால்
காணார்கொல் இவ்வூ ரவர்.

தெளிவுரை

'நனவிலே நம் காதலர் நம்மை விட்டுப் பிரிந்தாரென்று கொடுமை கூறும்' இவ்வூர் மகளிர், அவர் நம் கனவில் தப்பாது வருகிறார் என்பதை அறியாரோ?

கருத்து

நம் காதலர் தவறாது நம் கனவில் தோன்றுகிறார். இதனை அறியாத இவ்வூர் மக்கள், அவர் நனவிலே நம்மை விட்டுப் பிரிந்தார் எனக் குறை கூறுகின்றனர்.

விளக்கம்

'இவ்வூரில் உள்ள மகளிர், நனவில் என் காதலர் என்னைத் தனியே விட்டுப் பிரிந்து சென்று துன்பம் செய்தார் என்பர். பிரிந்து சென்ற என் காதலர் நாள்தோறும் என் கனவில் வருவதை அவர் அறியமாட்டார்' என்று தோழிக்கு வருத்தத்துடன் கூறிய தலைவி, தோழியும் காதலரைக் குறையெதுவும் கூறக் கூடாது என்றாள்.

குறிப்பு

தோழி, தன் காதலனைக் குறை கூறுவதைச் சற்றும் பொறாதவளாய தலைவி, தோழியை 'இவ்வூர்' என அயன்மைப்படுத்திக் குறை கூறினாள். தலைவி, 'இவ்வூர்' என்று கூறுவது தோழியையே!

சொற்பொருள்

1. நனவினால் - நனவிலே; நம் நீத்தார் - நம்மை விட்டுப் பிரிந்தார்; என்பர் - என்று கூறும்.
2. இவ்வூரவர் - இவ்வூர் மகளிர்.
1. கனவினால் - கனவில்.
2. காணார் கொல் - (வருகிறார் என்பதை) அறியாரோ?

தலைவன் கூற்று

திருக்குறள் 1280 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் பிரியாமைக் குறிப்பைத் தோழிக்கறிவுறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவியின் அடக்க முடியா வருத்தத்தை நினைத்துத் தன் செலவினைத் தவிர்த்ததைத் தோழிக்குத் தலைவன் குறிப்பாய்ச் சொல்லியது.

பெண்ணினால் பெண்மை உடைத்(து)என்ப கண்ணினால்
காமநோய் சொல்லி இரவு.

தெளிவுரை

கண்களினால் காமநோயை எடுத்துரைத்து, 'பிரிய வேண்டாம்' என்று இரங்கி நிற்கும் குறிப்பு, பெண்மைக்குப் பெருமை சேர்க்கும் பெருமையுடையதாய்த் தோன்றுகிறது.

கருத்து

மகளிர் தம் காமநோயைக் கண்ணாற் கூறித் தலைவன் தம்மைப் பிரியா திருக்கும்படி இரத்தல், சிறந்த பெண்மைக் குணமாகும்!

விளக்கம்

காமநோய், வாயினால் சொல்லக் கூடிய ஒன்று அன்று. என்றா லும் பெண்கள் தங்கள் வேதனையைக் கண்களால் சிறப்பாகக் காட்டி விடுகின்றனர். தலைவியின் கண் நோக்க மறிந்து தலைவன் தன் செலவினைத் தவிர்க்கிறான்.

குறிப்பு

பெண்கள் தங்கள் காதல் உணர்வைக் கண்களால் காட்டிவிடும் சிறப்புக்குரியவர்.

சொற்பொருள்

1-2.கண்ணினால் காமநோய் சொல்லி - கண்களினால் காமநோயைத் தெரிவித்து; இரவு - அதைத் தீர்க்க வேண்டும் என்று வேண்டும்.

1. பெண்ணினால் - பெண்மைக் குணத்தால்; பெண்மை உடைத்து - பெண்மை மேலும் சிறப்புடையது; என்ப - என்று கூறுவர்.

திருக்குறள், அதிகாரம் 125 நெஞ்சொடு கிளத்தல்

தலைவி கூற்று

திருக்குறள் 1241 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தன் ஆற்றாமை தீரும் திறன் நாடியது.

கூற்று விளக்கம்

பிரிவுத் துயர் தீர வழி ஒன்று காணுமாறு தலைவி தன் நெஞ்சிடம் வேண்டியது.

நினைத்(து)ஒன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்(து)ஒன்றும்
எவ்வநோய் தீர்க்கும் மருந்து.

தெளிவுரை

நெஞ்சமே! தலைவன் பிரிவினால் எனக்கு நேர்ந்துள்ள பிரிவு நோயைப் போக்கவல்ல, ஒரு மருந்தினை ஆராய்ந்து சொல்ல மாட்டாயா?

கருத்து

நெஞ்சே! என் பிரிவுத்துயர் தீர வழியொன்று காணாயோ?

விளக்கம்

'நெஞ்சே! தலைவன் பிரிவினால் துன்ப நோயுற்று வருந்து கின்றேன். இந்நோய் தீர எனக்கு மருந்து ஒன்றும் காணமுடிய வில்லை. நீயாவது மருந்து அறிந்து கூற மாட்டாயோ?' எனத் தலைவி தன் நெஞ்சிற்குக் கூறினாள்.

குறிப்பு

மனத்தை, 'ஆற்றியிரு' என்று சொல்வதை, 'மருந்தொன்று ஆய்ந்து பார்' என நயமாய்க் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. நெஞ்சே - நெஞ்சமே!
2. எவ்வம் நோய் - நான் அடைந்துள்ள பிரிவுத் துன்ப நோய்; தீர்க்கும் - போக்கும்.

2-1.மருந்து ஒன்று - மருந்து ஒன்றனை.

1. எனைத்து ஒன்றும் - யாதாவது ஒரு வழியில்; நினைந்து கூறாயோ - அறிந்து சொல்ல மாட்டாயா?

தலைவி கூற்று

திருக்குறள் 1242 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைக் காணும் வேட்கை மிகுதியால் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்திருக்கும் தலைவனை விரைவில் காணவேண்டும் என்னும் விருப்ப மிகுதியால், தலைவி தன் நெஞ்சிடம் சொல்லியது.

காதல் அவர்இலர் ஆக,நீ நோவது
பேதைமை வாழிஎன் நெஞ்சு!

தெளிவுரை

நெஞ்சே! தலைவர்க்கு என் மேல் அன்பில்லை என்று தெரிந்தும் அவரை நீ நினைந்து வருந்துவது அறியாமை அன்றோ?

கருத்து

அன்பில்லாதவர் அருகிலில்லையென வருந்துவது அறியாமை அன்றோ?

விளக்கம்

"நெஞ்சே! நீ தலைவரிடம் அன்பு செலுத்துவதுபோல் அவரும் உன்னிடம் அன்பு செலுத்துபவராயின் உன்னை வந்து கூடியிருப்பார். உன் துன்பம் நீங்கியிருக்கும். அவர் அன்பு செலுத்தாதபோது நீ வருந்துவது ஏன்?" எனத் தலைவி தன் *நெஞ்சிடம் கூறுகிறாள்.*

குறிப்பு

தலைவன் விரைவில் வரவேண்டுமெனும் வேட்கையால், அவனை வெறுத்துப் பேசுவதுபோலத் தலைவி பேசுகிறாள்.

சொற்பொருள்

2. என் நெஞ்சே - என் மனமே!; வாழி - நீ வாழ்க.

1. அவர் - தலைவர்க்கு; காதல் இலர் - என் மேல் அன்பு இல்லை; ஆக - என்பது தெரிந்தும்.
2. நீ நோவது - நீ அவரை நினைந்து வருந்துவது; பேதைமை - உன் அறியாமையே.

தலைவி கூற்று

திருக்குறள் 1243 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைக் காணும் வேட்கை மிகுதியால் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்திருக்கும் தலைவனை விரைவில் காணவேண்டும் என்னும் விருப்ப மிகுதியால், தலைவி தன் நெஞ்சிடம் சொல்லியது.

இருந்(து)உள்ளி என்பரிதல் நெஞ்சே? பரிந்(து)உள்ளல்
பைதல்நோய் செய்தார்கண் இல்.

தெளிவுரை

என் நெஞ்சமே! எனக்கு இத்துன்ப நோயைத் தந்துள்ள தலைவர் என்மீது அன்பு கொண்டு நினைத்தல் இல்லை. அங்ஙனமிருக்க நீ இங்கே இருந்து அவரை நினைத்து என்ன பயன்?

கருத்து

நெஞ்சமே! நம் மீது இரக்கங் கொள்ளாதவரிடம் நீ இரக்கம் கொள்வது ஏன்?

விளக்கம்

என் நெஞ்சே! நம் மீது அன்பு காட்டாதவரிடம் நீ இங்கிருந்து நினைத்து வருந்துவதால் என்ன பயன்? (நீ சென்று அவரை அழைத்து வந்தால் நம் துன்பம் நீங்கும். அதைச் செய்வாயா?)

குறிப்பு

தலைவன் விரைவில் வரவேண்டும் என்பதை நெஞ்சுக்குச் சொல்வதுபோல், தன்னுள் சொல்லிக் கொள்கிறாள்.

சொற்பொருள்

1-2. பரிந்து உள்ளல் இல் - (தலைவர்) என்னை அன்புடன் நினைத்தல் இல்லை.

1. (அங்ஙனமிருக்க) நெஞ்சே! - என் நெஞ்சமே!; இருந்து - நீ இங்கே இருந்து; உள்ளி - நினைத்து; பரிதல் என் - துன்பப்படுவது ஏன்?
2. பைதல் நோய் செய்தார்கண் - இத்துன்ப நோயைத் தந்துள்ளவரிடம்.

தலைவி கூற்று

திருக்குறள் 1244 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைக் காணும் வேட்கை மிகுதியால் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்திருக்கும் தலைவனை விரைவில் காணவேண்டும் என்னும் விருப்ப மிகுதியால் தலைவி தன் நெஞ்சிடம் சொல்லியது.

கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவைஎன்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று.

தெளிவுரை

நெஞ்சே! அவரைக் காண வேண்டுமென்று என் கண்கள் என்னை அரித்துத் தின்னுகின்றன. நீ அவரைக் காணச் செல்லுங்கால் இக்கண்களையும் உடன் அழைத்துச் செல்.

கருத்து

கண்கள் அவரைக் காண வேண்டுமென்று துடிக்கின்றன.

விளக்கம்

நெஞ்சம் நினைவிலேயே எதனையும் காணும். கண்கள் யாராவது அழைத்துச் சென்றால் மட்டுமே காணமுடியும். அதனால், தலைவி, நெஞ்சிடம் அது தலைவனைக் காணச் செல்லும்போது, கண்களையும் அழைத்துச் செல்லுமாறு கூறுகிறாள்.

குறிப்பு

தலைவி தலைவனைக் காணத் துடிக்கிறாள் என்பது இலக்கிய நயம் தோன்ற உரைக்கப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. நெஞ்சே! - நெஞ்சமே!
2. அவர்க் காணல் உற்று - அவரைக் காண வேண்டுமென்று.
1. இவை - கண்கள்.

1-2.என்னைத் தின்னும் - என்னை அரிக்கின்றன.

1. கண்ணும் கொளச் சேறி - (நீ அவரைக் காணச் செல்லுங்கால்) இக் கண்களையும் உடன்கொண்டு செல்க.

தலைவி கூற்று

திருக்குறள் 1245 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைக் காணும் வேட்கை மிகுதியால் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்திருக்கும் தலைவனை விரைவில் காணவேண்டும் என்னும் விருப்ப மிகுதியால், தலைவி தன் நெஞ்சிடம் சொல்லியது.

செற்றார் எனக்கை விடல்உண்டோ நெஞ்சே!யாம்
உற்றால் உறாஅ தவர்.

தெளிவுரை

நெஞ்சே! நாம் விரும்பினாலும் நம்மை விரும்பாத தலைவர் நம்மை வெறுத்தார் என்று நினைத்து நாமும் அவரை விட்டுவிட முடியுமா?

கருத்து

அவர் நம்மை விரும்பவில்லை என்பதற்காக நாம் அவரைக் கை விடலாமா?

விளக்கம்

நம்மை விரும்புவதை மறந்து தலைவர் பிரிந்து சென்று தனியே இருக்கிறார்; அதற்காக நாம் அவரை வெறுத்துத் தள்ளிவிட முடியுமா?

குறிப்பு

அவர் வரும் வகை செய்யவேண்டுமே தவிர வருத்தப்பட்டுப் பயனில்லை.

சொற்பொருள்

1. நெஞ்சே - மனமே!

1-2. யாம் உற்றால் - நாம் விரும்பினாலும்; உறாஅதவர் - நம்மை விரும்பாத தலைவர்.

1. செற்றார் (என) - (நம்மை) வெறுத்தார் என்று; கைவிடல் உண்டோ? - அவரை நாம் விட்டுவிட முடியுமா?

தலைவி கூற்று

திருக்குறள் 1246 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் கொடுமை நினைந்து செலவுடன்படாத நெஞ்சினைக் கழறியது.

கூற்று விளக்கம்

கொடியவன் என்று பொய்யாய் வெறுப்புக் காட்டித் தலைவன் இருக்குமிடத்திற்குச் செல்ல உடன்படாத தன் நெஞ்சினைத் தலைவி கடிந்து கூறியது.

> கலந்(து)உணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்(து)உணராய்
> பொய்க்காய்வு காய்திஎன் நெஞ்சே!

தெளிவுரை

நெஞ்சே! நம்மைச் சேர்ந்து ஊடலை நீக்குகின்ற காதலரைக் கண்டால் அவரை ஒருபோதும் வெறுக்க முடியாத நீ, அவர் பிரிந்துள்ள இக்காலத்தில் பொய்க்கோபம் காட்டுகிறாய் (இந் நடிப்பைவிட்டு அவரிடம் செல்லத் துணிக.)

கருத்து

நெஞ்சே! காதலரைக் கண்டால் வெறுக்க முடியாத நீ, அவரைக் காணாத போது வெறுப்பதால் பயனில்லை.

விளக்கம்

நெஞ்சே! கூடியிருந்து மகிழ்ச்சியைக் கொடுக்க வரும் காதலரைக் கண்டவுடன், அவரிடம் வெறுப்புக் கொள்ளாது உடனே கூடி விடுகிறாய். ஆனால் அவர் வாராதபோது அவர்மீது பழி கூறுவதை உன் பொய்க்கோபம் காட்டுகிறது.

குறிப்பு

நெஞ்சம் காதலரோடு கூடியவுடன் மகிழ்ச்சியடைகிறது; பிரிந்தாலோ கோபம் கொள்கிறது.

சொற்பொருள்

2. என் நெஞ்சு - என் நெஞ்சே!
1. கலந்து உணர்த்தும் காதலர் - கூடிக் கலந்து ஊடலை நீக்கும் காதலரை; கண்டால் - நீ நேரில் கண்டால்; புலந்து உணராய் - வெறுத்து ஊடல் கொள்வதில்லை.
2. பொய்க்காய்வு காய்தி - (இன்று அவரைப் பிரிந்து காணாதபோது) பொய்க் கோபம் காட்டுகிறாய்.

தலைவி கூற்று

திருக்குறள் 1247 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நாண் தடுத்தலின் காதலரிடம் செலவொழிவாள் கூறியது.

கூற்று விளக்கம்

நாணம் தடுத்தலால் தலைவனைத் தேடிச் செல்லுதல் நீங்கிய தலைவி, தன் மனத்திற்குச் சொல்லியது.

காமம் விடு,ஒன்றோ; நாண்விடு; நல்நெஞ்சே
யானோ பொறேன்இவ் இரண்டு.

தெளிவுரை

என் நல்ல நெஞ்சமே! ஒன்று காதலை விட்டுவிடு; அல்லது நாணத்தையாவது விட்டுவிடு. இவ்விரண்டையும் ஒருங்கே பொறுத்திருக்க என்னால் முடியாது.

கருத்து

காமம், நாணம் ஆகிய இரண்டனையும் ஒருசேரப் பொறுத்திருத்தல் இயலாது.

விளக்கம்

நெஞ்சே! இன்பத்தையும் பெண்மையையும் (நாணத்தையும்) ஒரு சேர நிலைநிறுத்தல் நன்று என்பாய்! இவ்விரண்டையும்

ஒருங்கே தாங்குதல் என் உயிருக்கு இயலாமையின், உயிரைக் காக்க இரண்டனுள் ஒன்றை நீ விட்டுவிடுதல் வேண்டும்.

குறிப்பு

காமம், நாணம் ஆகிய இரண்டனுள் நாணமே சிறந்தது. ஆதலின் காதலன் வரும்வரை காமத்தை நீக்கி, நாணத்தைக் காப்பாற்றித் தலைவி பொறுத்திருக்க வேண்டும் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. நல் நெஞ்சே - நல்ல நெஞ்சமே! ஒன்றோ காமம் விடு - ஒன்று காமத்தை விட்டுவிடு; (அல்லது) நாண் விடு - அல்லது நாணத்தை விட்டுவிடு.
2. யானோ இவ் இரண்டு பொறேன் - நானோ இந்த இரண்டையும் ஒருங்கே தாங்க மாட்டேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1248 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நாண் தடுத்தலின் காதலரிடம் செலவொழிவாள் கூறியது.

கூற்று விளக்கம்

நாணம் தடுத்தலால் தலைவனைத் தேடிச் செல்லுதல் நீங்கிய தலைவி, தன் மனத்திற்குச் சொல்லியது.

பரிந்(து)அவர் நல்கார்,என்(று) ஏங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதைஎன் நெஞ்சு!

தெளிவுரை

என் நெஞ்சே! அவர் இரங்கிக் காதல் அன்பு செய்ய வில்லையே என்று ஏங்குகிறாய்! வருந்துகிறாய்! பின்பு பிரிந்து சென்ற அவர் பின்னாலேயே செல்கிறாய்! நீ அறிவிலியே!

கருத்து

அன்பு செய்யாமல் பிரிந்து செல்பவரின் பின் செல்லுதல் அறிவின்மை.

விளக்கம்

நெஞ்சே! உன் ஆற்றாமையைக் கண்டும் அன்பின்றிப் பிரிந்து செல்பவர் பின் செல்கிறாயே, உனக்கு அறிவில்லையா?

குறிப்பு

அவர்பின் சென்றால் அவர் திரும்பி விடுவார் என்று நினைத்துச் செல்வதால், நெஞ்சினை அவள் 'பேதை' என்கிறாள்.

சொற்பொருள்

2. என் நெஞ்சு - என் நெஞ்சே!; பரிந்து அவர் நல்கார் - அவர் இரங்கி அன்பு செய்யவில்லை; என்று ஏங்கி - என்று ஏங்குகிறாய்.

1-2.பிரிந்தவர் பின்செல்வாய் - பிரிந்து செல்பவரின் பின்னாலேயே செல்லுகிறாய்.

2. பேதை - நீ அறிவிலியே!

தலைவி கூற்று

திருக்குறள் 1249 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நாண் தடுத்தலின் காதலரிடம் செலவொழிவாள் கூறியது.

கூற்று விளக்கம்

நாணம் தடுத்தலால் தலைவனைத் தேடிச் செல்லுதல் நீங்கிய தலைவி தன் மனத்திற்குச் சொல்லியது.

உள்ளத்தார் காதல் அவர்ஆக உள்ளிநீ
யார்உழைச் சேறி!என் நெஞ்சு.

தெளிவுரை

என் நெஞ்சே! என் காதலர் என் உள்ளத்தின் உள்ளேயே இருக்கிறார். அவ்வாறிருக்க நீ அவரைத் தேடி யாரிடம் செல்லுகின்றாய்?

கருத்து

உள்ளத்துள்ளேயே இருப்பவரை வெளியே எங்குத் தேடுகிறாய்?

விளக்கம்

'காதலர் உள்ளத்தினுள்ளேயே இருக்கிறார். அவரை அங்குப் பார்க்காமல் ஏன் வெளியே தேடி அலைகிறாய்?' எனக் காதலி, தன் நெஞ்சினை எள்ளி நகையாடுகிறாள்.

குறிப்பு

ஓர் இடத்தில் இருப்பவரை வேறோர் இடம் சென்று தேடுவதில் பயனில்லை என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. என் நெஞ்சு - என் நெஞ்சே!; காதல் அவர் உள்ளத்தார் ஆக - காதலர் உள்ளத்தினுள்ளேயே இருக்கும்போது; உள்ளி நீ - நீ அவரைத் தேடி.
2. யார் உழைச் சேறி? - யாரிடத்தில் செல்கிறாய்?

தலைவி கூற்று

திருக்குறள் 1250 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

அவரை மறந்து ஆற்றல் வேண்டும் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவரை மறந்து வருத்தத்தைப் பொறுத்திருக்க வேண்டுமெனத் தலைவி தன் நெஞ்சுக்குச் சொல்லியது.

துன்னாத் துறந்தாரை நெஞ்சத்(து) உடையேமா
இன்னும் இழத்தும் கவின்.

தெளிவுரை

நெஞ்சே! நம்முடன் நெருங்கியிருந்து பிரிந்து சென்ற காதலரை நம் நெஞ்சுள் வைத்திருக்கிறோம். புறத்திலே தேடிச் சென்றால், முன்பு இழந்த, புறத்தழகே அல்லாமல் இன்னும் நம்மிடம் உள்ள அகத்தழகையும் இழந்து விடுவோம்.

கருத்து

புறத்து அழகை இழந்த நாம் அகத்து அழகையும் இழக்க நேரிடும்.

விளக்கம்

நெஞ்சே! காதலர் பிரிந்து சென்ற பின் உடல் அழகை இழந்தோம். ஆயினும், அவன் உள்ளத்தில் உள்ளதால் அக அழகோடிருக்கிறோம். இப்போது அவன் வெளியே சென்று விட்டதாய்த் தேடிப் போனால், நம்மிடம் இருக்கும் அக அழகையும் இழந்து விடுவோம். ஆதலின், காதலர் சென்றதைப் பொறுத்து ஆற்றியிருப்போம்.

குறிப்பு

தலைவனை வெளியே தேடிச் சென்றால், அவன் உள்ளத்திலிருந்தும் நீங்கிச் சென்றான் என்றாகும் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. துன்னாத் துறந்தாரை - (நெஞ்சே!) நம்முடன் நெருங்கியிருந்து பிரிந்து சென்ற காதலரை; நெஞ்சத்து உடையேம் - நம் நெஞ்சத்தில் (உள்ளத்தில்) வைத்திருக்கிறோம். (அவர் வெளியே சென்று விட்டதாய்த் தேடிச் செல்வோமாயின்)
2. இன்னும் கவின் இழத்தும் - முன் இழந்த புற அழகேயன்றி எஞ்சி நிற்கும் அக அழகும் இழப்போம்.

திருக்குறள், அதிகாரம் 126 நிறை அழிதல்

தலைவி கூற்று

திருக்குறள் 1251 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நாணும் நிறையும் அழியாமை நீ ஆற்றல் வேண்டும் என்ற தோழிக்குச் சொல்லியது.

(நிறை எனப்படுவது காம இச்சையைப் பிறரறியாது மறைத்து வைத்தல்.)

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவில் நாணமும் நிறையும் நீங்கா வகையில் ஆற்றி இருக்க வேண்டும் என்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

காமக் கணிச்சி உடைக்கும்; நிறைஎன்னும்
நாணுத்தாள் வீழ்த்த கதவு.

தெளிவுரை

நாணம் எனும் தாழ்ப்பாள் இட்டுப் பூட்டிய நிறை என்னும் கதவினைக் காமம் எனப்படும் வலிய கோடரி உடைத்து முறித்து விட்டது.

கருத்து

மன உறுதி என்னும் கதவைக் காமம் என்னும் கோடரி உடைத்து விடுகின்றது.

விளக்கம்

'நாணம் உள்ள வரைக்கும் மனத்தில் உள்ள எண்ணங்களை அடக்க முடியும். ஆனால் காமத்தால் பீடிக்கப்பட்டதும் மனம் நாணத்திற்குக் கட்டுப்படாமல் எண்ணத்தை வெளிவிடுகிறது. நான் எப்படி ஆற்றியிருக்க முடியும்?' எனத் தலைவி தோழியிடம் கேட்கிறாள்.

குறிப்பு

மனம் வீடு; நிறை, அவ்வீட்டில் உள்ளதை வெளிச்செல்ல விடாது தடுக்கும் கதவு; நாணம் அக்கதவு திறக்காதிருக்க அதிலிடப்பட்டுள்ள

தாழ்ப்பாள். காமம் என்னும் கோடரி, நாணம் என்னும் தாழ்ப்பாளை உடைத்துக் கதவைத் திறக்குமாறு செய்வதால், மனம் எனும் வீட்டில் உள்ளவை வெளிப்படுகின்றன.

நிறை, நாணத்தைவிடக் காமம் வலியது என்பது குறிப்பு.

சொற்பொருள்

2. நாணுத்தாள் வீழ்த்த - நாணம் என்னும் தாழிட்டுப் பூட்டிய கதவினை.

1-2.நிறை என்னும் கதவு - நிறை என்னும் கதவினை; காமக் கணிச்சி - காமம் என்னும் கோடரி; உடைக்கும் - உடைத்து விடும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1252 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நெஞ்சின்கண் தோன்றிய காமம் நெஞ்சால் அடக்கப்படும் என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'நெஞ்சில் தோன்றுகின்ற காமத்தை அந்நெஞ்சினாலேயே அடக்கலா மன்றோ?' என்று கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

காமம்என ஒன்றோ கண்இன்(று)என் நெஞ்சத்தை
யாமத்தும் ஆளும் தொழில்.

தெளிவுரை

காமம் என்ற ஒன்றே உலகில் இரக்கமில்லாதது. அது எல்லோரும் உறங்கும் நள்ளிரவிலும் என் நெஞ்சினைத் துன்புறுத்தி ஏவல் கொள்ளுகின்றது.

கருத்து

காமம் நெஞ்சத்திலே தோன்றினாலும் இரக்கமின்றி நெஞ்சத்தையே தனக்குக் கீழ்ப்படியுமாறு செய்துவிடுகிறது.

விளக்கம்

"காமம் நெஞ்சில்தான் பிறக்கிறது; ஆனால் நெஞ்சினால் காமத்தைத் தனக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு செய்ய முடியவில்லை. அதனால் நான் ஆற்றியிருக்க முடியவில்லை" என்று, தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

குறிப்பு

காமம் நெஞ்சினும் வலியது என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. காமம் என ஒன்றோ - காமம் என்னும் கொடுமையான ஒன்று; கண் இன்று - இரக்கம் இல்லாமல்; என் நெஞ்சத்தை - என் மனத்தை.
2. யாமத்தும் - நள்ளிரவிலும்; தொழில் ஆளும் - ஏவல் கொண்டு ஆள்கிறது.

தலைவி கூற்று

திருக்குறள் 1253 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

மகளிர் காமம் மறைக்கப்படும் என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் ஆற்றாதிருந்த தலைவியிடம் தோழி, காமத்தை அடக்கி ஆளவேண்டும் என்று சொல்லியது.

மறைப்பேன்மன் காமத்தை யானோ, குறிப்(பு)இன்றித்
தும்மல்போல் தோன்றி விடும்.

தெளிவுரை

நான் என் காமத்தை என்னுள்ளே மறைக்கத்தான் முயல்கிறேன். ஆனால் தும்மலைப்போல் என் குறிப்பு இன்றியே அது வெளிப்பட்டு விடுகிறது.

கருத்து

நான் என் காமத்தை வெளிப்படாமல் மறைக்கத்தான் நினைக்கிறேன்; ஆனால் அது எனக்கு அடங்காமல் தும்மல்போல் வெளிப்பட்டு விடுகின்றது.

விளக்கம்

'தும்மல் வருமானால் எவ்வளவு அடக்கினாலும் அடக்க முடியாது வெளிவந்துவிடும். அதுபோலக் காமத்தையும் அடக்க முடியாது; அடக்க முயன்றாலும் அது நம்மையும் மீறி வெளி வந்துவிடும். அதுபோல நானும் காமத்தை அடக்க முடியாமல் நிறையழிகிறேன்' என்று, தலைவி தோழிக்குக் கூறினாள்.

குறிப்பு

காமத்தை அடக்க வழியேதும் இல்லை.

சொற்பொருள்

1. யானோ காமத்தை மறைப்பேன் - நானோ காமத்தை உறுதியாக மறைப்பேன்; குறிப்பின்றி (ஆனால்) அது என் எண்ணத்தின்படி அடங்கி நில்லாது.
2. தும்மல்போல் - தும்மலைப் போல; தோன்றிவிடும் - வெளிப்பட்டு விடும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1254 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

மகளிர் காமம் மறைக்கப்படும் என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் ஆற்றாதிருந்த தலைவியிடம் தோழி, காமத்தை அடக்கி ஆளவேண்டும் என்று சொல்லியது.

நிறைஉடையேன் என்பேன்மன் யானோ,என் காமம்
மறைஇறந்து மன்று படும்.

தெளிவுரை

நான் மன உறுதியுடையவள் என்றுதான் கூறுவேன். ஆனால் என் காமமோ மறைந்திராமல் அம்பலமாகி விடுகிறது.

கருத்து

என் மன உறுதியையும் மீறி என் காமம் உள்ளத்தே மறைந்திராமல் வெளிப்பட்டு விடுகின்றது.

விளக்கம்

நிறையழிந்து விடுமானால் என்ன செய்தாலும் மன வாதனையை அடக்க முடியாது; வெளிப்பட்டே தீரும். தலைவி காமத்தை மறைக்கத்தான் முயல்கிறாள்; அதுவோ அவள் மனத்தையும் மீறி வெளிப்பட்டுவிடுகிறது.

குறிப்பு

காமம் நிறையை அழிக்கும்.

சொற்பொருள்

1. யானோ நிறை உடையேன் என்பேன் - நானோ நிறையுடையவள் என்று கூறுவேன்; என் காமம் - (ஆனால்) என் காமமோ.
2. மறை இறந்து - மறைத்தலைக் கடந்து; மன்றுபடும் - அம்பலமாகி விடுகிறது.

தலைவி கூற்று

திருக்குறள் 1255 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நம்மை மறந்தாரை நாமும் மறக்கற்பாலம் என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'நம்மை மறந்து பிரிந்து சென்றவரை நாமும் மறப்போம்' என்று கூறிய தோழிக்குத் தலைவி, 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோம்' என்று சொல்லியது.

செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றார் அறிவ(து)ஒன்று அன்று.

தெளிவுரை

தம்மைப் பிரிந்து சென்றவர்பின்னே தாம் செல்லாதிருக்கும் பெருந்தகைமை, காதல் நோய் கொண்டவர் அறியாதது.

கருத்து

தம்மைப் பிரிந்தவர் பின் தாம் செல்லாதிருக்கும் மன உறுதி, காமநோய் கொண்டவர்களிடம் இல்லை.

விளக்கம்

"நம்மைப் பிரிந்து சென்ற தலைவர்பின் செல்லாது அகன்று நிற்கும் மன உறுதி, காமநோய் உற்ற நம்மிடம் இல்லை. (இதனால் நம் மனம் அவரிடம் செல்லுதலே தகுதி)" என்று, தலைவி தோழிக்குக் கூறினாள்.

குறிப்பு

'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேம்'.

சொற்பொருள்

1. செற்றார் பின் - தம்மை வெறுத்துப் பிரிந்து சென்ற, தலைவன் பின்னே; செல்லாப் பெருந்தகைமை - தாம் செல்லாத பெருந் தகைமை.

1-2.காமநோய் உற்றார் - காமநோய் கொண்டவர்.
2. அறிவது ஒன்று அன்று - அறியக் கூடிய ஒன்று அன்று (அறியாதது).

தலைவி கூற்று

திருக்குறள் 1256 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நம்மை மறந்தாரை நாமும் மறக்கற்பாலம் என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'நம்மை மறந்து பிரிந்து சென்றவரை நாமும் மறப்போம்' என்று கூறிய தோழிக்குத் தலைவி, 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோம்' என்று சொல்லியது.

செற்றவர் பின்,சேறல் வேண்டி, அளித்தரோ
என்(று)என்னை உற்ற துயர்.

தெளிவுரை

வெறுத்துப் பிரிந்தவர் பின் செல்லுவதை விரும்பி என்னை அடைந்த காதல் நோயை, நான் என்னவென்று சொல்லுவது? அஃது இரங்கத்தக்கது.

கருத்து

என்னை வாட்டும் காதல் நோய், என்னைவிட்டுப் பிரிந்தவர்பின்னே செல்ல, என்னை விரும்பச் செய்கிறது.

விளக்கம்

பிரிந்தவர் பின்னே செல்லும்படி செய்ய என்னை வந்தடைந் துள்ள காதல் நோயை, என்னென்று சொல்வது?

குறிப்பு

மதியாரை மதித்து மனத்தைப் பின் செல்ல வைத்துவிட்டது காதல் நோய்.

சொற்பொருள்

1. செற்றவர்பின் - வெறுத்துப் பிரிந்த காதலர் பின்னே; சேறல் - செல்லுதலை; வேண்டி - விரும்பி.
2. என்னை உற்ற துயர்? - என்னை அடைந்த காமத்துயர்; எற்று - எத்தன்மையது?
1. அளித்தரோ? - அஃது இரங்கத்தக்கது.

தலைவி ஆற்றாமை கூறியது.

தலைவி கூற்று

நற்றிணை 64 **உலோச்சனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பிரிவிடைத் தலைமகளது அருமை கண்டு தூதுவிடக் கருதிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனது பிரிவால் தலைவியின் துன்பம் மிகுதிப்பட்டது. நாளுக்குநாள் அவள் நிலை கவலைப்படத்தக்கதாய் இருந்தது. அது கண்டு கலங்கிய தோழி, தலைவனுக்குத் தூது அனுப்பக் கருதினாள். அதனைக் கேட்ட தலைவி தோழியிடம் சொல்லியது.

என்னர் ஆயினும் இனிநினைவு ஒழிக!
அன்ன ஆக இனையல் தோழி!யாம்
இன்னம் ஆகநம் துறந்தோர் நட்புஎவன்?
மரல்நார் உடுக்கை மலைஉறை குறவர்
அறியாது அறுத்த சிறியிலைச் சாந்தம்
வறனுற்று ஆர முடுக்கிப் பையென
மரம்வறி தாகச் சோர்ந்துஉக் காங்குஎன்
அறிவும் உள்ளமும் அவர்வயின் சென்றென,
வறிதால், இகுளை!என் யாக்கை; இனிஅவர்
வரினும், நோய்மருந்து அல்லர்; வாராது

அவணர் ஆகுக காதலர்! இவண்நம்
காமம் படர்அட வருந்திய
நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே!

தெளிவுரை

"தோழி! நம் காதலர் எத்துணைச் சிறப்பினைக் கொண்டவரா யினும் அவரிடத்துத் தூது விடும் எண்ணத்தைக் கைவிடு. அவர் நம்மைக் கைவிட்டார் என்பதற்காகவும் வருந்தாதே! நமக்குத் துன்பத்தையும் வருத்தத்தையும் கொடுத்து நீங்கியோர் நட்பு இனி எதற்கு? மறல் நாரினாலே பின்னிய உடையினைக் கொண்டு மலையில் வாழும் குறவர், சிறிய இலைகளைக் கொண்ட சந்தன மரத்தின் மேற்பட்டையை அறியாமல் உரித்தனர். அதனால் அந்த மரம் வற்றத் தொடங்கிவிட்டது. பட்டை உரிக்கப்பட்ட மரத்திலிருந்து அதன் உயிர்ச்சத்தாகிய நீரும் வடிந்தது. அதுபோல என் உள்ளமும் அறிவும் என்னைப் பிரிந்து அவரிடத்தே சென்று நின்றன. எனவே தோழி, என் உடம்பு எதுவும் இல்லாமல் வறிதாயிற்று. அவர் இனி வந்தாலும் எனக்குரிய மருந்தாக மாட்டார். ஆதலால், அவர் அங்கேயே இருக்கட்டும். இங்குக் காமமும் அதனால் உண்டான நினைவும் நம்மை வருத்துவதை அவர் காணாதிருக்கட்டும்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் சென்ற இடத்திலேயே தங்கட்டும்; இங்கு வந்து என் துன்ப மிகுதியைக் காண வேண்டா.

விளக்கம்

"காதலர் நமக்கு எத்துணைச் சிறந்தவராயினும் இப்பொழுது அவரை நினைக்க வேண்டா. நாம் இந்நிலையினை அடைய நம்மைப் பிரிந்து அகன்றவர்தம் நட்பு நமக்கு எதற்கு? குறவர் பட்டையை உரித்ததால் தழையுதிரப் பெற்று, பசுமையிழந்து, பட்டுவிட்ட சந்தன மரம்போல், அறிவும் உள்ளமும் அவரிடம் சென்றமையால் என் மேனியும் வலிவிழந்து நலனை இழந்து வாடியிருக்கிறது. இப்பொழுது அவர் வந்தாலும் நம் நோய்க்கு

மருந்தாய் இரார். இங்கே நம்மை வருத்தும் நோயைக் காணாமல் அவர் அங்கேயே இருக்கட்டும்" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

உள்ளுறை

அறியாமையாலே குறவர் தன் பட்டையை அறுத்ததன் காரணமாய்த் தன் உயிர்ச்சத்தினை முற்றும் இழந்து சந்தன மரம் பட்டுவிட்டது. அதுபோல, தலைவிக்குத் துன்பம் நேரும் என்பதை அறியாதே தலைவன் பிரிந்தானாயினும் அந்தப் பிரிவாகிய துயரால் அவள் நாளுக்கு நாள் நலிந்து முற்றிலுமாய் வாட்டமுற்றனள்.

சொற்பொருள்

1. என்னர் ஆயினும் - என்ன நேர்ந்தாலும்.
2. அன்ன ஆக - அவர் நம்மைக் கைவிட்டார் என்பதற்காக; இனையல் - வருந்தாதே.
3. எவன்? - எதற்காக?
4. மரல் - ஒரு செடி; உடுக்கை - ஆடை.
5. சிறியிலை - சிறிய இலைகளைக் கொண்ட; சாந்தம் - சந்தன மரம்.
6. வறனுற்று - வாட்டமுற்று; ஆரமுடுக்கி - மிகவும் கெடுத்து; பையென - மெல்லென.
7. வறிதாக - வற்றிப்போய்; உக்காங்கு - வீழ்ந்தாற்போல.
8. அவர் வயின் - அவரிடம்; சென்றென - சென்றுவிட்டதால்.
9. இகுளை - தோழி; இகுளை என் யாக்கை வறிது.
10. வாராது - வாராமல்.
11. அவணர் ஆகுக - அங்கேயே இருக்கட்டும்; இவண் - இங்கே.
12. படர் அட - துன்பம் அழுத்தலால்.
13. காணன்மார் - காணாதிருக்கட்டும்.

தலைவி கூற்று

நற்றிணை 84 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றாது வருந்திய நிலையில் தன்னைத் தேற்றிய தோழியை நோக்கிக் கூறியது.

கண்ணும் தோளும் தண்நறுங் கதுப்பும்,
திதலை அல்குலும், பலபா ராட்டி,
நெருநலும் இவணர் மன்னே! இன்றே,
பெருநீர் ஒப்பின் பேஎய் வெண்தேர்
மரன்இல் நீள்இடை மான்நசை யுறூஉம்,
சுடுமண் தசும்பின் மத்தம் தின்ற
பிறவா வெண்ணெய் உருப்புஇடந் தன்ன
உவர்எழு களரி ஓமைஅம் காட்டு,
வெயில்வீற் றிருந்த வெம்புஅலை அருஞ்சுரம்
ஏகுவர் என்ப, தாமே தம்வயின்
இரந்தோர் மாற்றல் ஆற்றா
இல்லின் வாழ்க்கை வல்லா தோரே.

தெளிவுரை

தோழி! என் கண்களையும் தோளினையும் குளிர்ச்சியான மணம் கமழும் கூந்தலையும், தேமல் வரி படர்ந்த அல்குலினையும் பாராட்டி நேற்று நம் தலைவர் இங்கே நம்மோடிருந்தார். இன்றோ, பெரிய நீர்நிலையைப் போலக் கானல்நீர் தோன்றுதலால் அதனை, மரஞ்செடிகொடிகள் இல்லாத வெட்ட வெளியில் திரியும் மான்கள் நீரெனக் கருதி அருந்த ஓடும் பாலை நிலத்தில் சென்றுகொண்டிருக்கிறார். சுடுமண் பானையில் மத்தால் கடையப்படும்போது வெப்பம் மிகுந்தால் நன்கு திரளாது சிதறித் தோன்றும் வெண்ணெய் போலக் களர் நிலம் பொருந்திய வழியில், ஓமை மரங்கள் நிறைந்த காட்டில், வெயில்

மிகுந்து கொளுத்தும் அரிய வழியில் சென்று கொண்டிருக் கிறார் என என் அருகில் உள்ளார் உரைக்கின்றனர். தன்னிடம் வந்து இரப்பவரின் இல்லாமையைப் போக்க இயலாத இல்லத்தில் வாழும் வாழ்க்கையைத் தலைவர் விரும்பாதவர்; ஆதலாலே பொருளீட்டச் சென்றுள்ளார்; என்றாலும், அவர் பிரிவை நான் எவ்வாறு ஆற்றியிருப்பேன்.

கருத்து

தலைவன் கடமை கருதிப் பிரிந்துள்ளார். எனினும், என்னால் பிரிவை ஆற்றியிருக்க முடியுவில்லையே.

விளக்கம்

நேற்று நம் காதலர் இங்கிருந்தபோது என் கண்ணையும் தோளையும் கூந்தலையும் பிறவற்றையும் பாராட்டி இன்புற்று இருந்தார். இன்று அவர் வெயில் மிகுந்துள்ள காட்டுவழியில் சென்றுகொண்டிருப்பதாய் என் உடனிருப்பவர் கூறுகின்றனர். தன்னிடம் ஒருவர் வந்து இல்லை எனச் சொல்லி இரப்பாராயின் அவரது இல்லாமையைத் தீர்த்து இனிதே இருக்கச்செய்தல் தமது கடமை என்பதாலேயே தலைவர் பொருளீட்டச் சென்றுள்ளார். அவர் ஒரு காரணம் கருதிச் சென்றிருந்தாலும் அவர் பிரிவை நான் எவ்வாறு பொறுத்திருப்பேன்?

இறைச்சி

கானல்நீரைக் குடிநீராய்க் கருதி மான்கள் விரும்பி ஓடுதல் போன்று, அருளில்லாத தலைவனிடம் அன்பும் அறனும் இருப்பதாய்க் கருதித் தலைவி மயங்கினாள் எனப் பொருட் புறத்தே இறைச்சி தோன்றிற்று.

சொற்பொருள்

1. கதுப்பு - கூந்தல்.
2. திதலை - தேமல்.
3. நெருநல் - நேற்று; இவணர் - இங்கிருந்தார்.
4. பெருநீர் - நீர்வளம்; பேஎய் வெண்தேர் - கானல் நீர்.
5. மரன் - மரம்; நசையுறூஉம் - விரும்பும்.
6. தசும்பு - குடம்; மத்தம் - தயிர் கடையும் மத்து; தின்ற - கடைய.

7. பிறவா - திரளாத; உருப்பு இடந்தன்ன - சிதறிக் கிடந்தாற்போன்ற.
8. உவர் எழு - உவர்மண் எழுந்த; களரி - களர் நிலம்; ஓமை - ஒரு வகை மரம்.
9. வெம்பு அலை - வெதுப்பும் வெம்மையும் கொண்ட.
10. ஏகுதல் - செல்லுதல்; தம்வயின் - தம்மிடம்.
11. இரந்தோர் - யாசித்தோர்; மாற்றல் ஆற்றா - இன்மையைப் போக்க மாட்டாத.
12. வல்லாதோர் - விரும்பாதவர்.

தலைவி கூற்று

நற்றிணை 107 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து தலைவி வருந்தினாள். அவளைத் தோழி தேற்றிய நிலையில் தலைவி தன் நிலைப்பாட்டினைத் தோழியிடம் சொல்லியது.

உள்ளுதொறும் நகுவேன் தோழி! வள்உகிர்ப்
பிடிபிளந் திட்ட நார்இல்வெண் கோட்டுக்
கொடிறுபோல் காய வால்இணர்ப் பாலை,
செல்வளி தூக்கலின், இலைதீர் நெற்றம்
கல்இழி அருவியின் ஒல்லென ஒலிக்கும்
புல்இலை ஓமைய, புலிவழங்கு அத்தம்
சென்ற காதலர் வழிவழிப் பட்ட
நெஞ்சே நல்வினைப் பாற்றே; ஈண்டுஒழிந்து,
ஆனாக் கௌவை மலைந்த
யானே, தோழி! நோய்ப்பா லேனே.

தெளிவுரை

தோழி! கூர்மையான நகங்களைக் கொண்ட பெண்யானை முரித்த ஈரமில்லாத மரக்கிளைகள் விறகுபோலக் காய்ந்து கிடக்கின்றன. காற்று வீசுவதால் வெண்மையான கிளைகளைக் கொண்ட பாலை மரத்திலிருந்து இலைகள் உதிர்கின்றன. அதன் முற்றிய காய்கள் மலையிலிருந்து இறங்கும் அருவிபோல 'ஒய்' என ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அங்குச் சிறிய இலை களைக் கொண்ட ஓமை மரங்கள் உள்ளன. புலிகள் நடமாடிக் கொண்டிருக்கும் அக்காட்டுவழியில் நம் தலைவர் சென் றுள்ளார். அவர் சென்ற அவ்வழியிலேயே பின்தொடர்ந்து சென்று, என்னிடம் மீளாதுள்ள என் நெஞ்சம் நல்வினைப்பேறு வாய்ந்தது. ஆனால் நானோ, அவரைப் பிரிந்து, பழிச் சொல்லுக்கு ஆளாகித் தீவினைக்கு ஆளானவளாய் இங்கே இருக்கிறேன். இவ்வாறு இருவினைகளாலும் ஏற்படும் பலனை ஒருசேர அனுபவிக்கும் என் நிலையை நினைத்து எனக்கு நானே சிரித்துக்கொள்கிறேன்.

கருத்து

என் நெஞ்சம் என்னைக் கைவிட்டுத் தலைவனோடு சென்றுவிட்டது. உடம்போ இங்கிருந்து துன்பப்படுகிறது.

விளக்கம்

தலைவன் பிரிவால் தலைவி மெலிவுற்றாள். இந்நிலையில் அவள் தோழியை நோக்கி, "தோழியே! என் நெஞ்சம் தான் செய்த நல்வினைப்பயனால் தலைவன் சென்ற வழியைப் பின் தொடர்ந்து சென்று தலைவரது செயல்நலம் கண்டு இன்புறும் பேறு பெற்றுள்ளது. என் உடம்போ, ஊரார் பழிச்சொல்லுக்கு ஆளாகித் தீவினையால் துன்புற்றுள்ளது. இவ்வாறு இரு வினைப்பயன்களும் ஒரே வேளையில் எனக்கு வாய்த்துள்ளதை நினைத்து எனக்கு நானே சிரித்துக்கொள்கிறேன்" என்று கூறுகிறாள்.

உள்ளுறை

பெண்யானை மரத்தின் கிளையை முரித்ததுபோலத் தலைவன் தலைவியின் நலத்தைக் கவர்ந்தான். பாலை மரத்தின்

இலைகள் உதிர்ந்து, அதன் நெற்று ஒலிப்பதுபோலத் தலைவி நெஞ்சழிந்து புலம்பியுள்ளாள். பாலை நிலத்தில் புலி நடமாடி அச்சம் விளைவிப்பதுபோல அன்னை முதலாயினோர் தலைவியை அச்சுறுத்தினர்.

சொற்பொருள்

1. நகுவேன் - சிரிப்பேன்; வள்உகிர் - கூர்மையான நகம்.
2. பிடி - பெண்யானை; நார் - ஈரம்; கோடு - கிளை.
3. கொடிறு - குறடு; காய - காய்ந்து கிடக்க; வால் - வெண்மையான; இணர் - பூங்கொத்து; பாலை - பாலை மரம்.
4. செல்வளி - செல்லும் தொழிலைக் கொண்ட காற்று; தூக்கலின் - வீசுவதால்; இலைதீர் - இலைகள் உதிர்ந்த; நெற்றம் - முற்றிய காய்.
5. கல்இழி - மலையிலிருந்து இறங்குகின்ற.
6. புல் இலை - சிறிய இலை; ஓமை - ஒரு வகை மரம்; வழங்கும் - உலவும்.
7. வழி வழிப்பட்ட - வழியிலேயே சென்ற; நல்வினைப் பாற்று - நல் வினைப்பேறு கொண்டது.
8. ஈண்டு ஒழிந்து - இங்கே தங்கி.
9. கௌவை - பழிச்சொல்; மலைந்த - ஏற்று உறைகின்ற.
10. யானே - நான்; நோய்ப்பாலேன் - தீவினையால் துன்புற்றேன்.

தலைவி கூற்று

நற்றிணை 224 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தோழியால் பிரிவுணர்த்தப்பட்ட தலைமகள் பெயர்த்தும் சொற்கடாவப் பட்டு, 'அறிவிலாதேம் என்னை சொல்லியும் பிரியார் ஆகாரோ?' என்று சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியிடம், 'உன்னைப் பிரிய மாட்டேன்' என்று உறுதிபடக் கூறியிருந்தான். ஆனால், அவன் பொருள்தேடப் பிரிந்து சென்றுவிட்டதைத் தோழி தலைவியிடம் கூறினாள். அப்போது தலைவி மனந்தளர்ந்து உரைத்தது.

அன்பினர் மன்னும் பெரியர் அதன்தலை,
பின்பனி அமையம் வரும்என, முன்பனிக்
கொழுந்து முந்துறீஇக் குரவுஅரும் பினவே;
புணர்ந்தீர் புணர்மி னோஎன இணர்மிசைச்
செங்கண் இருங்குயில் எதிர்குரல் பயிற்றும்
இன்ப வேனிலும் வந்தன்று நம்வயின்,
'பிரியலம்' என்று தெளிந்தோர் தேஎத்து
இனிஎவன் மொழிகோ யானே, கயன்அறக்
கண்அழிந்து உலறிய பல்மா நெடுநெறி
வில்மூசு கவலை விலங்கிய
வெம்முனை அருஞ்சுரம் முன்னி யோர்க்கே?

தெளிவுரை

"தோழியே! நம் காதலர் நம்மீது அன்பு கொண்டவர்; அவர் மிகவும் பெரியவர். பின்பனிக்காலம் அடுத்து வரும் என்பதை முன்பனிக் காலத்தில் குரவ மரங்கள் தளிர்களை முற்படத் தோற்றுவித்துப் பின்னர் அரும்புகளையும் தோற்றுவித்துத் தெரிவித்துவிட்டன. மாமரத்தில் பூங்கொத்தின் மீதிருக்கும் சிவந்த கண்களைக் கொண்ட குயிற்சேவலும் பேடையும், 'புணர்ந்து இன்புற்றீர்! பிரியாது இன்புறீர்!' என்று எதிரெதிரிருந்து கூவும். பின்பனியை அடுத்து எவ்வுயிர்க்கும் இன்பம் நல்கும் வேனிற் பருவமும் வந்தது. (முன்பனி, பின்பனி ஆகிய காலங்களை அடுத்து வேனிற்காலமும் வந்தது.) 'இப்பருவத்தில் உம்மை நீங்கிப் பிரிய மாட்டேன்' என்று தலைவர் வற்புறுத்திக் கூறித் தெளிய வைத்தார். (ஆனால், நடந்தது என்ன?)

"குளங்கள் நீர் அற்று வறட்சியுற்ற பாலைநிலப் பெருவழியில் மறவர்கள் கொடிய வில்லுடன் காத்திருக்கும் மயக்கம் நிறைந்த கவர்த்த வழியில் பிரிந்துசென்றுவிட்டாரே! இனி அவர் பொருட்டு நாம் கூறுதற்கு என்ன இருக்கிறது?" எனத் தோழியிடம் தலைவி கூறினாள்.

கருத்து

பிரியேன் என்று உறுதிபடக் கூறிய தலைவர் பிரிந்து சென்றுவிட்டார்; நான் வருந்தியிருப்பதைத் தவிர வேறு என்ன செய்ய இயலும்?

விளக்கம்

" 'தோழி! நம் தலைவர் நம்மிடம் அன்பு கொண்டவர்; மேலும் அவர் மிகவும் பெரியவர். நாம் அவரது பெருமைக்கேற்ற அறிவு கொண்டவர் அல்லர். முன்பனிப்பருவம் முடிந்து பின்பனிப் பருவம் வர இருப்பதைக் குரவ மரங்கள் தளிர்த்து அரும்புவிட்டுத் தெரிவித்தன. பின்பனியை அடுத்து இளவேனில் வந்துவிட்டதைக் குயில்கள், 'காதலர் பிரியாதிருந்து புணர்ந்து இன்பமடையுங்கள்' என்று கூறித் தெரிவித்தன. இப்பருவங்களிலெல்லாம் 'உன்னைப் பிரிய மாட்டேன்' என்று கூறிக் கொண்டிருந்த தலைவர், நீரின்றி வறட்சியுற்றிருப்பதும், மறவர்கள் வில்லேந்தித் திரிவதும், பல வகையாகப் பிரிந்து எவ்வழியே செல்வது என்று மயக்கமூட்டுவதுமான கொடிய பாலை வழியில் சென்றுவிட்டார் என்று கூறுகிறாய். அவர் இப்படிச் செய்து விட்டாரே என்பதைத் தவிர நான் வேறென்ன கூற இயலும்?" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. மன்னும் - மிகவும், பெரிதும்; அதன்தலை - அதன் மேலும்.
2. அமையம் - பருவம்; முன்பனி - முன்பனிப்பருவம்.
3. கொழுந்து - தளிர்; முந்துறீஇ - முற்படத் தோற்றுவித்து; குரவு - குரவ மரம்.
4. புணர்மினோ - கூடியிருப்பீர்களாக; இணர் மிசை - பூங்கொத்துகளின் மீதிருந்து.
5. எதிர்குரல் பயிற்றும் - எதிரெதிர் இருந்து குரல் எழுப்பும்.
6. வந்தன்று - வந்துவிட்டது; நம்வயின் - நம்மிடத்து.
7. தெளிந்தோர் - தெளிவித்தவர்; தேஎத்து - வெளியிடத்து.
8. எவன் மொழிகோ - என்ன சொல்வேன்?; கயன் அற - குளங்கள் நீர் அற்று.
9. கண் அழிந்து - இடத்தின் செவ்வி கெட்டு; உலறிய - காய்ந்த.
10. வில்லூசு - வில்லேந்திய (வீரர்கள் மொய்த்து வழங்கும்); கவலை - கிளை வழிகள்; விலங்கிய - குறுக்கிட்ட.
11. முன்னியோர் - கருதியவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 27 **வெள்ளிவீதியார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு, கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினை இவள் ஆற்றாள் ஆயினாள் எனக் கவலையுற்ற தோழியை நோக்கி, 'நான் ஆற்றியிருக்கிறேன்; ஆயினும், என் மாமை அழகு வீணாகும்படி பசலை உண்டது' என்று தலைவி கூறியது.

கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது,
நல்ஆன் தீம்பால் நிலத்துஉக் காஅங்கு,
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது,
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல்என் மாமைக் கவினே.

தெளிவுரை

நல்ல பசுவின் இனிய பால் கன்றாலும் குடிக்கப்படாமலும், கறக்கும் பாத்திரத்திலும் விழுந்திடாமலும், வீணே மண் தரையில் சிந்தினாற்போல் தேமல் படர்ந்த மாந்தளிர்போலும் என் மேனியழகு எனக்கும் பயன்படாமலும் தலைவனுக்கு இன்பத்தை அளித்திடாமலும் பசலை உண்ணுவதற்கான நிலையினை அடைந்துவிட்டதே!

கருத்து

தலைவன் பிரிவினை நினைந்து வருந்தவில்லை; என் மேனி பசலையுற்றுப் பயனின்றி அழிவதை நினைந்தே வருந்துகிறேன்.

குறிப்பு

என் மாமைக் கவின் மீண்டும் பொலிவு பெற்றுப் பயன்படுமாறு அவர் விரைந்து வாராரோ என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. கலம் - பாத்திரம்; படாது - வீழாது.

2. ஆன் - பசு; தீம் - இனிய; உக்காஅங்கு - சிந்தினாற்போல.
3. என்னை - என்ஐ - என் தலைவன்.
4. உணீஇயர் - உண்ண; வேண்டும் - விரும்பும்.
5. திதலை - தேமல்; மாமைக் கவின் - மாந்தளிர்போலும் அழகு.

திருக்குறள், அதிகாரம் 119 பசப்பு உறு பருவரல்.

தலைவி கூற்று

திருக்குறள் 1181 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

முன்பு பிரிவுடம்பட்ட தலைமகள், அஃது ஆற்றாது பசந்தவழி, தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவுக்கு உடன்பட்ட தலைவி, அவன் பிரிந்ததும் தன்னுடம்பு பசப்படைதல் கண்டு, தன்னுள்ளேயே சொல்லிக் கொண்டது.

நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தஎன்
பண்புயார்க்(கு) உரைக்கோ பிற.

தெளிவுரை

என்னை விரும்பிய தலைவர் பிரிவதற்கு நானே இசைவு தந்தேன். ஆனால் அவர் பிரிந்ததும் என் மேனியில் பசப்பு உண்டாய்விட்டது. இதனை யாரிடம் சொல்ல முடியும்?

கருத்து

பிரிவுக்கு இசைவு தந்தாலும் தலைவன் பிரிந்ததும் உடலில் பசலை ஏற்பட்டு விட்டதே!

விளக்கம்

தலைவன் பிரிவிற்கு நானே இசைந்தேன். அப்படியிருந்தும் அவர் பிரிந்ததும் உடலில் பசலை உண்டாய்விட்டது. என் குற்றத்தால் நேர்ந்ததை நான் வேறு யாரிடம் சொல்ல முடியும்?

குறிப்பு

துன்பம் நானேயாக வரவழைத்துக் கொண்டது; யாரிடமும் சொல்லி ஆறுதல் பெற முடியாது; பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

சொற்பொருள்

1. நயந்தவர்க்கு - என்னை விரும்பிய தலைவர்க்கு; நல்காமை - பிரிவை; நேர்ந்தேன் - (அன்று) உடன்பட்டேன்; பசந்த என் பண்பு - (இன்று) பசலையுற்ற தன்மையை.
2. பிற யார்க்கு உரைக்கோ? - வேறு எவரிடம் சொல்வேன்?

தலைவி கூற்று

திருக்குறள் 1182 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்கு ஆற்றுவல் என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினைத் தலைவி பொறாது உள்ளாள் என்று வருந்திய தோழிக்குத் தலைவி, 'நான் பொறுத்திருப்பேன்' என்று கூறியது.

அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்(து)என்
மேனிமேல் ஊரும் பசப்பு.

தெளிவுரை

நான் பொறுத்திருக்கவும் இந்தப் பசலை, 'தலைவர் தந்தார்' என்னும் பெருமையால், என் மேனிமேல் ஏறிப் பரவுகிறது.

கருத்து

தலைவன் தந்தது என்னும் பெருமையால், பசலை உடலில் உரிமையோடு ஊர்கிறது.

விளக்கம்

தலைவன் பெற்றெடுத்த குழந்தை பசலை. அந்த உரிமையினாலேயே அது தலைவியின் மேனிமேல் ஏறித் தவழ்கிறது.

குறிப்பு

மேனியில் படர்ந்துள்ள பசலை அவரால் வழங்கப்பெற்ற பெருமைக் குரியது; அவர் வந்தால்தான் அகற்ற முடியும்.

சொற்பொருள்

2. பசப்பு - இப் பசப்பு நிறம்.
1. அவர் - தலைவர்; தந்தார் - உண்டாக்கினார்; என்னும் தகைமை யால் - என்னும் பெருமையால்.
2. என் மேனிமேல் - என் உடலின்மேல்.
1. இவர்தந்து - ஏறி (இவர்தல் - ஏறுதல்); ஊரும் - பரவும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1183 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

'அழகும் நாணும் அழியாமல் நீ ஆற்றல் வேண்டும்' என்று தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவால் வருந்திய தலைவியின் அழகும் நாணமும் அழிந்தன; இவை அழியாமலிருக்கத் தலைவி பிரிவைப் பொறுத்திருக்க வேண்டும் என்று சொன்ன தோழிக்குத் தலைவி சொல்லியது.

சாயலும் நாணும் அவர்கொண்டார்; கைம்மாறா
நோயும் பசலையும் தந்து.

தெளிவுரை

தலைவர் என் அழகையும் நாணத்தையும் தான் எடுத்துக் கொண்டு எனக்குக் காமநோயையும் பசலையையும் தந்து சென்று விட்டார்.

கருத்து

தலைவர் பிரிவால் அழகையும் நாணத்தையும் இழந்தேன்.

விளக்கம்

'அழகும் நாணமும் பெண்கள் இழக்க முடியாதன. பசலையும் நோயும் பெண்களுக்கு வேண்டாதன. வேண்டியதை இழந்து, வேண்டாததைப் பெற்றிருக்கும் நான், எவ்வாறு ஆற்றியிருக்க முடியும்?' என்கிறாள் தோழி.

குறிப்பு

தலைவன் திரும்பினால்தான் என் மேனி அழகும் நாணமும் திரும்பும்.

சொற்பொருள்

2. நோயும் பசலையும் தந்து - (பிரியும் போதே) நோயையும் பசலையையும் எனக்குத் தந்துவிட்டு.
1. கைம்மாறா - அதற்கு ஈடாக; அவர் - தலைவர்; சாயலும் நாணும் கொண்டார் - என் மேனியழகையும் நாணத்தையும் கொண்டு சென்றார்.

தலைவி கூற்று

திருக்குறள் 1184 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

'காதலர் தெளிவித்த சொற்களையும் அவர் நற்றிறங்களையும் அறிதி யாதலின், அவர் வரும்வரை ஆற்றியிரு' என்று சொல்லியது.

கூற்று விளக்கம்

'தலைவருடைய சொல் மாறாத தன்மையினையும், அவருடைய நல்ல குணங்களையும் நீ அறிவாய். அவர் விரைவில் வருவார். ஆற்றியிரு' என்று சொன்ன தோழிக்குத் தலைவி கூறியது.

உள்ளுவன் மன்யான் உரைப்ப(து) அவர்திறமால்
கள்ளம் பிறவோ பசப்பு.

தெளிவுரை

தலைவர் சொற்களையே நினைத்திருப்பேன்; எவரிடத்திலும் அவருடைய நல்ல பண்புகளையே சொல்லுவேன். அப்படியிருக்க இப்பசலை எப்படியோ என்னிடம் கள்ளத்தனமாய் வந்துவிட்டது.

கருத்து

நான் எப்போதும் தலைவனையே நினைந்தும் பேசியுமிருக்க, இந்தப் பசலை எப்படிக் கள்ளத்தனமாய் நுழைந்தது?

விளக்கம்

நான் அவர் கூறிய சொற்களை மறவாது நினைத்தவாறே இருக்கிறேன்; பேசும்போதும் அவருடைய நல்லியல்புகளையே பேசிக் கொண்டிருக்கிறேன். இவ்வாறாக அவர் என்னுடனேயே இருக்க, இந்தப் பசலை எப்படிக் கள்ளத்தனமாய் நுழைந்தது?

குறிப்பு

தலைவன் இல்லாதபோதுதான் பசலை வரமுடியும். எண்ணத்தாலும் பேச்சாலும் அவர் என்னுடனேயே இருக்கிறார். இருந்தும் கள்ளத்தனமாய்ப் பசலை நுழைந்துவிட்டதே.

சொற்பொருள்

1. யான் - நான்; உள்ளுவன் - (அவர் சொற்களை மனத்தால்) நினைக்கிறேன்; உரைப்பது - (வாயால்) சொல்லப்படுவதும்; அவர் திறம் - அவர் நற்குணமே (அப்படியிருக்கவும்)
2. பசப்பு - பசலை நிறம்; கள்ளம் பிறவோ - கள்ளத்தனமாய் வந்து விட்டதே.

தலைவி கூற்று

திருக்குறள் 1185 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

காதலர் பிரிந்து அணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலை என்ற தோழிக்கு, முன் நிகழ்ந்தது கூறியது.

கூற்று விளக்கம்

'காதலர் பிரிந்து மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே ஆற்றாதவளாய் விட்டாயே' என்ற தோழிக்குத் தலைவி, முன்பு நடந்தது கூறியது.

உவக்காண்,எம் காதலர் செல்வார் இவக்காண்என்
மேனி பசப்(பு)ஊர் வது.

தெளிவுரை

ஒரு நாள் தலைவர் என்னைப் பிரிந்து சிறிது தொலைவே (இதோ கண்ணுக்குத் தெரியும் அளவே) சென்றிருந்தார். ஆனால் உடனே இங்கு என்னைப் பசப்பு வந்து கவர்ந்து கொண்டது.

கருத்து

தலைவர் பிரிந்தார் என்று சொல்லும் நேரத்துக்குள்ளேயே என் உடலில் பசப்புப் பரவிவிட்டது.

விளக்கம்

இதோ பார் தோழி! இப்போதுதான் தலைவர் பிரிந்து செல்கிறார். என் உடலைப் பார்; அதற்குள் பசலை வந்து பற்றிக் கொண்டது.

குறிப்பு

பிரிவுக்கும் பசலைக்கும் கால இடைவெளி இல்லை.

சொற்பொருள்

1. உவக்காண் - உதோ பார்; எம் காதலர் செல்வார் - என் காதலர் பிரிந்து செல்கிறார்; இவக்காண் - இதோ பார்.
2. என் மேனி பசப்பு ஊர்வது - என் மேனியில் பசலை படர்கின்றது.

தலைவி கூற்று

திருக்குறள் 1186 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

காதலர் பிரிந்து அணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலை என்ற தோழிக்கு, முன் நிகழ்ந்தது கூறியது.

கூற்று விளக்கம்

'காதலர் பிரிந்து மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே ஆற்றாதவளாய் விட்டாயே' என்ற தோழிக்குத் தலைவி முன்பு நடந்தது கூறியது.

விளக்(கு)அற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்(கு)அற்றம் பார்க்கும் பசப்பு.

தெளிவுரை

விளக்கு அணைந்ததோ இல்லையோ உடனே இருள் சூழ்ந்து கொள்கிறது. அதுபோலத் தலைவனை நான் தழுவியிருப்பதில் சிறிது நெகிழ்ந்தாலும், பசலை என்னை அள்ளிக் கொள்கிறது.

கருத்து

தலைவனைத் தழுவுதலில் சிறிது தளர்ந்தாலும், என் உடலில் பசலை உடனே படர்ந்து விடுகிறது.

விளக்கம்

விளக்கு அணைந்ததும் இருள் பரவுவது போல, தலைவனைத் தழுவுதலில் நான் சிறிது அகன்றதும் பசலை என் உடலில் பரவி விட்டது.

குறிப்பு

தலைவன் பிரிந்தால் தலைவியைப் பசலை சேரும்.

சொற்பொருள்

1. விளக்கு அற்றம் - விளக்கொளியின் மறைவை; பார்க்கும் - பார்த்துக் கொண்டே இருந்து; இருளே போல் - (பரவுகின்ற) இருளைப்போல; கொண்கன் - தலைவன்.

2. முயக்குஅற்றம் - தழுவுவதிலிருந்து விலகுவதைப் பார்க்கும்; பசப்பு - பசலை (பரவி விடும்).

தலைவி கூற்று

திருக்குறள் 1187 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

காதலர் பிரிந்து அணித்தாயிருக்கவும் ஆற்றுகின்றிலை என்ற தோழிக்கு, முன் நிகழ்ந்தது கூறியது.

கூற்று விளக்கம்

'காதலர் பிரிந்து மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே ஆற்றாதவளாகி விட்டாயே' என்ற தோழிக்குத் தலைவி முன்பு நடந்தது கூறியது.

புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள் வற்றே பசப்பு.

தெளிவுரை

முன்பொருநாள் தலைவனைத் தழுவிக் கிடந்த நான் ஒரு சிறிது தள்ளிப் படுத்தேன்; அவ்வளவிலேயே பசலை என்னை மிக நெருக்கமாய்ப் பற்றிக் கொண்டது.

கருத்து

தழுவுதலில் நான் சிறிது பெயர்ந்த அளவிலேயே பசலை வந்து பற்றிக் கொண்டது.

விளக்கம்

படுக்கையில் தலைவனை இறுக அணைத்தபடி படுத்திருந் தேன். இறுக்கம் தளர்ந்து சிறிது விலகினேன். அவ்வளவுதான். உடனே பசலை ஓடிவந்து என்னைப் பற்றிக் கொண்டது.

குறிப்பு

தலைவன் தலைவி இடையே சிறிது இடைவெளி நேர்ந்தாலும், பசலை உடனே வந்து பற்றிக் கொள்ளும்.

சொற்பொருள்

1. புல்லிக் கிடந்தேன் - (தலைவனை) தழுவிக் கிடந்தேன்; புடைபெயர்ந்தேன் - சிறிதே விலகினேன்; அவ்வளவில் - அந்தச் சிறு அளவு விலகலிலேயே.
2. அள்ளிக் கொள்வற்றே பசப்பு - பசலை என்னை அள்ளிச் செல்வதுபோல நிறைந்தது.

தலைவி கூற்று

திருக்குறள் 1188 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

'நீ இங்ஙனம் பசத்தல் கூடாது' என்ற தோழியோடு புலந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் பசலையுற்ற தலைவியிடம், அவள் ஆற்றியிருக்க வேண்டும் என்று தோழி சொன்னபோது, தலைவி மாறுபட்டுக் கூறியது.

பசந்தாள் இவள்என்ப(து) அல்லால் இவளைத்
துறந்தார் அவர்என்பார் இல்.

தெளிவுரை

'இவள் பசலை நிறம் கொண்டாள்' என்று ஊரவர் என்னைப் பழி சொல்வர்; 'அவர் இவளைப் பிரிந்தார்' என்று சொல்லுவார் யாரும் இல்லை.

கருத்து

பிரிந்து சென்ற அவரை யாரும் குறை சொல்வதில்லை; மாறாக அவர் பிரிவால் வருந்தியிருக்கும் என்னைப் பழி சொல்கின்றனர்.

விளக்கம்

'இவள் பசலை கொண்டாள்' என்று என்னைப் பழிக்கின்றனர். என்னை அவர் கைவிட்டுப் போனதால்தானே நான் பசலையுற்றேன். அப்படிச் செய்த அவரை யாரும் குறை கூறுவதில்லையே ஏன்?' என்று தலைவி, தோழியிடம் வினவினாள்.

குறிப்பு

துன்பம் உண்டாக்கியவரைக் குறைகூறாது துன்பம் உற்றவரைப் பழிப்பதா?

சொற்பொருள்

1. இவள் - தலைவி; பசந்தாள் என்பது அல்லாமல் - பசலை நோய் அடைந்தாள் என்று குறை கூறுவது அல்லது.

1-2.அவர் இவளைத் துறந்தார் - தலைவர் தலைவியைப் பிரிந்தார் (அதனால்தான் இவள் பசலையடைந்தாள்); என்பார் இல் - என்று சொல்லுவார் இல்லை.

தலைவி கூற்று

திருக்குறள் 1189 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

'நீ இங்ஙனம் பசத்தல் கூடாது' என்ற தோழியோடு புலந்து கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் பசலையுற்ற தலைவியிடம், அவள் ஆற்றியிருக்க வேண்டும் என்று தோழி சொன்னபோது தலைவி மாறுபட்டுக் கூறியது.

பசக்கமன் பட்டாங்(கு)என் மேனி நயப்பித்தார்
நன்னிலையர் ஆவர் எனின்.

தெளிவுரை

அவர் பிரிவுக்கு நான் உடன்படுமாறு செய்து, பிரிந்த தலைவர், அதனால் தன் செயலில் வெற்றி பெற்று நல்ல நிலையினராய் இருப்பார் என்றால், என் மேனி உண்மையாகவே பசந்து துன்ப மடையட்டும்.

கருத்து

பிரிந்து சென்ற காதலர்க்கு நன்மை வருமென்றால், என்னுடல் பசலை படர்ந்தே விளங்கட்டும்.

விளக்கம்

என்னை உடம்படச் செய்து பிரிந்த தலைவர்க்கு நன்மை நேருமென்றால், யார் பழித்துப் பேசினாலும் சரி, என் மேனி இன்னும் பசக்கட்டும்.

குறிப்பு

அவர் பிரிவால் நேர்ந்த பசலை அவர் வந்தால்தான் நீங்கும்.

சொற்பொருள்

1. நயப்பித்தார் - (பிரிவுக்கு உடன்படச் செய்த தலைவர்).
2. நல்நிலையர் ஆவர் எனின் - நல்ல நிலையை அடைவர் என்றால்.
1. என் மேனி - என் உடல்; பட்டாங்கு பசக்க - இன்று பசலை யடைந்துள்ளது போலவே என்றும் பசந்திருக்கட்டும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1190 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தலைமகளை ஆற்றுவித்தற் பொருட்டுத் தோழி தலைமகனை இயற்பழித்த விடத்து, அவள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவியை ஆற்றுதற்பொருட்டுத் தோழி தலைவனின் இயல்பைப் பழித்துப் பேசியபோது, தலைவி அவளை மறுத்துத் தலைவனின் இயல்பு களைப் புகழ்ந்து கூறியது.

பசப்(பு)எனப் பேர்பெறுதல் நன்றே; நயப்பித்தார்
நல்காமை தூற்றார் எனின்.

தெளிவுரை

என்னை உடம்படச் செய்து பிரிந்த தலைவனை யாரும் இகழ்ந்து பேசமாட்டாரெனின், பசலையுற்றதாய்ப் பெயர் பெறுதலும் எனக்குப் பெருமையே!

கருத்து

பிரிந்த காதலரை ஊர் தூற்றாமல் இருந்தால், என் பசலை இருப்பது நன்றே.

விளக்கம்

தலைவன் பிரிந்ததால் நான் பசலையுற்றதாக அவரைக் குறை கூறுகின்றனர். அவர்கள் குறை கூறாதிருந்தால், நான் பசலையோடிருப்பது எனக்குப் பெருமையே!

குறிப்பு

தோழி! தலைவனைக் குறை கூறாதே.

சொற்பொருள்

1. நயப்பித்தார் - (பிரிவுக்கு உடன்படச் செய்த) தலைவர்.
2. நல்காமை - பிரிந்து வருந்துதலை; தூற்றார் எனின் - (பிறர்) தூற்றாமல் இருப்பாரானால்.
1. பசப்பு எனப் பேர் பெறுதல் - நான் பசலையுற்றதாகப் பெயர் பெறுதலும்; நன்றே - நல்லதே.

தலைவி கூற்று

குறுந்தொகை 64 **கருவூர்க் கதப்பிள்ளை**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடை ஆற்றாமை கண்டு 'வருவர்' எனச் சொல்லிய தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவை ஆற்றாமலிருந்த தலைவியிடம், 'அவர் விரைவில் வருவார்; வருந்தாதிரு' என்று தோழி கூற, தலைவி, 'அவர் நம் துன்பத்தை அறிந்தவராயிருந்தும் இன்னும் வரவில்லையே' என்று வருந்திக் கூறியது.

பல்ஆ நெடுநெறிக்கு அகன்று வந்தெனப்
புன்தலை மன்றம் நோக்கி, மாலை
மடக்கண் குழவி அணவந் தன்ன
நோயேம் ஆகுதல் அறிந்தும்,
சேயர் தோழி! சேய்நாட் டோரே.

தெளிவுரை

"கொட்டிலில் இருந்த பல பசுக்களும் மேய்ச்சலுக்காக நெடுந் தொலைவு சென்றிருந்தன. அதனால் கொட்டில்கள் வெறிச் சென்று இருந்தன. மாலை நெருங்கியதும் தம் தாய்ப்பசுக்கள் திரும்பி வந்திருக்கும் என்று எண்ணிய அழகிய இளங் கண்களைக் கொண்ட கன்றுகள், கொட்டிலைப் பார்த்துப் பசுக்கள் வாராதிருந்தமையால் தலையைத் தூக்கி வருத்தத்தோடு அவற்றின் வரவை எதிர்பார்த்து இருக்கும். நாமும் அத்தகைய துன்பத்தைத்தான் கொண்டிருப்போம் என்பதைத் தலைவர் நன்றாய் அறிந்திருந்தும் அவர் இன்னும் தொலைதூர நாட்டிலே தான் உள்ளார்."

கருத்து

பிரிவால் நாம் துன்புற்றிருப்போம் என்பதைத் தலைவர் நன்கு அறிந்திருந்தும் அவர் இன்னும் வரவில்லையே என்பதாலேயே வருந்தி யுள்ளேன்.

விளக்கம்

மாலை நேரம் நெருங்க நெருங்க இன்னும் தாய்ப்பசுக்கள் வரவில்லையே என்று அவற்றின் கன்றுகள் தம் தலையைத் தூக்கித் தூக்கிப் பார்த்து வாராமையால் வருந்தும். இக்காட்சி யினைப் போலவே நாமும் பிரிந்துள்ள தலைவரின் வரவை எதிர்நோக்கி வருந்திக்கொண்டிக்கிறோம். இதை அறிந்தும் தலைவர் இன்னும் தொலைவில் உள்ள நாட்டில் வாழ்கிறார். ஆதலால், நாம் வருந்தாமல் என்ன செய்ய இயலும்?

சொற்பொருள்

1. பல்ஆ - பல பசுக்கள்; நெடுநெறி - நீண்ட வழி.
2. புன்தலை - புல்லிய இடம், வெறிச்சோடிய இடம்.

3. மடக்கண் - அழகிய கண்; குழவி - பசுக்கன்று; அணவருதல் - அண்ணாந்து நோக்குதல்.
4. நோயேம் ஆகுதல் - துன்பத்தைக் கொண்டிருக்கிறோம்.
5. சேயர் - தொலைவில் உள்ளார்.

தலைவி கூற்று

குறுந்தொகை 102 **ஔவையார்**

திணை : நெய்தல்

கூற்று

ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி, 'யான் எங்ஙனம் ஆற்றுவேன்?' என்றது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் நெடுங்காலம் ஆகியும் திரும்பாதிருந்தான். அப்பிரிவைத் தலைவியால் பொறுத்திட இயலாது எனக் கவலையுற்றாள், தோழி. அவளிடம் தலைவி, தன் துயர மிகுதியைக் கூறியது.

உள்ளின், உள்ளம் வேமே; உள்ளாது
இருப்பின்,எம் அளவைத்து அன்றே; வருத்தி
வான்தோய் வற்றே, காமம்
சான்றோர் அல்லர்,யாம் மரீஇ யோரே.

தெளிவுரை

"தோழி! நம் தலைவன் பிரிந்திருப்பதைப் பற்றி நினைத்தால் அவ்வாறு நினைக்கும் என் உள்ளம் வேகிறது. அவனை நினையாதிருக்கலாம் என்றாலோ அதுவும் என் ஆற்றலுக்கு அடங்கியதாய் இல்லை. காமநோயோ என்னை வருத்தி வானத்தைத் தொடுவதுபோல வளர்ந்துவிட்டது. நான் கூடி மகிழ்ந்த தலைவன் சான்றோன் அல்லன்."

கருத்து

தலைவன் பிரிவைப்பற்றி நினைப்பதனால் ஆற்ற இயலாதவள் ஆயினேன். நினைத்திடாமல் இருக்கலாம் என்றால் அஃது என் ஆற்றலுக்கு அடங்கியதாய் இல்லை.

விளக்கம்

காதல் நினைப்பும் வருத்துகிறது; நினையாதிருந்தாலும் வருத்துகிறது; உயிர் துறந்து வானத்திற்குச் செல்லலாம் என்றால் அங்கேயும் அது வந்து வருத்தும். ஆதலின், நான் என்ன செய்வேன்?

சொற்பொருள்

1. உள்ளின் - நினைத்தால்; வேம் - வேகும்.
2. அளவைத்து அன்று - ஆற்றலின் அளவுக்கு உட்பட்டது அன்று.
3. வான் தோய்வு அற்று - வானத்தைத் தொடுவதுபோன்று வளர்ந்து விட்டது.
4. மரீஇயோர் - மருவியவர், கூடியவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 140 — **அள்ளூர் நன்முல்லையார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்தவிடத்து, 'நீ ஆற்றுகின்றிலை' என்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற்பிரிந்த காலத்தில் அவன் பிரிவால் வருந்தி யிருந்த தலைவியை நோக்கி, 'நீ ஆற்றாமல் இருக்கின்றாய்' என்று கூறிய தோழிக்குத் தலைவி கூறியது.

வேதின வெரிநின் ஓதி முதுபோத்து,
ஆறுசெல் மாக்கள் புள்கொளப் பொருந்தும்
சுரனே சென்றனர் காதலர்; உரன்அழிந்து,
ஈங்குயான் தாங்கிய எவ்வம்
யாங்குஅறிந் தன்றுஇவ் அழுங்கல் ஊரே?

தெளிவுரை

"பாலை நிலத்தில் கருக்கரிவாளைப் போன்ற முதுகைக் கொண்ட முதிய ஓந்தி தங்கியிருக்கும். அதனைக் காண்பது நன்னிமித்தம் என வழிச்செல்லும் மக்கள் கருதுவர். இத்தகைய பாலைநில வழியில் என் காதலர் சென்றுள்ளார். அதனால் நான் என் வலிமை அழிந்து இங்கே என் வருத்தத்தைப் பொறுத்துக் கொண்டிருப்பதைக் கெடுதலைக் கொண்ட இவ்வூரார் எவ்வாறு அறிந்தனரோ?" என்று தலைவி தோழிக்குக் கூறுகிறாள்.

கருத்து

"அவர் பிரிந்தவுடன் என் வலிமையை இழந்தேன்; தாங்க இயலாத் துன்பத்தால் வருந்துகிறேன். ஆயினும், எப்படியோ துன்பத்தைத் தாங்கிக் கொண்டு இங்கே தனித்திருக்கிறேன். இதனை இவ்வூர் எப்படியோ அறிந்து கொண்டது" என்று தலைவி தோழியிடம் கூறுகின்றாள்.

விளக்கம்

தலைவர் பிரிந்தபோது அவரைத் தடுத்து நிறுத்தாமல், இப்போது என்னை ஆற்றுவிக்க முயல்வதால் என்ன பயன் எனத் தலைவி தோழியைக் கடிந்துரைக்கிறாள் என்றும் கொள்ளலாம்.

குறிப்பு

சங்க காலத்தில் ஓந்தி வலம், இடம் போவதைக் கொண்டு நன்மை தீமைகள் அறியப்பட்டன. (ஓந்தி - பச்சோந்தி, ஓணான்.)

சொற்பொருள்

1. வேதினம் - கருக்கரிவாள்; வெரிநின் - முதுகு; ஓதி - ஓந்தி; போத்து - ஆண் .
2. ஆறு - வழி; புள் - சகுனம்; பொருந்தும் - தங்கியிருக்கும்.
3. சுரன் - பாலை நிலம்; உரன் - வலிமை
4. எவ்வம் - துன்பம்.
5. அறிந்தன்று - அறிந்தது; அழுங்கல் - கெடுதல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 218 **கொற்றனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றுள்ளதால் தலைவி மிகவும் வருத்தமடைவாள் என்றெண்ணிக் கவலையுற்றிருக்கும் தோழியிடம் தலைவி தன் மன இயல்பைக் கூறியது.

விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணாம்; கைந்நூல் யாவாம்;
புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம்;
உள்ளலும் உள்ளாம்; அன்றே, தோழி!
உயிர்க்குஉயிர் அன்னர்ஆகலின், தம்இன்று
இமைப்புவரை அமையா நம்வயின்
மறந்துஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே.

தெளிவுரை

"தோழியே! தலைவர் நம் உயிருக்கு உயிர் போன்றவர்; ஆதலால், அவர் இல்லாமல் இமைப்பொழுதுகூடப் பிரிந்திருக்க இயலாதவராயுள்ளோம்; நம்மை மறந்துவிட்டுப் பொருள் தேடச் சென்ற அவர் அவ்விடத்திலேயே தங்கியிருப்பதற்கான வல்லமை பெற்றுவிட்டார். இனி, அவர் பொருட்டாகப் பிளவும் குகையுமுள்ள மலையிலே உள்ள வெற்றி பொருந்திய துர்க்கைக்குப் பலியிட்டு நேர்த்திக்கடன் செய்யமாட்டோம்; கையில் காப்புநூலைக் கட்டவும் மாட்டோம்; புள் நிமித்தத்தையும் பார்க்க மாட்டோம்; விரிச்சி கேட்கவும் (நற்சொல்லைக் கேட்பதற்கும்) நிற்க மாட்டோம்; அவரை நினைக்கவும் மாட்டோம்."

கருத்து

நம் அன்பின் மிகுதியை அறிந்து திரும்பிவர வேண்டியது தலைவர் கடமை. அதற்காக நாம் எதுவும் செய்ய வேண்டுவது இல்லை.

விளக்கம்

"ஒரு கணப்பொழுதுகூட அவரைப் பிரிந்திருக்க இயலாத நம்மைப் பிரிந்து, தாம் சென்ற இடத்தில், நம்மை மறந்திருக்கும் மன வலிமை கொண்டவராய்த் தலைவர் இருக்கிறார். அவர் நம் உயிர்க்கு உயிராய் இருப்பவராதலின் நம் நிலையை உணர்ந்து விரைவில் வரும் கடப்பாடு கொண்டவர் அவரேயாவர். அங்ஙனம் அவர் செய்யாதபோது நாம் தெய்வங்களை வழிபட்டுப் பயன் என்ன?" என்று தலைவி கூறினாள்.

குறிப்பு

யாதானும் ஒரு செயல் நன்றாய் அமையுமா, அமையாதா? என்பதை அறிய ஊர்ப்புறத்தே சென்று நெல்லையும் மலரையும் தூவித் தெய்வத்தை வணங்கி நற்சொல்லை எதிர்பார்த்து நிற்பர். அப்போது அங்கே அவர்கட்குத் தொடர்பில்லாத அயலார் சொல்லுகின்ற மொழி நன்மொழியாய் இவர்கள் காதில் விழுந்தால் செயல் நன்மையாய் அமையும் என்றும், நற்சொல்லாய் இல்லாவிடில் நன்மையாய் அமையாது என்றும் நம்பினர். இது 'விரிச்சி கேட்டல்' எனப்படும்.

தலைவனின் அன்பைப் பெறாதவர்கள், அவன் இல்லாதபோது அவன் பொருட்டாய்த் தெய்வத்தை வேண்டிக்கொள்வது பெருமை வாய்ந்த செயல் அன்று.

சொற்பொருள்

1. விடர் - பிளவு; முகை - குகை; அடுக்கம் - மலை; விறல்கெழு - வெற்றி பொருந்திய; சூலி - துர்க்கை, காளி.
2. கடனும் பூணாம் - பலியிட்டு நேர்த்திக்கடன் செய்யமாட்டோம்; யாவாம் - கட்ட மாட்டோம் (யாத்தல் - கட்டுதல்).
3. புள்ளும் ஓராம் - புள் நிமித்தத்தையும் பார்க்க மாட்டோம்; விரிச்சியும் நில்லோம் - நற்சொல்லைக் கேட்டும் நிற்க மாட்டோம்.
4. அன்றே - அல்லாமலும்.
6. இமைப்பு வரை அமையா - இமைப்பொழுது அளவேனும் பிரிந்திருக்க இயலாத; நம்வயின் - நம்மிடம்.
7. ஆண்டு - அங்கே; அமைதல் - தங்குதல்; வல்லியோர் - வல்லவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 241 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவைத் தலைவி பொறுத்துக் கொள்ள மாட்டாள் என்று வருந்தியிருந்த தோழியிடம், 'நான் ஆற்றியிருப்பேன்; ஆயினும், கண்கள் அவனைக் காண வேண்டுமென அழுகின்றனவே; நான் என்ன செய்வது?' என்று தலைவி கூறியது.

யாம்எம் காமம் தாங்கவும், தாம்தம்
கெழுதகை மையின் அழுதன தோழி!
கன்றுஆற்றுப் படுத்த புன்தலைச் சிறாஅர்
மன்ற வேங்கை மலர்பதம் நோக்கி,
ஏறாது இட்ட ஏமப் பூசல்
விண்தோய் விடரகத்து இயம்பும்
குன்ற நாடற் கண்டஎம் கண்ணே.

தெளிவுரை

தோழி! கன்றுகளை மேய்ப்பதற்கு ஓட்டிச் சென்ற, பொலிவிழந்த தலையைக் கொண்ட இடைச்சிறுவர், ஊர் மன்றத்தில் நின்ற வேங்கை மரத்தின் மொட்டுகள் மலரும் தன்மை பெற்றிருப்பதைப் பார்த்து, அம்மரத்தின்மேல் ஏறாமலே கீழே நின்று, பூக்கள் உதிர்வதற்காகப் 'புலி புலி' என்று இனிய ஆரவாரம் செய்தனர். அவ்வாரவார ஒலி வானளாவிய உயர்ந்த மலைப்பிளவுகளிலெல்லாம் சென்று எதிரொலித்தது. அத்தகைய குன்றுகள் கொண்ட நாட்டினை உடையவன், நம் தலைவன். அவன் பிரிவால் உண்டாகிய காமநோயை நான் பொறுத்திருக்கிறேன்; ஆனால் அவனை முதலில் கண்டவை என்னும் சிறப்புரிமையால் என் கண்கள் தாமே அழுகின்றன. (அதற்கு நான் என்ன செய்ய இயலும்?)

கருத்து

நான் ஆற்றியிருக்கக் கருதினாலும் என்னையும் மீறி என் கண்கள் அழுகின்றன. அதற்கு நான் என்ன செய்ய இயலும்?

சொற்பொருள்

2. கெழுதகைமை - சிறப்புரிமை.
3. ஆற்றுப்படுத்த - ஓட்டிச் சென்ற; சிறாஅர் - சிறுவர்.
4. மலர்பதம் - மலரும் பருவம்.
5. இட்ட - ஒலித்த; ஏமப்பூசல் - இனிய ஆரவார ஒலி.
6. விடரகம் - மலைப்பிளவு; இயம்பும் - ஒலிக்கும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 289 **பெருங்கண்ணனார்**

திணை : முல்லை

கூற்று

காலம் கண்டு வேறுபட்டாள் எனக் கவன்ற தோழிக்கு, 'காலத்து வந்திலர் என்று வேறுபட்டேனல்லேன்; அவரைப் புறத்தார் கொடியர் என்று கூறக் கேட்டே வேறுபட்டேன்' என்று தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் குறிப்பிட்ட பருவம் தொடங்கியது கண்டு தலைவி வேறுபட்டாள் எனக் கூறிய தோழியிடம், 'நான் அவரை நினைந்து இரங்கினேன் அல்லேன்; என் பொருட்டுக் கவலையுற்றார்போல் இவ்வூரினர் அவரைக் கொடியவர் என்று கூறுவதை அறிந்தே வருந்துகிறேன்' என்று தலைவி கூறினாள்.

வளர்பிறை போல வழிவழிப் பெருகி,
இறைவளை நெகிழ்த்த எவ்வ நோயொடு
குழைபிசைந் தனையேம் ஆகிச் சாஅய்,
உழையர் அன்மையின் உழப்பது அன்றியும்,
மழையும் தோழி! மான்றுபட் டன்றே;

பட்ட மாரி படாஅக் கண்ணும்,
அவர்திறத்து இரங்கும் நம்மினும்,
நம்திறத்து இரங்கும்,இவ் அழுங்கல் ஊரே.

தெளிவுரை

"தோழி! துன்பத்தைத் தருகின்ற காமநோய் வளர்பிறை போல நாளும் நாளும் பெருகுகிறது. முன் கைகளிலுள்ள வளையல் களை நெகிழச்செய்து துன்பமளிக்கின்றது; தளிரைக் கசக்கியது போன்று உடலை மெலியச்செய்கிறது. தலைவன் அருகில் இல்லாமையால் நான் மிகவும் துன்பப்படுகின்றேன்; மழையும் மயங்கிக் காலம் அல்லாக் காலத்தில் பெய்யத் தொடங்கி விட்டது. இம்மழை தொடங்குவதற்கு முன்பே, மனப்புழுக்கமுற்ற இவ்வூரிலுள்ளார், அவர் பொருட்டாக நாம் இரங்குவதைக் காட்டிலும், நம்பொருட்டு மிகுதியும் இரங்குகின்றார்களே! அஃது எதனாலோ?"

கருத்து

காலம் கண்டுவேறுபட்டிலேன்; ஊரவர் அவரைப் பழித்தலால் என் உள்ளம் புண்பட்டது.

விளக்கம்

அவர் பிரிவால் நாம் துன்புறுகிறோம்; பருவ மழையும் பெய்யத் தொடங்கிவிட்டது. காலமல்லாக் காலத்தில் பெய்யும் மழை இது. இவ்வூரினர் நம்மிடம் இரக்கம் காட்டுவதுபோல அவரைப் பழிக்கின்றனர். இவர்கள் ஏன் வருத்தப்பட வேண்டும்? நம்மீது இவர்களுக்கு என்ன அக்கறை? அவரைப் பழிப்பதற்காக நம்மீது இரக்கம் காட்டுவதுபோல நடிக்கின்றனர்.

சொற்பொருள்

1. வழிவழி - மேலும் மேலும்.
2. இறை - முன்கை; எவ்வநோய் - துன்பத்தைத் தரும் காமநோய்.
3. குழை - தளிர்; சாஅய் - மெலிந்து.
4. உழையர் - அருகில் இருக்க வேண்டியவர் (தலைவர்); உழத்தல் - வருந்துதல்.
5. மான்றல் - மயங்கல்.

6. பட்ட மாரி - இப்பொழுது பெய்கின்ற மழையும்; படாஅக் கண்ணும் - பெய்யாத பொழுதும்.
7. திறத்து - பொருட்டு.
8. அழுங்கல் - கலக்கம், துன்பம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 278 **பேரிசாத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருந்த காலத்து, 'நீ பொறுத்திருத்தல் வேண்டும்' என வற்புறுத்திய தோழியிடம் தலைவி, 'அவர் என்னை நினையாது மறந்தனர். நான் எவ்வாறு ஆற்றியிருக்க இயலும்?' எனக் கூறியது.

உறுவளி உளரிய அம்தளிர் மாஅத்து
முறிகண் டன்ன மெல்லென் சீறடிச்
சிறுபசும் பாவையும், எம்மும், உள்ளார்
கொடியர் வாழி தோழி! கடுவன்
ஊழுறு தீம்கனி உதிர்ப்ப, கீழ்இருந்து,
ஓர்ப்பன ஓர்ப்பன உண்ணும்
பார்ப்புடை மந்திய மலைஇறந் தோரே.

தெளிவுரை

"தோழி! நீ வாழ்க! ஆண்குரங்கு மரத்தின்மேலிருந்து முதிர்ந்த இனிய பழங்களை உதிர்க்கும்; அம்மரத்தின்கீழ் இருக்கும் பெண் குரங்கும் குட்டிகளும் அக்கனிகளுள் நல்லனவற்றைப் பார்த்துப் பார்த்து உண்டு பசி தீரும். அத்தகைய மலைநாட்டைக் கடந்து சென்றுள்ளார், நம் தலைவர். காற்று மோதியதால் அசைகின்ற அழகிய தளிரைக் கொண்ட மாமரத்தின் இளந்தளிரைப் போன்ற மெல்லிய சிறிய காலடிகளைக் கொண்ட சிறிய விளையாட்டுப் பாவையையும் அவர் நினைந்திலர்; அவர் மிகவும் கொடியவர்" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

மலையைக் கடந்து சென்றுள்ள நம் தலைவர் சிறு பாவையையும் என்னையும் நினையாது மறந்த கொடியவர் ஆயினார். அவர் அவ்வாறிருக்க நான் எங்ஙனம் ஆற்றியிருக்க இயலும்?

விளக்கம்

கானற்சோலையில் தலைவி விளையாடியிருந்த காலத்தில் தலைவன் அவளுக்கு விளையாட்டுப்பாவை செய்து அன்பு காட்டினான். இப்போது அப்பாவையையும் அவளையும் மறந்து விட்டான்.

அவன் மலைவழியில் செல்லும்போது ஆண்குரங்கு தன் மந்தியும் குட்டிகளும் தின்று பசியாறக் கனிகளை உதிர்த்து உதவுவதைக் கண்டும் தலைவியிடம் அருள் தோன்றாதவனா யிருக்கிறான்.

இவற்றை நினைந்து தலைவி தலைவனைக் கொடியவன் என்கிறாள்.

குறிப்பு

காதலி விளையாடுவதற்கு விளையாட்டுப்பாவை செய்து தருவது அக்காலக் காதலர்களின் வழக்கம். அப்பாவை பசுமையான கோரைப் புல்லால் செய்யப்பட்டதாயிருக்கும்.

சொற்பொருள்

1. உறுவளி - மிகுதியான காற்று; உளரிய - கோதிய, மோதிய.
2. முறி - தளிர்.
3. பாவை - பொம்மை.
4. கடுவன் - ஆண் (குரங்கு); ஊழ்உறு - முதிர்ந்த; தீம் - இனிய.
5. ஓர்ப்பன ஓர்ப்பன - நல்லனவற்றைத் தெரிந்து தெரிந்து.
6. பார்ப்பு - இளங்குட்டி.

தலைவி கூற்று

அகநானூறு 389 **நக்கீரனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகள், வற்புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டும்பொருட்டுத் தலைவியைப் பிரிந்து சென்றதால் வருந்தியிருந்த தலைவியை ஆற்றியிருக்குமாறு தோழி தேற்றிக் கூறினாள். அதனைக் கேட்ட தலைவி, தன் ஆற்றாமையைத் தோழிக்குத் தெரிவித்தது.

அறியாய்— வாழி, தோழி!— நெறிகுரல்
சாந்துஆர் கூந்தல் உளரி, போதுஅணிந்து,
தேம்கமழ் திருநுதல் திலகம் தைஇயும்,
பல்இதழ் எதிர்மலர் கிள்ளி வேறுபட
நல்இள வனமுலை அல்லியொடு அப்பியும்,
பெருந்தோள் தொய்யில் வரித்தும் சிறுபரட்டு
அம்செஞ் சீறடிப் பஞ்சி ஊட்டியும்,
எற்புறந் தந்து நிற்பா ராட்டி,
பல்பூஞ் சேக்கையின் பகலும் நீங்கார்,
மனைவயின் இருப்பவர் மன்னே— துனைதந்து
இரப்போர் ஏந்துகை நிறைய, புரப்போர்
புலம்புஇல் உள்ளமொடு புதுவதந்து உவக்கும்
அரும்பொருள் வேட்டம் எண்ணி, கறுத்தோர்
சிறுபுன் கிளவிச் செல்லல் பாழ்பட,
நல்இசை தம்வயின் நிறுமார் வல்வேல்
வான வரம்பன் நல்நாட்டு உம்பர்,
வேனில் நீடிய வெங்கடற்று அடைமுதல்
ஆறுசெல் வம்பலர் வேறுபிரிந்து அலற,
கொலைவெம் மையின் நிலைபெயர்ந்து உறையும்
பெருங்களிறு தொலைச்சிய இருங்கேழ் ஏற்றை
செம்புல மருங்கில் தன்கால் வாங்கி,
வலம்படு வென்றியொடு சிலம்பகம் சிலம்ப,

படுமழை உருமின் முழங்கும்
நெடுமர மருங்கின் மலைஇறந் தோரே!

தெளிவுரை

தோழி! வாழி! தலைவர், நெளியுடன் கொத்துப் போன்றிருக்கும் என் கூந்தலில் மயிர்ச்சாந்து அணிந்து உலர்த்தி, மலர் சூடுவார்; இனிய மணம் கொண்ட அழகு நெற்றியில் திலகம் அணிவிப்பார்; இதழ்கள் பல கூடிய புதிய மலர்களைக் கிள்ளி அவ்விதழ்களுடன் நிறம் மாறுபட, அவற்றின் தாதுகளை என் நல்ல இளைய அழகிய முலைகளில் அப்புவார்; பெரிய தோள்களில் தொய்யில் எழுதுவார்; சிறிய பரட்டினைக் கொண்ட அழகிய சிவந்த பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பினைத் தடவுவார்; இவ்வாறெல்லாம் என்னைப் பாதுகாப்பவர் உன்னையும் பாராட்டிப் பேசுவார்; பல்வகை மலர்கள் பரப்பிய படுக்கையில் பகற்பொழுது முழுதும் என்னைப் பிரியாதவராய் நம் இல்லத்தில் தங்கியிருப்பார். (இவ்வாறு நடந்து கொண்ட தலைவர் இப்போது பிரிந்து சென்றுள்ளார்.)

'இவன் பொருளற்றவன்' என்று பகைவர்கள் இகழ்ந்து கூறும் புன்சொற்களால் துன்பம் உண்டாகாதவாறு அரும்பொருள்களை ஈட்டி வருதலை விரும்பித் தலைவர் சென்றுள்ளார். வருத்தமில்லாத உள்ளத்துடன் விரைந்து வந்து, இரப்பவர்களின் ஏந்திய கை நிறையுமாறு, அவர்களைப் பாதுகாக்க எண்ணும் வள்ளல்கள் போன்று நல்ல புகழைத் தம்மிடம் நிலைநிறுத்த நம் தலைவர் விரும்பியுள்ளார்.

வலிமை வாய்ந்த வேலினையுடைய வானவரம்பனின் நல்ல நாட்டுக்கும் அப்பால் உள்ள வெப்பம் மிக்க கொடிய காட்டினைச் சேர்ந்துள்ளார். அங்கு வழிச்செல்வோர் அச்சமுற்று வேறு வேறாய்ப் பிரிந்து போய் அலறுமாறு, கொல்லும் கொடுமையான எண்ணத்துடன் தன் நிலையை விட்டு வேற்றிடத்தில் பதுங்கியிருந்த பெரிய ஆண் யானையைக் கொன்றது பெரிய ஆண்புலி. அப்புலி, குருதியால் சிவந்த நிலத்திலே தன் கால்களை வளைத்துத் தாவி, யானையைத் தன் வலப்பக்கம் வீழ்த்திய வெற்றிச்செருக்குடன் முழங்கும்; அம்முழக்கம் மலை

யிடத்தில் எதிரொலி செய்ய அது மழைமேகம் இடிப்பதுபோல இருக்கும்.

நெடிய மரங்களைக் கொண்ட மலைவழிகளைக் கடந்து அவர் துணிந்து என்னைப் பிரிந்து சென்றதால் நான் வருந்துகிறேன்.

கருத்து

இரப்பவர்க்கு ஈவதற்காகப் பொருள் தேடி வரச் சென்றுள்ளார் என ஆற்றி யிருப்பினும் அவர் சென்றுள்ள கொடிய காட்டுவழியை எண்ணும்போது மயங்குகின்றேன்.

விளக்கம்

“தோழி! நீ அறியாது கூறுகின்றாய்! இல்லத்தில் என்னைப் பாதுகாத்து, உன்னையும் பாராட்டிப் பேசி, பகற்பொழுதும் படுக்கையில் நீங்காதவராய்த் தங்கியிருந்தவர், நம் தலைவர். அவர், இரப்பவர்க்குக் கை நிறையத் தருவதற்காகப் பொருளீட்டி வர நெடிய மலைவழிகளைக் கடந்து சென்றுள்ளார்” என்கிறாள், தலைவி. (அவர் சென்ற காரணத்தை அறிவேன்; ஆயினும் இல்லத்தே என்னை அவர் பாதுகாத்திருந்ததை நினைக்கும்போது ஆற்ற இயலாதவளாகிவிடுகிறேன்.)

சொற்பொருள்

1. நெறிகுரல் - நெளிந்த கொத்து.
2. சாந்துஆர் - மயிர்ச்சாந்து பூசிய; உளரி - ஆற்றி; போது - மலர்.
3. திலகம் - பொட்டு; தைஇ - அணிவித்து, வைத்து.
4. எதிர்மலர் - புதுமலர்.
5. அல்லி - பூந்தாது.
6. வரித்தும் - எழுதியும்.
7. பஞ்சி ஊட்டுதல் - செம்பஞ்சுக் குழம்பினைப் பூசுதல்.
8. புறந்தருதல் - பேணுதல்.
9. சேக்கை - படுக்கை.
10. துனைதந்து - விரைந்து வந்து.
11. இரப்போர் - இல்லை என்று கேட்பவர்; புரப்போர் - பாதுகாப்பவர்.
12. புலம்புஇல் உள்ளம் - துன்பம் இல்லாத மனம்; புதுவ - புதிய பொருள்.
13. வேட்டம் - பொருள் ஈட்டும் விருப்பம்; கறுத்தோர் - பகைவர்.
14. புன் கிளவி - இழிசொல்; செல்லல் - துன்பம்; பாழ்பட - நீங்க, அழிய.

15. இசை - புகழ்; தம்வயின் - தம்மிடம்; நிறுமார் - நிறுத்தவும்; வல் - வலிய.
16. வான வரம்பன் - சேரனுக்குரிய ஒரு பெயர்; உம்பர் - அப்பால்.
17. வெங்கடறு - கொடிய காடு; அடைமுதல் - அடைந்தபோது.
18. ஆறு - வழி; வம்பலர் - புதியவர்.
19. கொலை வெம்மை - கொல்லும் கொடுமை; நிலைபெயர்தல் - வேற்றிடம் செல்லுதல்.
20. தொலைச்சிய - கொன்ற, வீழ்த்திய; கேழ் - நிறம்; ஏற்றை - புலி.
21. செம்புலம் - குருதியால் சிவப்புற்ற நிலம்; கால் வாங்கி - காலை வளைத்துத் தாவி.
22. வலம் படு வென்றி - யானையைக் கொன்று தன் வலப்பக்கம் வீழ்த்திய புலியின் வெற்றி; சிலம்பகம் - மலையிடம்; சிலம்ப - எதிரொலி செய்ய.
23. படுமழை - பொருந்திய மேகம்; உரும் - இடி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 314 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் பிரிந்துழி அவனுடன் போய் மீண்டார் வழியது அருமை தங்களிற் கூறக் கேட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டச் சென்றபோது அவனுடன் சென்ற சிலர் மீண்டுவந்து அவர் சென்ற வழியின் கொடுமையைத் தம்முள் பேசிக் கொண்டனர். அதைக் கேட்ட தலைவி தோழிக்குச் சொல்லியது.

அவிர்தொடி கொட்பக் கழுதுபுகவு அயரக்
கருங்கண் காக்கையொடு கழுகுவிசும்பு அகவச்
சிறுகண் யானை ஆள்வீழ்த்துத் திரிதரும்
நீள்இடை அரும்சுரம் என்பநம்
தோளிடை முனிநர் சென்ற ஆறே.

தெளிவுரை

நம் தோள்களைத் தழுவும்விருப்பமில்லாதவராய் நம் தலைவர் நம்மைப் பிரிந்து சென்றார். அவர் சென்ற வழி கடப்பதற்கு அருமையானது. அங்கு ஒளி வீசும் தோள்வளை அணிந்த பேய்மகள் பிண உணவை விரும்பிச் சுழன்று திரிவாள். கரிய கண்களைக் கொண்ட காக்கைகளோடு கழுகுகளும் வானத்திற் கத்தித் திரியும். சிறிய கண்களைக் கொண்ட யானைகள் வழியிற் செல்பவரைக் கொன்று வீழ்த்தி உலவிக் கொண்டிருக்கும். நம் தலைவர் சென்றுள்ள வழி நெடுந் தொலைவு கொண்ட கடத்தற்கரிய, வெப்பம் நிறைந்த பாலை வழி என்று அங்குச் சென்று வந்தவர் பேசிக்கொள்கின்றனர். அக்கொடிய வழியை நம் தலைவர் எவ்வாறு கடப்பர்?

கருத்து

கொடிய வழியில் சென்றுள்ள நம் தலைவர் எத்தகைய துன்பம் எய்தினரோ என என் நெஞ்சம் துடிக்கிறது.

தெளிவுரை

தலைவன் பிரிந்த துயரத்தைவிட, அவன் கடந்து செல்லவிருக்கும் காட்டு வழியின் கொடுமை தலைவியின் நெஞ்சைப் பெரிதும் வருத்துகிறது.

குறிப்பு

தலைவி தன் துயர் மறந்தாள்; தான் அன்பு செலுத்தும் தலைவனின் துயரை நினைந்து துயரம் கொள்கிறாள்.

சொற்பொருள்

1. அவிர் தொடி - ஒளி வீசும்; கொட்ப - சுழன்று திரிய; கழுது - பேய்; புகவு - உணவு (பிண); அயர - விரும்பி.
2. விசும்பு - வானம்; அகவ - கத்தித் (திரியும்).
3. ஆள் வீழ்த்தி - வழிச் செல்பவரைக் கொன்று; திரிதரும் - உலவிக் கொண்டிருக்கும்.
4. நீள்இடை - நீண்ட வழி; அரும் - (கடத்தற்கு) அரிய; சுரம் - பாலை நிலம்.
5. முனிநர் - வெறுத்தவராய், விருப்பமில்லாதவராய்; ஆறு - வழி.

தலைவி கூற்று

குறுந்தொகை 290 **கல்பொரு சிறுநுரையார்**

திணை : நெய்தல்

கூற்று

வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் அழிவுற்றுச் சொல்லியது. (அழிவுற்று - மனம் வருந்தி).

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்ற பின்னர் வருந்திய தலைவியை, 'நீ ஆற்றி யிருத்தலே அறிவுடைமை' எனத் தோழி வற்புறுத்திக்கூற, அதற்குத் தலைவி தோழியை நோக்கி, 'நீ காமத்தின் இயல்பறியாது பேசுகிறாய்' என்று மனமழிந்து சொல்லியது.

'காமம் தாங்குமதி' என்போர் தாம்அஃது
அறியலர் கொல்லோ? அனைமது கையர்கொல்?
யாம்,எம் காதலர்க் காணேம் ஆயின்,
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு, பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல,
மெல்ல மெல்ல இல்லா குதுமே.

தெளிவுரை

"தோழி! 'காமநோயைத் தாங்கிக்கொள்' என்று அறிவுரை கூறுகின்றவர், காமத்தின் தன்மையை அறியாதவராயிருக்க வேண்டும்; அல்லது அதனைத் தாங்கிக்கொள்ளும் மனவலிமை யுடையவராயிருக்க வேண்டும். ஆனால், நான் என் காதலரைக் காணாது பிரிந்தேனாயின், மிக்க துன்பம் பெருகிய நெஞ்சத் துடன், மிகுதியான வெள்ளத்தில் பாறையின்மீது மோதும் சிறுநுரையைப் போல மெல்ல மெல்லத் தேய்ந்து உயிரில்லாத வளாய் அழிந்துவிடுவேன்."

கருத்து

தலைவனைக் காணாதபோது சிறிது சிறிதாய் நெஞ்சழிந்து உயிரில்லாத வளாய் அழிந்துவிடுவேன்.

விளக்கம்

நுரை, கல்லில் மோதுந்தோறும் சிறிது சிறிதாய்க் குறைந்து கரைந்து அழிதலைப்போல, தலைவனின் பிரிவு நீடிக்குந் தோறும், தலைவியின் உயிரும் மெல்ல மெல்லத் தேய்ந்து அழியும் தன்மையுடையது.

குறிப்பு

'கல்பொரு சிறுநுரை' எனும் அரிய உவமையை இப்பாடலாசிரியர் கையாண்டுள்ளதால் இவர், 'கல்பொரு சிறுநுரையார்' என்று வழங்கப் படுகிறார். இவரது இயற்பெயரை அறிய இயலவில்லை.

சொற்பொருள்

1. தாங்குமதி - தாங்கிக்கொள்.
2. மதுகை - மனவலிமை.
4. செறிதுனி - மிக்க துன்பம்.
5. பொருதல் - மோதுதல்.
6. மெல்ல மெல்ல - சிறிது சிறிதாய்.

தலைவி கூற்று

நற்றிணை 130 **நெய்தல் தத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகள், வன்புறை எதிரழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனது பிரிவை எண்ணி வருந்திய தலைவியிடம் பொறுத் திருக்குமாறு தோழி கூறினாள். தலைவி தோழி பேச்சினை மறுத்துத் தன் துயரை விளக்கி உரைத்தது.

வடுவின்று நிறைந்த மான்தேர்த் தெண்கண்
மடிவாய்த் தண்ணுமை நடுவண் ஆர்ப்பக்
கோலின் எறிந்து காலைத் தோன்றிய
செந்நீர்ப் பொதுவினைச் செம்மல் மூதூர்த்
தமதுசெய் வாழ்க்கையின் இனியது உண்டோ?

எனைவிருப் புடையர் ஆயினும், நினைவிலர்
நேர்ந்த நெஞ்சும் நெகிழ்ந்த தோளும்
வாடிய வரியும் நோக்கி, நீடாது,
'எவன்செய் தனள்இப் பேரஞர் உறுவி?'என்று
ஒருநாள் கூறின்றும் இலரே; விரிநீர்
வையக வரையளவு இறந்த
எவ்வ நோய்பிறிது உயவுத்துணை இன்றே.

தெளிவுரை

"தெளிந்த ஓசையைக் கொண்டதும் இடமகன்ற தோலை மடித்துப் போர்த்தப்பட்ட வாயைக் கொண்டதுமான தண்ணுமை இடையிடையே ஒலித்தவண்ணம் இருந்தது. அவ் வேளையில் என் காதலர் எல்லா இலக்கணமும் பொருந்திக் குற்றமற்று விளங்கும் குதிரைகள் பூட்டப்பட்ட தேரினில் ஏறி, கோலை ஓச்சி, விடியற்பொழுதினில் வெளியே சென்றார்.

செம்மையான தன்மையையும் பொதுவான செயற்பாட்டையும் கொண்டுள்ள பழமையானது நம் ஊர். இவ்வூரிலிருந்து நடத்தும் இல்லறத்தினைவிட வேறு ஓர் இனிய பொருளும் உண்டோ? (இல்லையே!). அதனை அறியாதவராய் வேறொரு பொருள் உண்டு என்று கருதித் தலைவர் பிரிந்து சென்றுள்ளார். என் மேல் எத்துணை அன்பு கொண்டவராய் இருப்பினும் இப்போது என்னை நினையாது இருக்கின்றார். அப்படி அவர் வாழும் நிலையிலும் அவருக்கு உடன்பட்ட என் நெஞ்சும் நெகிழ்ச்சியுற்றது; என் தோளும் வாடியது; என் நிறமும் பசந்தது. இந்நிலையில் துன்பத்தில் உழலும் அவள் எப்படியிருக்கிறாள் என்று ஒரு நாள்கூட எவரிடமும் அவர் கேட்டு அறிந்து கொண்டதில்லை. என் துன்பமோ விரிந்த கடற்பரப்பினைக் கொண்ட உலக அளவுக்கும் கடந்து போயினது. என் துன்பத்திற்கு வேறு யாரும் துணையாக இருக்க இயலாது. இனி என் செய்வேன்?" என்று தலைவி வருந்திக் கூறினாள்.

கருத்து

அவர் பிரிவை இனியும் என்னால் தாங்க இயலாது.

விளக்கம்

மெலிவு அடைந்த தலைவியை நோக்கித் தோழி, தலைவன் பிரிவைப் பொறுத்திருக்குமாறு வேண்டினாள். அதற்குத் தலைவி, 'இல்வாழ்க்கை என்னும் பொருளைக்காட்டிலும் இனிய பொருள் ஏதுமில்லை என்று அறியாது இன்னுமொன்று உளது என்று கருதி என் காதலர் சென்றுள்ளார். அதுவுமன்றி, என்னைப் பிரிந்த பின்பு நான் எப்படி இருக்கிறேன் என்று அறிந்து கொள்ளவும் எண்ணவில்லை. என் நோயோ அளவு கடந்து சென்றுவிட்டது; என் துன்பத்தில் துணை நிற்பார் எவருமிலர். நான் எவ்வாறு ஆற்றியிருப்பேன்?' என்று தோழிக்கு எதிர்மொழியாய்த் தலைவி கூறினாள்.

சொற்பொருள்

1. வடு - குற்றம்; மான்தேர் - குதிரைகள் பூட்டப்பட்ட தேர்; தெண் - தெளிந்த.
2. மடிவாய் - வாயிடையே தோலை மடித்துப் போர்த்த; தண்ணுமை - மத்தளம்; நடுவண் - இடையிடையே; ஆர்ப்ப - ஒலிக்க.
3. கோல் - குதிரையைச் செலுத்தும் தாற்றுக்கோல்; எறிந்து - அடித்து ஓட்டி.
4. செந்நீர் - செவ்விய தன்மை; செம்மல் - சிறப்பு; மூதூர் - பழமையான ஊர்.
5. தமது செய் வாழ்க்கை - தாம் செய்யும் இல்லறம்.
6. எனை - எத்துணை; விருப்பு - அன்பு.
7. நேர்ந்த நெஞ்சம் - அவர் பிரிந்து செல்ல உடன்பட்ட நெஞ்சும்; நெகிழ்ந்த - மெலிவுற்ற.
8. வரி - உடல் பாங்கு.
9. பேர் அஞர் உறுவி - பெரிய துன்பமுற்று இருப்பவள்.
10. ஒரு நாள் கூறின்றும் இலர் - ஒரு நாளேனும் கேட்டு அறிந்து கொண்டதில்லை; விரிநீர் - கடல்.
11. வையகம் - உலகம்; வரை - எல்லை; இறத்தல் - கடத்தல்.
12. எவ்வம் - துன்பம்; உயவுதல் - ஆறுதலாய்ப் பேசுதல்.

தலைவி கூற்று

கைந்நிலை 58 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் தோழியிடம் பிரிவாற்றாமை கூறி வருந்துதல்.

கூற்று விளக்கம்

தலைவி, தோழியிடம் தன் பிரிவாற்றாமைத் துன்பத்தைக் கூறியது.

சுறாஎறி குப்பை சுழலும் கழியுள்
இறாஎறி ஓதம் அலற இரைக்கும்
உறாஅ நீர்ச் சேர்ப்பனை உள்ளி இருப்பின்
பொறாஅஎன் முன்கை வளை

தெளிவுரை

"சுறா மீனால் மோதி அடிக்கப்பட்ட மீன் குவியல்கள் சுழல்கின்ற உப்பங்கழிகளுள் இறால் மீன்களை வீசி எறிகின்ற அலைகள் உரத்து ஒலி எழுப்பும். அத்தகைய கடற்கரைத் தலைவன் என்னுடன் கூடாது பிரிந்து சென்றுள்ளான். அப் பிரிவை எண்ணி நான் கலங்கி இருப்பதால் என் முன்கை வளையல்களும் நில்லாது கழன்று கீழே விழுகின்றன" என்று தலைவி தோழியிடம் தன் பிரிவாற்றாமையை எடுத்துக் கூறி வருந்தினாள்.

கருத்து

தலைவன் பிரிவால் உடல் மெலிய என் கைவளையல்கள் கழன்று விழுகின்றன.

விளக்கம்

"தோழியே! தலைவன் பிரிவை ஆற்றியிரு என்கிறாய். நானும் ஆற்றியிருக்கத்தான் முயல்கிறேன். ஆயினும், தனித்திருந்து தலைவனை நினைத்திருப்பதால் உடல் மெலிந்து என் கை வளையல்கள் கழன்று விழுகின்றன; நான் என்ன செய்வேன்?" எனத் தலைவி கூறுகிறாள்.

உள்ளுறை உவமம்

சுறாமீன்கள் மோதி அடித்ததால் மீன் குவியல் சுழல்வது போல, தலைவனால் இன்பம் துய்க்கப்பட்ட தலைவி இல்லத்துள் சுழல்கிறாள் எனவும்,

அலைகள் இறால் மீன்களை வீசியெறிந்து ஆரவாரம் செய்வதுபோல ஊர்ப்பெண்டிர் பழிச்சொல் பேசி அலைகின்றனர் எனவும் உள்ளுறை உவமம் அமைந்திருக்கிறது.

சொற்பொருள்

1. சுறா - சுறா மீன்கள்; எறி - எறிகின்ற; குப்பை - மீன் குவியல்; சுழி - உப்பங்கழி.
2. இறா - இறால் மீன்கள்; எறி - வீசுகின்ற; ஓதம் - அலை; அலற இரைக்கும் - அலறி ஒலி எழுப்பும்.
3. உறாஅ - என்னுடன் சேராத; உள்ளி - நினைத்து; இருப்பின் - இருப்பதால்.
4. பொறாஅ - பிரிவாற்றாமையைப் பொறுக்க இயலாமல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 175 **உலோச்சனார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடைக் கடுஞ்சொற் சொல்லி வற்புறுத்துவாட்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவினாலே வருந்தியிருந்த தலைவியை, 'நீ இவ்வாறு வருந்துவதை விட்டுப் பிரிவைப் பொறுத்திருக்க வேண்டும்' எனக் கூறிக் கடிந்துகொள்ளுகிறாள், தோழி. அவளிடம் தலைவி கூறியது.

பருவத் தேன்நசைஇப் பல்பறைத் தொழுதி,
உரவுத்திரை பொருத திணிமணல் அடைகரை,
நனைந்த புன்னை மாச்சினை தொகூஉம்

மலர்ந்த பூவின் மாநீர்ச் சேர்ப்பற்கு
இரங்கேன் – தோழி!'ஈங்கு என்கொல்?' என்று
பிறர்பிறர் அறியக் கூறல்
அமைந்தாங்கு அமைக; அம்பல்அஃது எவனே?

தெளிவுரை

"தோழி! பருவத்தே உண்டாகிய தேனினை விரும்பிப் பல்வகையான வண்டின் கூட்டம், வலிய அலைகள் மோதுகிற மணல் செறிந்த கரை ஓரத்தில் உள்ள, அலைநீரால் நனைந்த புன்னையின் பெரிய கிளையில் வந்து குழுமும். இவ்வாறு மலர்ந்த பூக்களையும் கரிய நீரையும் கொண்டவனாகிய கடற் கரைத் தலைவன் பொருட்டாக நான் இரக்கப்பட மாட்டேன். 'இங்கு இவளுக்கு என்ன ஆயிற்று? ஏன் வருந்துகின்றாள்' என்று பிறரும் அறியும்படி கூறும் பழிச்சொற்கள் அவரவர் மன நிலைப்படி அமையட்டும்! அவர்கள் உரைக்கும் பழிச் சொற்கள் என்ன செய்துவிடும்?"

கருத்து

ஊரவரின் பழிக்கு அஞ்சேன்.

விளக்கம்

"கடற்கரையில் மலர்ந்த பூக்களிலுள்ள தேனை உண்ட பல்வேறு வகையான வண்டுக் கூட்டம் நிறைந்திருக்கும். இத்தகைய செழித்த கடற்கரையை உடைய தலைவன் நம்மை விட்டுப் பிரிந்தான் என்பதற்கு நான் வருந்தவில்லை. இருந்தும், 'இங்கு இவள் இப்படி ஏன் வருந்துகிறாள்' என்று இவ்வூரில் உள்ள பிறர், மற்றவர் அறியும்படி பழி கூறுகின்றனர். அவர்கள் மனம் போனபடி பேசிக் கொண்டிருக்கட்டும். அந்தப் பழிச் சொற்கள் நம்மை என்ன செய்து விடும்?' என்கிறாள் தலைவி.

'உள்ளத்தில் எனக்குக் கவலையில்லை; ஆனாலும் ஊரார் நான் வருந்துவதாய்ப் பழி கூறுகின்றனர். அதுபற்றிய கவலை எனக்கில்லை' எனத் தலைவி, தலைவன் பிரிவைப் பொறுத்துக் கொண்டிருப்பதாய்க் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. பருவத்தேன் - பருவ காலத்திலே உள்ள தேன்; நசைஇ - விரும்பி; பல்பறை - பல்வகையான வண்டு; தொழுதி - கூட்டம்.
2. உரவுத் திரை - வலிமையான அலை; பொருத - மோதப்பட்ட; திணிமணல் - மணல் செறிந்த; அடைகரை - கடற்கரை.
3. மாச்சினை - பெரிய கிளை; தொகூஉம் - குழுமும், கூடும்.
4. மாநீர் - கடல்; சேர்ப்பன் - தலைவன்.
5. இரங்கேன் - வருந்த மாட்டேன்; ஈங்கு என் கொல்? - இங்கு இவளுக்கு என்ன நேர்ந்தது?
7. அமைந்து ஆங்கு அமைக - அவர்கள் மனம் போனபடி அமையட்டும்; அம்பல் - பழிச்சொல்; அஃது எவன்? - அதனால் நமக்கு என்ன?

தலைவி கூற்று

குறுந்தொகை 224 **கூவன் மைந்தன்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை 'இறந்துபடும்' எனக் கவன்ற தோழி கேட்பக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்த காலத்து, 'இவள் இறந்துபடுவளோ!' என்று கவலையுற்ற தோழியிடம் முன்னிலைப் புறமொழியாக, 'தலைவரைப் பிரிந்த துயரினும் இவள் வருந்துதலைக் காணும் துயர் பெரிதாயிற்று' என்று தலைவி கூறுவது.

கவலை யாத்த அவல நீள்இடைச்
சென்றோர் கொடுமை எற்றி, துஞ்சா
நோயினும் நோய்ஆ கின்றே கூவல்
குரால்ஆன் படுதுயர் இராவில் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர்பொறுக் கல்லேன், தோழி நோய்க்கே.

தெளிவுரை

"குராற்பசு ஒன்று இராப்பொழுதிலே தவறிக் கிணற்றினுள் விழுந்துவிட்டது. அதனைக் கண்ட ஊமையன் ஒருவன் அத் துயரத்தை வெளியிட இயலாமல் துன்புற்றதுபோல நானும் என் பொருட்டுத் தோழி படும் வருத்தத்தினைப் பொறுக்கும் ஆற்றல் இல்லாதவளாய் உள்ளேன். கவர்த்த வழிகளில் யா மரங்களைக் கொண்ட நீண்ட வழிகளில் எம்மைப் பிரிந்து சென்ற தலைவரது கொடுமையை நினைந்து, துயிலாமல் இருக்கும் என் துன்பத்தைக் காட்டிலும் தோழியின் துன்பத்தை நான் பொறுக்க இயலாத வளாய் இருக்கிறேன்."

கருத்து

தலைவர் பிரிந்ததால் ஏற்பட்ட துயரத்தைக் காட்டிலும், தோழியின் துயரத்துக்காக நான் மிகவும் வருந்துகிறேன்.

விளக்கம்

கிணற்றிலே விழுந்த பசுவின் துன்பத்தைக் கண்டு வருந்தும் ஊமன் துயரமும், தன் துயரமும் ஒன்றென்றுரைத்தாள், தலைவி. பசுவின் துயர் கண்ட ஊமை அதைப் பிறரிடம் சொல்ல வாயில் லாமல் வருந்துகிறான். அதுபோலத் தலைவியும் தோழி படும் வேதனையை மாற்றுவதற்கு வழி அறியாதவளாய் வருந்தினாள். கூகையும் ஊமன் என்று வழங்கப்படும். அஃது அஃறிணை; எனவே, அதனின்றும் வேறுபடுத்த ஊமையனை 'உயர்திணை ஊமன்' என்றார்.

குறிப்பு

என் துன்பத்தை ஆற்ற வேண்டியவள், தோழி. அவள் அதைச் செய்யாமல் என்னை இன்னும் மிகுந்த துன்பத்திற்கு ஆளாக்கியுள்ளாள் என்னும் குறிப்பும் தலைவியின் கூற்றில் தென்படுகிறது.

கூவலில் விழுந்த பசுவின் துயரினைக் கண்டு வருந்திய ஊமையன் நிலையை இப்பாடலாசிரியர் சிறப்புறப் பாடியுள்ளதால் 'கூவன் மைந்தன்' எனப் பெயர் பெற்றுள்ளார். அவர் இயற்பெயரை எவரும் அறிந்திலர்.

சொற்பொருள்

1. கவலை - பல கிளை வழிகள்; யாத்த - யா மரங்கள் நிறைந்தவை; அவலம் - துன்பம்; நீள்இடை - நீண்ட வழி.
2. சென்றோர் - பிரிந்து சென்றவர்; எற்றி - நினைந்து; துஞ்சா - தூங்காத.
3. நோய் - துன்பம்; ஆகின்றே - ஆகின்றது; கூவல் - கிணறு.
4. குரால் - கபிலை நிறம்; ஆன் - பசு.
5. உயர்திணை ஊமன் - உயர்திணையைச் சார்ந்த ஊமையன்.
6. பொறுக்கல்லேன் - பொறுக்க இயலாதவள் ஆனேன்.

வினை முற்றி மீளும் தலைவன்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 131 **ஓரேருழவனார்**

திணை : பாலை

கூற்று

வினை முற்றிய தலைமகன் பருவ வரவின்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து வந்த தலைவன் பணி முடிவுற்றது. அவன் மீண்டும் வருவதாய்த் தலைவியிடம் குறிப்பிட்டுக் கூறிய பருவமும் தொடங்கியது. அது கண்டு தலைவியிடம் விரைந்து செல்ல எண்ணியவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

ஆடுஅமை புரையும் வனப்பின் பணைத்தோள்
பேர்அமர்க் கண்ணி இருந்த ஊரே
நெடுஞ்சேண் ஆர்இடை யதுவே; நெஞ்சே,
ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓர்ஏர் உழவன் போல,
பெருவிதுப்பு உற்றன்றால்; நோகோ யானே.

தெளிவுரை

"அசைகின்ற மூங்கிலைப் போன்ற அழகினையும் பருமனையும் கொண்ட தோள்களும், ஒன்றுடன் ஒன்று பொருதுவது போன்ற கண்களும் கொண்டவள், என் தலைவி. அவள் இருக்கும் ஊரோ நீண்ட தொலைவில் உள்ளது. மழை பெய்து ஈரம் ஏற்பட்டுள்ளமையால் உழுது விதைப்பதற்கேற்ற பக்குவம் கொண்ட நிலத்தினை உழுவதற்கு ஓர் ஏரினைக் கொண்ட உழவன் எவ்வாறு விரைந்து உழ முயல்வானோ அதுபோல என் நெஞ்சமும் அவளிடம் செல்லத் துடிக்கின்றது. அதனால் நான் மிகவும் வருந்துகின்றேன்" என்று தலைவன் தன்னுள் சொல்லிக் கொண்டான்.

கருத்து

நான் திரும்புவதாய்க் குறித்து வந்த பருவம் தொடங்கியமையால் என் நெஞ்சம் தலைவியைச் சென்றடைய விரைகின்றது.

விளக்கம்

"தலைவியைப் பிரிந்து வந்த தலைவன் செய்து முடிக்க எண்ணிய செயல் நிறைவேறிற்று. அவன் தான் திரும்பி வருவதாய்க் குறிப்பிட்டுவிட்டு வந்த பருவமும் தொடங்கியது. தலைவியிருக்கும் ஊரோ நெடுந்தொலைவில் உள்ளது. அவள் ஆற்றாது வருந்துவளே" என்று அவன் நெஞ்சம் மிகவும் விரைந்து செல்லத் துடிக்கின்றது.

குறிப்பு

'ஓரேருழவன் போல' எனும் அரிய உவமையை இப்பாடலாசிரியர் பயன்படுத்தியுள்ளதால் இவர், 'ஓரேருழவனார்' என்ற பெயரைப் பெற்றுள்ளார். இவர் இயற்பெயரை எவரும் அறிந்திலர்.

சொற்பொருள்

1. ஆடு - அசைகின்ற; அமை - மூங்கில்; புரையும் - போன்ற; வனப்பு - அழகு; பணை - பெரிய.
2. பேர் - பெரிய; அமர் - ஒன்றோடொன்று பொருதும்; கண்ணி - கண்களைக் கொண்டவள்.

3. நெடுஞ்சேண் - நீண்ட தொலைவு; ஆர் இடையது - அடைதற்கரிய இடத்தில் உள்ளது.
4. ஈரம்பட்ட - ஈரம் உண்டாகிய; செவ்வி - (விதைப்பதற்கேற்ற) பக்குவம் கொண்ட; பைம்புனத்து - பசிய புனத்தை உடைய.
5. ஓர் ஏர் உழவன் - ஓரேருழவன் போல, ஒற்றை ஏரையுடைய உழவனைப் போல; பெருவிதுப்பு உற்றன்று - மிகுந்த விரைவைக் கொண்டுள்ளது; யான் நோகு - நான் வருந்துகிறேன்.

தலைவன் கூற்று

கார் நாற்பது 30 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் நெஞ்சோடு சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயல் முடியப்பெற்றதும் தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறியது.

வரைமல்க வானம் சிறப்ப உறைபோழ்ந்து
இருநிலம் தீம்பெயல் தாழ – விரைநாற
ஊதை உளரும் நறுந்தண்கா பேதை
பெருமடம் நம்மாட்டு உரைத்து.

தெளிவுரை

“*மனமே! மலைகளில் வளங்கள் நிறைந்துள்ளன; வானம் சிறப்புடன் நிலத்தை மழைத்துளிகளால் ஊடறுத்து இனிய மழையினைப் பொழிகிறது; நறுமணம் கமழும் குளிர் காற்று காதலியின் மடப்பத்தை நமக்குத் தெரிவித்து மணம் கொண்ட குளிர் சோலையைத் தடவிச் செல்லுகிறது. எனவே, நாம் விரைவில் தலைவியை நோக்கிச் செல்வோம்*” என்று தலைவன் *தன் நெஞ்சத்தினிடம் கூறினான்.*

கருத்து

நெஞ்சமே! நாம் விரைவில் தலைவியைச் சென்று சேர்தல் வேண்டும்.

சொற்பொருள்

1. வரை - மலை; மல்க - வளப்பமுற; உறை - மழைத்துளி; போழ்ந்து - ஊடறுத்து.
2. இரு - பெரிய; தீம்பெயல் - இனிய மழை; தாழ - பொழிய.
3. ஊதை - குளிர் காற்று; உளர்தல் - தடவிச் செல்லுதல்; கா - சோலை.
4. மடம் - மடப்பம்; நம்மாட்டு - நம்மிடம்.

தலைவன் கூற்று

நற்றிணை 157 **இளவேட்டனார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற் பிரிந்த தலைமகன் பருவம் உணர்ந்த நெஞ்சிற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

பொருள் தேடப் பிரிந்தபோது தலைவன், 'கார் காலத்தில் திரும்பி விடுவேன்' என்று சொல்லிச் சென்றான். அப்பருவம் இப்போது தொடங்கி விட்டதைக் காணும் அவன், 'அவள் நம்மைக் காணாது அழுது புலம்புவாளே! அவளைத் தேற்ற நாம் உடனே சென்றாக வேண்டுமே' எனத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

இருங்கண் ஞாலத்து ஈண்டுதொழில் உதவிப்
பெரும்பெயல் பொழிந்த வழிநாள் அமையத்து,
பல்பொறி அரவின் செல்புறம் கடுப்ப
யாற்றுஅறல் நுணங்கிய நாட்பத வேனில்,
இணர்துதை மாஅத்த புணர்குயில் விளித்தொறும்
நம்வயின் நினையும் நெஞ்சமொடு, கைம்மிகக்
கேட்டொறும் கலுழுமால் பெரிதே, காட்ட

குறும்பொறை அயல நெடுந்தாள் வேங்கை
அம்பூந் தாதுஉக்கு அன்ன,
நுண்பல் தித்தி மாஅ யோளே.

தெளிவுரை

"அகன்ற இடத்தைக் கொண்ட இவ்வுலகத்தில், எல்லா உயிரும் தழைக்கும்படியாகப் பெருமழை பெய்து முடிந்தது. பல புள்ளிகளைக் கொண்ட பாம்பு ஓடும்போது அதன் முதுகு நெளிவதைப் போல் கருமணல் தெரிய ஆற்றுநீர் ஓடுகின்ற இளவேனிற்காலம் தொடங்கியது. பூங்கொத்துகள் நிறைந்த மாமரத்தில் குயில் தன் பெடையொடு கூவும் பொழுதெல்லாம் நம் தலைவி நம்மை நினைப்பாள்; பிரிவுத்துன்பம் மிகுந்து கண்ணீர் சொரிந்து புலம்புவாள். காட்டிலுள்ள குன்றின் பக்கத்தே, நீண்ட அடிமரத்தைக் கொண்ட வேங்கை மரத்தின் அழகிய பூந்தாது உதிர்ந்ததைப் போன்று தேமல் பரந்த மாமை நிறத்தையுடைய அவள், குயிலின் குரலைக் கேட்கும் போதெல் லாம் காமம் மிகுதியால் அழுது துன்பமுறுவாள். உடனே சென்று அவளொடு சேர வேண்டும்" எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான்.

கருத்து

கார் தோன்றியது; நம் காதலியைக் கூடவேண்டும்.

விளக்கம்

'நெஞ்சமே! கார்ப்பருவம் தொடங்கிவிட்டது; ஆற்றில் புதுநீர் நெளிந்தோடுகிறது; மாமரத்திலிருந்து துணைக்குயில்கள் கூவுவதைக் கேட்கும் போதெல்லாம் தலைவி நம்மை நினைந்து மிகவும் அழுது புலம்புவாள். அவள் வருத்தம் தீர உடனே நாம் அவளைச் சென்றடைய வேண்டும்' எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுகின்றான்.

சொற்பொருள்

1. இருங்கண் - அகன்ற இடம்; ஞாலம் - உலகம்; ஈண்டு தொழில் - பொருந்தும் தொழில்.
2. பெரும்பெயல் - பெருமழை; வழிநாள் - பிற்றை நாள்; அமையம் - காலம்.

3. பொறி - புள்ளி; அரவம் - பாம்பு; செல் - வளைந்து செல்லும்; புறம் - முதுகு.
4. அறல் - கருமணல்; நுணங்கிய - நெளிந்த; நாட்பதம் - செவ்வி.
5. துதை - நிறைந்த; மா - மா மரம்; புணர்குயில் - பெடையோடு இணைந்த குயில்; விளித்தல் - கூவுதல்.
6. நம்வயின் - நம்மை; கைம்மிக - பிரிவுத் துன்பம் மிகுந்து.
7. கலுழும் - அழுவாள்; காட்ட - காட்டில்.
8. குறும்பொறை - குறுகிய குன்று; அயல - அருகே, பக்கத்தில்; நெடுந்தாள் - நெடிய அடியைக் கொண்ட.
9. உக்கு அன்ன - உதிர்ந்தாற்போல.
10. தித்தி - தேமல்; மாஅயோள் - மாமை நிறத்தைக் கொண்டவள்.

தலைவன் கூற்று

நற்றிணை 169 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மறுத்தரா நின்றான் நெஞ்சிற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

பொருளீட்டச் சென்ற தலைவன் திரும்பிக்கொண்டிருக்கிறான். பிரிந்த போது, 'எப்போது திரும்புவீர்கள்' எனத் தலைவி கேட்ட பொழுது சுவரில் ஒரு பல்லி ஒலித்தது. 'நான் வினை முடிந்தவுடன் வருவேன்' என்றான், தலைவன். 'வினை முடிந்து திரும்பிக்கொண்டிருக்கும் இவ்வேளையிலும் அப்பல்லி மீண்டும் ஒலித்து என் வருகையை முன்கூட்டி அறிவிக்குமா?' என்று அவன் தனக்குள் சொல்லிக்கொண்டது.

'முன்னியது முடித்தனம் ஆயின், நன்னுதல்!
வருவம் என்னும் பருவரல் தீர,
படும்கொல், வாழி, நெடுஞ்சுவர்ப் பல்லி
பரல்தலை போகிய சிரல்தலைக் கள்ளி
மீமிசைக் கலித்த வீநறு முல்லை
ஆடுதலைத் துருவின் தோடுதலைப் பெயர்க்கும்

வன்கை இடையன் எல்லிப் பரீஇ,
வெண்போழ் தைஇய அலங்கல்அம் தொடலை
மறுகுடன் கமழும் மாலை,
சிறுகுடிப் பாக்கத்துஎம் பெருநக ரானே.

தெளிவுரை

"நான் பொருள் தேடப் புறப்பட்டபோது, 'ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்டவளே! கருதியதை முடித்தவுடன் நான் திரும்பி விடுவேன். உன் துன்பம் தவிர்' என்றேன். அப்பொழுது நீண்ட சுவரிலிருந்த பல்லி ஒன்று 'அது சரி' என்பது போல ஒலித்தது. அவ்வாறே அவள் துன்பம் நீங்கும்படி திரும்பிக் கொண்டுள்ளேன். பரற்கற்கள் மிகுதியாயுள்ள பாலை நிலத்தில் சிச்சிலிப்பறவை போன்ற தலையைக் கொண்ட கள்ளி வளர்ந் தோங்கியுள்ளது. அக்கள்ளியின்மேல் முல்லைக்கொடிகள் தழைத்துப் படர்ந்து பூத்துள்ளன. நறுமணம் கமழும் முல்லை யின் மலரை இடையன் பறித்துத் தன் தலையில் பனங்குருத் துடன் சுற்றிக் கொள்வான். தலையை ஆட்டிக்கொண்டு நடக்கும் ஆட்டு மந்தையை ஓட்டிக்கொண்டு அப்பூவின் நறுமணம் ஊரினுள் கமழுமாறு செல்வான். அத்தகைய ஊரில் வாழும் என் தலைவியின் வீட்டிலுள்ள பல்லி என் வரவை முன்கூட்டி ஒலித்து அறிவிக்குமா?" எனத் தலைவன் தன் நெஞ்சுள்ளே சொல்லிக் கொள்கிறான்.

கருத்து

நான் திரும்பிக்கொண்டிருப்பதைப் பல்லி நற்சகுனமாய் அறிவிக்குமா?

விளக்கம்

"நான் பொருளீட்டப் புறப்பட்டபோது, 'எப்பொழுது திரும்பு வீர்கள்?' என்று தலைவி கேட்டாள். அப்பொழுது சுவரில் ஒரு பல்லி ஒலித்தது. நானும், 'வேலை முடிந்தவுடனேயே திரும்பி விடுவேன்' என்றேன். இப்பொழுது அவள் துன்பத்தைத் தீர்க்கும் வகையில் திரும்பிக்கொண்டிருக்கிறேன். அன்றொலித்த பல்லி இப்போதும் ஒலித்து என் வருகையை முன்கூட்டியே அறி விக்குமா?" என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறுகிறான்.

சொற்பொருள்

1. முன்னியது - நினைத்தது.
2. பருவரல் - துன்பம்; தீர - நீங்க.
3. பல்லி படுதல் - பல்லி ஒலித்தல்.
4. பரல் - பரல் கற்கள்; தலைபோகிய - மிகுதியாய் உள்ள; சிரல் - சிச்சிலிப் பறவை; கள்ளிதலை - கள்ளியின் உச்சி.
5. மீமிசை - மேலே; கலித்த - தழைத்த; வீ - மலர்.
6. ஆடுதலை - அசைகின்ற தலையைக் கொண்ட; துரு - ஆடு; தோடு - தொகுதி; தலைப்பெயர்க்கும் - ஓரிடத்தை விட்டு ஓட்டிச் செல்லும்.
7. எல்லி - இரவு; பரீஇ - பறித்து.
8. வெண்போழ் - வெள்ளிய பனங்குருத்தின் நறுக்கு; ததைஇய - மிடைந்த; தொடலை - தழைகளால் கொடுக்கப்பட்ட; அம் - அழகிய; அலங்கல் - மாலை.
9. மறுகு - வீதி; கமழும் - மணக்கும்; மாலை - மாலைப்பொழுது.
10. பெருநகர் - பெரிய ஊர்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 162 **கருவூர்ப் பவுத்திரனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீளும் தலைமகன் முல்லைக்கு உரைப்பானாய் உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்று பொருளீட்டித் திரும்பும் தலைவன், வழியில் மலர்ந்துள்ள முல்லையை நோக்கிக் கூறியது.

கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பல்ஆ புகுதரூஉம் புல்லென் மாலை
முல்லை! வாழியோ!, முல்லை! நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை;
நகுவை போலக் காட்டல்
தகுமோ, மற்றுஇது தமியோர் மாட்டே?

தெளிவுரை

"முல்லை மலரே! நீ வாழ்க! கார் கால மழையால் காப்பாற்றப் பெற்ற நீர் வளமுள்ள இடமகன்ற முல்லை நிலத்தில், மேயச் சென்ற பசுக்கள் தத்தம் தொழுவத்தினுள் புகுகின்ற மாலைப் பொழுதில் நீ உன் வெண்மையான மொட்டுகள்மூலம் சிரிக்கின்றாய்! ஆனாலும் முல்லையே! என்னைப் போலத் துணையைப் பிரிந்து தனிமையாய் இருப்பவரை எள்ளிச் சிரிப்பது உனக்குத் தகுமோ?"

கருத்து

துணையைப் பிரிந்து தனித்திருப்போரை எள்ளி நகையாடிச் சிரிப்பது போல முல்லைக்கொடிகள் பூத்துள்ளன.

விளக்கம்

முல்லைக்கொடியே! நீ உன் சிறிய வெண்மையான அரும்பு களால் புன்சிரிப்புக் காட்டுகிறாய்! காதலரைப் பிரிந்து வாழும் என் போன்றவர்களைப் பார்த்து இப்படிச் சிரிப்பது உனக்குத் தகுந்ததா?

குறிப்பு

மகளிர், தம் கற்பிற்கு அடையாளமாய் முல்லை மலரைச் சூடுவர். இயல்பாகவே மாலையில் அரும்பும் முல்லையைக் கண்ட தலைவன், தான் தன் தலைவிக்குப் பற்றுக்கோடாய் இல்லாததால் அம்முல்லை தன்னைப் பார்த்து எள்ளி நகையாடுவதாய்க் கருதினான்.

சொற்பொருள்

1. கார் - மழை; புறந்தந்த - பாதுகாத்த; வியன்புலம் - அகன்ற இடம்.
2. ஆ - பசு; புகுதரூஉம் - தொழுவத்தில் புகும்; புல்என் - ஒளி குன்றிய.
3. முகை - அரும்பு; முறுவல் கொண்டனை - சிரிக்கின்றாய்.
4. தமியோர் - தனித்திருப்போர்.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 77 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

வினைமுற்றிய தலைமகன் தலைமகளை நினைந்தவிடத்துத் தலைமகள் வடிவு தன் முன் நின்றாற்போல வந்து தோன்ற அவ்வடிவை நோக்கிச் சொல்லி ஆற்றுவிக்கின்றது.

கூற்று விளக்கம்

வினைமேற்சென்ற தலைவன் தலைவியை நினைத்தபொழுது தலைவியின் உருவம் அவன் முன்னால் நின்றதுபோலத் தோற்றமளித்தது. (உருவெளித் தோற்றம்). தலைவன் அவ்வடிவை நோக்கிக் கூறியது.

(உருவெளித் தோற்றம் - இடைவிடா நினைப்பினால் எதிரில் உள்ளது போல் தோன்றும் போலித் தோற்றம்.)

வந்தால்தான் செல்லாமோ ஆர்இடையாய் வார்கதிரால்
வெந்தால்போல் தோன்றும்நீள் வேய்அத்தம் – தந்தார்
தகரக் குழல்புரளத் தாழ்துகில்கை ஏந்தி
மகரக் குழைமறித்த நோக்கு.

தெளிவுரை

"காண்பதற்கரிய சிறிய இடையைக் கொண்ட என் தலைவியே! மயிர்ச்சாந்தணிந்த உன் கூந்தல் நீண்டு புரள, உன் மார்பைத் தழுவித் தொங்கும் முன்றானையைக் கையில் ஏந்திக் கொண்டு, சுறாமீன் வடிவில் செய்யப்பெற்ற காதணியோடு ஒருக்களித்த (மடங்கிய) பார்வையுடன் நீ என் எதிரில் தோன்று கிறாய். கதிரவனின் நீண்ட வெப்பக்கதிர்களால் வெந்ததுபோல் விளங்கும், நீளமான மூங்கில்கள் நிரம்பிய இப்பாலை வழியில் உன்னை ஆர்வத்துடன் தழுவ வருவதைத் தவிர்ப்பேனா? உன்னிடம் வந்து சேர்வேன்; நீ வருந்த வேண்டா" என்று தலைவன் தன் முன் தோன்றிய உருவெளித் தோற்றமாகிய தலைவியிடம் கூறுகிறான்.

கருத்து

தலைவியே! உருவெளித் தோற்றமாய் நீ தோன்றினாலும் உன்னைத் தழுவ உடனே அருகில் வருவேன்.

சொற்பொருள்

1. வந்தால் - என் எதிரே (உருவெளித் தோற்றமாய்) நீ வந்தால்; செல்லாமோ? - உன்னிடம் வருவதைத் தவிர்ப்பேனோ?; ஆர் இடையாய் - காணுதற்கரிய இடையினைக் கொண்டவளே!; வார் - நீண்ட; கதிரால் - சூரியக்கதிர்களால்.
2. வெந்தால் போல் - வெந்து போவதுபோல; தோன்றும் - காணப்படும்; நீள் - நீண்ட; வேய் - மூங்கில்; அத்தம் - வழி; தந்துஆர் - கொடுத்து நிறைந்த.
3. தகரம் - மயிர்ச்சாந்து; குழல் - கூந்தல்; துகில் - ஆடை; ஏந்தி - பிடித்துக் கொண்டு.
4. மகரக்குழை - சுறாமீன்போல் செய்யப்பட்ட காதணி; மறித்த - மடங்கி நின்ற (ஒருக்களித்த); நோக்கு - பார்வை.

தலைவன் கூற்று

நற்றிணை 374 **வன்பரணர்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீள்வான் இடைச்சுரத்துக் கண்டார்க்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள் தேடச் சென்று, செயல் முடித்து வீடு திரும்பியவன் இடைவழியில் செல்வோரைக் கண்டு, அவர்கள் பசியறிந்து, தன் மனைவி விருந்தோம்பும் பண்பினளாதலின் அவர்களைத் தன் இல்லத்திற்கு விருந் தினராய் வருமாறு கூறியது.

முரம்புதலை மணந்த நிரம்பா இயவின்
ஓங்கித் தோன்றும் உமண்பொலி சிறுகுடிக்
களரிப் புளியின் காய்பசி பெயர்ப்ப,
உச்சிக் கொண்ட ஓங்குகுடை வம்பலீர்!

முற்றையும் உடையமோ மற்றே இற்றை
வீழ்மா மணிய புனைநெடுங் கூந்தல்,
நீர்வார் புள்ளி ஆகம் நனைப்ப,
விருந்துஅயர் விருப்பினள் வருந்தும்
திருந்துஇழை, அரிவைத் தேமொழி நிலையே.

தெளிவுரை

"செல்லுதற்கரிய பரற்கற்கள் நிறைந்த வழியில், உப்பு வாணிகர்களின் குடியிருப்புகள் ஓங்கித் தோன்றும் களர்நிலத்தில் புளியம் பழங்களை உண்டு பசி நீங்கித் தலைக்குமேல் குடை பிடித்தவராய்ப் பயணம் செய்யும் புதியவர்களே! விரும்பத்தக்க கரிய மணிபோலும் அலங்கரிக்கப்பெற்ற கூந்தலையும், திருத்திய அணிகலன்களையும், இனிய மொழியையும் கொண்ட என் மனைவி இதுவரை நான் பிரிந்திருந்ததனால் கண்களிலிருந்து வடியும் நீர், மார்பை நனைக்க வருந்தியிருந்தாள். இப்போது புதியவர்களாகிய நீங்கள் என்னோடு வருதலின், விருந்து செய்யும் விருப்பங்கொண்டு உணவு சமைக்கும் செயலில் ஈடுபட்டிருப்பாள்! தேன்போன்ற சொற்களை வழங்கி மகிழ்விக்கும் அவளது விருந்தோம்பலை ஏற்க நீங்கள் என் இல்லத்திற்கு வரவேண்டும்" என்று தலைவன் இடைச்சுரத்தில் கண்டாரை அழைத்தான்.

கருத்து

என் மனைவியின் விருந்தோம்பலை ஏற்க என்னுடன் என் இல்லத்திற்கு வாருங்கள்.

விளக்கம்

வினை முடித்து மீளும் தலைவன் வழியில் ஓரிடத்தில், புளியங்காயை உண்டு பசியைப் போக்கிக்கொண்டு தலைக்குமேல் குடை பிடித்துச் சென்றுகொண்டிருந்தவர்களைக் கண்டு இரக்கங் கொண்டவனாய், தன் மனைவியின் விருந்தோம்பும் மனையறத்தை நினைத்து, அவள் இன்மொழியோடு அளிக்கும் விருந்தினை உண்டு செல்ல அவர்களைத் தன் மனைக்கு விருந்தாய் அழைத்தனன்.

சொற்பொருள்

1. முரம்பு - பரல்கற்கள்; தலைமணந்த - மேற்பரப்பைக் கொண்ட; நிரம்பா - நடந்து முடியாத; இயவு - வழி.
2. உமண் - உப்பு வாணிகர்.
3. களரி - களர் நிலம்; புளி - புளியம்பழம்; காய் - வருத்துகின்ற; பசி பெயர்ப்ப - பசி நீங்கி.
4. உச்சிக் கொண்ட - தலைமேல் பிடித்த; வம்பலீர் - புதியவர்களே!
5. முற்றையும் உடையம் - முன்பும் பெற்றுடையோம்; இற்றை - இன்றைக்கும் (அந்நிலையைப் பெற விருந்தினராய் எம் இல்லம் வருக).
6. வீழ் - விரும்பப்படும்; மாமணி - கருமணி; புனை - பின்னப்பட்ட.
7. நீர்வார் - நீரைச் சொரியும்; புள்ளி - (கண்ணீர்த்) துளிகள்; ஆகம் - மார்பு.
8. அயர் - ஓம்பும்; விருப்பினள் - விருப்பினளாய்; வருந்தும் - வருந்தியிருக்கும்.
9. அரிவை - என் தலைவி; தேமொழி நிலை - தேன் போன்ற சொற்களை வழங்கி மகிழ்விக்கும் இன்ப நிலை.

கண்டோர் கூற்று

நற்றிணை 394 **ஔவையார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மறுத்தராநின்ற தலைமகனை இடைச்சுரத்துக் கண்டார் சொல்லியது.

கூற்று விளக்கம்

வினை முடித்து மீளும் தலைவனைக் கண்டாருள் ஒருவர், 'முன்பு இப்பாலை வழியே தேர்ச்சக்கரம் அதிர முன்பனி நாளில் சென்றனன். இப்பொழுது கார்ப்பருவம் வந்தது எனக் குளிர்ந்த உள்ளத்தனாய் மீள்கிறான்' என உவந்து கூறியது.

மரந்தலை மணர்ந்த நனந்தலைக் கானத்து,
அலந்தலை ஞெமையத்து இருந்த குடிஞை,
பொன்செய் கொல்லனின், இனிய தெளிர்ப்பப்
பெய்ம்மணி ஆர்க்கும் இழைகிளர் நெடுந்தேர்,
வன்பரல் முரம்பில், நேமி அதிரச்
சென்றிசின் வாழியோ, பனிக்கடு நாளே,
இடைச்சுரத்து எழிலி உரைத்தென, மார்பின்
குறும்பொறிக் கொண்ட சாந்தமொடு
நறுந்தண் ணியன்கொல்; நோகோ யானே.

தெளிவுரை

"மரங்கள் நெருங்கி அடர்ந்துள்ள இடமகன்ற காட்டில், வாடிய ஞெமை மரத்தின்மீதிருந்த ஆந்தை ஒன்று, பொன் வேலை செய்யும் கொல்லன் தட்டி எழுப்பும் ஒலிபோல இனிதாய் ஒலித்துக் கொண்டிருந்தது. மணிகள் ஒலிக்கின்ற, அணிகள் பூட்டப்பெற்ற நெடிய தேரில், வன்மையான பரல்கற்கள் பொருந்திய மேட்டு நிலத்தில் தேர்ச்சக்கரம் அதிரும்படியாகத் தலைவன், கடுமையாகப் பனி பெய்த நாளில், பணி நிமித்தமாய் வேற்றூர் சென்றான். பணி முடிந்து, இப்போது இடைச்சுரத்தில் மேகங்கள் மழை பொழிய, குளிர்ச்சி பொருந்திய சந்தனப்பூச்சு மார்பில் விளங்க, அவன் மீண்டு வருகிறான். இதற்காக நான் வருந்துவனோ? (இல்லை மகிழ்வேன்;) அவன் வாழ்க" எனத் தலைவனை இடைவழியில் கண்டவர் கூறினார்.

கருத்து

தலைவன் மீள்வதால் தலைவியின் வருத்தம் இனி நீங்கும்.

விளக்கம்

தலைவன் பிரிந்து செல்லும்போது கானத்திலிருந்த வெம்மையின் தன்மைபோலவே தலைவியின் உள்ளமும் துன்புற்றுக் கடுமையாய் இருந்தது. இப்போது அவன் திரும்பி வரும்போது மழையால் குளிர்ச்சி பெற்ற கானம் போலவே தலைவியின் உள்ளமும் குளிர்ச்சி பெறும்.

சொற்பொருள்

1. மரந்தலை மணர்ந்த - மரங்கள் அடர்ந்த; நனந்தலை - அகன்ற இடம்.
2. அலந்தலை - வாடிப் போன, வற்றிப்போன; ஞெமை - ஒரு வகைக் காட்டுமரம்; குடிஞை - ஆந்தை.
3. தெளிர்ப்ப - ஒலிக்க.
4. ஆர்க்கும் - ஒலிக்கும்; இழைகிளர் - அணிகள் ஒளி வீச.
5. வன்பரல் - வலிமையான பரல்கற்கள்; முரம்பு - மேட்டுநிலம்; நேமி - தேர்ச்சக்கரம்.
6. சென்றிசின் - சென்றனன்; பனிக் கடுநாள் - கடுமையான பனிக்காலம்.
7. எழிலி - மேகம்; உரைத்தல் - பெய்தல்.
8. குறும்பொறி - குறும்புள்ளி; சாந்தம் - சந்தனம்.
9. நோகோ - வருந்த மாட்டேன், மகிழ்வேன்.

தலைவன் கூற்று

அகநானூறு 93 **கணக்காயனார் மகனார் நக்கீரனார்**

திணை : பாலை

கூற்று

வினை முற்றி மீளலுறும் தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுதற்குத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தான் விரும்பியவாறே நிரம்பப் பொருள் ஈட்டி, மீண்டு வருபவன் இடைச்சுரத்தே தலைவியை நினைந்து வருந்தும் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கேள்கேடு ஊன்றவும், கிளைஞர் ஆரவும்,
கேள்அல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்,
ஆள்வினைக்கு எதிரிய ஊக்கமொடு புகல்சிறந்து;
ஆரங் கண்ணி அடுபோர்ச் சோழர்
அறங்கெழு நல்அவை உறந்தை அன்ன,
பெறல்அரும் நன்கலம் எய்தி, நாடும்

செயல்அருஞ் செய்வினை முற்றினம் ஆயின்;
அரண்பல கடந்த, முரண்கொள் தானை,
வாடா வேம்பின் வழுதி கூடல்
நாள்அங் காடி நாறும் நறுநுதல்
நீள்இருங் கூந்தல் மாஅ யோளொடு,
வரைகுயின் றன்ன வான்தோய் நெடுநகர்,
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
நிவந்த பள்ளி நெடுஞ்சுடர் விளக்கத்து,
நலம்கேழ் ஆகம் பூண்வடுப் பொறிப்ப,
முயங்குகம் சென்மோ– நெஞ்சே! வரிநுதல்
வயம்திகழ்பு இழிதரும் வாய்புகு கடாஅத்து,
மீளி மொய்ம்பொடு நிலன்எறியாக் குறுகி,
ஆள்கோள் பிழையா, அஞ்சுவரு தடக்கை,
கடும்பகட்டு யானை நெடுந்தேர்க் கோதை
திருமா வியல்நகர்க் கருவூர் முன்துறை,
தெண்நீர் உயர்கரைக் குவைஇய
தண்ஆன் பொருநை மணலினும் பலவே.

தெளிவுரை

"சுற்றத்தார்க்கு நேர்கின்ற கேட்டினைப் போக்கி அவர்களைத் தாங்குதல் வேண்டும்; நம் இனத்தார் (வயிறார) உண்ணுதல் வேண்டும்; நொதுமலாளர் நம்மோடு உறவினராய் ஒழுகுதல் வேண்டும்; இவற்றுக்கெல்லாம் கருவி பொருளாகலின், பொருளீட்டும் முயற்சிக்கு ஏற்ற ஊக்கத்துடன் நெஞ்சிலே விருப்பம் மிகுந்தது.

"சோழர் ஆத்திமாலை சூடியவர்; பகைவரைக் கொன்றழிக்கும் வீரம் கொண்டவர்; அறம் பொருந்திய நல்ல அவையினைக் கொண்டவர். அவர் தலைநகர் உறந்தையைப் போன்ற பெறுதற்கரிய நல்ல அணிகலன்களை அடையும்பொருட்டு யாவரும் விரும்பும் பொருளீட்டுதலாகிய செயற்கரும் செயலைச் செய்து முடித்தோம்.

"பாண்டிய மன்னன் பகைவர்களுடைய அரண்கள் பலவற்றை அழித்தவன்; பகைவர்மீது மாறுபாடு கொண்ட சேனையினைக்

கொண்டவன்; வாடாத வேப்ப மாலையினை அணிந்தவன். அவனது மதுரை மாநகரின் மணங்கமழும் பகல்நேரக் கடை வீதியைப் போல, மணக்கும் நெற்றியினையும், நீண்ட கருங் கூந்தலினையும், மாமை நிறத்தினையும் கொண்டவளாகிய நம் தலைவியைச் சென்று சேர்வோம்.

"மலையைக் குடைந்து செய்தாற்போன்ற வானளாவிய உயர்ந்த மாளிகையில், நுரையை முகந்து வைத்தாற்போன்ற மென்மையான பூப்படுக்கையைக் கொண்ட ஓங்கிய பள்ளியறைக் கட்டிலில், நெடிய விளக்கு ஒளியில், அழகு பொருந்திய நம் மார்பிலே, தலைவியின் மார்பகத்துப்பூண்கள் வடுக்களைச் செய்யுமாறு இறுகத் தழுவுவோம்.

"புள்ளிகள் நிறைந்த நெற்றியினையும், வாயிடத்திலே புகும் மதத்தினையும் வலிமை விளங்குமாறு முழங்குகின்ற கூற்றினைப் போன்ற வலிமையுடன், நெருங்கிச் சென்று பகைவர்களைப் பற்றி, அவர்களை நிலத்திலே சுருட்டி அறைந்து கொல்லுதலில் தப்பாத அச்சம் தருகின்ற பெரிய கையினையும் கொண்ட வலிமையான யானைப்படையையும், நெடிய தேர்ப் படையினையும் உடையவன், சேரன்; செல்வம் கொழிக்கும் சிறப்பினைக் கொண்ட அவனது அகன்ற நகரமாகிய கருவூரின் துறைமுன், தெளிந்த நீரைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய ஆன்பொருநை என்னும் ஆற்றின் ஓங்கி உயர்ந்த கரையிடத்துக் குவிந்துள்ள மணலினும் பலவாக நாம் அவளைத் தழுவி மகிழ்வோம்; வா!"

கருத்து

நெஞ்சே! நினைத்தவாறு பொருளை ஈட்டினோம். திரும்பச் சென்று தலைவியைத் தழுவி மகிழ்வோம்.

விளக்கம்

நெஞ்சே! நண்பர் துன்பம் துடைக்கவும், உறவினர் உண்டு மகிழவும், மனவெழுச்சி கொண்டு, சோழரது உறந்தையைப் போன்ற பெறுதற்கரிய நலன்களை அடைந்து செயற்கரிய செயலைச் செய்யவும் பெரும் பொருளை ஈட்டிவிட்டோம்.

ஆகவே, இனிப் பாண்டியனின் நாளங்காடி போன்ற பொலிவு கொண்டவளாய் இருக்கும் நம் தலைவியினைச் சென்று சேர்வோம்.

"சேரன் தலைநகராகிய கருவூரில் உள்ள ஆன்பொருநை யாற்று மணலினும் பலவாக நாம் அவளைத் தழுவி மகிழ்வோம்.

சொற்பொருள்

1. கேள் - உறவினர்; கேடு ஊன்ற - கேட்டினை நீக்க; கிளைஞர் - இனத்தவர்; ஆரவும் - உண்ணவும்.
2. கேள்அல் கேளிர் - நொதுமலாளர், அயலார்; கெழீஇயினர் - உறவினராக.
3. ஆள் வினை - (பொருளீட்டும்) முயற்சி; எதிரிய - ஏற்ற; புகல் சிறந்து - விருப்பம் மிக்கு.
4. ஆரம் கண்ணி - ஆத்தி மாலை.
5. உறந்தை - உறையூர் (சோழர் தலைநகர்).
6. நன்கலன் - நல்ல அணிகலன்; நாடும் - விரும்பும்.
7. செய்வினை - பொருளீட்டும் செயல்; முற்றினம் - செய்து முடித்தோம்.
8. கடந்த - வென்ற; முரண் - மாறுபாடு.
9. வாடா வேம்பு - வாடாத வேப்ப மாலை; வழுதி - பாண்டியன்; கூடல் - மதுரை (பாண்டியர் தலைநகர்).
10. நாள் அங்காடி - பகல் நேரக் கடைவீதி; நாறும் - மணக்கும்.
11. மாஅயோள் - மாமை நிறம் கொண்டவள்.
12. வரை - மலை; குயின்று அன்ன - குடைந்து அமைக்கப்பட்டது போன்ற; நகர்- மனை, வீடு.
13. சேக்கை - படுக்கை.
14. நிவந்த - உயர்ந்த; பள்ளி - கட்டில்.
15. பூண் - பூண்கள்; வடுப் பொறிப்ப - வடுக்களை உண்டாக்க.
16. சென்மோ - செல்க; வரிநுதல் - வரி பொருந்திய நெற்றி.
17. வயம் - வலிமை; திகழ்பு - விளங்குதலால்; இழிதரும் - முழங்கும்; கடாஅம் - மதம்.
18. மீளி - கூற்றுவன்; மொய்ம்பு - வலிமை; நிலன் எறியா - நிலத்தில் சுருட்டி எறிந்து; குறுகி - நெருங்கி வந்து.
19. ஆள்கோள் - ஆள்களைக் கொல்லுதல்; பிழையா - தவறாத; தடக்கை - பெரிய கை.

20. பகட்டு யானை - பெரிய யானை; கோதை - (மாலையினைக் கொண்ட) சேரன்.
21. திருமா - செல்வம் மிக்க; வியல்நகர் - அகன்ற நகரம்; கருவூர் - கரூர் (சேரர் தலைநகர்); முன்துறை - துறை முன்.
22. தெள்நீர்- தெளிந்த நீர்; கவைஇய - குவிந்துள்ள.
23. தண் ஆன்பொருநை - குளிர்ச்சியினைக் கொண்ட ஆன்பொருநை நதி.

தலைவன் கூற்று

திருக்குறள் 1238 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

வினை முடித்து மீளலுற்ற தலைமகன், முன் நிகழ்ந்தது நினைந்து, தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் பணி முடித்துத் திரும்பும்போது முன்பு தலைவியோடியிருந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைந்து தனக்குள்ளே சொல்லிக் கொண்டது.

முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது
பைந்தொடிப் பேதை நுதல்.

தெளிவுரை

இறுகத் தழுவிய கைகளை நான் சிறிதளவே தளர்த்தினேன்; அவ்வளவுதான். என் தலைவியின் நெற்றி பசந்து நிறம் மாறியது. (அப்படிப்பட்ட நெற்றி இப்பிரிவின்போது யாது செய்ததோ?)

கருத்து

தழுவுதலில் சிறிது தளர்ந்தாலும் தலைவியின் மேனி பசப்படையும்.

விளக்கம்

‘தலைவியை அணைத்துத் தழுவியிருந்த என் கையைச் சிறிது தளர்த்திய அவ்வளவிலேயே தலைவியின் நெற்றியில் பசலை படர்ந்துவிட்டது’ என்று தலைவன் முன்பு நடந்ததை எண்ணிப் பார்க்கிறான்.

குறிப்பு

தலைவியின் உடலில் பசலை படராதிருக்கத் தலைவன் தலைவி அணைப்பில் சிறு தளர்வும் கூடாது.

சொற்பொருள்

1. முயங்கிய கைகளை - இறுகத் தழுவிய கைகளை; **ஊக்க** - சிறிது தளர்த்திய அளவிலேயே.
2. பைந்தொடிப் பேதை நுதல் - பசுமையான வளையலணிந்த தலைவியின் நெற்றி.
1. பசந்தது - பசந்து நிறம் மாறியது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1239 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

வினை முடித்து மீளலுற்ற தலைமகன், முன் நிகழ்ந்தது நினைந்து, தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் பணி முடித்துத் திரும்பும்போது முன்பு தலைவியோடியிருந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைந்து தனக்குள்ளே சொல்லிக் கொண்டது.

முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற
பேதை பெருமழைக் கண்.

தெளிவுரை

தலைவியை நான் இறுகத் தழுவியிருந்தபோது, இடையில் காற்று நுழைந்துவிட்டது. அது பொறாது, அவளுடைய பெரிய குளிர்ந்த கண்கள் நிறம் வேறுபட்டன.

கருத்து

காதலரின் அணைப்பு, காற்றும் நுழைய இடமில்லாததாய் இருக்க வேண்டும்.

விளக்கம்

தலைவன் தலைவி உடலிறுக்கத்தில் காற்றுப் புகும் அளவுக்கு இடைவெளி ஏற்பட்டாலும், தலைவி பசலை நோய்க்கு ஆட் படுவாள்.

குறிப்பு

'சிறு இடையீட்டில் காற்று நுழைவதைக்கூடத் தலைவியின் கண் பொறுக்கவில்லை. அப்படிப்பட்ட கண்கள் மலைகளும் காடுகளும் நாடுகளும் கடந்து நான் பிரிந்திருப்பதை எவ்வாறு பொறுத்திருக் கின்றனவோ?' என்று தலைவன் எண்ணுகிறான்.

சொற்பொருள்

1. முயக்கிடை - இறுகத் தழுவுதலின் (இடைவெளியில்); தண்வளி போல - குளிர்ந்த காற்றுப் புகுதலால்.
2. பேதை பெருமழைக் கண் - தலைவியின் பெரிய குளிர்ந்த கண்கள்.
1. பசந்தன - நிறம் வேறுபட்டன.

தலைவன் கூற்று

திருக்குறள் 1240 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

வினை முடித்து மீளலுற்ற தலைமகன், முன் நிகழ்ந்தது நினைந்து, தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் பணி முடித்துத் திரும்பும்போது முன்பு தலைவியோடியிருந்த காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை நினைந்து தனக்குள்ளே சொல்லிக் கொண்டது.

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

தெளிவுரை

தலைவன் தலைவி தழுவலில் காற்று இடையிற் புகுந்ததால் தலைவியின் கண்ணில் உண்டான பசலை, (தனக்கு அயலி லுள்ள) ஒளி பொருந்திய நெற்றி, பசலை அடைந்தது கண்டு துன்பமடைந்தது.

கருத்து

கண்ணின் பசலை, நெற்றி பசலை அடைந்தது கண்டு வருந்தியது.

விளக்கம்

தழுவலில் தலைவன் கைகளைச் சிறிது தளர்த்திய அள விலேயே பொருள்களைக் காணும் தன்மையில்லாத நெற்றி பசலையடைந்தது. ஆனால், பொருள்களைக் காணும் தன்மை கொண்ட கண்களோ கைகளைத் தளர்த்தியதால் சிறிது காற்று ஊடறுத்துச் சென்ற பிறகே பசலையுற்றது. பசலையடைவதில் நெற்றி தன்னை முந்திக் கொண்டதால் கண் வருத்தமுற்றது.

குறிப்பு

தலைவியின் நலனழிவது கருதாது இதுவரை இருந்து விட்டேன். ஆதலால் நான் விரைந்து சென்று அவளை அடைதல் வேண்டும் என்று தலைவன் கருதுகிறான்.

சொற்பொருள்

1. **கண்ணின் பசப்போ - (காற்று இடையில் புகுந்ததனால் வந்த) கண்ணின் பசலையோ.**
2. **ஒண்ணுதல் செய்தது கண்டு - (தனக்கு அயலிலுள்ள) நெற்றி பசந்தது கண்டு.**
1. **பருவரல் எய்தின்று - துன்பம் அடைந்தது.**

தலைவன் கூற்று

அகநானூறு 87 **மதுரைப் பேராலவாயர்**

திணை : பாலை

கூற்று

வினை முற்றி மீளும் தலைமகன், இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்த தலைவன் வினை முடித்து மீளுங்கால் இடை வழியில் தலைவியை நினைந்து வருந்தும் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

தீம்தயிர் கடைந்த திரள்கால் மத்தம்,
கன்றுவாய் சுவைப்ப, முன்றில் தூங்கும்
படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை,
நல்கூர் சீறூர் எல்லித் தங்கி,
குடுமி நெற்றி நெடுமரச் சேவல்
தலைக்குரல் விடியல் போகி, முனாஅது,
கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்
எழுந்த தண்ணுமை இடங்கட் பாணி,
அருஞ்சுரம் செல்வோர் நெஞ்சம் துண்ணென,
குன்றுசேர் கவலை இசைக்கும் அத்தம்,
நனிநீடு உழந்தனை மன்னே, அதனால்
உவஇனி– வாழிய, நெஞ்சே! மைஅற
வைகுசுடர் விளங்கும் வான்தோய் வியல்நகர்ச்
சுணங்குஅணி வனமுலை நலம்பா ராட்டித்
தாழ்இருங் கூந்தல்நம் காதலி
நீள்அமை வனப்பின் தோளுமார் அணைந்தே.

தெளிவுரை

"நெஞ்சமே! இனிய தயிரைக் கடைந்த பின்பு திரண்ட தண்டினைக் கொண்ட மத்து, கன்று தன் நாவினால் சுவைக்குமாறு, வீட்டின் முற்றத்தில் தொங்கிக்கொண்டிருக்கும்; மரத்தின் தழையாலாகிய பந்தரையும், புல்லால் வேயப்பட்ட

சிறு குடிசைகளையும் கொண்ட சிற்றூரில் இரவு நேரத்தில் தங்கினோம்.

"நெற்றியில் சிவந்த கொண்டையைக் கொண்ட சேவல் உயர்ந்த மரத்தில் இருந்தபடி கூவும் முதல் குரலொலி கேட்டு விடியற்காலையில் அவ்வூரை விட்டுப் புறப்பட்டுச் சென்றோம்.

"வன்கண்மை கொண்ட மறவரின் பழைமை வாய்ந்த கற்கள் பொருந்திய காட்டு அரண்களில், தண்ணுமைப்பறையின் அகன்ற கண்ணினின்றும் எழுந்த ஓசை, அரிய பாலை நிலத்து வழிகளில் செல்வோரின் நெஞ்சம் நடுங்குமாறு ஒலிக்கும்; அத்தகைய குன்றுகள் சேர்ந்த கவர்த்த வழிகளைக் கொண்ட காட்டில் நீ மிகவும் நெடிது வருந்தி வந்தாய்; (நம் ஊர் வந்து விட்டோம்!)

"அதனால், இருள் நீங்குமாறு, விடியும்வரை விளக்கு எரிந்து கொண்டிருக்கும் விண்ணளாவிய நம் பெரிய மாளிகையிடத்தே, நிலந்தோய நீண்டு வளர்ந்த கரிய கூந்தலைக் கொண்ட நம் காதலியின் தேமல் படர்ந்த முலை அழகினைப் பாராட்டி, நீண்ட மூங்கில் போன்ற அழகிய தோளினைச் சேர்ந்து இப்பொழுது மகிழ்வாய்!"

கருத்து

நெஞ்சே! செயலை முடித்து, கடிய வழிகளைக் கடந்து ஊர் திரும்பி விட்டோம்; நீ தலைவியை இப்போதே சேர்ந்து மகிழலாம்.

விளக்கம்

சென்ற இடத்தில் செயலை முடித்துத் திரும்பி வருகின்ற தலைவன் இடைவழியில் தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது: "நெஞ்சமே! தயிர் கடைந்த மத்து, கன்று சுவைத்திருக்கும்படி முற்றத்தில் தொங்கிக்கொண்டிருக்கும். இலைதழைகளாலாகிய பந்தலைக் கொண்ட குடிசைகள் அமைந்த சிற்றூரில் இரவு நேரத்தில் நாம் தூங்கினோம். மறுநாள், சேவலின் முதல் குரல் கேட்டதும் காலையில் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு வந்தோம். அரிய பாலைநில வழியில் குன்றுகள் சேர்ந்த கவர்த்த வழிகளைக் கொண்ட காட்டில் நடந்து பெரிதும் வருந்தியுள்ளோம். (ஊர்

வந்துவிட்டோம்.) விண்ணைத் தொட்டு நிற்கும் நம் பெரிய மாளிகையில், நீண்டு வளர்ந்த கூந்தலைக் கொண்ட நம் காதலியின் தேமல் படர்ந்த முலைஅழகினைப் பாராட்டி, நீண்ட மூங்கில் போன்ற அழகிய தோளினை நீ இப்பொழுதே சேர்ந்து மகிழ்வாய்!"

சொற்பொருள்

1. தீம் - இனிய; திரள்கால் - திரண்ட தண்டு; மத்தம் - மத்து.
2. முன்றில் - முற்றம்.
3. படலை - மர நிழல்; பந்தர் - பந்தல்; குரம்பை - குடிசை.
4. நல்கூர் - வறுமைப்பட்ட; எல்லி - இரவு.
5. குடுமி நெற்றி - நெற்றியில் குடுமி பொருந்திய.
6. தலைக்குரல் - முதற்குரல்; முனாஅது - பழமையானது.
7. கல்கெழு - கற்கள் பொருந்திய; குறும்பு - பாலை நிலத்து ஊர், காட்டரண்.
8. இடங்கண் - அகன்ற கண்; பாணி - ஒலி.
9. துண் என - நடுக்குற.
10. கவலை - கவர்த்த (பிளவுபட்ட) வழி; அத்தம் - வழி.
11. நனி - மிகவும்; உழந்தனை - வருந்தினை.
12. உவ இனி - இனி மகிழ்வு கொள்; மைஅற - இருள் நீங்க.
13. வைகு சுடர் - விளக்கு விளங்குகின்ற; வியல் நகர் - அகன்ற மாளிகை.
14. சுணங்கு - தேமல்; நலம் - அழகு.
15. தாழ் இரும் - நீண்ட கரிய.
16. நீள் அமை - நீண்ட மூங்கில்; ஆர் - மிகவும்; அணைதல் - தழுவுதல்.

தலைவன் கூற்று

கார் நாற்பது 28 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் நெஞ்சோடு சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயல் முடியப் பெற்றதும் தலைவன் தன் உள்ளத்திடம் கூறியது.

இமிழ்இசை வானம் முழங்கக் குமிழின்பூப்
பொன்செய் குழையின் துணர்தூங்கத் தண்பதஞ்
செவ்வி யுடைய சுரநெஞ்சே காதலிஊர்
கவ்வை அழுங்கச் செலற்கு.

தெளிவுரை

"நெஞ்சமே! மேகம் ஒலி முழங்கவும் குமிழ் மலர்கள் பொன்னால் செய்யப்பட்ட காதணியைப் போல் கொத்துகளாய் மலரவும் கார் காலம் தொடங்கிவிட்டது. மனமே! நம் தலைவியின் ஊருக்குச் செல்லும் வகையில் காடுகள் குளிர்ச்சி அடைந்துள்ளன. அதனால் என்னைப் பற்றிய நினைவு தோன்றி அவள் அல்லல்படுவாள். அதனை ஊர் அறிந்து என்னைப் பழிக்கும். அப்பழிச்சொல் நீங்கும் வகையில் விரைவில் சென்று சேர்வோம்."

கருத்து

கார் காலத்தில் போய்ச் சேராவிட்டால் தலைவி வருத்தமுற்று அவளது மேனி வேறுபடும்.

குறிப்பு

குமிழம் என்பது ஒரு வகை மலர். இலக்கியங்களில் மூக்கிற்கு இஃது உவமையாய்க் கூறப்பட்டுள்ளது. இது பொன்னால் செய்யப்பட்ட காதணி (பொன்குழை) போலத் தோற்றம் கொண்டது. கார் காலத்தில் மலரும்; மஞ்சள் நிறமானது. இது கோட்டுப்பூ வகைகளுள் ஒன்று; மரத்தில் கொத்தாய்த் தொங்கி அசைந்தாடும்.

சொற்பொருள்

1. இமிழ்தல் - ஒலித்தல்; குமிழ் - ஒரு வகை மரம்.
2. குழை - காதணி; துணர் - பூங்கொத்து; தூங்க - தொங்க; தண் பதம் - குளிர்ச்சியான.
3. செவ்வி - தகுதி; சுரம் - காட்டுவழி.
4. கவ்வை - துன்பம்; அழுங்குதல் - நீங்குதல்; செலற்கு - செல்லுவதற்கு.

தலைவன் கூற்று

கார் நாற்பது 29 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் நெஞ்சோடு சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயல் முடியப்பெற்றதும் தலைவன் தன் உள்ளத் திடம் கூறியது.

பொங்கரும் ஞாங்கர் மலர்ந்தன தங்காத்
தகைவண்டு பாண்முரலும் கானம் – பகைகொண்டல்
எவ்வெத் திசைகளும் வந்தன்று சேறுநாம்
செவ்வி யுடைய சுரம்.

தெளிவுரை

“நெஞ்சமே! சோலைகள் எல்லாப் பக்கங்களிலும் பூத்துக் குலுங்குகின்றன. காட்டில் ஓரிடத்தில் தங்காது அங்கும் இங்கும் செல்லும் வண்டுகள் இன்னிசை பாடி மகிழ்கின்றன. பகையுடன் எழுந்த மேகங்கள் எல்லாத் திசைகளிலும் திரண்டுவிட்டன. எனவே, விரைவில் பயணம் செய்து தலைவியை அடைய வேண்டும்.”

கருத்து

நெஞ்சமே! கார் மேகம் கவிழ்ந்து கொண்டது. விரைவில் தலைவியிடம் திரும்பிச் செல்வோம்.

சொற்பொருள்

1. பொங்கர் - சோலை; ஞாங்கர் - பக்கம்; தங்கா - ஓரிடத்திலும் தங்காது.
2. தகை - அழகு; பாண் - இசைப்பாட்டு; முரலும் - ஒலிக்கும்; கொண்டல் - மேகம் (பகை கொண்டல் - பகையுடன் எழுந்த மேகம்).
3. வந்தன்று - வந்து சூழ்ந்தன; சேரு நாம் - நாம் சென்று சேர்வோம்; செவ்வி - தகுதி; சுரம் - காட்டுவழி.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 420 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவத்து எய்திய அணித்தாக வந்த தலைமகன் பருவத்தால் அணி கொண்ட புறவை நோக்கிச் சொல்லியது. (ஊரை நெருங்கும்போது கார்ப் பருவத்தாலே புதிய அழகு பெற்று விளங்கிய காட்டைப் பார்த்துச் சொல்லியது.)

கூற்று விளக்கம்

தலவைன் தான் குறித்த பருவத்தில் மீண்டு வந்தான். ஊரை அணுகி வருகையில், கார்ப்பருவத்தால் அழகு மிகுந்து காணப்பட்ட முல்லைக் காட்டை நோக்கி அவன் கூறியது.

பொன்னென மலர்ந்த கொன்றை மணியெனத்
தேம்படு காயா மலர்ந்த; தோன்றியொடு
நன்னலம் எய்தினை, புறவே! நின்னைக்
காணிய வருதும் யாமே;
வாணுதல் அரிவையொடு ஆய்நலம் படர்ந்தே.

தெளிவுரை

"கானமே! பொன்னைப்போல் கொன்றை மலர்ந்துள்ளது. நீல மணியைப் போலக் காயா தேன் கொண்டு மலர்ந்துள்ளது. இவையேயன்றித் தோன்றி மலர்களொடும், முல்லை நிலமே! நீ நலம் பெற்றுள்ளாய். ஒளி பொருந்திய நெற்றியளான என் காதலியோடு அவள் அழகிய நலத்தினை மேலும் மிகுத்தற் பொருட்டாய் உன்னைக் காண வருவேன்."

கருத்து

முல்லை நிலமே! என் காதலியுடன் வந்து உன்னழகிலே இன்புறுவேன்.

சொற்பொருள்

1-2. கொன்றை பொன்னென மலர்ந்துள்ளது; நீலமணி போலத் தேன்மிக்க காயா மலர்ந்துள்ளது.
2. தோன்றி - செந்நிறப் பூவகை.
3. நன்னலம் - நல் நலம் - நல்லழகு.
4. காணிய - காண வேண்டி.
5. வாள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றி; படர்தல் - நினைத்தல்.

வினை முற்றிய தலைவன் தேர்பாகற்கு உரைத்தது.

தலைவி கூற்று

நாலடியார் 394 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : பாலை

கூற்று

வினை முடித்து மீண்ட தலைமகன் தேர்ப்பாகன் கேட்பக் கூறியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடி வரச் சென்ற தலைவன், செயல் முடிந்து திரும்புகையில் பாகனுக்குத் தேரை விரைந்து செலுத்துமாறு சொல்லியது.

செல்சுடர் நோக்கிச், சிதர்அரிக்கண் கொண்டநீர்
மெல்விரல் ஊழ்தெறியா, விம்மித்தன் – மெல்விரலின்
நாள்வைத்து, நம்குற்றம் எண்ணுங்கொல்? அந்தோ,தன்
தோள்வைத்(து) அணைமேற் கிடந்து.

தெளிவுரை

தேர்ப் பாகனே! தலைவி, மேற்றிசையில் சூரியன் மறைகின்ற மாலை நேரத்தைக் கண்டு, செவ்வரி பரந்த கண்களில் நிறைந்துள்ள நீரை, மெல்லிய விரல்களால் முறையாக எடுத்தெறிந்து, விம்மி அழுது, தன் மெல்லிய விரல்களினால் நாம் பிரிந்து சென்ற நாள்களைக் கோடிட்டு எண்ணிக் கணக்கு வைத்து, தனது தோளையே தலையணையாகக் கொண்டு படுத்து, நான் வராத குற்றத்தை நினைத்திருப்பாளோ?

கருத்து

பாக! நாம் பிரிந்த நாளை எண்ணிக் கணக்கிட்டுத் தலைவி வருந்தியிருப்பாள்; ஆதலின் தேரினை விரைந்து செலுத்து.

குறிப்பு

ஒவ்வொரு நாளும் சுவரின்மீது ஒரு கோடிட்டு, கழிந்த நாள்களை கணக்கிட்டுக் காண்பது பண்டை நாளில் வழக்கமாயிருந்தது தெரிகிறது.

சொற்பொருள்

1. செல்சுடர் - மேற்றிசையில் சென்று மறைகின்ற சூரியன்; சிதர் - சிதறிய; அரிக்கண் - செவ்வரி படர்ந்த கண்.
2. ஊழ் - முறைமையாக; தெரியா - எடுத்து எறிந்து.
3. நாள் வைத்து - கோடிட்டு நாள்களைக் கணக்கிட்டு.
4. அணை - தலையணை.

தலைவன் கூற்று

குறுந்தொகை 323 **பதடிவைகலார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றினான் பாகற்கு உரைத்தது. (முற்றினான் - முடித்தவன்)

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், தான் சென்ற பணி முடிவுற்றதும் பாகனிடம் தலைவியைக் காணத் தேரினை விரைவில் செலுத்துமாறு கூறியது.

எல்லாம் எவனோ? பதடி வைகல்
பாணர் படுமலை பண்ணிய எழாலின்
வானத்து எழும்சுவர் நல்இசை வீழ,
பெய்த புலத்துப் பூத்த முல்லைப்
பசுமுகைத் தாது நாறும் நறுநுதல்
அரிவை தோள்அணைத் துஞ்சிக்
கழிந்த நாள்இவண் வாழும் நாளே.

தெளிவுரை

பாக! பாணர்கள், 'படுமலைப் பண்ணை' இனிமையாய் உச்ச நிலையில் இசைப்பது போன்ற இசையொலியுடன் பெய்த மழையில் முல்லைகள் பூத்துள்ளன. அம்முல்லையின் மொட்டு களிலுள்ள தாதுபோல நறுமணம் கொண்ட நெற்றியினைக் கொண்ட தலைவியின் தோள்களை அணையாகக்கொண்டு உறங்கும் நாள்களே நாள்களாம்! பிற நாள்கள் உள்ளீடில்லாத கருக்காய்ப் போன்றனவே!

கருத்து

தலைவியிருக்கும் இடத்தை விரைவில் அடைந்து அவளைத் தழுவி மகிழ வேண்டும்.

விளக்கம்

தலைவியோடிருக்கும் நாள்களே சிறந்த நாள்கள் எனச் சிறப்பிப்பதன் வாயிலாய் அவளை விரைவில் அடைய

வேண்டும் எனும் ஆர்வத்தைப் புலப்படுத்துகிறான், தலைவன். அது கேட்கும் பாகன் தேரினை விரைவில் செலுத்துவான்.

குறிப்பு

இப்பாடலைப் பாடிய ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை. இவர் இப்பாடலில் அமைத்துள்ள 'பதடி வைகல்' என்னும் தொடரின் அருமை கருதி, இவர் 'பதடிவைகலார்' என்றே வழங்கப்படுகிறார்.

சொற்பொருள்

1. எல்லாம் - மற்றைய நாள்கள் எல்லாம்; எவனோ? - என்ன பயன் கொண்டுள்ளன?; பதடி வைகல் - பதர் நாள்களே, உள்ளீடில்லாத கருக்காயைப் போன்ற நாள்கள்.
2. படுமலை - படுமலைப்பண்; பண்ணிய - இசைத்த; எழாலின் - இசையினது.
3. வானத்து எழும் சுவர் - எழுந்து வானத்தை அளாவுகின்ற உச்ச ஒலியை ஒப்ப; நல் இசை வீழ - நல்ல ஒலி உண்டாக.
4. பெய்த - மழை பெய்த; புலத்து - நிலத்தில்.
5. பசு முகை - பசுமையான மொட்டு; தாது - மகரந்தத்தூள்; நாறும் - மணக்கும். நறுநுதல் - நல்ல நெற்றி.
6. அரிவை - பெண், தலைவி; தோள் அணை - தோள்களை அணையாய்க் கொண்டு; துஞ்சி - உறங்கி.
7. கழிந்த நாள் - கழிந்த நாள்கள்தாம்; இவண் - இவ்வுலகில்; வாழும் நாளே - வாழும் நாள்களாகும்.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல் களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2
9 788183 797672

Vol-11
ISBN: 978-81-8379-788-8
9 788183 797788

விலை ரூ. 7200/-